JL
ZM211;M94
M94.1
162520

மேலும் வித்தியாசாலைகட்கும், கல்விச்சங்கங்கட்கும் உபயோகப்படும்படிக்குள்ள விஷயங்களெவையோ அவைகளையும் தெரிந்தெடுத்துப் பிரசுரஞ்செய்துவரப்படும். முக்கியமாய் இப்பத்திரிகையானது சாதாரணப் பத்திரிகைகளைப் போலல்லாமல் கூடியவரையில் எல்லா ஜனங்கட்கும், எக்காலத்தும் பயனளிக்கக் கூடிய விதத்தில் பிரசுரஞ்செய்யப்படும்.

நாம் கைக்கொண்டிருக்கும் இப்பெருங்காரியம் முற்றும் நடந்தேறிவருவதற்குக் கல்விமான்களுடையவும் செல்வவான்களுடையவும் பேருதவியை எதிர்பார்த்து நிற்கின்றோம். நந்தமிழ் நாட்டபிமானிகளும், மற்றுமுள்ளவர்களும் இப்பத்திரிகையை ஆதரிக்கவேண்டிய கடமையோடுகூட இப்பத்திரிகையினிடத்துத் தோன்றும் விஷயங்களை ஆராய்ந்துணரவேண்டும். சிலர் சாதாரணமாய்ப் பத்திரிகையின்கண் தோன்றும் விஷயங்களைப்படித்துணராமல், பத்திரிகையை மேற்பார்வையாக ஓர்தரம் பார்த்து இடதுகரத்திலேந்திக் கீழே எறிந்துவிடுகின்றார்கள். அவர்கள் அங்ஙனம் செய்வது தருமமன்று. ஒருவேளை பத்திரிகையின் விஷயங்கள் மனதுக்கு இன்பந்தரக் கூடாதவிதத்தில் அமைந்திருந்தபோதிலும், அவைகளைப் படித்தோர்தலே மிக்க நன்றாம். ஆனால் நாம் இப்போது நடத்தத் தீர்மானித்திருக்கும் மாதாந்தர சஞ்சிகையானது அவ்விதமான விஷயங்களோடு கூடியல்லாமல், கூடியவரையில் நயமான விஷயங்களோடும், சொற்களோடுங்கூடி யமையும்படியாக மிகவும் பிரயாசப்பட்டு நடத்திவரப்படும். மேலும் இஃது ஓர் புத்தகரூபமாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றமையால், புஸ்தகசாலைகட்கும், கல்விச்சங்கங்கட்கும் உபயோகமாகும். இதன்வருட சந்தா இரண்டு ரூபாயாக இப்போது ஏற்படுத்தியிருக்கின்றோம். சஞ்சிகையின் பரிமாணம் காலக்கிரமத்தில் அதிகரித்துக்கொண்டு வெளிப்படும். இப்பத்திரிகையை ஆதரிக்கவேண்டியது தேசாபிமானிகளது கடன்.

இப்பத்திரிகைச் சிலகாலமாக நின்றுவிட்டதுபற்றி அபிமானிகள் குறை கூறாமல் இருக்கும்படி வணக்கத்துடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

# தமிழ்ப் பாஷையின் வரலாறு.

## I.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகள் வழங்கிவருமிடத்திற்குத் திராவிடதேசம் என்று பெயர் வழங்குகின்றது. இந்நான்கு பாஷைகளுள் 'தமிழ்' என்னும் பாஷை வழங்கும் நாடு இஃதென்றுணர,

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடவுள்."

என்று வகுத்தருளினார் தமிழ் நூலாசிரியர். ஆகையால் கிழக்கே கீழ்கடலும், தெற்கே கன்னியாகுமாரியும், மேற்கே குடகநாடும், வடக்கே திருவேங்கடமும் என்று சொல்லப்படும் நான் கெல்லையினையுடைய நிலத்துக்குத் தமிழ் நாடென்று பெயர். இத்தகைய சிறப்பினையடைந்து விளங்கும் நாட்டில் வழங்கிவரும் பாஷையாகிய தமிழ், அதன் அமைப்பிலும் சொற்றொடரிலும் சிறப்புற்று திராவிடர்கள் பயிற்சிசெய்துவரும் பாஷைகட் கெல்லாம் பிரதிநிதியாக விளங்குகின்றது. தமிழ் வழங்கும் நாடு பூர்வத்தில் சம்ஸ்கிருத பாஷை வழங்கிவந்த ஆரியம் என்கிற நாட்டிற்குத் தென்பாகத்திலிருந்தமையால், தமிழ் நூலாசிரியர் சம்ஸ்கிருத பாஷையை "வடமொழி" என்றும், தமிழ்ப் பாஷையைத் "தென்மொழி" என்றும் கூறியருளினார். தமிழ்ப் பாஷையை வழங்கிவந்தவர்கள் காலக்கிரமத்தில் ஆரிய பாஷையாகிய சம்ஸ்கிருத பாஷையிலிருந்து தங்கள் ஆவசியத்துக்குத் தக்கவாறு சம்ஸ்கிருத பதங்களைத் தங்கள் பாஷையோடு சேர்த்துக்கொண்டார்கள். ஆரியமதக்கோட்பாடுகளைத் திராவிடர்கள் அனுசரித்து வந்தமையால், அம்மதக் கோட்பாட்டிற்குரிய விஷயங்களைத் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் தங்கள் பாஷையோடு சேர்த்து வழங்குவதற்கு ஆவசியம் நேர்ந்தது. ஆனதுபற்றி நீதிநூல், தத்துவநூல், ரசாயன சாஸ்திரம், சோதிடசாஸ்திரம், வைத்தியநூல் முதலிய திரளான ஆரியநூற் பதங்கள் தமிழ் நூற்களிற் "பரிபாஷைகளாக" வேற்பட்டன. இங்ஙனம் ஆரியநூற் கொள்கைகட்குரிய சம்ஸ்கிருத ப



தங்கள் தமிழ்ப் பாஷையோடு சேர்க்கப்பட்டபோதிலும், அப்பாஷைக்கோர் சிறப்புண்டாயிற்றே யன்றி வேறில்லை. மேலும் தமிழ்ப்பாஷையோடு சம்ஸ்கிருத பதங்கள்சேர்ந்ததுபற்றி, அங்கிலேய பாஷை மற்ற பாஷைகளோடு சேர்ந்து அமைப்பிலும், சொற்றொடரிலும் எவ்வாறு மாறிற்றோ அவ்வாறு அத்தமிழ்ப் பாஷையாதொரு மாறுதலும் அடையவில்லை. பிஷப்பு கால்டுவேல் (Bishop Caldwell) என்கிற ஓர் பாதிரி "தமிழ்ப் பாஷையானது அத்தோடு சேர்க்கப்பட்ட சம்ஸ்கிருத பதங்களை முற்றிலுங்களைந்துவிட்டுப் பரிசோதித்துணருங்கால், சுயமாயும் கலப்பற்றதாயுமுள்ள தனிப்பாஷை" எனக் கூறுகிறார். அன்றியும் இப்பாதிரியார் கிருஸ்துவேத புத்தகத்தின் ஓர் பகுதியாகிய "பத்துக் கட்டளைகள்" (Ten Commandments) என்பதைச் சுயமான தமிழில் மொழிபெயர்க்கக் கூடியதென்றும், ஆனால் "விக்கிரகம்" என்னும் ஓர் சம்ஸ்கிருத பதமாத்திரம் அத்தோடு சேர்க்கவேண்டி நேரிடுகிறதென்றும் உரைக்கிறார். இங்ஙனம் சிறப்புற்ற தமிழ் சம்ஸ்கிருத பதங்களோடு கலந்து சம்பாஷிக்கப் படுதல்பற்றி, இக்காலத்துப் பாஷாவிற்பன்னர்களிற் சிலர் அதை ஆரிய பாஷையிலிருந்து பிறந்த கிளைபாஷையென்று கூறுகிறார்கள். சிலர் அதை "ஆதிபாஷை" என்றும், "சுயபாஷை" என்றும், "தனிப்பாஷை" என்றும் வழங்குகிறார்கள்.

இதுநிற்க, தமிழ்ப் பாஷை சுதேச பாரம்பரிய விருத்தாந்தத்தின்படி (Tradition) "அகத்தியமுனி" என்று சொல்லப்படுகின்றவரால் பிறந்து வளர்ந்தோங்கியதென்று சொல்லப்படுகின்றது. இவ்வாறு சொல்லப்படுவதற்குத் திருஷ்டாந்தம் பின்வருமாறு:—

"ஆதியிற்றமிழ்நூலகத்தியற்குணர்த்திய
மாதொருபாகனைவழுத்துதுஉம்
போதமெஞ்ஞானநலம்பெறற்பொருட்டே."

"வடமொழியைப்பாணினிக்குவகுத்தருளிஅதற்கிணையாத்
தொடர்புடையதென்மொழியையுலகமெலாந்தொழுதேத்தக்
குடமுனிக்குவற்புறுத்தார்கொல்லேற்றுப்பாகரெனிற்
கடல்வரைப்பின்இதன்பெருமையாவரேகணித்தறிவார்."

இருமொழிக்குங்கண்ணுதலார்முதற்குரவரியல்வாய்ப்ப
விருமொழியும்வழிப்படுத்தார்முனிவேந்தரிசைபரப்பு
மிருமொழியுமான்றவரேதழீஇனாரென்றாலிவ்
விருமொழியுநிகரென்னுமிதற்கையமுளதேயோ."

இங்ஙனம் தமிழ் என்னும் அமுதம் பிறந்த விசேஷம் இத்தன்மையுடைத்தென அவரவர் தத்தம் மனச்சான்றுக்கும், மதச்சார்பிற்கும் ஏற்றவாறு சிறப்பித்துக் கூறுகிறார்களெனில், அதனை எம்மாற் கூடியமட்டுந் திட்டப்படுத்துவதற்கெளிதோ? தமிழ்ப்பாஷையின் பிறப்பு எவ்வாறிருந்தபோதிலும், அது இந்து தேசத்தின் தென்பாகத்தில் வழங்கிவரும் பாஷைகட்கெல்லாம் சிறந்து விளங்கும் தன்மையுடையதென்பதற்கையமில்லை. பற்பலபாஷைகளை ஒருங்கேயுணர்ந்த ஐரோப்பிய பண்டிதர்களும் அவ்வாறாகவே அதன் சிறப்பை வியந்து கூறியிருக்கிறார்கள். அகத்திய முனிவராற் பிறந்ததென்று கூறப்படும் தமிழ் இத்தென்னாடெங்கும் பேசும் பாஷையாக எவ்வாறாயிற்றென்பதற்குக் காரணம் ஒன்றும் ஏற்படக்காணோம். அன்றியும், அது இன்னகாலத்தில் உதித்ததென்பதையும், இன்னவிதமாய் ஜனங்கட்குக் கற்பிக்கப்பட்டதென்பதையும் நிரூபிக்கத் தகுந்த ஆதாரங்களில்லை. ஐரோப்பாவிலுள்ள தனித்தனிப்பாஷைகட்கு அப்பாஷைகளைவழங்குவோர் சரிதங்கள் ஏற்படுத்திக் கொண்டிருப்பதுபோல, இந்துதேசத்திலுள்ள பாஷாக்கியானிகளும் தத்தம் பாஷைக்குரிய சரிதங்கள் காலாகாலத்தில் ஏற்படுத்திவைத்திருப்பார்களேயாகில், ஒவ்வொரு பாஷையின் விருத்தாந்தத்தையும் நாம் வெகு எளிதில் அறிந்துகொள்ளக்கூடும். "சரிதங்கள்" என்கிற ஒன்று இந்துதேசத்திற் சிறிதுகாலத்திற்கு முன்னர் தான் ஏற்பட்டதேயன்றி வேறில்லை. அதற்கு முன்னால் ஏற்பட்டிருக்குஞ் சரிதங்களனைத்தும் காலநிருபணங்களோடு ஒழுங்காக வமைக்கப் படாமையால்,' அவைகளை வாசிப்போர்க்கு அவைகளிடத்து ஓர்விதவெறுப்பும், நம்பிக்கையின்மையு முண்டாகின்றது.



## தொழில் வகை அறிதல்.

ஜனங்கள் தாங்கள் செய்யவேண்டுந்தொழில் இன்னதென்று முன்னமே திட்டஞ்செய்துகொண்டு அதற்கு வேண்டிய அறிவை அடைதல் மெத்த ஆவசியமாம். எவரெவர்கட்கு எவ்வகைத் தொழிற்களில் மனஞ்செல்லுகிறதோ அவர்கள் அவ்வகைத் தொழிற்களிலேயே பயின்று பயனடைவதற்கு வேண்டிய அறிவைத் தேடிப் பெறவேண்டும். சிறுவர்கள் கல்விபயிலும் பொழுதே பெற்றோர்கள் அச்சிறுவர்களது மனநோக்கங்களையும், விருப்பங்களையும் தக்கவாறு பரீக்ஷித்தறிதல் வேண்டும். சிறுவர்கள் இயல்பாகவே கல்விகற்று தக்கபருவமடையுங்கால், அவர்களது கருத்துகளும், மனோநோக்கங்களும் ஒவ்வோர் வகையான தொழிலின் பேரிலேயே பற்றுடையனவாக விருக்கும். பெற்றோர்கள் இவ்வகைக் கருத்துகளையும், மனோ நோக்கங்களையும் செவ்விதாக உணர்ந்து தங்கள் சிறுவர்களை அவர்களது கருத்துகளுக்கும், மனோ நோக்கங்கட்கும் தக்கவாறு தொழிற்றுறைகளிற் செலுத்தவேண்டும். "உத்தியோகம் புருஷலக்ஷணம்" என்ற ஆன்றோர்வாக்கின்படி, தொழிலானது ஜனங்கட்கு மெத்த ஆவசியமாதலின், பெற்றோர்கள் தங்கள் சிறுவர்களைக் கல்விபயிற்றும் விஷயத்தில் மிகுந்த பற்றுடையவர்களாக விருத்தல் வேண்டும். சிறுவர்களுடைய சுகதுக்கங்கட்குப் பெற்றோர்களே பாத்தியஸ்தர்களாதலின் தக்க தொழிலில் அச்சிறுவர்களது மனஞ்செல்லுமாறு அறிவையூட்டவேண்டிய பாத்தியதையை முதல் முதல் அப்பெற்றோர்களே கைக்கொள்ளவேண்டும். இளமையிற்பயின்ற கல்வி கேள்விகட்குத் தக்கவண்ணம் ஒருவருடைய தொழில் நோக்கமிருக்குமாதலின், பெற்றோர்களெனப்பெயரெடுத்திருப்பவர்கள் பல்வகைத்தொழிற்களையும் ஆராய்ந்து தெளிந்து தங்களுக்கு இஷ்டமான தொழில்களெவையோ அவைகளின் சுவையைத் தங்கள் சிறுவர்கள் உணர்தற்கேற்ற வழிகளை நாடவேண்டியது கடமை. பெற்றோர்கள் இங்ஙனம் செய்யாது தங்கள் மக்களை அவர்கள் மனபோனவாறு கல்வித்துறைகளிலாழ்த்தி தொழிலென்பது இத்தன்மையதென கவனியாதிருப்பரேல், அம்மக்கள் இளமைப்பருவம நீங்கி முதுமைப்பருவமடையுங்கால், தாங்கள் சிறு வயதிற் கற்றுணர்ந்த கல்வியின் வலிமையும், நோக்கமும் எத்தன்மையதாக விருக்கின்றனவோ அத்தன்மையாகவே அவர்களது தொழில்வலிமையும் நோக்கமுமிருக்கும். சிறுவர்கள் இவ்வாறு நிலைமையை யடையும்பொழுது, பிள்ளைகளுடைய மனம் பெற்றோர்கட்சொவ்வாமலும், பெற்றோர்களுடைய மனம் பிள்ளைகட்

கொவ்வாமலும் ஒருவருக்கொருவர் மாறுபட்டொழுகுந்தன்மையுடையவர்களாக ஆகின்றார்கள். ஆகையால் தொழில் வகைகளைச் செவ்விதாகவுணர்ந்து தங்கள் இனத்தார்க்கும், மனத்துக்கும் ஒப்பதொழிற்கள் எவையுண்டோ அவைகளைச் சிறுவர்கள் நாடுவதற்கேற்ற வழிகளையும், விதிகளையும் முதல் முதல் பெற்றோர்கள் அனுசரித்து நடக்கவேண்டியது முக்கிய கடைமையாம்.

## இல்லற வாழ்க்கை இயல்.

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று."

இல்—வீடு; அறம்—தருமம். வீட்டின்கண் வாழ்ந்துநின்றுபுரியும் தருமமென்பதாம். ஈண்டுத்தருமமென்பது பொதுவுஞ்சிறப்புமென இருவகைப்படும். எச்சாதி எச்சமயத்தாரும் ஒருங்குபோணற்பாலனவாகிய கொல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, வெகுளாமை, இன்னாசெய்யாமை. முதலியவும் இன்னோரன்னபிறவும் பொதுவறங்களெனப்படும். ஒவ்வொருபிரிவினரும் தந்தம் சாதிசமயங்கட்குரிய நியதிகளைக்கடவாது விதித்தபடியொழுகுதல் சிறப்பறமென்னப்படும். முதற்கூறியபொதுத்தருமம் ஒருவனிடத்திலில்லையாயின் பிற்கூறிய சிறப்புத்தருமத்தினாற் பயன் பெறான். அதனால் அவ்விருவகையறங்களும் ஒருங்கே பேணிவாழ்தல் அறிவாளர்கடமையென்பது தானேவிளங்கும். இது நிற்க.

இல்லறவாழ்க்கைக்கு இன்றியமையாதமுதற்றுணையாய் நிற்பவள் மனைவியே. மனைவி, அகமுடையாள், இல்லாள், என்பனவாதி பெயர்களெல்லாம் அப்பொருளையே கொண்டுநிற்பன. மனிதர்வாலிபப் பருவங்கடந்துயௌவனப்பருவம் அடையுங்காலத்து மேலேகூறிய அறங்களையியற்றுதற்கு ஏற்ற அறிவாற்றல்கள் நிறம்பப்பெற்றவராகின்றனர். அதனோடுகாமசுகம் முதலியனதுய்த்தற்கும் உரியராகின்றனர். அதனால் அக்காலத்து அவ்விருவகைப்பேறுகளுக்கும் துணைக்காரணமாகிய மனைவியை அடைவது அவர்க்கு இன்றியமையாக்கடமையாயிற்று. ஆகவே அத்தகைய யௌவனப்பருவம் எய்தாத வாலிபப்பருவத்தினும், அதுகடந்த விருத்தப்பருவத்தினும் மனையாளைக் கொள்ளவிரும்புதல் குற்றமாமென்பதுந்தானே விளங்கும். அங்ஙனம் இல்வாழ்க்கைக்குத்துணைக்காரணமாகிய மகளிரை அடைவதற்காக அவரவர் ஜாதிசமயங்களில் ஏற்பட்



டிருக்கும் நியதியான கிரியையே விவாகம், கலியாணம், என்பனவாதிப் பெயர்களால் வழங்கும். அந்நியதியானசடங்குகள் இல்லையாயின், அப்போழ்து பகுத்தறிவில்லாத விலங்கு பறவைகளைப்போல் நேர்ந்த இடத்தில் நேர்ந்தகாலத்தில் நேர்ந்த ஆண் பெண்கள்கூடி பிரஜாவிருத்தி செய்தலொன்றுமட்டுமே இயலுமன்றி அறங்களைப்பரிபாலித்துப் பயன்கொள்ளச்சிறிதும் இயலாது. அதுமட்டோ! காமங்காரணமாக ஒருவருக்கொருவர் பெரும்பகைகொண்டு போர்விளைத்து அழியவும் நேரிடும். இன்னும் அளவற்றதீமைகட்கிடனாகி உலகத்தார் ஒருங்கே கெடுவார். அதனால் தொன்றுதொட்டு உலகத்திலுள்ள எச்சாதி எச்சமயத்தார்க்கும் "விவாகம்" என்னும் நியதியான சடங்குகள் ஏற்படுத்தப்பட்டு நடைபெறுகின்றன. இதுநிற்க.

ஒருவன் விவாகஞ்செய்தற்குரிய பருவம் அடைந்தவுடனே தாய்தந்தை முதலிய முதியோராலாவது தானாகவாவது ஒருபெண்ணைத்தெரிந்து கொள்கின்றான். இங்குயாவரும் கவனிக்கவேண்டிய அவசியமான சில விஷயங்களைச்சிறிது விசாரிப்பாம். அதாவது:—குறைந்த அறிவுடையமாந்தர் சிலர் விவாகம் என்பது எதற்காகச் செய்யப்படுவதென்பதையும் பிறவற்றையும் ஊகித்துணராது விடயாதிகளில் பாந்துசெல்லும் இந்திரியசேட்டைமட்டும் மிக்குடையராய் பார்வைக்குமட்டும் அழகாய்த்தோன்றுகிறபெண்களை அவாவுகின்றார்கள். பேரறிவில்லாத சிறு குழந்தைகள் தங்களுடலுக்கு ஆரோக்கியவுறுதிதரும் நல்லுணவுகள் இவையென்று பகுத்துணர்தலின்றி நாவுக்கு இனிக்கும் பொருளெதுவோ அதையே விரும்புவது வழக்கம். அவ்விருப்பத்தின்படி கொடுத்துவந்தால் அப்பிள்ளைகள் விரைவிலேபெருநோயடைந்து இறந்தொழியும் என்பது திண்ணமன்றோ? இதுபோலவே குணம் முதலியவைகளைப் பகுத்துணர்தலின்றி அழகொன்றைமட்டும் விரும்பிப்பெண் கொள்வோரும் கொள்விப்போரும் அறிவில்லாச் சிறுகுழவிகளாய்ப் பின்னர்த் துன்பங்களையடைவரென்க. இதனால் அழகுகூடாதென்பது எமதுகருத்தன்று; குணத்தின்அழகே அழகென்று மூத்தோர் கூறுகின்றமையால் முகத்தழகு குறைந்திடினும் அகத்தழகு நிறைந்திருப்பவரைத்தேடியடைதல் அறிவாளர் தொழிலாமென்பதை அறிவித்தாம். உலகத்திற்சாதிசமயங்கள் அனந்தமாய் விரிந்துநடைபெறுவதினாலும் அவ்வரம்புகளைக்கடந்து செல்லுதல் எத்திறத்தாருக்கும் எளிதாகாமையாலும் அவ்வரம்புகளும் மனிதர்க்கின்றியமையாதாய் அனாதியே அமைந்துள்ளதாலும் ஓராணொருவன் ஓரில்லக்கிழத்தியை அடைய

விரும்புங்கால் தம்மரபுக்கேற்ற விடத்திலேயே கொள்ளவேண்டியவனாகிறான். (யுக்தியனுபவங்கட்குப் பொருந்தாததும் பயன்தராததும் இடைஞ்சல்விளைப்பதும் நவீனமாய்த்தோன்றியதுமாகிய ஜாதிசமயவேறுபாடுகளைத்தொலைத்தொழிப்பது குற்றமாகாதென்க.) அங்ஙனங்கொள்ளுங்கால் பெரும்பான்மை குணநலங்களையும் இயன்றளவு உருவநலங்களையும் பரிசோதித்துக்கொள்ளுவதே அறிவாகும். இவ்வுணர்ச்சியில்லாதவாலிபர் சிலர் அந்தப்பெண் அழகாயில்லையென்று வெறுப்படைவர். அதற்கேற்றபடி அறிவில்லாமுதியோர் சிலர் ஆம்! ஆம்! அது அழகில்லை என்று தூண்டிவிடுவர். அதனால் விவாக முயற்சியிலிருக்கும் வாலிபரது மனம் பின்னுங்குழம்பிப்பின்வாங்க ஏதுவாகும்பிறகு நிர்ப்பந்தத்தால் அப்பெண்ணையே மணக்கநேரிடுமாயின் மணமகன்முகவாட்டத்தையும் அதிர்ப்தியையும் உடையவனாய் மணவினையை நிறைவேற்றிக்கொண்டு பின்னிகழும் சுபக்கிரியைகளில் மனப்பற்றில்லாதவனாகிறான். ஆகவே ஓர்போது அன்னியமாதர் பொதுமாதர் முதலினோர் சிறிது அழகுள்ளவராக நேர்வாராயின் அவர்களைத்தோழமைகொள்ள முயலுகிறான். முயற்சி நிறைவேறினால் பழக்கங்கொடிது என்றபடி அத்தீயநெறியில் இழிந்து நிற்கிறான். அதனால் அவன் இல்லறத்தாலடையக்கூடிய பெரும்பயன் எல்லாவற்றையும் இழந்துவிடுவதோடும் நில்லாது பெருந்துன்பங்கட்கும் கொடு நோய்கட்கும் பழிபாவங்கட்கும் இரையாய் விரைவிலே அழிகின்றான். இதுநிற்க; இங்ஙனம் மனக்குறைவடைந்த மணமக்களுள்ளே பலர் மேற்கூறியபடி வரைவின் மகளிரைவிரும்பாது அமைதியோடும் சிறிது உற்சாகக்குறைவோடும், தான்மணந்த இல்லக்கிழத்தியோடு வாழ்கின்றார்கள். இப்படிச்சொற்பநாள்வாழ்க்கையில் அழகில்லையென்று தான் உள்ளே வெறுத்திருந்த இல்லக்கிழத்தியின் குணவொழுக்கங்கள் தனது குணவொழுக்கங்களோடு ஒத்துநிற்பதையும் அவளால் தனக்குப்பல நன்மைகள் விளைந்துவருதலையும் நோக்கித் தான் கொண்டிருந்த அருவருப்பைப் பையப்பைய அகலவிட்டு அவள்மீது அதிக அன்பும் அபிமானமுமுடையனாகின்றான். பின்னர்மனையாட்டியும் இவன்மீது அவ்வாறே பிரதியன்புபாராட்ட உடலிரண்டும் உயிரொன்றுமாய்க்கலந்துப் பலநலங்களையும் துய்த்து இனிது வாழ்கின்றார்கள்.

இத்தன்மையுடையாரை நாம் ஓரிடம் ஈரிடத்திலன்று; பற்பல இடங்களிலும் அனுபவத்தால் நன்குணர்ந்திருக்கிறோம். முடிவில் இதை எழுதுபவர்யரோ அவருடைய அனுபவமே இதுவென்பதை இதைப்படிக்கும்



புத்திமான்கள் யூகித்தறியக்கடவர். இதுநிற்க; வேறுசில விவேகிகளாகிய மணவாளர்கள் தாம் கொண்ட இல்லக்கிழத்தி தமது குணவொழுக்கங்களோடு ஒத்துநில்லாது வேறுபடக்கண்டபோதும் புத்தியைப் புறஞ்சிதறவிடாது. சாவதானமாய் ஒழுகும் ஒழுக்கத்தில் சாமம், பேதம், தானம், தண்டம், என்னும் சதுர்விதஉபாயங்களாலும் (காட்டுமிருகங்களையும்கைவசமாக்குவோர்பலரிருக்க நாமிந்த நாட்டுமிருகமாகிய இரண்டுகால்மிருகத்தைவசமாக்கக் கூடாதாவென நினைந்து) நாளடைவிற்றம் வயமாக்கிப்பிறகு இருகண்ணுங்கூடியொருபொருளைப்பார்ப்பதுபோல் ஒற்றித்துநின்று இல்லறத்தை நல்லறமாக்கி இனிதுவாழ்கின்றார்கள். வேறுசிலரோதமக்குவாய்த்த மனையாள் சுகுணசொரூப சுபலக்ஷணங்களெல்லாம் ஒருங்கமையப்பெற்ற உத்தமியாயிருப்பினும் அவள்பாற்சிறிதுங் கண்ணோட்டமின்றிக் குரங்கைக்கண்ட நாய்போலுறுமிக்கொண்டு வரைவின்மகளிர் விழைதல் முதலிய தீநெறிக்கட்சென்று பழிபாவங்களை அணிகலனாகக்கொண்டு அழிகின்றார்கள் இத்தகையாரை நாம் மனிதவகுப்பில் வைத்தெண்ணாது விட்டு மேற்செல்வாம்.

தொடர்ச்சியாய்வரும்.

## சுதேச வைத்தியம்.

பெறுதற்கரிய இம்மானுட ஜன்மத்தைப்பெற்ற நாம் அடையவேண்டிய புருஷார்த்தங்களை அடைதற்கு ஆதாரகருவியாயிருப்பது நமது சரீரமேயாதலால் இச்சரீரத்தை எவ்வாற்றானும் கேடுறவிடாது நன்னிலையில் வைத்துப்பேணுதற்குக் கடமைப்பட்டிருக்கின்றோம். அங்ஙனம் வைத்துப்பேணுதற்கு முகசியாதார கருவியாயிருப்பது வைத்திய சத்திரமேயாம். இத்தென்னாட்டு வாசிகளாகிய நம்மவர்க்குப் பெரும்பாலும் பயன்றந்து விளங்குவது நம்முன்னோரருளிய வைத்தியமுறைகளேயாதலின், ஸ்ரீ சட்டநாதவள்ளலாகிய முனிவர்கோமானருளிய புராதன வைத்தியத்திருமுறையொன்று நம்பாலுள்ளது. அதிற்பலபிரயோகங்களைச் செய்துபார்த்ததில் மிகச்சிறந்ததாகக் காணப்பட்டமையால் யாவரும் செய்து கொள்ளற்குச் சுலபமான சில முறைகளைத்தொடர்ச்சியாய் இங்கெழுதிவர முயன்றோம்.

## சுரங்களுக்கு கியாழம். (கஷாயம்).

சுக்கு, மிளகு, சீரகம், கொத்தமல்லி, சித்தரத்தை, முசுமுசுக்கை, பேய்ப்புடல், நெல்லியீர்க்கு, வேம்பீர்க்கு, கையாந்தகரை, விஷ்ணுக்கிராந்தி, ஆலம்விழுது, துளசிவேர், இவைகளைச் சமன்கூட்டிக் கியாழம் செய்து 3-நாள் 6-வேளை கொடுக்கச் சுரங்கள் பலவும் தீரும்.

## சுரங்களுக்கு மற்றொரு தைலம்.

வெருகள்கிழங்கு, சித்தாமுட்டிவேர், சிறுகாஞ்சொறி, ஆவாரை பெருங்சரந்தை, சீதேவிச்செங்கழுநீர், துளசி, நொச்சி, இவைகளின்வேர் வகைக்கு பத்துப்பலங் கூட்டி இடித்து ஆறுமரக்கால் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காச்சிக்கொண்டு, பொன்மிளகு பலம்-1-இடித்து நாலுபடி தண்ணீர் விட்டு ஒருபடியாய்க்காச்சி இரண்டு கியாழத்தையும் கலந்து, இரண்டுபடி எண்ணெயும் பதக்கு மோரும் விட்டுக்கலக்கி, வெப்பாலையரிசி, அதிவிடயம், கோரைக்கிழங்கு, அரத்தை, அதிமதுரம், கோஷ்டம், கருவேம்பு, வாய்விளங்கம, மஞ்சல், மரமஞ்சல், சுககு, மிளகு, திப்பிலி, சித்திரமூலம், அசமதாகம், லவங்கம், கடுகுரோணி, கஸ்தூரிமஞ்சல், அகில்சந்தனம், மஞ்சிட்டி, சதகுப்பை, தக்கோலம், சிறுதேக்கு, திப்பிலிமூலம், செவ்வியம், வெள்ளுள்ளி, புகையூரல், இவை வகையொன்றுக்கு பலம் கால், கூட்டி மோரில் அரைத்து, முன்சொன்ன தைலத்தில் கலந்து, நாலு நாள் சிறுதீயாகக் கொஞ்சங் கொஞ்சமாகக்காச்சி ஐந்தாநாள் மெழுகுபதம் வரக்காச்சி வடித்துக்கொண்டு, கொஞ்சம் உள்ளுக்குக் கொடுத்து தலைக்கும் உடம்புக்கும் தேய்த்து வாரம் இருமுறை மூன்றுமுறை குளிக்க நாலாமாறல் மூன்றுநாள்மாறல் ஒன்றுவிட்டமாறல், 15-நாள் மாறல் ஆறுமாதம் ஒருவருஷம் விடாதகாச்சல், அஜீரணக்காச்சல், விஷசுரம், பூதசுரம், தெய்விகசுரம், முதலிய எவ்வித சுரங்களும் இருந்தவிடந்தெரியாது பறந்துபோம்.

## மலடுதீர மருந்து.

சர்ப்பாசயத்திலுள்ள சில தடைகளால் மலடாயிருக்கும் பெண்களுக்கு உத்தமதாளி வேர் பசுவின் பாலிலரைத்து ஆறுநாள் இரவில் கொடுக்கக் கருப்பமுண்டாகும்.

தொடர்ச்சி வரும்.



## பூர்வீக இந்து அரசாட்சி.

குடிகளது க்ஷேமத்திற்குத் துணைச்சாரமாயிருப்பது அரசனீதி. “அரசனிதி” யாவது என்னவெனில், “குடிகளது க்ஷேமத்தின் பொருட்டு பல நல்வழிகளைத் தெரிந்தெடுத்து அவர்களது மனம் வருந்தாமல் அவைகளைப் பாதுகாத்தற்குரிய முறைமை” என்று கருத்து. இராஜநீதிக்கு வேண்டிய அங்கங்கள் அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு முதலியனவை எனப்பெரியோர் கூறியிருக்கின்றனர். அரசர்கட்கு நிறைந்தகல்வி மெத்த ஆவசியமாயிருப்பதுமன்றி, சாதுசங்கப்பழக்கமும், சாதுரியவான்களிணக்கமும், உரியாருடைய உறவும், பெரியாருடைய துணையும் அவர்கள் கைக்கொள்ளவேண்டும். அரசர்கட்குரிய குணங்கள் இவை மாத்திரமன்று. தன் உயிர்போல் மற்ற உயிர்களையுங் கருதவேண்டியது அரசர்களது சிறந்த கடமையாம். இவ்வுலகிற்கு முக்கிய ஆதாரம் மானிடஜீவன்கள்; அம்மானிடஜீவன்கட்காதாரம் அரசர்கள். ஆகையால் அரசர்களெனப் பெயரெடுத்திருப்பவர்கள் தங்கள் அரசுமுறைமைக்குரிய திறமையைக் கைக்கொண்டு நீதிநெறிதவறாமலும், சத்தியம் பிறழாமலும் எக்காரியத்தையும் செய்யுமுன்னரே எண்ணித்துணியவேண்டும். முற்காலத்தரசர்கள்,

> “கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
> முடையானும் வேந்தர்க் கொளி.”

என்று நீதி நூலாசிரியர் உரைத்தவண்ணம், தங்குறையைச் சொல்லி முறையிடுவோர்க்கு அவர் வேண்டுமவைகளைக் கொடுத்தலும், யாவரிடத்தும் முகமலர்ந்து இன்சொற்சொல்லுதலும், தருமநெறிதவறாது செங்கோற் செலுத்துதலும், தளர்ந்தகுடிகளைக் காத்தலும் ஆகிய இச்செயற்களைக்கைக்கொணடு இராஜதருமம் நடத்திவந்தார்களென்பதற்குத் திருஷ்டாந்தங்கள் அநேகமிருக்கின்றன. மேலும் இந்து அரசர்கள் நல்லமனத்தினையும், மிதுர்வசனத்தினையும் உடைத்தாகி வந்த விருந்தினரை வரிசை தந்துபசரித்தல், ஆபத்துக்காலத்தில் வருந்துவோர்க்குதவுதல், குடிகளிடமிருந்து ஆறிலொருகடமை பெறல், கள்ளுண்ணாமை, புலால்புசியாமை முதலிய துர்ச்செய்கைகளைச் செய்யாதிருத்தல், ஆகிய நற்குண நற்செயல்களைப்பூண்டு, அறநீதிகளிற்றவறாமல்,

> “இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு.”

என்று வள்ளுவனார் கூறியபடி, தனக்குப்பொருள் வரும்விதத்தைத் தெரிந்து பொருள் சேர்த்தலும், அப்படிச்சேர்க்கப்பட்ட பொருள்களை பிறர் அபகரிக்காமற் பாதுகாத்தலும், பின்பு அவற்றை அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுச்செலவு செய்தலும் ஆகிய கருமங்களைச்செய்து செங்கோல் செலுத்திவந்தார்களென்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன. முன் சுதேசிகள் அரசாண்டகாலத்தில் அதிகச் செலவுள்ள உத்தியோகங்களாவது அல்லது பல உத்தியோகப்பிரிவினைகளாவது கிடையா. நீதிசாஸ்திரம், நியாயசாஸ்திரம், தருமசாஸ்திரம், முதலான பலசாஸ்திரங்களில் வல்லவசாலிகளான பண்டிதர்கள் நிறைந்த சபையின் கண் அரசர்கள் முன்னாளில் மந்திரிகளுடன் கொலுவீற்றிருக்கும் வழக்கமிருந்தது. பண்டிதர்களுடையவும், மந்திரிமார்களுடையவும் ஆலோசனையைக்கேட்டு அரசர்கள் நீதிசெலுத்தினார்கள். கைத்தொழில், வர்த்தகம் முதலியன அதிகரித்து நாகரீகப்பெருக்கம் மேலிடுவதற்கு வேண்டிய கருவிகளும், மற்றவழிகளும் முற்காலத்தில் அவ்வளவு அதிகமாக ஏற்படாமற் போனபோதிலும், சரீரசௌக்கியத்திற்கும், ஆடம்பரத்திற்கும், மற்ற ஆவசியங்கட்கும் தேவையான வசதிகள் எவையோ அவைகளைப் பூர்வீக இந்துக்கள் கண்டுபிடித்திருந்தார்களென்பது உண்மையே. அவைகளிற் சிலது இன்றைக்கும் நாளைக்கும் வழங்கிவருகின்றன; சிலது ஆதரிப்போரின்றி காலக்கிரமத்தில் மறைந்துபோய் விட்டன. பூர்வத்தில் ஆரியாவர்த்தத்தின் எல்லைக்குள் நிலை நாட்டப்பட்டிருக்கும் சிற்பவேலைகளும், சித்திரவேலைகளும், மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், ஐரோப்பியர்கள்கூடக் கண்டு களிப்புறத் தக்கதாக விருக்கின்றன. நகை நாணயங்கள் செய்வதிலும், உந்நதமான நெசவுத்தொழில் புரிவதிலும் பூர்வீக இந்துக்கள் மிகசமர்த்தர்களே. இத்தகைய தொழிற்களை ஆதி இந்துமன்னர்கள் பரிபாலித்து வந்தார்களென்பதும் வாஸ்தவமே.

மேற்கூறியவாறு இந்துமன்னர்கள் அரசுபுரிந்தகாலத்தில் எந்தக் காரியங்கள் எந்தவிதத்தில் நடக்க வேண்டுமோ அந்தவிதத்தில் நடந்து வந்தமையால், க்ஷாமம் என்கிற கொடிய நோயானது ஜனங்களை அவ்வளவாக வருத்தவில்லை. முற்காலத்தில் இந்துதேசத்தின் பெரும்பான்மையான பாகமுழுமையும் அடர்ந்த வனாந்திரங்களாலும், பெரியசோலைகளாலும், சூழப்பட்டிருந்தமைபற்றி, உணவிற்கு வேண்டிய பதார்த்தங்கள் எளிதிற் கிடைக்கக்கூடிய தன்மையில் இருந்தது. மழைமாரிகள்



ஏராளமாக வருஷித்து வந்தமைபற்றி, தேசமெங்கும் செழிப்படைந்திருந்தது. இந்துதேசம் வேளாண்மைக்குரிய தேசமாதலால், முக்காற்பகுதிக்கு மேற்பட்ட ஜனங்கள் "மேழிச்செல்வங்கோழைபடாது" என்பதற்கிணங்க கிருஷித்தொழிலையே ஆதாரமாகக்கொண்டு ஜீவனஞ்செய்து வந்தார்கள். சாப்பாட்டிற்கும், தருமச்செலவிற்கும், ஆடம்பரங்கட்கும் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவைத்தவிர அதிகமானதிரவியம் தேடும் விஷயத்தில் அக்காலத்தரசர்கள் மிகுந்தகவனம் வைக்காதிருந்தமையால், அதிகவரிகளாலும், மற்றவிதங்களாலும் குடிகள் வருந்துவதற்கிடமில்லாமலிருந்தது. இவ்வாறு இந்துமன்னர் அரசாண்டகாலத்தில், இந்துதேசத்தின்மீது, க்ஷாமம் என்பது அவ்வளவு கொடூரத்தன்மையோடு ஜனங்களை வருத்தியதாக அறிதற்கேற்ற ஆதாரங்களில்லை. க்ஷாமம் என்னும் தீச்சுடர் எங்காவது கிளம்பி மேலிட்டால், அது அங்குள்ளவர்களை மாத்திரம் வருத்துவதற்கிடமாயிருந்ததே யன்றி வேறில்லை.

சீருஞ் சிறப்புமுடையதாகிச் செல்வம் தழைத்தோங்கப்பெற்ற பூர்வீக சுதேச அரசாட்சின் கீழமைந்திருந்த குடிகள் தங்கள் செங்கோல் மன்னருக்குக் கீழ்ப்பட்டு சத்தியந்தவறாது நடந்து வந்தார்கள். அக்காலத்தில் பொய்சத்தியஞ்செய்தல், பொய்ப்பிரியாது கொடுத்தல், பொய்ப்பத்திரம் பிறப்பித்தல் முதலிய துர்ச்செய்கைகள் ஒன்றுங்கிடையா. கொடுக்கல், வாங்கல் முதலிய லாபாதாய விஷயங்கள் ஸ்டாம்பு என்றும், முத்திரைக்கடிதங்கள்என்றும், ரிஜிஸ்தர்கச்சேரி என்றும் சொல்லும்படிக்குள்ள ஏற்பாடுகளொன்றுமில்லாமல், சத்தியம் என்கிற கட்டுப்பாட்டின் பேரில் நடந்து வந்தன. நமக்கு அறிவுவந்தநாள் முதல் இதுகாறும் இராஜாங்கத்தில் சட்டதிட்டங்கள் சம்பந்தமாயும், மற்றவிதமாயும் எத்தனையோ மாறுதல்களும் சீர்திருத்தங்களும் உண்டாயிருக்கின்றன. இவ்விதமான காலத்திற்கூட, இந்துதேசத்தின் நாட்டுப்புறங்களில் வசிக்கும் ஜனங்கள் முத்திரைப் பத்திரம் முதலான நடவடிக்கைகள் யதொன்றுமின்றி சத்தியம் என்கிற வாக்குறுதியின்பேரிலேயே கொடுக்கல், வாங்கல் முதலிய லாபாதாயங்கள் செய்து வருகிறார்கள். முற்காலத்தில் சத்தியம் என்பது எவ்வாறு இருந்திருக்கக்கூடுமென்பதை தற்காலத்தவர்கள் யூகித்தறிந்துகொள்ளட்டும்.

இன்னும் தொடர்ச்சிவரும்.

## நீதிநெறிகள்.

(இஃது வித்தியார்த்திகளும், மற்றுமுள்ளபெயர்களும் முக்கியமாய்க் கவனிக்குமாறு எழுதப்பட்டது.)

"அறஞ்செய விரும்பு."

அதாவது தருமத்தைச் செய்வதற்கு ஆசைகொள்ளவேண்டுமென்று கருத்து. தருமம் என்று சொல்லப்படுகின்ற ஒன்று இந்துக்களுக்குப் பூர்வகாலந்தொட்டு ஏற்பட்டிருக்கின்றது. சத்தியம், தயை, பரோபகாரம், ஜீவகாருணியம் முதலிவற்றிற்கு முக்கிய ஆதாரமாயிருப்பது தருமசிந்தை. முற்காலமுதல் நடைபெற்றுவரும் நூற்களில் எவைகளைத் தழுவவேண்டுமென விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளைத் தழுவுதலும், எவைகள் வேண்டாமென விலக்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவைகளைத் தழுவாதொழிதலும் அறமெனப் பெரியோர் கூறியிருக்கின்றனர். ஆகிலும் நமக்கிருக்கும் இயற்கையறிவைக் கொண்டு ஆராயுங்கால், அறம் என்பதற்கு சத்தியம், தயை, தாக்ஷணியம், பரோபகாரம், ஜீவகாருணியம் ஆகிய இவைகளே தார்ப்பரியமென்று ஏற்படுகின்றது. இவ்வாறு தார்ப்பரித்தைக் கொண்டே நமது பூர்வீக நூலாசிரியர்களும் தருமம் என்கிற பதத்தைப் பிரித்து அதற்கு ஒவ்வோர்விதமாகப் பொருள் கூறியிருக்கிறார்கள். ஆராயுங்கால், முடிவில் எல்லாக் கருத்துகளும் ஒன்றாகவே பொருந்தும். பலவகையறங்களும் மனிதர்கட்குரியவைகளெனினும், அவற்றுள் ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, சிறைச்சோறு, மகப்பெருவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடல், நோயாளிக்குமருந்திதல், பிறருயிர்காத்தல், தண்ணீர்பந்தல் மடம் தடம் சோலை முதலியன நாட்டல், விலங்கிற்குணவுகொடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானஞ்செய்தல், முதலியன மிகச்சிறந்தவைகள். இவ்வரங்களின் தன்மையை முறையே அடுத்த முறை கவனிப்போம்.

## பழமொழிகள்.

அகத்திலழகு, முகத்திற்றெரியும்.

அகப்பட்டவனிக்கு அஷ்டமத்துச்சநி, ஓடிப்போனவனுக்கு ஒன்பதாமிடத்து ராஜா.

அகம் குறைந்தால், ஐந்தும் குறையும்.

# வித்தியாபானு.

புத். 1.] 1894-ஸு மார்ச்சு-மீ. [இல. 2.

## தன் முயற்சி.

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்."

நாம் உத்தேசித்த ஓர் காரியத்தின் பயன் நமக்குக் கிட்டினாலுங் கிட்டும்; இல்லாவிடில், கிட்டாமற்போனாலும் போகும். ஆனால் நாம் கருதிய பயன் வினைவசத்தால் நமக்குக் கைகூடாமற்போன போதிலும், முயற்சி தனக்கிடமாகிய உடம்பு வருந்தியதற்குத்தக்கவாறு கூலிதரும். திருஷ்டாந்தமாக, ஓர் குடியானவன் தன்தோட்டத்தில் இராப்பகல் வேலைசெய்து பண்படுத்துகிறான்; திடீரென மழை இல்லாமற் போனாலும், அல்லது நோய் முதலானவைகளால் அவ்வளவாகப் பயிர்வளராமற்போனாலும் கருதிய பயன் கிட்டுகிறதில்லை, ஆனால் நிலம் பண்படுத்தப்பட்டதும், ஆடு மாடு முதலானதுகள் மேய்வதற்கு வேண்டியவகை ஏற்பட்டதும், சொற்ப விளைபொருள்களாகிலுங் கிடைத்ததும் முயற்சியின் பயனாதலின், அம்முயற்சி தனக்கிடமாகிய உடம்பு வருந்திய வருத்தத்திற்குத் தக்கவண்ணம் கூலியைத் தருமென்பதற்கையமில்லை. ஆகையால் மானிடர்கட்கு முயற்சி என்பது மெத்த ஆவசியமென்று இதனால் நாம் அறிகிறோம். சிலர் சாதாரணமாய் "நாம் முயற்சிசெய்வதினால் பயன் யாதுமில்லை: எல்லாம் விதியின் பய

னாக முடிகின்றது." என்று சொல்லுகிறார்கள். அவ்வாறு சொல்லுவது முற்றிலும் பிசகு. "எல்லாம் விதிப்பயனே" என்றால், உலகில் ஜனங்கள் முயற்சிசெய்வது அநாவசியமென்றல்லவா ஏற்படுகின்றது. அவ்வாறாங்காலத்து, உலகிலுள்ள ஜனங்கள் யாவரும் யாதொருவேலையுஞ் செய்யாமல் சோம்புத் தனமாகவே இருந்து தங்கள் தங்கள் வாணாளைக்கழித்து விடலாமன்றோ? அவ்வாறாம்பொழுது, உலகிலுள்ளவர்கள் பொருள் தேடுவதும், வீடுகள் கட்டிக்குடியிருக்க நினைப்பதும், மனையாள் மக்கள் முதலானவர்களோடு வாழக்கருதுவதும், உண்பது உடுப்பது முதலான காரியங்கள் கூடச் செய்வதும், இவைபோன்ற பிறவும் அநாவசியமென்றே ஏற்படுகின்றது. இதனால் "விதியின்பயனே" என்று முயற்சியை முற்றிலும் கைவிடுவது மிகுந்த மதியீனமென்றல்லவோ நாம் யூகித்தறிகிறோம். எடுத்தகாரியம் முடியுமளவும் மனோபலத்தை விடாமல் முயற்சி செய்வதே மானிடத்தன்மையாம். இதனால் விதியென்பது ஒன்று இல்லையென்று நாம் சொல்லவில்லை. விதி பெரிதோ மதி பெரிதோ வென்று சிலர் வீண் வழக்கிடுவார். அது, பனை முந்தினதோ கொட்டை முந்தியதோ என்பது போன்ற அறாவழக்கென்றொழிக. எக்காரியமாகிலும் எடுத்த எடுப்பில் கைகூடுவது மிகவும் அரிது. ஒருக்கால் முடியாமற்போனபோதிலும், மற்றொருக்கால் முயலவேண்டும். இரண்டாந்தர முடியாமற்போனால் மூன்றாந்தரமும் முயலவேண்டும்; மூன்றாந்தரமு முடியாமற்போனால், நான்காந்தரமுயலவேண்டும். இப்படியாக நாம் எடுத்தகாரியத்திற் பல்காலும் முயற்சிசெய்து வருவோமாகில், கடைசியாக அக்காரியம் கைகூடுமென்பதிற் சந்தேகமில்லை. நாம் செய்யத்துணிந்த காரியத்தில் நமக்கு மனச்சோர்வின்மையும், விடாமுயற்சியு மிருக்குமாகில்,

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

என்று தெய்வப்புலவர் கூறியபடி, முயற்சியால் பயனைவிலக்குவதாகிய விதியையும் வெல்லலாம். மனவுறுதியும், விடாமுயற்



சியும் கைக்கொண்டவர் தாம்செய்யுங்காரியத்தில் எவ்வாறு துன்பம் நேர்ந்தபோதிலும் பொறுமையுடனிருந்து அக்காரியத்தை முடிக்கப்பார்ப்பார்களேயன்றி தாழ்மையான காரியங்களைச் செய்யமாட்டார். ஐரோப்பா கண்டத்திலுள்ள அங்கிலேயதேசம் (England) பிரான்சுதேசம் (France) ஜர்மேனியாதேசம் (Germany) முதலான தேசங்களின் பிரஜைகள் நாளுக்குநாள் நாகரீகத்திலும், கைத்தொழில் முதலியவற்றிலும் அபிவிர்த்தியடைந்து வருவதற்கு முக்கிய காரணம் அவர்களது விடாமுயற்சியொன்றே. எக்காரியத்திலும் அவர்கள் இந்துக்களைப்போல் மனச்சோர்வு அடைகிறதே இல்லை. எடுத்த கருமத்தை முடித்து உலகிற்குப் பயன் பயப்பன செய்வதே அவர்களது மனக்கொள்கை. நம் மிந்துக்களைப்போல், "எது எப்படியோபோகட்டும்! மரம் வைத்தவன் தண்ணீருற்றாமற்போகான்" என்று சோம்பேறிப் பேச்சுகள் பேசி உண்டு காலங்கழிப்பது அவர்களது வழக்கமல்ல. நம்மவர்களில் எவனாகிலுமொருவன் விடாமுயற்சி செய்யக்கருதுவானாகில் அவன் விடாமுயற்சிக்கு இடுக்கண் நேரிடும்படியான வழிகள் எவையோ அவைகளையே நாடுவது அநேகரது வழக்கம். சிலர் "இவன் வீணில் ஏன் இக்காரியத்தைச் செய்கிறான்" என்பார்கள்; சிலர், "இவன் பைத்தியகாரன்; அதனாற்றான் இக்காரியத்தைச் செய்கிறான்" என்று பிறர் கேட்கச் சொல்லுவார்கள்; சிலர் "தருமஞ்செய்கிறானா? நான்கு பிராமணர்களுக்குச் சாப்பாடு போடுகிறானா? ஒன்றுமில்லை. ஏதோ கைத்தொழிலாம்; அதில் அநாவசியமாய் பணத்தைச்செலவிடுகிறானாம்" என்றும் பிதற்றுவார்கள். சிலர்இவ்விதமான அயுக்தவார்த்தைகள் பேசுவதன்றி ஒருவன் செய்யுங்கருமத்திற் பொறாமைகொண்டு அதற்கு இடையூறும் விளைக்கப்பார்ப்பார்கள். ஒருவேளை காரியம் கைகூடிவிட்டால், "ஆ! இவன் மகாகெட்டிக்காரனோ? நாளைக்கு இவனுக்குச் சாவே இல்லையோ? இவன்தான் பிரம்மாவோ" வென்றும் சொல்லுகிறவர்களுமுளர். காரியம் கைக்கூடாமற்போனாலோ, நம்மவர்கள் கூறும்படியான ஏளனவார்த்தைகளுக்கும், அதைரியப் பேச்சுகளுக்கும் அளவேயில்லை. இவ்வாறு அறியாமை, பொறாமை என்

னுங் குணத்தை ஆபரணமாகப்பூண்ட ஜனங்கட்கு மத்தியில் ஒருவன் ஓர் நற்பயனைக்கருதி விடாமுயற்சிசெய்வது மிகவும் வருத்தமாகவே முடியும். ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் வசிப்பவர்களான சில வகுப்பினர்கள் மேற்சொல்லியவாறு இழிய தன்மையைப் பூண்டவர்களல்லர். முயற்சி செய்வதுதான் அவர்களது முதற்கடமை. ஒவ்வொருவனும் முயற்சிசெய்து ஜீவனஞ்செய்யவேண்டுமென்றுதான் அவர்கள் தங்களுக்குள் கட்டுப்பாடுகளும், சட்டதிட்டங்களும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிலநேகர் சர்க்கார் உத்தியோகத்தையே விரும்பமாட்டார்கள். அவர்கள் கற்கும் கல்வி ஏறக்குறைய கைத்தொழில், வர்த்தகம், வியவசாயம், நாகரீகம் முதலியன அபிவிர்த்தியடைவதற்கேற்றதாக விருக்குமேயன்றி அவ்வளவாக சர்க்கார் உத்தியோகத்தைத்தழுவி இருக்கமாட்டாது. சிறுவர்கள் கல்வி பயின்றபின்னர் அக்கல்விக்குரிய தொழிற்களிற் பிரவேசித்துத் தங்கள் தேசத்தில் கைத்தொழில், வர்த்தகம், வியவசாயம் முதலியன அபிவிர்த்தியடைவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்துவருவார்கள். எவ்வகைத் தொழிற்களிற் பிரவேசித்தபோதிலும் அவர்கள் அவ்வகைத் தொழிற்களிலேயே கடைசிவரையில் நின்று தாங்கள் கருதிய பயனையடைவார்கள். ஒருக்கால் இருக்கால் தங்கள் முயற்சியால் பயன் கிட்டாமற்போனபோதிலும், தாங்கள்கொண்ட விருதமாகிய முயற்சியைக் கைவிடமாட்டார்கள். ஒருவன்தனது முயற்சியில் பயனடையாமற்போனால், மற்றவர்கள் அவனை ஏளனமாகப் பேசி அதைரியப்படுத்தமாட்டார்கள். முயற்சி கைகூடாமற்போனவனுக்கு அவன் இனத்தார் மனம்குளிரும்படி ஆறுதல் தைரியவார்த்தை முதலியன வுரைத்து மறுபடியும் தன் வேலையைச்செய்யச் சொல்லுவார்கள். ஐரோப்பியர்கள் இவ்வாறு விடாமுயற்சி யுடையவர்களாதலால், "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" என்னும் பழமொழிப்படி, கைத்தொழில், வர்த்தகம், நாகரீகம், ஐசுவரியம் முதலியவற்றிற் சிறந்து விளங்குகிறார்கள். ஆகையால் முயற்சியுடைமை மானிடர்கட்கு சிறந்த அணிகலத்தை யொத்ததாதலின், அதை ஒவ்



வொருவரும் கைக்கொள்ளவேண்டியது கடமை. இம்முயற்சியானது ஓர் நாட்டிலுள்ள ஜனங்களனைவரிடத்தும் இருக்குமேயாகில், அந்நாட்டின் செல்வமும், வலிமையும் அதுவென்றே சொல்லத்தகும்.

ஒருவன் பிறருடைய உதவியின்றி சுயமாகவே முயன்று உலகிற்கு நன்மை பயக்குவன எவையோ அவைகளைக் கண்டுபிடித்தல் மிக்க மேன்மையாம். சுயமாகவே ஒருவன் செய்யத்தகுங் காரியத்தில் பிறருடைய உதவியை எதிர்பார்த்து நிற்றல் மதியீனம். தான் செய்யத்தகுங் காரியத்தைத் தானே செய்யாமல் ஒருவன் பிறருடைய உதவியை எவ்வளவுக் கெவ்வளவு எதிர்பார்க்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் தேகபலம், மனோபலம் முதலானதுகளில் இளைத்து துன்பத்துள் ஆழ்வானென்பது நிச்சயம். நம்மவர்களிற் பெரும்பாலார் சுயமாக யாதொரு முயற்சியும் செய்கிறதில்லை. அநேகர் சோம்புத்தனமாகவே இருந்து காலங்கழிக்கிறார்கள். தாங்களாகவும் ஓர்காரியத்தைத் தெரிந்துகொள்ளுகிறதில்லை; பிறர் ஓர் நற்காரியத்தைக் குறித்துச் சொன்னாலுங் கேட்கிறதில்லை. கைப்பொருளேதேனுமிருந்தால், அதை வீண் ஆடம்பரங்களிலும், துர்விர்த்திகளிலும் செலவு செய்துவிடுகிறார்கள். கைத்தொழில், வர்த்தகம், வியவசாயம் முதலான பல தொழிற்கள் அபிவிர்த்தியடையும்பொருட்டுள்ள வழிகளைச் சுயமாகவே கவனித்துணர்ந்து அவ்வழிகளில் தாங்களும், தங்களையொத்தவர்களும் செல்லுவதற்கான முயற்சிகள் எவையோ அவைகளை நாடுகிறதில்லை. தன்முயற்சியாலாய பயனை நம்மவர்கள் சிந்தியாதிருப்பதாற்றான் நாம் வரவர தேகபலம் மனோபலம் முதலியவற்றிற்குன்றி வறுமையடைந்து வருந்துகிறோம். தகப்பன் ஐம்பது வயது ஜீவித்திருந்தால், மகன் இருபத்தைந்து வயது ஜீவனோடு வாழ்தலும், தகப்பன் நாற்பதுவயது வரையில் வாழ்ந்தால், மகன் இருபது வயதுவரையில் வாழ்தலும் அரிதாயிருக்கிறது. இவ்வாறு நாளுக்கு நாள் ஜனங்கள் பலவீனமடைவதற்குரிய பலகாரணங்களுள் தன்முயற்சி என்கிற ஒன்று நம்மவர்களிடத்து இல்லாமற்போனதும் காரணமே. நம்மவர்களிலநேகர்

யாதொரு முயற்சியுஞ் செய்யாமல் சத்திரமெங்கே! சாலையெங்கே என்று திரிந்து சோம்புத்தனமாய் உண்டு காலங்கழிப்பதாற்றான், நம் தேசம் நாளாவட்டத்தில் பரிதாப நிலைமைக்கு வந்துவிட்டது.

## தமிழ்ப் பாஷையின் வரலாறு.

### II.

இந்துதேசத்தின் தென்பாகத்தில் இப்பொழுது வழங்கிவருந் தமிழ் ஓர் காலத்தில் அதன் வடபாகத்தில் வழங்கி வந்ததெனவுஞ் சொல்லப்படுகின்றது. உலகிலுள்ள ஜனங்களைப் பாஷா விற்பன்னர்கள் ஆரியர்கள் என்றும், அனரியர்கள் (Non-Aryans) என்றும் இருவகுப்பினர்களாகப் பிரித்து ஒவ்வோர் வகுப்பினர்கட்கும் தனித்தனி சரிதங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். "திராவிடர்கள்" என்கிற தமிழ்வகுப்பினர்கள் "அனாரியர்கள்" (Non-Aryans) என்கிற வகுப்பிற் சேர்ந்தவர்களென்றும், இவ்வகுப்பினர்கட்கும், "ஆரியர்" என்கிற வகுப்பார்கட்கும் யாதொரு விதமான சம்பந்தமுமில்லை என்றும் கூறுவாருமுளர். இவ்வாறு கூறுந்தமிழ் வகுப்பினர்கள் ஓர் காலத்தில் ஆசியாகண்டத்தின் மத்தியபாகத்தில் வசித்துவந்தார்களென்றும், பின்பு சிந்து நதிக் கருகாமையிலுள்ள மலைக்கணவாய்களின் மூலமாய் இந்துதேசத்திற் பிறவேசித்தவர்களென்றும் சொல்லப்படுகின்றது. இவர்கள் சிந்து, கங்கை, யமுனை முதலிய நதிக்கரையோரங்களிற் சிறிது காலம்வரையிற்குடியேறி இருந்தார்கள். பிறகு மேற்படி கணவாய்கள் மூலமாய் "அனாரியர்கள்" (Non-Aryans) வகுப்பைச்சேர்ந்தவர்களில் ஓர் வகுப்பினர் இந்துதேசத்திற் பிரவேசித்து முன்னால் சிந்து யமுனை கங்கை முதலிய நதிக்கரையோரங்களிற்குடியேறியவரும், முதல் முதல் இந்து தேசத்திற் பிரவேசித்தவர்களுமான ஜனங்களை தக்ஷிணபாகத்திற்குத் துரத்தினார்கள். இவ்விரு வகுப்பினர்களும் தனித்தனியான காலத்தில் இந்து தேசத்திற்கு



வந்து குடியேறியபோதிலும், அவ்விரு வகுப்பினர்களும் ஒரேவிதமான பாஷையையே சம்பாஷித்து வந்தார்களெனச் சிலச் சரித்தாசிரியர்கள் கூறுகிறார்கள். இவ்வாறு பாஷையைச் சம்பாஷித்து வந்தவர்கள்தான் திராவிடர்களெனச் சொல்லப்படுகிறார்கள். அவர்களுக்குத் "திராவிடர்கள்" என்கிற நாமம் வந்த வரலாற்றைப் பின்னாற் கூறுவோம்.

## இல்லற வாழ்க்கை இயல்.

(வித்தியாபாநுவின் 11-வது பக்கத் தொடர்ச்சி.)

இனி, அறம் என்பது இல்லறம் துறவறம் என இரண்டாகவும்; பொருள் கல்விப்பொருள் செல்வப்பொருளென இரண்டாகவும்; இன்பம் சிற்றின்பம் பேரின்பமென இரண்டாகவும் பகுத்துரைக்கப்படும். இம்மூன்றையும் விட்டதே வீடாகலின், அது ஒன்றேயாம். (வீடு-விடுபடுதல்) பொருள் என்பது அறத்துக்கும் இன்பத்துக்கும் நடுவில் வைத்துரைக்கப்படுதலால் அறம் இன்பமென்னு மவ்விரண்டிற்கும் அப்பொருள் துணைக்காரணமென்பதும் தெற்றென விளங்கும். சிற்றின்பமென்பது, இந்நிலவுலகத்திற் சில்வாழ்நாட் பல்பிணிச்சிற்றறிவுடைய மாந்தர் தூல உடலோடு நின்று துய்க்கும் இம்மையின்பத்தை. பேரின்பமென்பது துறக்கம் முதலிய பதங்களிற்சென்று திப்பிய உடலோடு நீடித்து நின்று துய்க்கும் மறுமையின்பத்தை. பேரின்பமென்பது முத்தியையே யென்பார் சிலர். அது வழுவேயாம். முத்தி, மோக்ஷம், வீடு, என்பன பிறவும் ஒரு பொருட் கிளவி. அற்றேல் முத்தியைப் பேரின்பமென வழங்குதல் பெரியோர் வாக்கிலும் கண்டாமெனில், ஆம். இம்மையின்பத்தை நோக்கத் துறக்க முதலிய மறுமையின்பம் பேரின்பமாதல்போல மற்றவ்வின்பங்களையு நோக்க முத்தியின்பமே ஒப்புயர்வற்ற பேரின்பமாகலின் அங்ஙனங்கூறுதல் வழுவுமன்றாம். பிறவெனின், இடம் நோக்கிப் பொருள்கொள்கவென்பது கருத்து.

இதுநிற்க; துறவறம்போல இல்லறமும் முத்தியைப் பயக்கவல்லதாமென்பதுணராது துறவறமொன்றே முத்திக்கு வாயிலென்பார் சிலர். அவர் கூற்றுப் போலியென்க. என்னை? ஞானத்தாலே முத்திகூடுதலன்றி வேறின்மையான் துறவில் விளங்குஞானத்தினும் இல்லறத்தில் விளங்குஞானம் இருளில் வைத்த விளக்குப்போல அதிகம் ஒளி செய்யுமாத

லின் என்க. இல்லறம் ஞானத்திற்குத் தடையாவதுமன்றென்க. அத
னால் வீட்டை விரும்புவோர் துறவறத்தையே தழுவல் வேண்டுமென்
பது வாளாகூற்றென்க. அற்றேல் இல்லறமொன்றே புருடார்த்தங்கள்
நான்கினையும் ஒருங்கு பெறுதற்கு வாயிலாயிருப்ப அதனில் வேறான
துறவறமொன்று விதிக்கப்பட்டுள்ளது மிகையாய்ப்பயனில் கூற்றாகுமெ
னின், ஆகாது. பரிபாக விசேடத்தாற் போகத்தில் விரத்திவந்த பக்கு
வர்க்கு அத்துறவறம் அமைவதாகலின் துறவிகள் வீடொன்றையே
விழைந்து நிற்பரென்க. அங்ஙனம் வீடொன்றே விரும்பித்தவமியற்றுந்
துறவிகட்கும் பிராரத்தம் துலையுங்காறும் உடல் நிற்குமென்பதொரு
தலையாகலானும் உடல் நிறகுங்காறும் அவ்வுடலுக்கின்றியமையாத
உண்டி உடைமுதலிய வேண்டப்படுமாதலாலும் அவ்வுண்டிமுதலிய கிட்
டாவிடத்துப் பசித் துன்பமுதலியவற்றால் தவநெறிக்கிடையூறு நேரு
மாதலாலும் அவ்வுண்டிமுதலிய பெறும்பொருட்டு அத்துறவிகளும் இவ்
வில்லறத்தோரை விரும்பா நிற்பரென்க. அங்ஙனம் விரும்புந் துறவி
கட்கு அவ்வுண்டிமுதலிய கொடுத்து அவர் தவம் நிறைவேறச்செய்த
லால் அவர்பெறும் தவப்பயனிலும் இவ்வில்லறத்தார் பங்குகொண்டு
உவக்குந்தன்மையுடைய ராவரென்க. இவ்வியல்பை நோக்குழி அத்துற
விலும் இல்லறமே மிகச்சிறந்ததென மதிக்கப்படுமென்க. இக்கருத்து
நோக்கியே "இல்லறமல்லது நல்லறமன்று" எனவும், "துறந்தார்க்குந்
துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு மில்வாழ்வா னென்பானிலை" எனவும்,
ஒளவையாரும் நாயனாரும் இல்லறத்தைச் சிறப்பித்தருளினாரென்க. அற்
றேல், அங்ஙனம் இல்லறத்தை வியந்துகூறிய அவ்வருட்புலவரிருவருள்
ஒளவையார் இல்லறங்கொள்ளாது துறவில் நின்றதென்னையெனின்,
அஃது மேற்கூறியாங்குப் போகத்திற் பற்றற்ற விரத்தியாலென்க. பற்
றுறுதலும் பற்றறுதலும் பிராரத்தத்தை யொட்டி நிகழ்வதாதலின், அஃ
திங்கு ஆசங்கையன்று. இதுநிற்க; இல்லறத்திற்கு முதற்றுணையாகிய
மனைவி எல்லா நற்குணங்களும் ஒருங்கு வாய்ந்த உத்தமியாயிருந்தா
லன்றி அவ்வில்லறஞ் சிறைப்புடையாது. அதனாலன்றே "பத்தாவுக்கேற்ற
பதிவிரதை யுண்டானால் எத்தாலுங்கூடியிருக்கலாம்; சற்றேனும் ஏறுமா
றாக விருப்பாளேயாமாகிற் கூறாமற் சந்நியாசங்கொள்" என்பதுமுதலிய
வாக்கியங்களால் அறிவுறுத்தினார் அன்னையாரென்க. ஓர் கன்னிகையை
ஓர் மனிதன் மணப்பதற்கு முன்னரே அவளது குணவொழுக்கங்கள்
இத்தன்மைத்தென முற்றுமுணர்தல் அசாத்தியமேயாம். அதனால் அறி
வுக்கெட்டியமட்டில் (இயன்றளவு ஆராய்ந்து) கொள்ளுதல் கடமை



யாம். கொண்ட பின்னர் கணவனது அறிவாற்றல்கட்குத் தக்கபடி அம்
மனைவியின் குணவொழுக்கங்கள் மாறுபடும். பெரும்பாலும் பெண்களது
குணவொழுக்கங்கள் அவர்களைப்பெற்று வளர்க்கும் தந்தைதாயர்களது
குணவொழுக்கங்கட்குத் தக்கபடியே குழவிப்பருவத்தில் அமைந்திருக்
கும். அதனால் அறிவுள்ள தந்தைதாயர் தஞ்சிறுமகாரை நன்னெறியிற்
பழக்கி வருதல்வேண்டும். கவலையின்றிப் போனபோக்கில் விட்டு வளர்
த்து வந்தால் அக்குழவிகள் தெய்வபத்தி பெரியோர்பத்தி முதலிய நற்
குணங்களின்றித் தீநெறிகளிற் சிந்தை செலுத்திக் கெடுவர். பின்னர்
அவர்களைத் திருத்துதல் அசாத்தியமாக முடியும். இவ்வுண்மையுணராத
இந்நாட்டார் பலர் "கைம்பெண்ணூட்டி வளர்த்திய கழுதைக்குட்டி" என்
னும் பழமொழிக் கிணங்கத் தம்மக்களைக் கழுதைகளாக்கி விடுகின்றனர்.
எவரும் தந்தம் முயற்சியால் நற்பயன்பெற முந்துவதே புத்தியாகுமன்றி
விதியென்றும் கடவுள் செயலென்றும் பலவாறு பிதற்றிக்கொண்டு
சோம்பேறிகளாய்க் கெடுதல் அறிவாகாது. கணவன் கல்வியறிவொழுக்
கங்களிலே சிறந்தவனாயின் மனைவி சொடியளாயிருப்பினும் நாளடை
விலே அவளைத்திருத்தித்தன் வசமாக்கியின்புறுவான். இதுவே மெய்யறி
வாளர் தொழிலாம். இனி எத்திறத்துத் தந்திரயுக்திகளாலும் வசப்படுத்த
இயலாத கொடுங்குணமுள்ள சண்டிப்பெண்களும் சிலர் உண்டென்பது
உண்மையே. அவ்வாறே ஆண்பாலிலும் உண்டு; அவ்வாறே பக்ஷிமிருகங்
களிலும் மற்றெல்லா ஜீவராசிகளிலும் உண்டு. அத்தகைய பெண்பா
லாரை அத்தகைய ஆண்பாலாருக்கே முடிபோட்டுவிடுதல் நன்மையாம்.
அது "உளுத்தகொள்ளுக்கும் ஓட்டைச்சட்டிக்கும்" என்னும் பழமொ
ழிப்படி அமையுமாதலாலென்க. அங்ஙனமின்றி "நீதியகன் மூடருக்க
ருந்ததியெனத்தக்க நெறிமாதரைத்தருதலும்" நிதானமுளவுத்தமர்க்கிங்
கிதமிலாத கொடுநீலியைச் சேர்வித்தலும்" நீதியாகாது. அங்ஙனம்
கணவனும் மனைவியும் மாறுகொண்ட இல்லறம் புல்லறமாயழியும். வது
வைபுரியுங்காலத்து வதுவரர்களது இலக்கணமுற்றும் அறிபவியலாமை
யாலாவது வேறு காரணங்களாலாவது அத்தகைய கொடும்பெண்டிரை
மணந்த ஒருவன் பிறகு அம்மனையாளை அகல ஓட்டிவிட்டு வேறு நற்
பெண்டிரை மணத்தல் குற்றமாகாது. அது தனது உடலில் சீக்கொண்டு
புரையோடும் புண்களைக்கண்டால் அறுத்தெறிதல் போலுமாம். எறியா
விடிற் பின்னர்ப் பெருங்கேடுவிளைக்குமாதலினென்க. கண்ணிரண்டுங்
கூடி யொருபொருளைக்காண்டல்போலக் கணவனு மனைவியும் அறிவொற்
றுமையுடையராயிருப்பின் அவ்வின்பம் மற்றெவ்வின்பங்களினுந் தலை

சிறந்ததாகுமென்க. இதுநிற்க; சில தாய்தந்தைகள் தம்புத்திரர்கட்கு விவாகம் புரிவித்து மகிழ்தலில்மட்டும் நோக்கமுடையராகியிருக்கின்றார்களன்றிப் பிற்காலத்து அவர்கள் வாழ்வுதாழ்வடையாதிருக்குமாறு செய்தலில் நோக்கமுடையராயிருப்பதில்லை. இது அறிவு கேடாம். கற்பிலக்கணம் முதலியவைகளைப்பற்றி மாபாரதம் முதலிய பழய இதிகாசங்களிலும் தருமசாஸ்திரங்களிலும் விரிவாய்க் கூறப்பட்டிருப்பதுமன்றி இக்காலப்பண்டிதருள்ளும் அனேகர் தாமியற்றிய நூல்களிற் பரக்கக்கூறியிருக்கின்றனர். (நான்காம் பாலபாடம், விநோதரசமஞ்சரி, மாமிமருகி வாழ்க்கை முதலிய வசனப்பிரபந்தங்களிலும் செய்யுட்களிலுங்காண்க) அதனால் நாமிங்கு சுருக்கினோம். இம்மையில் மனிதர்பெறும் பேறுகளெவற்றினும் நன்மனையாளோடு கூடிவாழப்பெறுமின்பமே தலையாயது. அடையுந்துன்பங்களெவற்றினும் துர்க்குணப் பெண்டிரோடு கூடிவாழுந் துன்பமே பெரிது. மெய்ஞ்ஞானச்செல்வம் பெற்ற மேலோரெல்லாரும் உச்சியில் வைத்துக்கொண்டாடும் தெய்வப்புலவராகிய நாயனார் "அடிசிற்கினியாளே அன்புடையாளே படிசொற்றவராதபாவாய்-அடிவருடிப் பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ வென்றூங்கு மென்கணிரா" என்றருளினாரெனில் மற்றென்னையோ நாம் சொல்லுவது? "கொடியது" என்று தொடங்கிய அன்னையார் "அதனினுங்கொடியது அன்பிலாப்பெண்டிர், அதனினும் கொடியது அன்புறவவர் கையிலுண்பது தானே" என்று முடித்ததூஉங் காண்க.

இன்னும் தொடர் வரும்.

☞ குறிப்பு. இத்தமிழ் நாட்டில் வசிக்கும் நம்மவருள்ளேபலர் நந்தெய்வத்தமிழ்ப் பாஷையின் மேன்மையையுணராதும் அதனை நன்குபயிலாதும் அன்னியபாஷாபிமான மீக்கொண்டு தமிழ்ப்பத்திரிகையைக் காணின், ஹோ! இத்தமிழ் நன்றாயில்லை, கடுமையாயிருக்கின்றது என்று புறம்பழித்து வீசுதல்கண்டு அஞ்சியநாம் இதில் வன்சொற்புணர்க்காது இங்ஙனம் நடுத்தரநடையில் வரைந்து வருகின்றோம். ஆதலின் நமதன்பர்கள் அங்ஙனம் புறக்கணியாது முற்றும்படித்துப் பயன்கொள்ளுமாறு வேண்டுதும்.



# சுதேச வைத்தியம்.

(வித்தியாபானுவின் 15-வது பக்கத் தொடர்ச்சி.)

மஹாசிவராத்திரி முதல் அதிக வேனிற்காலமாதலால் இக்காலத்தில் தேள்களாற் கொட்டுண்டு கதறுவார். கூக்குரல் மிகுதியாதல்பற்றி அதற்குக் கை முறையான சில மருந்துகள் அடியிலெழுதப்படுகின்றன.

## தேள் விஷத்துக்கு மருந்து.

(1) கந்தகத்திராவகம் இரண்டொருதுளி கடிவாயில் விடச்சாந்தமாகும்.

(2) துப்பாக்கிமருந்து இரண்டு எள்ளளவு கடிவாயில் வைத்து நெருப்பைச்காட்ட மருந்துவெடிக்கும்; உடனே சாந்தமாகும்; இது குழந்தைகட்குச் செய்யற்க.

(3) சுத்திசெய்யாத நவாசாரம் அரைத்தோலா (கால்ரூபாயெடை) பொடித்து அவ்வளவு சுண்ணாம்பும் கூட்டி இடது உள்ளங்கையில் வைத்து வலக்கைப் பெருவிரலால் சரசர வென்று சுறுசுறுப்பாயும் அழுத்தமாயும் தேய்க்க இரண்டொரு நிமிஷத்தில் தண்ணீர்போற் கரைந்து அதிக காரமான ஆவியெழும்பும்; சீக்கிரமாகக் கையை மூக்கினிடத்தில் குவித்துப் பிடித்து இருமூக்கிலும் அவ்வாசனையை உறுஞ்சும்படி செய்யவேண்டும்; அவ்வாவி சுறீரென்று மண்டைக் கேறியவுடனே தேள் விஷம் பறந்துபோம். செய்பவர்க்கு யுக்தியும் சுறுசுறுப்பும் வேண்டும். இது குழந்தைகட்காகாது.

(4) எட்டிக்கொட்டை (தான்றிவிதை) வெள்ளெருக்கம்பால் (கிடையாவிடில் காட்டெருக்கம்பால்) விட்டு உரைத்து கடிவாயில் மந்தமாய் ஒரு அங்குலம் சூழப்பூசி கொஞ்சம் நெருப்புச்சூடு காட்டப்பறந்துபோம்.

(5) புதிய எலுமிச்சம் பழத்தை அரிந்து இருமூடிகளையும் கடிவாயில் அரைமணிநேரம் அழுத்தித்தேய்க்கச் சாந்தமாகும்.

(6) "நாகப்பூ" வென்கிற கடைச்சரக்கை ஜலத்திலுரைத்துக் கடிவாயிற்பூசிக் கொஞ்சம் உண்ணக்கொடுக்க.

(7) வெண்குன்றிவேர் ஜலம்விட்டரைத்துக் கடிவாயிற்பூசத் தீரும்.

(8) கொசுத்தேன் மெழுகை உருக்கிக்கடிவாயில் வைக்க.

### பாம்பு விஷத்திற்கு.

எட்டிக்கனிகள் பத்தெட்டுக்கொணர்ந்து சட்டியிலிட்டு வேப்பெண்ணை வார்த்து அடுப்பேற்றி வேவித்து லேகியம்போல் மர்தித்து டப்பிகளில் வைத்துக்கொண்டு விஷந்தீண்டினோர்க்குத் தூதுளாங்காயளவு உண்ணக் கொடுத்துக் கொஞ்சம் கடிவாயில் பூச நல்லபாம்பு விரியன்பாம்பு முதலிய எவ்வகைப்பாம்பின் விஷங்களும் பறக்கும். பாஷாணம் முதலிய விஷவஸ்துக்களைப் புசித்தோர்க்கு இம்மருந்து பயன்படா. அது நீலிவேர் மிளகு கியாழத்தால் முறியும்.

---

### மதன காமேசுவரம்.

சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, குங்குமப்பூ, சிறுநாகப்பூ, ஏலரிசி, கருஞ்சீரகம், செங்கழுநீர், கோஷ்டம், அதிமதுரம், முந்திரிப்பழம, பேரீச்சம்பழம், சிறுதேக்கு, இவை சமநிறையாய்க்கலந்து கல்லுரலிலிட்டுத் தட்டைப்பூணுலக்கை கொண்டிடித்துப் பொடியானபின் தேன் விட்டு நன்றாயிடித்து மண்பாத்திரத்தில் எடுத்துவைத்து, ராத்திரி போஜனத்துக்குமுன் சுண்டைக் காயளவு (24) நாள் கொள்ள. பசிதீபனம், சரீரவனப்பு, வீரியவிருத்தியுண்டாகும். வாயு, அதிசாரம், கிராணி, மூத்திரக்கிரிச்சிரம், பாண்டு, சோகை முதலிய நோய்கள்தீரும். இச்சாபத்தியம்,

---

### பல்வலிக்கு மருந்து.

கண்டங்கத்திரி விரையும் மஞ்சளும் சமனாய்ப்பொடி செய்து எருக் கன்பாலில் குழைத்துப் பற்சந்துகளில் கொஞ்சநேரம் வைக்கப் பல்வலி பறக்கும்.

---

### மலடு தீரமருந்து.

கையாந்தகரைச் சாறும் எலுமிச்சம் பழச்சாறும் ஒவ்வோர் அவுன்ஸ் கலந்து மூன்று நாட்காலை கொடுக்க உஷ்ணம் முதலியவற்றால் நேர்ந்த கருப்பத்தடை நீங்கும். சந்ததியுண்டாகும்.

---

### வாந்திகட்கு மருந்து.

பருத்திக் கொட்டையிலுள்ள பருப்பு, ஏலம், திப்பிலி, நெற்பொரி, சக்கரை, இவை சமன்கூட்டிச் சூரணித்து வெருகடிபபிரமாணங்கொள்ள வாந்திகள் தீரும்.



### பித்தசுரக் கஷாயம்.

ஆடாதோடையீர்க்கு, பேய்ப்புடல், பற்படாகம், கண்டங்கத்திரி, சீந்தித்தண்டு, நிலவேம்பு, வில்வஞடு, நெல்லிவற்றல், சீரகம், சொத்த மல்லி, நெற்பொரி, பச்சைப்யறு, விலாமிச்சுவேர், துளிசிவேர், சிந்தா மூட்டிவேர் இவை சமனிடைகூட்டிக் கியாழஞ்செய்து கொடுக்கப்பித்த சுரம்போம்.

---

### குழந்தைகட்கு மாந்தர்குளிகை.

சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு, வெள்ளுள்ளி, பெருங்காயம், தேசாவரம், அதிவிடையம், இவை வகைக்கு விராகனிடை-க-அப்பைக் கோவைக் கிழங்கு வராகனிடை-சO-இவை அப்பக்கோவைச் சாறு விட்டரைத்து பிரண்டைக்காய்ப்பிரமாணம் உருண்டைசெய்துகொண்டு அப்பக்கோவைச்சாற்றில் ஒரு குளிகை இழைத்துக் கொடுக்க ஊதுமாந்தம்வயிற்றுப் போக்கு பொருமல் மாந்தம் முதலிய வெல்லாந்தீரும்.

---

### பல்வலிக்கு மற்றொன்று.

வெண்பா.

முருக்காரை சுக்கு மருதோன்றி வெள்வேல்
எருக்காவரை பிரம்போடேழும்—நருக்கிட்டு
நாலிலொன்றாய்க் காச்சிநாலுநாட் கொப்புளிக்கப்
பாலன் பல்லாங் கிழவன்பல்.

இன்னும்வரும்.

---

## சரீர சுகத்தின் மேன்மை.

---

உலகிற்கு முக்கிய ஆதாரம் உயிர். அவ்வுயிர்க்கு முக்கிய ஆதாரம் உடல். உயிரோடுகூடிய இவ்வுடல் இல்லாவிடில் உலகிற்குப் பயன் யாது? ஆகையால் உலகத்தோடுதித்த இவ்வுடலைச் செவ்வையாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது ஒவ்வொருவருக்கும் முக்கிய கடமையாம். இவ்வுடலானது எல்லா அங்கங்களும் பொருந்தி இயல்பாய் எந்த நிலைமையிலிருக்கவேண்டுமென விதிக்கப்பட்டிருக்கின்றதோ அந்த நிலைமையிலிருந்தாற்றான் "சரீரசுகம்" என்று சொல்லப்படுகின்றது. இவ்வாறு நிலைமை எப்பொழுது தவறுகின்றதோ அப்பொழுது தான் சுகமின்மை,

சுகக்கேடு, சுகத்தாழ்வு எனப் பலவாறு கூறப்படுகின்றது. சரீரசுகமுடையவனெவனோ அவனே உலகில் எல்லாக் காரியங்கட்கும் அருகன். அஃதில்லாதவன் யாதொருகாரிங்கட்கும் பயன் படான். “சுவரைவைத்துக் கொண்டல்லவோ சித்திரம் எழுதவேண்டும்” என்று சொல்லும் பழமொழிபோல், நமது சரீரசுகத்தை அதிக ஜாக்கிருதையுடன் பாதுகாத்துக் கொண்டல்லவோ, உலகில் எல்லாவேலைகட்கும் அருகனாகவேண்டும். சரீரசுகமுள்ளவன் எந்தவேலையைச் செய்தபோதிலும், சுறுசுறுப்பாகவே இருப்பான். அவனுடைய அறிவானது நல்லநிலையில் நிற்கும். எந்த வேலையையும் அவன் வெகு எளிதில் செய்வதுமன்றி அவ்வேலையின்திறனும் நன்றாகவே இருக்கும். வேலையைச்செய்த பின்னர் நல்ல பசியுண்டாகும். சாப்பாட்டில் அதிக ருசி கொடுக்கும். இராக்காலங்களில் நித்திரை நன்றாக வரும். சரீரசுக மில்லாதவனுக்கோ இவ்விதமான குணங்களொன்றும் பொருந்தமாட்டாது. அவன் யாதொரு வேலைக்கும் பயன் படாதவனாகிறானன்றியில், அவன் உயிர் பெற்றிருத்தலானது அவனோடு சேர்ந்தவர்களுக்கும், மற்றவர்களும் ஓர் பெருஞ்சுமையாக வன்றோ விருக்கும். சரீர சுகமில்லாதவன் ஓர் ஸ்தானத்திரான். அவனது மனம் ஓர் நிலையிலிருக்கமாட்டாது. நல்லபசி இகுக்கமாட்டாது. தேவாமிர்தத்தையுண்டபோதிலும், அவனுக்கு அதில் ருசி தோன்றமாட்டாது. இரவில் நன்றாகத் தூக்கம் வரமாட்டாது. எப்போதும் அலரிக்கொண்டும் வருத்தப்பட்டுக்கொண்டுமே இருப்பான். இதனால் எத்தனை பெயர்கள் மனவருத்தப்பட வேண்டுமென்பதை யோசித்துப்பாருங்கள். பிரபுவென்றும், பெரிய மனிதனென்றும், இராஜாக்களென்றும் பட்டப்பெயர் தரித்திருப்பவர்கள் கூட சகல ஐசுவரியத்தையும், சுகவாழ்க்கைக் குரிய மற்ற வசதிகளையும் படைத்திருந்தபோதும்; சரீரசுகமென்கிற ஒன்றில்லாமல் வியாதிகளாற் பிடிப்பட்டிருப்பார்களேயாகில், அவர்கள் கழிக்கும் வாணாள் வீணாள் என்றே மதிக்கப்படும்.

## நீதி நெறிகள்.

### தருமம்.

முன்னமே வகுத்துக்கூறிய தருமங்களுள் “ஆதுலர்க்குச் சாலை” என்பது முக்கியமான தருமமாம். “ஆதுலர்க்குச் சாலை” என்றால் “தரித்திரர்கள் அன்றாடம் தங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட இடம்” என்று பொ



ருளாகின்றது. (ஆதுலர்—தரித்திரர்) ஏழைகள் அன்றாடம் சாப்பிடும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் தருமசத்திரமும் இவ்வகுப்பைச் சேர்ந்ததே. சாதாரணமாய் ஏழைகள் அன்றாடம் தங்குவதற்காக மாத்திரமே கட்டப்பட்ட சாலைகளும், சத்திரங்களு முண்டு. இவைகளில் ஏழைகள் அன்றாடம் காலக்ஷேபஞ் செய்தற்பொருட்டு ஏதாகிலும் வகை ஏற்படுத்தப்படாமலிருந்தாலுமிருக்கலாம். இவ்வகையான சாலைகளையும், சத்திரங்களையுந்தவிர, ஏழைகளும், வழிப்போக்கர்களும் தினந்தோறும் வந்து தங்குவதற்கும், சாப்பிட்டுக் களைதீருவதற்கும் ஏற்படுத்தப்பட்ட சாலைகளும், சத்திரங்களும் இந்துதேசத்தின் சிற்சில பாகங்களிலிருக்கின்றன. இவ்வகையான தருமங்களை நிலைநாட்டி இருக்கும் பாக்கியவான்களது புண்ணியமே பெரும்புண்ணியம். யாதொரு தொழிலையுஞ் செய்யவகையறியாமல் திகைத்துத் திசைதப்பித் திரிகின்றவர்களுக்கும், சரீரத்தில் தசையற்று எலும்பும் தோலும் மேலெடுத்து வருந்துவோர்க்கும், முடம் குருடு செவிடு முதலியவற்றால் வருந்தி வறுமையடைந்திருப்போர்க்கும், ஸ்தலயாத்திரை தீர்த்தயாத்திரை முதலானதுகளை விரும்பி வழிநடந்து பசிதாகமுதலியவற்றாற் களைத்திருப்போர்க்கும் இடங்கொடுத்து அவர்களது பசிதாகமுதலியவற்றைப் போக்குகிறவர்களே புண்ணியவான்களிற் கண்ணியவான்களென மதிக்கப்படுவார்கள். உலகில் வறுமையடைந்து வருந்துகிறவர்கள் கணக்கில்லாமலிருக்கிறார்கள்.

“இன்மையி னின்னாத தியாதெனி னின்மையின்
இன்மையே யின்னாதது”

என்று தெய்வநூல் கூறியவண்ணம் வறுமையைப்போல் துன்பஞ்செய்யத்தக்கது வேறொன்றுமில்லை. இவ்வாறு வறுமை என்கிற துன்பக்கடலுள் ஆழ்ந்து வருந்துகிறவர்களெவர்களோ அவர்களை யழைத்துவந்து அவர்கள் தங்க இடமும் சாப்பிடப் போசனமும் கொடுத்து உதவுகின்ற மகான்களது புண்ணியமே பெரும்புண்ணியம்; அவர்களது காருணியமே பெருங்காருணியம். **தருமம்** என்பது தலையெடுத்தோங்கப்பெற்ற புண்ணிய பூமியாகிய இந்துதேசத்தின் மீது பூர்வீக இந்துமன்னவர்கள் கணக்கில்லாப் பொருட்செலவுசெய்து பலதிக்குகளிலும் வறியோர்க்கென்றே எண்ணிறந்த சாலைகளையும் சத்திரங்களையும் நிலைநாட்டி இருந்தார்கள். சுதேச இராஜாங்கமற்றதும் தர்மசாலைகளுமற்றன. இமயபருவதமுதற் கன்னியாகுமரி வரையிலுமுள்ள நாடு நகரங்களை யாம் பரிசோதித்துணர்வோமாயின் அளவிட்டறியக்கூடாத ஏழைகள் அன்றாடம் ஜீவனத்

துக்கு வகையற்று வருந்துவதைக்காணலாம். தர்மசாலைகளும், சத்திரங்களும் அத்தி பூத்தாற்போலிருக்கின்றன. முற்காலத்தைப்போல் இக்காலத்தில் ஏழைகளைப்பரிபாலிக்கவல்ல அரசர்களையாவது பிரபுக்களையாவது காணக்கிடைப்பதரிதாய்விட்டது. அன்றுடம் ஏழைகளிலனேவர்கள் "சோறுகிடைக்குமிடமே சுவர்க்கலோகம்" என்பது போல் சோற்றுக்குக் காற்றாய்ப் பறந்துகொண்டு தங்கள் ஜாதிசமயக்கொள்கைகளை இழந்து ஒருவேளை வயிற்றுச்சோற்றுக்காகவே அந்நியமதக் கூண்டுகளிலடைக்கலம் புகுந்து விட்டார்கள். மேலும் தருமநெறியானது இக்காலத்தில் ஏளனத்தையடையும்படியான நிலைமையிலாழ்ந்து விட்டது. தசையின்றி எலும்பும் தோலும் தோன்றத்திரியும் பிச்சைக்காரர்கள் பெரிய மசடிவீடுகளில் வசிக்கும் ஐசுவரியவான்கள் வாயல்களில் பிச்சைக்காக நுழைந்தால்கூட அவ்வைசுவரியவான்கள் தங்கள் காவலாளிகளுடன் அப்பிச்சைக் காரர்களைக் கழுத்தைப்பிடித்து வெளியில் தள்ளிவிடும்படி ஏவிவிடுகிறார்கள். சில பிரபுக்களிருப்பிடத்துக்கு ஏழைகள் வந்து 'ஐயா! சிறிது பிச்சையிடும்' என்றிரந்தால், அப்பிரபுக்கள் அவ்வேழைகளை நோக்கி, "அடே! மூடா! நீ ஏருழுவதற்கென்ன" வென்கிறார்கள்; சில பிரபுக்கள், "நீ சுமை சுமப்பதற்கென்ன" வென்று கூறுகிறார்கள்; சிலர், "நீ எருமை மேய்ப்பதற்கென்ன" வென்று பிதற்றுகிறார்கள். ஆகையால் தருமத்திற்கிருப்பிடமாகிய இந்துதேசம் வர வர அதாமம் என்கிற இருளாற் சூழ்ந்துவிடும்போல் காண்கிறது. தருமஞ் செய்வதற்குச் சக்தியுள்ளவர்களே தருமநெறியைப் பழித்துப் பாழாக்கிவிடில், உலகில் தயை, தாக்ஷண்யம், பரோபகாரம், ஜீவகாருணியம் முதலிய நற்குணங்கள் எவர்களிடத்துத்தான் விளங்கும்? "ஏற்பது இகழ்ச்சி" என்னும் உண்மை நூல் யாவர்க்கும் உரித்தேயாயினும், அதுபற்றி தருமநெறியை இகழ்ந்து அதர்மநெறியைக் கைக்கொள்ளுதல் மாணிடர்கட்கழகன்று. "ஐயமிட்டுண்" என்கிற வாக்கியமும் முற்கூறிய "ஏற்பது இகழ்ச்சி" என்கிற வாக்கியத்துடன் தொடர்ந்து நிற்றலால், பிறரிடத்திற் சென்று யாசித்தல் இழியசெயலாயினும், தருமநெறியை யாவரும் கைவிடக் கூடாதென்றே ஏற்படுகின்றது.

"வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து."

என்று திருவள்ளுவ நாயனாரும் கூறுகின்றாராதலின், ஒரு பொருளுமில்லாதவர்க்கு அவர் வேண்டிய ஒன்றைக் கொடுத்தலே பிறர்க்குக் கொடுத்தலாகும். (இன்னும்வரும்.)

# வித்தியாபாநு.

புஸ். 1.] 1894-௵ ஏப்ரல்-௴ [நெ. 3.

## பொருளும், அதை உபயோகிக்கும் வழியும்.

பொதுவாக மிருகங்களுக்கும், மனிதர்கட்கும் எவ்வாறு வித்தியாசங்கள் காணப்படுகின்றனவோ அவ்வாறாகவே மிலேச்சத்தனமுள்ளவர்களுக்கும், நாகரீகத்தன்மை பூண்டிருக்கும் ஜனங்கட்கும் வித்தியாசங்களிருக்கின்றன. வீட்டுப்பெண்கள் தங்கள் வீட்டிலுள்ள எச்சில் இலைகளை வெளியிற் போட்டவுடனே நாய்கள் ஓடிவந்து அவ்விலைகளின் உச்சிட்டங்கட்காக ஒன்றோடொன்று போராடுந்தன்மைபோல், மிலேச்சத்தனமுள்ளவர்கள் தங்களிடத்துள்ள சிற்றுண்டிகட்காக ஒருவரோடொருவர் போராடுவது வழக்கம். நாகரீகத்தன்மையுடையவர்களோ அவ்வாறு இழியசெயல்களைக் கைகாடுங் குணமுடையவர்களல்லர். அவர்களிடத்துத் "தங்கள் இனத்தார்; தங்கள் ஜாதி சமயத்தவர்" என்கிற அபிமானம் மிகுந்திருக்கும். ஒருவன் வேறொருவனுக்கு உபகாரஞ் செய்தால், மற்றவன் தான் பெற்ற நன்றிக்காக உபகாரஞ்செய்தவனுக்குத் தானும் பிரதியுபகாரத்தையே செய்ய மனமுடையவனாயிருப்பான். "நாகரீகத் தன்மை" என்பது மிகுந்த ஜனங்களுக்குள் "உபகாரம்" என்றும், "பிரதியுபகாரம்" என்றும் இரண்டு

நற்செயற்கள் வழங்கப் பெற்ற காரணத்தினால், அவ்விரண்டையும் உலகில் அறிந்து தேர்தற்பொருட்டு மானிடர்கட்கு முக்கிய அளவு கருவியாயிருக்குமாறு "பொருள்" என்பதாகிய ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

"பொருள்" என்று உலகில் எது முக்கியமாக வழங்குகின்றதோ அதற்குப் பல பிரதிபதங்களுண்டு. பணம் என்பதும், தனம் என்பதும், சம்பத்து என்பதும், செல்வம் என்பதும், ஐசுவரியம் என்பதும், திரவியம் என்பதும் ஆகிய இப்பதங்கள் பொருள் என்கிற பதம் எவ்வாறு தாற்பரியத்தின் பேரில் வழங்குகின்றதோ அவ்வாறு தாற்பரியத்தின்பேரிலேயே ஏறக்குறைய வழங்குகின்றன. இவ்விதமாக மேன்மையாகப் பாவிக்கப்படும் பொருளைத் தேடிப்பிழைக்க வேண்டுமென்பது மனிதர்களை யொத்த சிறந்த கடமையாம். "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்று ஒளவையார் அக்காலத்திலேயே கூறியிருக்கின்றாராதலின், எக்காலத்தும் மனிதர்கள் தங்கள் வாணாளை வீணாளாக்காமல் கண்ணுங் கருத்தும் ஒன்றாகவைத்து நன்றாகப் பிரயாசப்பட்டாகிலும் தனம் சம்பாதிக்கவேண்டுமென்று உறுதிப்படுகின்றது. நம்மவர்களிலநேகர் தங்கள் பாட்டன், முப்பாட்டன் முதலானவர்கள் தேடிவைத்த பிதுரார்ஜிதமே மிகச் சாஸ்வதமென்று நம்பி முழுச்சோம்பேறிகளாய் இருந்து தங்கள் கைப்பொருள்களையும் நாளாவட்டத்தில் இழந்து பின்னால் தத்தளித்துத் திண்டாடுகிறார்கள். இப்படிச் செய்வது எவர்க்கும் மதியீனமே. இந்துக்களிற் பெரும்பாலர் இவ்வாறு நினைத்து சோம்பேறிப் பிழைப்புகள் பிழைத்து வருங்காரணத்தினால், அவர்கள் நாளாவட்டத்தில் இருக்கிற கைப்பொருளையுமிழந்து குடிக்கக் கஞ்சியற்று வருந்துகிறார்கள். இந்துக்களுள் முக்கியமாய் பிராமணர்களது நிலைமை மெத்தப் பரிதாப நிலைமையாம். பிராமணர்களது தேசாசாரங்களையும், குலாசாரங்களையும் சிந்தித் துணர்வோமாயின், நாம் இவ்விடத்திற் கொண்ட கருத்தின்படி, அவர்கள் உயிர்வாழ்க்கையிற் முக்காற் பகுதிக்கு மேற்பட்ட காலமுழுவதும் சோம்புத்தனமாகவே கழிகின்றன.



அவர்களுடையசெலவோ சொல்லிமுடியாது. அவர்களுடைய சட்டநிர்மாணங்களோ படுகுழியிலாழ்த்தக் கூடியவைகளாக விருக்கின்றன. ஓர் பிராமணனுக்குரிய சடங்குகள் முற்றிலும் நிறைவேற வேண்டுமானால் கணக்கற்ற திரவியம் வேண்டும். ஓர் பிராமணனுக்கு நான்கு பெண்கள் பிறந்துவிடில், அவனுக்கிருக்கும் ஆஸ்தி அப்பெண்களது கலியாண ஆடம்பரங்கட்குக்கூடப் போதுமானதாக இருக்கிறதில்லை. இந்துக்களில் ஏறக்குறைய எல்லாச் சாதியாருமே கலியாணத்துக்காக ஏராளமான பணம் செலவிடுகிறார்கள். மலையாள தேசத்தில் அனேகப் பிராமணர்கள் யுக்தி யோசனை சிறிதுமின்றி கலியாணச் சடங்குகளுக்காகச் செலவிடும் பணத்திற்கு அளவே இல்லை. மலையாளத்திலுள்ள பிராமணர்களிற் சிறந்த பணக்காரர்கள் "சர்வாணி" என்கிற ஓர் குருட்டுவழக்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டினால் ஓர் கலியாணகாலத்தில் ஒருவனுக்குச் சில சமயங்களில் 4000, அல்லது 5000, ரூபாய்வாரையில் செலவாகின்றன. ஆழ்ந்து யோசித்துப் பார்ப்போமாகில், இவ்வேற்பாட்டினால் கொடுக்கிறவனுக்கும், கொள்ளுகிறவனுக்கும் பயன் மிகவும் அற்பமே. "சர்வாணி" என்கிற ஏற்பாட்டில், சாதாரணமாய் ஐசுவரியவான்களென்று அழைக்கப்படுகின்றவர்கள் இரண்டணாமுதல் அரைரூபாய் வரையில் ஆளொன்றுக்கு தக்ஷிணை கொடுக்கிறதென்கிற வழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருவன் சர்வாணி கொடுக்கிறானென்று தெரிந்தால், விவேகமின்றிப் பணக்காரர்கள்கூட இதற்கு ஆசைப்பட்டுக்கொண்டு சுடுகிற வெயிலையும், கனத்தமழையையும் பாராட்டாமல், பத்து அல்லது இருபது மைல் தூரத்திற்கப்பாலிருந்து கூட்டங் கூட்டமாகச் செல்வார்கள். சாதாரணமாய் சென்னை முதலான இடங்களில் ஒருவன் காலை 10-மணிமுதல் மாலை 5-மணி வரையில் வேலை செய்வானானால் 4 அணா முதல் 6 அணா வரையில் கூலி கிடைக்கும். மலையாளதேசத்திற் சர்வாணிக்காக ஆசைப்பட்டுக் கொண்டு தன் இருப்பிடத்தைவிட்டு பத்து அல்லது இருபது

மைல் தூரம் கால்கடுக்க நடந்து வேறு ஊர் சென்றபோதிலும் 4 அணாவுக்குமேல் கிடைப்பதரிதாயிருக்கின்றது. அப்படியாவது தினந்தோறும் கிடைக்கிறதாவென்றாலோசித்தாலோ அதுவுமில்லை. ஆறு மாசத்திற் கோர்தரமோ அல்லது ஒரு வருடத்திற் கோர்தரமோ எவனோ ஓர் பணக்காரன் தன் இல்லத்தில் கலியாணம் நடத்தினால், ஒருவனுக்கு இரண்டணா அல்லது நாலணா கிடைக்கும். இந்த நாலணாவைப் பெற்றுக்கொள்ளுகிறவனுக்குத் தான் சம்பாதித்த திரவியம் ஒரு நாள் சாப்பாட்டிற்குக்கூடப் பற்றாது. இதனால் "சர்வாணி" என்னும் தக்ஷிணையைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களுக்குப் பயன் யாது?

இஃதிங்ஙனமிருக்க, சர்வாணி கொடுக்கிறவனுக்காகிலும் ஏதேனும் பயனுண்டோ வென்றாலோசித்தாலோ அதுவுமில்லை. புண்ணியம் என்று சொல்லுவோமானாலும், அது புண்ணியமுமல்ல; அல்லது கீர்த்தி என்று சொல்லுவோமானாலும், அது கீர்த்தியுமல்ல. "பாத்திர மறிந்து பிச்சையிடு" என்றிருப்பதினால், யார் எதைக் கொடுக்க விரும்பியபோதிலும் பாத்திரமறிந்தே கொடுக்கவேண்டும். கீர்த்தி சம்பாதிக்க வேண்டுமென்று கருதும் ஐசுவரியவான்கள் தாங்கள் கலியாணங்கட்கும், மற்ற வீண் ஆடம்பரங்கட்கும் செலவுசெய்யும் பணத்தை ஓர் நிதியாக ஏற்படுத்தி வருவார்களே யானால், அப்பணத்தை வட்டிக்குப் போட்டு முதலும் அழியாமல், அதன் வட்டியால் எத்தனையோ நற்காரியங்களைச்செய்து கீர்த்தி சம்பாதிக்கலாமே. அப்படிக்கல்லாமல் மூடவழக்க மொன்றை உறுதியாகப் பிடித்துக்கொண்டு எத்தனையோ காலம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துவைத்த திரவியத்தை ஒரே நாளில் அழித்து விடுவது எவ்வளவு மதியீனம்! பிற்காலத்தில் அது எவ்வளவு துன்பத்திற்கும், அபகீர்த்திக்கும் இடமாயிருக்கிறதென்பதைப் பாருங்கள்! மூடவழக்கத்திற்கும், பிறருடைய தற்கால தயை தாக்ஷிணியத்திற்குங் கட்டுப்பட்டு தகப்பன் பாட்டன் முதலினோர் தேடிவைத்த பொருளையோ அல்லது தானாகவேச் சுயமாகச் சம்பாதித்த திரவியத்தையோ உபயோகமற்ற வழிகளில்



ஒருக்காலுஞ் செலவிடக்கூடாது. சிலர் தாங்கள் தருமஞ் செய்வதாகப் பெருமை பாராட்டிக்கொண்டு இருக்கிற கைப்பொருளை இழந்துவிடுகிறார்கள். இதனால் ஒருவரும் தருமஞ் செய்யக்கூடாதென்பதாக எமது கருத்தன்று. எவ்வகை நற்கருமமாகிலும் ஒருவன் அதைச் செய்யு முன்னரே அதன் சாதக பாதகங்களைச் சிந்தித்துணர்ந்து பின்னால் அதை எவ்விதமாகச் செய்யவேண்டுமோ அவ்விதமாகச் செய்யவேண்டும். எக்காலத்தும் வரவுக்கு மீறின செலவு செய்தல் யாவருக்கும் பிசகேயாம். "வளவனாயினு மளவறிந்தழித் துண்" என்று நீதி நூலாசிரியராகிய ஔவையார் அருளிச்செய்திருக்கும் வண்ணம், சம்பத்தில் குபேரனுக்கொப்பானவன் என்று ஒருவன் பிறரால் மதிக்கப்படுங் குணமுடையவனாயிருந்தபோதிலும், வரவுக்குத் தகுந்த செலவே எப்போதுஞ் செய்யவேண்டிய தல்லாமல் அதற்கு மீறின செலவு ஒருக்காலுஞ் செய்யக்கூடாது. இதற்கிணையாக மேற்படி நூலாசிரியர் வேறோரிடத்திற் கூறுஞ் செய்யுளையுங் கருதுக.

"ஆனமுதலி லதிசஞ் செல வானான்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
யெல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானா நாடு."

நம்மவர்கள் செய்யும் அதிகச் செலவையும், மற்ற கொடூர வழக்கங்களையும் ஒவ்வொன்றாக எடுத்துரைப்போமாயின் பாரதத்தைப் போற் பெருகும். அதற்குக் காலமும் இடமும் தற்காலம் அமையாதிருக்கின்றமையால், இத்தோடு நிறுத்துவோம். மற்றோர் தடவை பொருள் சம்பாதித்தற்பொருட்டு நாம் செய்யவேண்டிய முயற்சிகள் எவை என்றும், தேடியபொருளை எவ்வாறு காப்பாற்றவேண்டுமென்றும், அவ்வாறு காப்பாற்றப்படும் பொருளை எப்படிச் செலவு செய்யவேண்டுமென்றும் கூறுவோம்.

"அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு."

## அகால மரணமும், அதற்குரிய காரணமும்.

முற்காலத்தில் ஜனங்கள் அநேக ஆண்டு ஜீவித்திருந்தார்களென்பதாக இந்துக்களுடைய பழமை நூற்கள் முறையிடுகின்றன. அவர்கள் அவ்வளவு காலம் ஜீவித்திருந்த தற்குக்குரிய காரணங்களைப் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். ஆதிகாலத்து மனிதர்களிலநேகர் தாங்கள் செய்த பூர்வ புண்ணியத்தினால் ஜீவனோடு அநேக வருஷகாலம் வாழ்வதற்கேதுவாயிற்றென்று சிலர் கூறுகிறார்கள். அநேகர் தங்களுடைய தபோ பலத்தினால் நீடித்தகாலம் உயிர் பெற்று வாழ்ந்தார்களெனச் சிலர் உரைக்கிறார்கள். இன்னுஞ் சிலர் வேறுகாரணங்களையுஞ் சொல்லுகிறார்கள். பூர்வீக இந்துக்கள் நீடித்தகாலம் உயிர்பெற்றிருந்தார்களென்பதற்குக் காரணங்கள் எவையாயிருந்தபோதிலும், சரீரசௌக்கியம் என்பது எவர்களுக்கும் இல்லாவிடில் அவர்கள் அநேககாலம் உயிர்பெற்று வாழ்தல் அரிதென்றே நாம் நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. இதனால் பூர்வபுண்ணியம் என்பதும், தபோ வலிமை என்பதும் இல்லை என்பதாக யாங் கொண்ட கருத்தன்று. பூர்வீக இந்துக்களிலனைவர் 1000 - 2000-வருஷகாலம் உயிர்பெற்றிருந்தார்களென்பது வாஸ்தவமென்றும், அவ்வாறு அவர்கள் உயிர்பெற்று வாழ்ந்ததற்குக் காரணம் அவர்களது பூர்வபுண்ணியம், தபோவலிமை ஆகிய இவைகளே என்றும் சொல்லப்படும் விஷயங்களை நாம் எடுத்துக் கூறுவோமாயின், இக்காலத்து மனிதர்கள் அவைகளிடத்து நம்பிக்கைகொள்வது மிகவும் அரிது. ஆகையால் நாம் அவ்விதமான சங்கதிகளைப் பேசுவதிற் பயன் சிறிதுமில்லை. மேலும் நாம் எடுத்துப் பேசும் விஷயத்திற்கு அச்சங்கதிகள் பொருந்தவும் மாட்டா. பூர்வீக மனிதர்கள் 1000, 2000 வருஷம் வாழ்ந்தார்களென்பது மெய்யாயிருந்தாலுமிருக்கட்டும்; அல்லது பொய்யாயிருந்தாலுமிருக்கட்டும். அதைப்பற்றி நாம் இப்போது கவனிக்கவேண்டிய அவசியமில்லை. எக்காலத்தும் உள்ள கவிஞர்களுக்கு ஒன்றுக்குப் பத்தாகப் புனைந்து ஓர் விஷயத்



தை வர்ணிக்கும் வழக்கம் (Exaggeration) ஏற்பட்டிருந்தபோதிலும், புத்தி யுக்தி அனுபவங்களாற் பரிசோதித்துரைக்கக்கூடிய மொத்தக் கருத்து ஏறக்குறையச் சரியாயிருக்குமென்றே நாம் கொள்ளவேண்டியது. இவ்விதமான கருத்தை யொட்டிப்பார்க்கும்பொழுது, பூர்வீக இந்துக்கள் சாதாரணமாய் மனிதர்கட்கு நிர்ணயிக்கப்பட்ட மொத்த வயது எவ்வளவோ அவ்வளவு வயது காலம் வரையில் ஜீவனோடு வாழ்ந்தார்களென்பதாக நாம் ஊகித்தறிகிறோம். இச்சங்கதி வாஸ்தவமாயிருந்திருக்கக்கூடும் என்பதை உறுதிப்படுத்த நமக்கிருக்கும் தற்கால அநுபவமே போதுமானது. இப்பொழுது 70, 80, 90 வயது வரையிலுள்ள பாட்டன்மார்களும், பாட்டிமார்களும் சொல்லுஞ் சரிதையை நம்பாமலிருத்தற்கு யாதொரு காரணமுமில்லை. அவர்கள் சொல்லுவதென்னவெனில், தங்கள் அறிவிற் கெட்டியமட்டும் அநேகர் பூர்ண ஆயுள் பொருந்தி வாழ்ந்தார்களென்றும், சிலர் 120, 130 வயது ஜீவனோடு இருந்தார்களென்றுஞ் சொல்லுகிறார்கள். வரவர ஜனங்கட்கு ஆயுள் குறைந்து அகாலமரணம் சம்பவிப்பதை நாமே கண்ணாற் காண்கிறோம். பாட்டன் தொண்ணூறு வயது ஜீவனோடு வாழ்ந்தால், தகப்பன் அறுபது வயது வாழ்தலரிது. தகப்பன் அறுபது வாழ்ந்தால், அவனுடைய மகன் முப்பது வயது வாழ்தலரிது. இப்படியாக இதுவரையில் அகாலமரணமடைந்த நம்முடைய தோழன்மார்களும், தோழிமார்களுமான ஆண்பாலர் பெண்பாலர் ஆகிய இருவகுப்பினர்களுள்ளும் எத்தனையோ பெயர்கள் காலனுக் கிரையானார்களென்பதை யாம் கண்ணாரக் கண்டிருக்கிறோம். இவையன்றி எத்தனையோ குழந்தைகள் மூன்று வயது, நான்கு வயது, ஐந்து வயது, ஆறு வயது இப்படியாக வளர்ந்து, தண்டைச்சதங்கை வளையல் முதலான ஆபரணங்களை அணியப்பெற்று,

> "மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
> சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு."

என்று சொல்லுவதற் குவமையாக, கை கால் முதலிய எவ்வகை

அவயவங்களையுந் தொட்டு முத்தமிட்டு முலைப்பால் கொடுத்து
அவர்கள் உரைக்கும் இனிய மழலைச் சொற்களை இன்பமுறக்கேட்
டு தெருத்திண்ணைகளில் துள்ளி விளையாடுவதைக்கண்டு சந்தோ
ஷப்படும்படி வளர்த்த தாய்மார்கள் "தன் அருமை மகன் வியா
தியால் இறந்தான்" எனக் கேள்விப்படுவரேல், அவர்கள் நெஞ்சங்
கரையாதோ? மனம் புண்ணாகாதோ? அவர்களது கர்ப்பங்கலங்
காதோ? அவர்கள் பூமியில் ஜீவனோடு வாழ்வது ஓர் வாழ்வோ?
அந்தோ! இளம்பருவத்திலேயே எமலோகஞ் சேர்ப்பதற்காக
வோ பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது? அந்த வீட்டில் ஓர் ஆண்
குழந்தை குளிர் காய்ச்சல் மிகுதியால் இறந்ததென்றும்; இந்த
வீட்டில் ஓர் பெண்குழந்தை வசூரியால் இறந்ததென்றும்; நேற்று
ஒருவன் அஜீர்ணத்தால் வயிற்று நோயெடுத்துச் செத்தானென்
றும், இன்றைக்கு ஒருவன் பித்தரோகத்தாற் செத்தானென்றும்;
அந்தத்தெருவில ஒருவன் க்ஷயரோகத்தால் மாண்டுபோனானென்
றும், இந்தத் தெருவில் ஒருவன் சுகஜென்னி கண்டு மாண்டுபோ
னானென்றும்; இப்படி அகாலமரணத்தைப்பற்றி ஜனங்கள் பலவித
மாகச் சொல்லுகிறார்களன்றோ? இந்துதேசத்தில் கணக்கற்ற பெ
யர்கள் மூன்றுவயது, நான்குவயது, எட்டுவயது, பத்துவயது
இப்படியாக வளர்ந்து பருவத்திற்கு முன்னதாகவே இறந்து
போய் விடுகிறார்கள். இப்படியாக அகாலமரணம் அடைவதற்குக்
காரணம் என்னவென்று சற்று கவனித்துப் பார்க்கிற வழக்கம்
நம்மவர்களிடத்துக் கிடையாது. "பிரம்மதேவன் எப்படி விதித்
திருக்கிறானோ அப்படி நடக்கும்" என்கிற சோம்பேறிப் பேச்சு
கள் பேசுகிறார்களே தவிர, "அசாலமரணம்" என்பது ஒன்றுண்
டா? அதற்குக் காரணம் என்ன? அதை நமது யுக்தியனுபவங்க
ளாற் கூடியமட்டும் தடுக்கக்கூடுமோ? அல்லது கூடாதா? என்கிற
விஷயங்களை நிதானித்து ஆலோசித்துப்பார்க்கிறதே இல்லை.

(இன்னும் வரும்).



# தென் இந்தியாவின் வேளாண்மைத் தொழில்.

இந்து தேசமானது வேளாண்மைத் தொழிலுக்குரிய இடமென்று
எல்லோரும் அறிந்த விஷயமே. ஏறக்குறைய இதன் முக்காலே அரைக்
காற் பகுதி ஜனங்கள் உழுது பயிர்செய்யுந் தொழிலையே ஜீவனத்துக்கு
முக்கிய ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்கள். காலமழை சரியாக வருஷி
த்து வருமேயாகில், இந்து தேசத்தைப்போல் செழிப்பானதேசம் வேறெ
ங்குமில்லை. காலமழை யற்றுப்போனதுபற்றி பயிர்தொழிலினால் ஜனங்
கள் விசேஷித்த பயனை யடைகிறதில்லை. காலமழை சரியாக வருஷித்துப்
பயிர்த்தொழில் என்பது இந்து தேசத்தில் எவ்வாறு நடக்கவேண்டுமோ
அவ்வாறு நடந்துவருமேயாகில், ஜனங்கள் வேறோர் தொழிலையும் தங்
கள் ஜீவனத்திற்கு முக்கிய ஆதாரமாகக்கொள்ளவேண்டியதில்லை. கால
மழை குன்றிப்போனமையாலும், வருஷா வருஷம் ஜனத்தொகை யதிகரி
த்துக்கொண்டு வருகின்றமையாலும், பயிர்த்தொழில் நன்றாக நடந்து
வரும்பொருட்டு ஜனங்கள் ஏதேனும் உபாயத்தை நாடினாலன்றி இந்து
தேசத்தின்மீது வறுமையின்றி அவர்கள் காலக்ஷேபஞ் செய்தலரிது.
நாம் இப்பொழுது எடுத்துப்பேசும் விஷயம் தென்னிந்தியாவின் வேளா
ண்மைத் தொழிலாதலால், அதைப் பற்றிச் சிறிது விசாரிப்போம்.

தென்னிந்தியாவிலுள்ள விளைநிலங்கள் நன்செய் என்றும், புன்செய்
என்றும் இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆறு, ஏரி,
குளம், வாய்க்கால் முதலான நீராதாரங்களைப் பெற்று விளங்கும் நிலத்தி
ற்குச் சாதாரணமாய் நன்செய் என்று சொல்லப்படுகின்றது. மேற்கூ
றியபடி ஜலாதாரமின்றி அங்குமிங்கும் மேடுபள்ளமாகவும், அப்போதப்
போது ஆகாயத்திலிருந்து வருஷிக்கும் மழைத்துளிகளையே முக்கிய ஆதா
ரமாகவுங் கொண்டிருக்கிற நிலத்துக்குப் புன்செய் என்று பெயர். இவ்
வாறு பிரிவினைகளையுடைய நிலங்களின் இயல்பு பலவாறாக விருக்கின்றது.
சில முற்றும் கறுப்பு நிறமாகவும், சிலமுற்றும் சிவப்பு நிறமாகவும், சில
முற்றும் மணற்பாங்காகவும், சில கறுப்பும் சிவப்பும் கலந்தும் நிலத்தின்
தன்மை இப்படிப்பலவிதமாக வேறுபட்டிருக்கின்றது. கறுப்பு நிறமுள்ள
நிலத்திற்கு இந்நாட்டில் சாதாரணமாய் களிமண் நிலமென்றும், கரிசல்
நிலமென்றும் பெயர் வழங்கி வருகின்றது. மழையும், நீர்ப்பாய்ச்சலு
மின்றி மிகுந்த சூரியவெப்பத்தால் இந்நிலங்கள் வறண்டுபோமாகில், அந்
நிலங்களின் நாற்புறங்களிலும் வெடிப்புகள் உண்டாவதைக் காணலாம்.

இவ்வெடிப்புகள் உள்ள பாகங்களை யாம் செம்மையாகப் பரிசோதித்துணர்வோமாயின், அநேக அங்குல ஆழம்வரையில் களிமண் பொதிந்த நிலமாகவே இருக்கக் காண்போம். இந்நிலங்களை உழுது பண்படுத்துவது மிகவும் வருத்தமாம். வேனிற்காலங்களில் தரை ஆங்காங்கு ஒன்றாகச் சேர்ந்து உறுதியாக விருக்கும். சிறிது மழை வருஷித்தாலும், இவ்விடங்களிலுள்ள மண் நடக்கும்போது கால்களில் ஒட்டிக்கொள்ளும். கனமழைவருஷித்துச் சிலநாட்கள் வரையில் இந்நிலங்களின்பேரில் தண்ணீர் தங்கினால், மிகுந்த சேறுண்டாகி நடக்கும்போது சிலவிடங்களில் முழந்தாள் வரையிற் பதிந்துவிடும். அதிகமழை காலத்தில் இவ்வகை நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்தல் மிகவும் பிரயாசம். இத்தேசத்துக் கிருஷிகர்கள் இந்நிலங்களில் வெப்பம் மிகுந்து நிலம் உறுதியாகப் பிடித்துக் கொண்டிருக்குங் காலத்தில் உழவுத்தொழில் புரியும் வழக்கம் அவ்வளவாக வைத்துக் கொள்ளுகிறதில்லை. மழை மிகுந்த காலத்தும் அந்நிலங்களில் வேலைசெய்கிறதில்லை. சிறிது மழைத்துளிகள் வருஷித்து நிலத்திற் கலப்பை பொதியும்படியான ஸ்திதியை எதிர்பார்த்திருந்து கிருஷிகர்கள் தங்கள் தங்கள் நிலத்தை உழுது பண்படுத்துவார்கள்.

இந்நிலங்களில் உற்பத்தியாகும் விசேஷித்த விளைபொருள்கள் யாவையெனிற் பருத்தி, சோளம், கடலை, கொத்துமல்லி முதலான தானியவகைகளேயாம். சோளம், கடலை, கொத்துமல்லி முதலான தானியங்கட்கு அதிக மழை பொழிந்தாலும் பயனில்லை. எந்தக் காலத்தில் எவ்வளவு மழை வேண்டுமோ அவ்வளவு மழைக்கு அதிகமாக அது பொழியுமேயாகில், அவ்விளைபொருள்களின் பயன் கெட்டுப்போம். இவ்விளைபொருள்கள் முக்கியமாய் புன்செய் நிலங்களிலேயே உண்டாகின்றமையால், நன்செய் நிலங்களைப்போல் அவைகளுக்கு அவ்வளவாகத் தண்ணீர் வேண்டுவதில்லை. களிமண்ணுள்ள நன்செய் நிலங்களில் நெற்பயிர், கரும்பு முதலிய பயிர்வர்க்கங்களும், சோளம், ராகி முதலிய தானியவர்க்கங்களும் வளரும். ஆனால் சோளம், ராகியாகிய இரண்டிற்கும் நெற்பயிர், கரும்பாகிய பயிர்வர்க்கங்களைப்போல் அவ்வளவு தண்ணீர் வேண்டுவதில்லை. ஆகையால் நன்செய் நிலங்களில் சோளம், ராகி முதலிய தானியவகைகளைப் பயிர்செய்யவேண்டுமானால் தகுந்த காலத்தை எதிர்பார்த்தே செய்யவேண்டும்.

சாஸ்திர சம்பந்தமான கல்விப்பயிற்சியின் உதவியால் இத்தேசத்துக் கிருஷிகர்கள் தக்கவாறு பண்படுத்தி எருவிட்டு விதைவிதைத்து நாற்று



நட்டுக் களைபிடுங்கிப் பயிர்வர்க்கங்கள் செய்து பயனடையாமற்போவது ஓர்பெருங்குறையேயாயினும், அக்கிருஷிகர்கள் தங்கள் அனுபவத்தாலும், இயற்கை யறிவாலும் நீடித்த காலமுதல் பயிர்த்தொழிலை ஒரேவிதமாகவே நடத்தி வருகின்றார்கள். ஐரோப்பா தேசத்திலுள்ள கிருஷிகர்களைப்போல், இந்து தேசத்துக் கிருஷிகர்கள் பளுவாயுள்ள கலப்பைகளை உபயோகித்துக் கிருஷி செய்கிற வழக்கமில்லை. பூர்வந்தொட்டு அதிக இலேசான கலப்பைகளையே அவர்கள் உபயோகித்து வருகிறார்கள். இவ்விதமான கலப்பைகள் செய்வதற்கு இரண்டு மரத்துண்டுகள் இருந்தாற் போதும். இந்நாட்டில் நாம் அறிந்தவரையில் ஜனங்கள் தேக்குமரத்தை கலப்பைகளுக்கு உபயோகிக்கிற வழக்கமில்லை. சாதாரணமாய் கருவேல், வேப்பமரம், வேங்கை, மா முதலிய விருக்ஷ ஜாதிகளையே கிருஷிகர்கள் உபயோகித்து வருகிறார்கள். இவ்விதமான மரக்கலப்பைகள் ஓரிடமிருந்து வேறோரிடங் கொண்டுசேர்ப்பது பிரயாசமே இல்லை. ஓர் கலப்பையைப் பதினாறு வயதுள்ள ஓர் வாலிபன் ஓர் கழனியிலிருந்து மற்றோர் கழனிக்கு வெகு எளிதிற் கொண்டுபோய்விடுவான். ஐரோப்பா கண்டத்திலுள்ள இருப்புக் கலப்பைகள் மிகப்பெரிதாகவும், பளுவாகவு மிருக்கின்றமையால், ஓர் கலப்பையை ஓரிடமிருந்து வேறோரிடத்திற்கு முதல்முதல் கொண்டுபோய்ச் சேர்ப்பதே வருத்தமாம். அதில் வேலைசெய்தல் மிகவும் பிரயாசம். ஓர் கலப்பையை இழுப்பதற்குச் சிலவேளைகளில் இரண்டு குதிரைகளும், சிலவேளைகளில் நான்கு குதிரைகளும், சிலவேளைகளில் ஐந்து அல்லது ஆறு குதிரைகளும் வேண்டியிருக்கிறதெனச் சொல்லுகிறார்கள். சிலவேளைகளில் இங்கிலாந்து பிராஞ்சு முதலிய ஐரோப்பிய தேசங்களில் உழவுத்தொழில் நீராவியந்திரக் கருவிகளால் நடத்தப்பட்டுவருகின்றது. இந்தியாவிலோ மேற்சொல்லியவாறு இருப்புக் கலப்பைகளையும், நீராவியந்திரக் கருவிகளையும் உபயோகித்துக் கிருஷித்தொழில் புரிவது மிகவும் வருத்தமாக விருக்கின்றது. இந்து தேசத்துக் கிருஷிகர்கட்கு அதிருப்தி என்பது எப்போதுங் கிடையாது. வயிறுவாடாமற் கஞ்சி கிடைத்தால் அதுவே போதுமானதென்று திருப்தி யடைந்திருக்கிறார்கள். காலமழை சரியாய்ப் பொழிகின்றதா இல்லையா என்கிற எண்ணத்தை மாத்திரம் நாடுகிறார்களேயன்றி, எவ்வித முயற்சிகள் செய்தால் கிருஷிகட்கு மேன்மேலும் பயன் கிட்டும்? அவைகட்கு வேண்டிய உபாயங்கள் எவை? என்கிற எண்ணம் விசேஷமாய் அவர்களது மனத்துட் செல்லுகிறதேயில்லை. மிகுந்த தனம் சம்பாதிக்க வேண்டுமென்கிற எண்

ணமும், அதைத் தங்கள் குடும்ப க்ஷேமத்திற்கும், தேசக்ஷேமத்திற்கும் உபயோகமாதற்பொருட்டு தகுந்த விதத்திற் காப்பாற்றி வைக்கவேண்டுமென்கிற கருத்தும் இந்து தேசத்துக் கிருஷிகர்கள் மனத்துட் கொள்ளாதிருக்குங்காரணத்தால், ஐரோப்பிய தேசங்களைப்போல் கிருஷித் தொழிலுக்கு வேண்டிய கருவிகளும், மற்ற வசதிகளும் இந்து தேசத்தின்மீது அவ்வளவு அதிகமாக ஏற்படவில்லை. மேலும் இந்து தேசத்தின்மீது கிருஷித்தொழிற்கருவிகள் இங்கிலாந்து முதலிய தேசங்களைப்போல் ஏற்படாமலிருத்தற்கும், அபிவிருத்தி யடையாமலிருத்தற்கும் உரிய காரணங்கள் இன்னும் அநேகமிருக்கின்றன. அவைகளிற் சிலவற்றை அடியிற் கூறுகிறோம்.

பூர்வீக இராஜாங்கத்தில் குடிகட்கு அதிக வரிகள் கிடையா. விளைபொருள்களை ஆறு பாகமாகப் பகிர்ந்து ஓர் பங்கு அரசனுக்குக் கொடுத்து மற்ற ஐந்து பங்கும் குடிகள் வைத்துக் சொள்வது முறைமை. இப்படிப்பட்ட இராஜாங்கத்தின்கீழ் குடிகட்குக் கவலை அதிகமாக இருத்தற்கு ஹேதுவில்லை. க்ஷாம காலமாயிருந்தபோதிலுங்கூட அவர்கள் அவ்வளவாக மனவருத்தப் படுவதற்குக் காரணமில்லை. இவ்விதமான காரணங்கள் பற்றிப் பூர்வத்தில் வேளாண்மைத் தொழிலும், அத்தொழிற்குரிய கருவிகளும் அபிவிருத்தியடைய வேண்டுமென்கிற எண்ணம் குடிகள் மனத்துட் டோன்றவில்லை. மேலும் பூர்வகாலத்திலுள்ள அரசர்கள் பயிர்த்தொழிலும், அதற்குரிய கருவிகளும், அபிவிருத்தி யடைவதற்குவேண்டிய உதவியும், தூண்டுதலும் செய்யவில்லை என்பதாகவும் ஊகிக்கவேண்டியதாயிருக்கின்றது. தேசமெங்கும் மழை பொழியப் பெற்று வளப்பமடைந்திருந்தமையால், அக்காலத்து நீதிமன்னர்கட்கு இவ்விதமான எண்ணம் தோன்றுவதற்கு யாதொரு அவசியமுமில்லை. ஆனதுபற்றிப் பூர்வத்தில் கிருஷிகர்கள் எவ்வாறு உழுதுபயிர்செய்து வந்தார்களோ அவ்வாறாகவே இப்பொழுதும் அத்தொழிலைச் செய்துவருகிறார்கள். ஆனால் தற்காலத்தில் கிருஷித்தொழிலும், அதற்குத் தேவையான எல்லாச் சாதனங்களும் அபிவிருத்தி யடையவேண்டியதற்கேற்ற வழிகள் ஏற்பட்டிருந்தும், அவைகள் இன்னும் ஏன் அபிவிருத்தி யடையவில்லை என்கிற ஓர் கேள்வி பிறக்குமேயாகில், அவைகட்குத் தடையாயிருக்குங் காரணங்களை அடுத்தமுறை கூறுவோம்.



## ஒற்றுமையே பலம்.

ஆழ்ந்து யோசிப்போமாகில், எவ்வகை முயற்சியுங் கைகூடவேண்டுமானால், பிறருடைய உதவியின்றி அஃது முற்றும் நிறைவேறல் அரிது. ஒருவன் எவ்வளவு புத்தியுள்ளவனாயும், சாதுரியவானாயும், தேகவல்லமையுள்ளவனாயு மிருந்தாலும், தானாகவே ஓர் காரியத்திற் பிரவேசித்து அதை முற்றும் நிறைவேற்றல் மெத்த வருத்தமாகவே முடியும். உலகில் முடிவுபெற்று விளங்கும் ஒவ்வோர் கருமத்தையும் நுட்பமாய்ப் பரிசோதித்துணர்வோமாயின், பலகைகள் ஒன்றாகச் சேர்ந்தே ஒவ்வொன்றும் முடிவுபெற்றதென அறிவோம். இதற்குத் திருஷ்டாந்தமாக நாம் தினந்தோறும் உடுப்பதற்கும், உண்பதற்கும், உறங்குவதற்கும் ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கும் ஒவ்வோர் சாதனங்களையும் பரிசோதித்துணர்ந்தாற் போதுமானதே. நாம் உடுத்திக்கொள்ளும் வஸ்திரம் கேவலம் பருத்தி நூலினால் செய்யப்பட்ட ஓர் தந்திரமென்று சாதாரணமாய் நாம் நினைக்கிறோம். அது முற்றும் ஒருவனால் முடியக்கூடியதாவென்று பார்ப்போம். நாம் உடைமுதலானதுகள் தரித்துச் சுகப்படவேண்டுமானால், நெசவுத்தொழில் புரியும் ஜேடனுடைய உதவியைத் தேடவேண்டியதாகவிருக்கின்றதன்றி சுதாவில் நாமாக ஒன்றுஞ் செய்யமுடியாது. நெசவுத்தொழில் புரிபவனும் தனக்கு நூல் முதலானது வேண்டுமானால் நூல் நூற்கிறவனிடஞ் செல்லவேண்டியதே யல்லாமல், தானாகவே அவன் நூல் நூற்றல் அரிது. நூல் நூற்கிறவனும் தனக்குவேண்டிய பஞ்சுக்கும் இராட்டினம் முதலிய கருவிகளுக்கும் அவைகள் கிடைக்கும்படியான ஸ்தலங்களெவையோ அவ்விடத்திற் செல்லவேண்டியதே யொழிய அவன் சுயமாகவே தோட்டாங் காடுகட்குச் சென்று பருத்திச்செடி பயிர் செய்வதும், பின்னர் இராட்டினம் முதலிய கருவிகள் செய்வதும் வருத்தமாம். இப்படியாக உலகில் நிகழும் ஒவ்வோர் விஷயங்களையும் நாம் ஆராய்ந்தறிவோமாகில், பலபெயர்களுடைய ஒத்தாசையின்றி ஓர் காரியமும் முடிபெறாதென்றே தீர்மானிப்போம். "ஒற்றக்கை ஓசையிடாது" என்னும் பழமொழிப்படி, எக்கருமமும் ஒருவனால் முடிவு பெறாது. செவ்வையாக ஆலோசிக்குங்கால், உலகில் ஒருவனுக்கு மற்றவர்களுடைய தயவும், ஒத்தாசையும் எக்காலும் வேண்டுமென்றே நாம் உறுதியாக நம்பவேண்டும். நமது ஜனங்களிற் பெரும்பாலர் இங்ஙனம் நினைப்பதே இல்லை. எவனுக்காவது பத்துப்பணம் வந்துவிட்டால் தான் குபேரனுக்

கும் மேலானவன் என்று கருதி "பிறருடைய உதவி நமக்கென்னத்துக்கு" என்று மற்றவர்களை அலக்ஷியஞ் செய்துவிடுகிறார்கள். இவர்கள்தான் இங்ஙனம் அறிவீனமாய் நடக்கிறார்களென்றால், கற்றுணர்ந்தவர்களோ அவர்களிலும் எண்மடங்கு அறிவீனர்களென்றே சொல்லவேண்டும். ஆனால் நாம் கற்றுணர்ந்த வித்வசிரோன்மணிகள் எல்லாரையும் அவ்விதமாகப் பாவிக்க மாட்டோம். சிலர் கற்றுணர்ந்தும் அவிவேகிகளாயிருக்கிறார்களே என்று மெத்தவிசனப்படவேண்டியதாயிருக்கிறது. அவ்விதமான தன்மையுடையவர்களைத் தான் நாம் இங்கு குறிப்பிட்டோமேயன்றி வேறன்று. சாதாரணமாய் கல்வி என்பது இப்படிப்பட்டதென்றுணராதவர்கள் அவிவேகத்தன்மை பூண்டிருப்பது உலகில் சகஜம். கல்வித்துறையிலாழ்ந்தவர்கள்கூட அவிவேக சாகரத்துள் நுழைந்து தம் இனத்தோரை மனச்சான்றுக்கு விரோதமாக அவமதித்தலும், இகழ்ச்சி செய்தலும் ஆகிய குணங்களைப் பூண்டு ஒழுகுங்கால், அவர்களைக் கல்லாதவர்களிலுங் கடையர்களென்றன்றோ மதிக்கவேண்டும்? அவர்கள் பிறந்து உயிர்பெற்றிருத்தலினால் உலகிற்குப் பயன்யாது? சகல அங்கங்களும் பாங்காகப் பொருந்தி உயிர்பெற்றுவாழுங் கண்ணில்லாக் குருடர்களும், வாயில்லா ஊமைகளும் உலகிற்குச் சில சமயங்களில் எவ்வளவோ பயனுள்ளவர்களாயிருப்பதை யாம் கண்ணுற்றிருக்க, கற்றுணர்ந்தவர்களெனப் பெயர்பெற்றும் விவேக சூன்யர்கள்போல் ஒழுகுங் குணமுடையவர்களைச் சில சமயங்களில் நோக்குதல் வியப்பினும் வியப்பன்றோ? கற்றுணர்ந்தவர்களென மதிக்கப்படுவோர் மற்றவர்களை நல்ல வழிகளிற் செலுத்தவேண்டுங்கடமையாயிருக்க, அவர்களை அவமதித்து ஏளனமாகவும், இகழ்ச்சியாகவும் பேசுதல் ஒற்றுமைக்கழகாமோ? ஒருவனிடத்து ஏதேனும் குற்றங் குறைகளிருக்கக் கண்டபோதிலும், கற்றுணர்ந்தவர்களெனப்படுவோர் தகுந்த காலத்தையும், சமயத்தையும் எதிர்பார்த்து அவனுக்கு எவ்விதத்திற் புத்தி கற்பிக்கவேண்டுமோ அவ்விதத்திற் புத்திகற்பித்து அவனை எல்லா விதத்திலும் மேம்படுத்தவேண்டியதே கடமையாயிருக்கிறதேயல்லது அவமதித்தலும், ஏளனஞ்செய்தலும், வஞ்சித்தலும் முற்றிலும் பிசகாம். "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை" என்று ஆன்றோர் கூறியபடி, ஒவ்வொருவனிடத்திலும் உள்ள குற்றங்குறைகளை ஆராய்வோமாயின் நாம் எல்லாருக்கும் விரோதிகளாவோமே யொழிய ஒருவர்க்காகிலும் ஒற்றுமையுடையவர்களாக மாட்டோமென்பது திண்ணம். நம்மை நாமே நன்கு மதித்துப் பிறரை அலக்ஷியஞ் செய்தல் எங்ஙனமிருக்கிறதெனில், உலகில் நம்மைக்காட்டிலும் புத்திசாலிகள் வேறொருவருமில்லை என்றன்றோ ஏற்



படுகின்றது? நாம் ஒருவனுடைய புத்திசாலித்தனத்தை இகழ்ந்து அவனைப் பரிகாசமாய்ப் பேசினால், வேறொருவனும் நம்மை ஏன் அதே மாதிரி செய்யக்கூடாது? உள்ளது உள்ளவாறு அறிந்து தெளிந்த பெருந்தகைமையுடையவர் தம்மை நோக்கி யாதேனும் ஒருவா அற்பவார்த்தைகளை யுரைத்த போதிலும், "தன்வினை தன்னைச்சுடும்" என்கிற மேன்மையான பழமொழியை மனதில் நினைத்துக்கொண்டு எதிர்பேசாமல் அப்புறம் விலகிப்போவார்கள். மேலும் பெருந்தன்மையுடையவர்கள் யார் தங்களுக்குக் கேடு நினைத்தபோதிலும், அல்லது தங்களை இகழ்ச்சியாகப் பேசினபோதிலும்,

"நல்லா ரெனத்தா னனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டும்;
நெல்லுக் குமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு;
புல்லிதழ் பூவிற்கு முண்டு."

"இன்னா செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது."

என்கிற நீதிவாக்கியங்களை மனதிற் கருதி அவருடன் ஒருமைப்பட்டு வாழ நினைப்பார்களேயல்லாமல் நேசத்தை விட்டகலார். ஆனால் எல்லாருமே இப்படி எண்ணுவார்களோ? இல்லை. ஒருவன் ஓர் வார்த்தை கடுமையாக வுரைத்தால், மற்றொருவன் எட்டு வார்த்தைகள் கடுமையாக உரைப்பது வழக்கம். உலகில் ஒருவருக்கொருவர் தாம் உயர்ந்தவரென்றும், மற்றவர் தாழ்ந்தவரென்றும் மதித்து அகந்தைகொண்டு ஒருவரையொருவர் அவமதித்தும், இகழ்ச்சியான வார்த்தைகளைப் பேசியும் சண்டை சச்சரவுசெய்து கிடைத்தற்கரிதாகிய ஒற்றுமையையும், உயிரையும் இழந்துவிடுகிறார்கள். இவ்வளவு அறிவீனர்கள் உலகிலுண்டோ? ஆ! பரிதாபம்! பரிதாபம்!! இந்துக்கள் ஒற்றுமையிழந்து வருந்துவதற்குக் காரணம் முக்கியமாய்த் தங்கள் இனத்தாரையே அவமதித்து அகங்காரங் கொள்ளும் மதியீனமொன்றேயாம். அங்கிலேயர்கள் ஒற்றுமை என்னுந் தன்மையைப் பூண்டு "**உலகாதிபர்கள்**" என்று பெயரெடுத்ததற்குக் காரணம் அவர்கள் ஒருவருக்கொருவர் பூண்டிருக்கும் நேசம் ஒன்றேயாம். ஆகையால் இந்துக்களெனப் பெயரெடுத்திருப்பவர்கள் ஒற்றுமையுடன் வாழவெண்ணினால், ஒருவரையொருவர் அவமதித்து இகழ்ச்சியாகப் பேசுதலைக் கட்டோடு விட்டொழிக்கவேண்டும். குலத்திற்றாழ்ந்தவராயினும்,

வயதிற்றாழ்ந்தவராயினும், படிப்பிற்றாழ்ந்தவராயினும், புத்தியிற்றாழ்ந்தவராயினும், செல்வத்திற்றாழ்ந்தவராயினும், "கீழோராயினும் தாழவுரை" என்று சொல்லுவதற்கொப்ப, தான் உயர்ந்தவனாயிருந்தபோதிலும் தாழ்ந்தவனென்று ஒருவரையும் மதியாமல் எல்லாரையும் சமமாகக்கருதி இன்சொல்வழங்குதல் ஒற்றுமைக்கழகாம்.

## சபைகளும், அவைகளின் பிரயோஜனமும்.

சபையாவது என்னவெனில், கல்வி அறிவு ஒழுக்கம் மதநீதி இராஜநீதி பொதுஜனக்ஷேமம் ஆகிய பல நல்விஷயங்களைக்குறித்துப்பலர் கூடிப் பேசுவதற்கேற்ற இடமாம். ஜனங்கள் குடியிருக்கும்படியான எந்தவிடமாயிருந்தபோதிலும், அந்தவிடத்திற் சபை என்பது ஒன்றில்லாமலிருக்குமாகில் அது துஷ்டமிருகங்கள் சஞ்சரிக்குங் காட்டையொக்கும். கல்வி அறிவு ஒழுக்கம் மதநீதி இராஜநீதி பொதுஜனக்ஷேமம் ஆகிய இவ்விஷயங்கட்குரிய சங்கங்கள் எந்த விடத்திலிருக்கின்றனவோ அந்தவிடம் நல்ல விவேகிகள் குடியிருக்கும் நாட்டையொக்கும். ஆகையால் சங்கம் என்பது எல்லாவிடத்திற்கும் மெத்த ஆவசியமென்றே இதனால் நாம் உறுதியாகக் கொள்ளவேண்டியது. எல்லாச்சங்களிலும் கல்விச் சங்கமே முதன்மையானது. கற்றறிந்த பலவித்வான்கள் ஒன்று சேர்ந்து கல்வி அறிவு ஒழுக்கம் ஆகிய இவ்விஷயங்களைத் தர்க்கித்துப்பேசி உண்மைப் பொருளைத் தெரிந்தெடுத்து அதை ஏனையோர்கட்குபயோகமாதற் பொருட்டு நிலைநாட்டுவதற்குரியவிடம் கல்விச்சங்கமாம். கல்விச்சங்கத்திலுள்ளவர்கள் தாங்கள் கற்றதும், கேட்டதும் ஆகிய பல விஷயங்களைத் தங்கள் மாட்டு அடக்கிக்கொண்டிருத்தற் கூடாது. வேலைசெய்யுங் காலந்தவிற மற்றையகாலத்தில் ஏதேனும் ஓர் பகுதி தங்களுக்கு அவகாசமானகாலமாக ஏற்படுத்திக்கொண்டு தாங்கள் கற்றுங் கேட்டுமிருக்கிற விஷயங்களை மற்றையோர்கட்கெடுத்துணர்த்தி அவர்களை நல்வழிகளிற் செலுத்தவேண்டியது கல்விச்சங்கத்தவர்களது கடமை. கலவிச்சங்கத்திற்குரியவர்கள் பிறரை அவமதித்துப்பேசுதல், வஞ்சகநெஞ்சத்தையுடையராயிருத்தல், பொய்பேசுதல், சூதுவாது கொலை களவு மதுபானம் மாமிஸபோஜனம் முதலிய தூர்ச்செய்கைகளைச்செய்தல், ஆகிய குணங்களைப்பூண்டிருத்தற் கூடாது. ஐரோப்பியர்களாயிருந்தபோதிலும், மகமதியர்களாயிருந்தபோதிலும், மற்றெந்தச் சாதியராயிருந்தபோதிலும்,



கற்றுணர்ந்தவர்களென மதிக்கப்படுந்தன்மை யுடையோர் அனுபவத்திற்கும், மனச்சாக்ஷிக்கும் பொருந்தாதனவற்றைச் செய்தல் தகாது. இக்காலத்துப் படிப்பினர்களிலநேகர் அந்நியபாஷாபிமான விஷந் தலைக்கேறிய காரணங்கொண்டு கூடாவொழுக்கங்களாகிய சூது, வாது, மதுபானம், மாம்ஸ பக்ஷணம் முதலான கொடுஞ்செய்கைகளைச் செய்துவருகிறார்கள். சற்சங்கத்திலும், சத்விருத்தியிலும்பூர்வகாலந்தொட்டுப் பழகிவந்த ஆரிய மகாஜனங்கட்கு முற்கூறிய காரியங்களணைதலுங் கூடவாம். "அறிவோர்க்கழகுகற்றுணர்ந்தடங்கல்" என்று சொல்லும் நீதிவாக்கிற்கிணங்க, பாரம்பரியமாக அறிவு நூற்களை வாசித்துணர்ந்தவர்கள் அவ்வறிவுநூற்களிற் கூறப்படும் விஷயங்களெவையோ அவைகளையே தழுவி நிற்கவேண்டுமே யல்லாது, வயிறு வளர்க்கும் நிமித்தமாக,

"ஒருநா ளுணவையொழி யென்றா லொழியா
யிருநாளுக் கேலென்றா லேலா—யொருநாளு
மென்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது".

என்று இழிவாகக்கூறப்பட்ட ஒரு சாண் வயிற்றுப்பாட்டின் பொருட்டு நேற்றுக்கற்ற வித்தையின் செருக்கினால் (Pride) நம் தேசத்திற் றோன்றிய நூற்களின்மீது துர் அபிமானம் வைத்து பூர்வந்தொட்டுப் பழகிவந்த சற்சங்கங்கட்கும், சத்விருத்திகட்கும் மாறாக காலையில் தூங்கி எழுந்திருந்தவுடனே நன்றாகப் பல்தேய்த்து முகங்கழுவாமலும், ஸ்நானம், அனுஷ்டானம் முதலானதுகள் செய்யாமலும், "காபி எங்கே? டீ எங்கே? ரோட்டி எங்கே? சோடாவாடர் எங்கே? பீர் எங்கே? ஒயின் எங்கே?" என்று வாய்கூசாமற் பேசுவதும், வெறுப்பான காரியத்தில் விரும்புற்றிருப்பதும் சற்சங்கத்திற்கடுத்த காரியமாமோ? இதனால் காபி, டீ, ரொட்டி, முதலியன ஓர்காலத்தும் உட்கொள்ளக்கூடாதென யாம் வாதிக்கவில்லை. இக்காலத்தில் அங்கங்கே சங்கங்கள் ஏற்படுத்திவரும் கல்விமான்கள் தங்கள் முன்னோர்களால் அனுசரிக்கப்பட்டுவந்த சத்விருத்திகட்கு மாறாக காலாகாலத்தில் உண்ணுங் காரியத்தை வைத்துக்கொள்ளாமல் அகாலத்தில் அக்காரியத்தைச் செய்து வருகிறார்களென்பது தான் எமது கருத்தேயன்றி வேறன்று. "பாலோடாயினும் காலமறிந்துண்" என்று நீதிநூற் கூறியவர்கள் வைத்தியம் பிடித்தோ நீதிநூற் கூறியிருக்கிறார்கள்? ஆதலால் உண்பது முதலிய காரியங்கூட தகுந்த காலத்திற் செய்யவேண்டுமே யொழிய அகாலத்திற் செய்தல் தகுதிய

ன்று. மேலும் "காலத்தில் உண்பது" என்பதினாலேயே "உண்ணுதற்குத் தகா தவைகளையும் புசித்தல்" என்று எமது கருத்தல்ல. எடுத்துக்கொண்ட விஷயம் வேறொன்றாதலின், அதைப்பற்றிச் சிறிது சிந்திப்போம்.

கல்விச்சங்கம் இவ்வாறிருக்க வேண்டுமென்பதைப்பற்றி ஒருவாறு மேலே குறிப்பிட்டோம். கல்விச் சங்கத்திற்குரியவர்கள் தங்களுக்கும், மற்றவர்கட்கும் உபயோகமாயிருக்குமாறு நல்ல இலக்கண இலக்கிய விஷயமாகவும், சன்மார்க்கம் நீதிநெறி பொதுஜனக்ஷேமம் முதலிய விஷயங்கட்கேற்றதாகவு முள்ள புஸ்தகங்களையும், பத்திரிகைகளையும் ஏராளமாக வரவழைத்துப் படித்து வரவேண்டியதல்லாமல், பிறர்க்கும் அவைகளின் கருத்துகளைப் போதித்துவரவேண்டும். ஒவ்வோர் ஊரிலும் இவ்விதமான கல்விச்சங்கங்களிருக்குமாயின், ஜனங்கள் எல்லா விஷயங்களிலும் அபிவிருத்தியடைவதற்குச் சந்தேகமே இல்லை.

இந்து தேசத்திலுள்ள ஒவ்வோர் ஊரிலும் பொதுஜன சபை இல்லாமலிருப்பது ஓர் பெருங் குறையாயிருக்கின்றது. பொதுஜன சபை ஒவ்வோர் ஊரிலுமில்லாமலிருப்பதால், குடிகளின் குறை இராஜாங்கத்திற்கும், இராஜாங்கத்தின் குறை குடிகட்கும் அனேக சமயங்களில் எட்டுகிறதில்லை. அங்கிலேய இராஜாங்கத்தின் கீழிருக்குங் குடிகள் கல்வி விஷயமாகவும், கைத்தொழில் விஷயமாகவும், வியாபார விஷயமாகவும் எத்தனையோ நன்மைகளை யடைந்திருந்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் இராஜநீதி சரியாக நடந்து வருகிறதில்லை. குடிகள் தபால் மூலமாக அதிகாரிகட்கு விண்ணப்பஞ் சமர்ப்பித்துக் கொண்டால், அவ்விண்ணப்பங்களை அதிகாரிகள் சரியாக கவனிக்கிறதில்லை. "சுவாமி வரங்கொடுத்தாலும், பூசாரி வரங்கொடுக்கிறதில்லை" என்று சொல்லும் பழமொழிபோல், மேலதிகாரிக்குக் கீழிருக்கும் உத்தியோகஸ்தர்களால் நிகழும் அக்கிரங்கள் சொல்லிமுடியாது. ஆலோசித்துப் பார்க்கும்பொழுது சில விஷயங்களில் இங்கிலீஷ் அதிகாரிகளே மேலானவர்களென்று சொல்லலாம். சுதேசிகள் எல்லா விஷயங்களிலுமே இழிவான தன்மையைக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்து சுஜாதியபிமானங்கிடையாது. "நல்லது இது; கெட்டது இது" என்கிற பகுத்துணர்வு அவர்களிடத்திருந்தபோதிலும், அவ்வுணர்ச்சி தங்களிடத்து இல்லாதிருக்கு மாதிரியாகப் பாவித்துக்கொண்டு அநேக சமயங்களில் பிறரை லக்ஷியஞ்செய்யாதிருந்துவிடுகிறார்கள். ஆனால் எல்லாச் சுதேச உத்தியோகஸ்தர்களும் ஒரே மாதிரி என்பதாக நாம் ஒருகாலத்துஞ் சொல்லமாட்டோம். அத்தி பூத்ததன்மை



போல், குடிகளிடத்து அனுதாபம்வைத்து அவர்களுடைய குறைகளைப் போக்க வல்ல சுதேச உத்தியோகஸ்தர்களுமிருக்கிறார்கள். நாம் இங்கு சொல்லுவது அநுதாபஞ் சிறிதுமில்லாச் சுதேச உத்தியோகஸ்தர்களையும், பணங்கொடுத்தால் ஒருபுத்தி; பணங்கொடாவிட்டால் வேறோர் புத்தி என்று சொல்லும் விதமாக இருக்கிறவர்களையும் பற்றிச் சொல்லுகிறோமேயன்றி வேறன்று. இவர்கள் உத்தியோகஞ் [illegible] பயன்? பத்திரிகைகள் மூலமாய் இவர்களது அந்தரங்கங்களை வெளிப்படுத்துவதற்கும் அநேகர் அஞ்சுகிறார்கள். ஏனெனில் பாழுஞ்சட்டமாகிய "பினல் கோட்" (Penal Code) ஒன்று குறுக்கேவந்து நிற்கிறது. ருசு (Evidence) வென்றும், அவதூறு (Defamatian) என்றும் ஏழைக்குடிகளைப் பயமுறுத்தினால், யார் அவர்கட்குப் பொய்சாக்ஷி சொல்லுவார்கள்? அங்கிலேய இராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்குஞ் சில சட்டதிட்டங்கள், "இவன் யோக்கியனா? யோக்கியனல்லவா; இவன் பொய் சொல்லுவானா? நிஜம் சொல்லுவானா" என்கிற யோக்கியதாபக்ஷங்கட்டு இடங்கொடாமல் தீமைக்கே அதிகமாக இடங்கொடுக்கின்றமையால், குடிகள் இராஜாங்கத்தில் நிகழுங் குறைகளை வெளிப்படுத்த அஞ்சுகிறார்கள். இவ்விதமான கஷ்டங்கள் உண்டென்று நாமே அனுபவத்தால் அறிந்திருக்கிறோம். ஆகையால் பொது ஜனசபை என்பது ஒன்று ஒவ்வோர் ஊர்களிலுமிருக்குமாகில், அச்சபைமூலமாக குடிகளுடைய குறைகளையும், இராஜாங்கத்தின் குறைகளையும் தெரிந்தெடுத்துத் தக்கபடி பயிரங்கப்படுத்தலாம். அப்பொழுது அதிகாரிகளும் அச்சங்கொள்ளுவார்கள். நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்துத் தலைகீழாகக் கவிழ்த்தால் அந்நெல்லிக்காய்கள் ஓரிடத்திற் சேர்ந்து நிற்காமல் ஒன்றுக்கொன்று சம்பந்தமின்றி ஓடிப்போகுந் தன்மைபோல், இந்துக்களுடைய குணமானது இருக்கின்றது. இதை அதிகாரிகள் அறிந்துதான் தங்கள் மனம்போனபடி நடக்கிறார்கள். ஆகையால் இந்துக்கள் க்ஷேமலாபத்தை விரும்புவார்களானால், ஒவ்வோர் ஊரிலும் பொதுஜனசபை ஏற்படுத்தவேண்டும். இஃதன்றி அடிக்கடி சபை கூட்டி எல்லாரும் அறியும் பொருட்டு குடிகளுடைய சுகதுக்கங்களை எடுத்துப்பேசி அதிகாரிகட்குத் தெரிவித்து வரவேண்டும். பொது ஜனசங்கத்தை நாடியவர்கள் அங்கங்கே பிரசுரமாய்வரும் பத்திரிகைகளை வரவழைத்துத் தாங்கள் படித்தும், பிறருக்குப் படித்துக் காட்டியும் வரவேண்டும். இவ்வாறு நாம் செய்து வருவோமாகில், கூடிய சீக்கிரத்தில் நன்மைகளைப் பெற்று வாழ்வோமென்பதிற் சந்தேகமில்லை.

## நீதி நெறிகள்.

### தருமம்.

ஓதுவார்க்குணவு. முன்பத்திரிகையில் ஏழைகட்கு தருமஞ்செய்ய வேண்டியதவசியம் என்னும் விஷயத்தை விளங்க உரைத்தோம். இங்கு [illegible] தருமவிஷயமே சற்று விசரிப்போம். "ஓதுவார்க்குணவு" என்றால் "வேதம் ஓதுகிற பிராமணர்கட்குச் சாப்பாடு போடுதல்" என்று தாற்பரியம். இதனால் "ஓதுவிக்கிறவர்களுக்கு" சாப்பாடுபோடுதல் தருமமன்று என்று எமது கருத்தன்று. பொதுவாக வேதம் ஓதுகிறவர்கட்கும், ஓதுவிக்கிறவர்கட்கும் சாப்பாடு போடவேண்டு மென்றே இவ்விடத்திற் கூறப்படும் "ஓதுவார்க்குணவு" என்பதன் கருத்தேயன்றி வேறில்லை. ஆகையால் ஓதல், ஓதுவித்தல் ஆகிய இருவகைத்தொழிற்களையும் முதன்மையாகவுடையப் பிராமணர்கட்குச் சாப்பாடு முதலியன கொடுத்துபசரித்தல் தருமங்களிலொன்றென இந்து நூற்கள் முறையிடுகின்றன. பூர்வீக இந்து நூற்கொள்கைகளிடத்து துர்அபிமானம் மிகுந்திருப்பவர்களும், அக்கொள்கைகளின் உண்மைப்பொருளை யறியாதவர்களும் பிராமணர்கட்குச் சாப்பாடு போடுதல் மூடத்தனம் என்று பிதற்றுவார்கள். பூர்வீக இந்து நூற்கொள்கைகளை உள்ளது உள்ளவாறு அறிந்து நடக்கும் பிராமணர்கட்குச் சாப்பாடு முதலியன கொடுத்துபசரித்தல் ஒருக்காலும் மூடத்தனமாகாது. ஆனால் ஐசுவரியம் மிகுந்து வேதமோதுந்தொழிலைக் கைக்கொள்ளாதிருப்பவர்களும், யாதொரு தொழிலையுஞ்செய்யாத சோம்பேறிகளும், வஞ்சகம் பொறாமை வியபிசாரம் கள்ளுண்ணல் புலால் புசித்தல் முதலிய கூடாவொழுக்கங்களைப் பூண்டிருப்பவர்களும், ஆசாரந்தப்பி நடக்கின்றவர்களும் ஆகிய இவர்கள் பிராமணர்களென மதிக்கப்பட்டபோதிலும், ஒருக்காலும் அவர்கட்குச் சாப்பாடு முதலியன கொடுத்துபசரித்தல் கூடாது. தீயவொழுக்கங்களைக் கைக்கொண்டு நடப்பவர் உயர்குலத்திற் பிறந்தோராயினும் இழிகுலத்திற்பிறந்தோர்களினுங் கடையரென்றே இயம்பப்படுவர். இத்தன்மையுடையவர்கள் பசிதாகங்கொண்டு களைத்து வந்தபோதிலும், வேதமோதுந் தொழிலையுடையப் பிராமணர்களது பந்தியில் வைத்துச் சாப்பாடு முதலியனகொடுத்தல் பாவத்திற் கேதுவான காரியமேயாம்.

---

வித்தியாபானு.

புஸ். I.] 1894-ஸு மே-மீ. [நெ. 4.

## பெண்டிர் ஒழுக்கம்.

மனிதர்கள் முக்கியமாகத் தேடவேண்டியது சுகவாழ்க்கை. அச்சுக வாழ்க்கைக்கு ஆதாரமாகவிருக்கும் பலவழிகளிலொன்று பெண்பாலர்களுடன் சேர்ந்து வாழ்தலாம். ஆதலால் மனிதர்களுடைய சுகவாழ்விற்குக் காரணமாகவிருக்கும் பெண்களுடைய குணாதிசயங்களும், ஒழுக்கங்களும் எவ்வாறிருக்க வேண்டுமென்பதைப்பற்றிச் சிறிது விசாரிப்போம். சாதாரணமாய்ப் பெண்களுடைய இயல் இப்படிப்பட்டதென்பதையும், அவர்களுள் உத்தமஸ்திரீகள் நடக்கப்பட்ட நடத்தை இவ்விதம் என்பதையும் வெகுகாலந்தொட்டு நடைபெற்றுவரும் இந்துநூற்கள் விரிவாகக் கூறியிருக்கின்றன. அவைகளைமுழுதும் எடுத்துக் கூறுவதற்கு இச்சஞ்சிகை இடம் பெறாதாகலின், அவைகளின் சங்கிரகத்தை மாத்திரம் நாம் இங்கு எடுத்துக் கூறுவேம்.

பெண்களில் அசுரகுலமென்றும், பைசாசகுலமென்றும், இராக்ஷசகுலமென்றும், தெய்வகுலமென்றும் சொல்லும்படிக்குள்ள பிரிவினைகள் உண்டு. இப்பிரிவினைகளையுடைய ஸ்திரீ

களின் குணாதிசயங்கள் எப்படிப்பட்டதெனிற் கூறுவோம். அசுர குலஸ்திரீகளுக்கு வியபிசாரத்துவமே உடற்பிறப்பு; ஆசாரமின்மை என்பதே அடிமை; தீய நடத்தையே புண்ணியம்; வஞ்சக நெஞ்சமே தஞ்சம். மானம் வெட்கம் வணக்கம் ஒடுக்கம் ஆகிய இக்குணங்கள் அவர்கள் வசிக்குமிடத்திலுமிரா. வஞ்சக நெஞ்சத்தையும், குரோத சிந்தையையுமே எக்காலும் மேற்கொள்ளுங் குணமுடையவர்களாதலால், பொய்பேசுதல், பிறர் பொருளையபகரித்தல், கொலை களவு மதுபானம் மாம்ஸ போஜனம் முதலான துர்ச்செய்கைகளைச் செய்தல் ஆகிய இவற்றிற்கு ஒருபோதும் அஞ்சார்கள். புண்ணியஞ் செய்கிறவர்களைக் கண்ணாற் கண்டால் அவர்களது மனம் பதைபதைத்துத் துடிக்கும். மேலும் இப்படிக்குள்ள ஸ்திரீகள் தங்கள் கணவர்களைச் சிறிதேனும் லக்ஷியஞ்செய்யாமல் அவர்கள் வீட்டுடைமைகளை விற்றுப் பணமாக்கிக் கொண்டு தங்கள் மனஞ்சென்றவாறு மதுபானம் மாம்ஸ போஜனம் முதலான பெருந்திண்டிகளிற் செலவு செய்து அண்டை வீட்டுக்காரர்கள் நகைக்கச் சண்டையிட்டுத் திரிவார்கள். இவ்விதமான குணங்களையுடைய பெண்கள் அசுரகுல ஸ்திரீகளென்று சொல்லப்படுவார்கள்.

பைஸாச மடந்தையரோ வெனில் தீயநடத்தைகளிற் சிறிதேனுங் குறைந்தவர்களல்லர். இத்தகைய ஸ்திரீகள் தங்கள் புருஷன்மார்களைக் கொஞ்சமேனும் மதிக்கமாட்டார்கள். தகப்பன் அண்ணன் தம்பி பந்து மித்திரர்கள் ஆகிய இவர்கள் மீது அன்புபாராட்டாதவர்களாய் எந்நேரமும் கர்வத்தில் ஆழ்ந்து புருஷர்களைப் பேய்போலாட்டி நாய்போல் கத்துவார்கள். கலகம் அசத்தியம் தூஷணை துரோகம் என்கிற துற்செய்கைகளைச் செய்யும் மன முடையவர்கள். வெளிக்கு மாத்திரம் பூஷணை பக்ஷம் விளையாட்டு புன்சிரிப்பு களிப்பு முதலான குணங்களையுடைர்வர்கள்போல் தோற்றுதலும், உள்ளுக்குள் முகச்சுளிப்பு பிரியமின்மை அவமதித்தல் ஆகிய இக்குணங்களைக் கொண்டாழுகலும் பைஸாச ஸ்திரீகளது நடத்தைகளாம்.



இனி இராக்ஷசப் பெண்களின் நடத்தை எவ்வாறென்றுணர்வோம். இவ்வகைப் பெண்கள், கள் சாராயம் முதலான மதுபான வஸ்துக்களிடத்தும், மாம்ஸபக்ஷணம் செய்வதிலும் மிகுந்த இச்சைவைப்பார்கள். புருஷர்களுடன் கூடிவாழ்வதற்கு அவர்களுக்குப் பிரியமிராது. தேகசுத்தி செய்துகொள்ள வேண்டுமென்கிற உணர்வும், சிறந்த ஆடை ஆபரணங்கள் அணிந்துகொள்ள வேண்டுமென்கிற ஆசையும் அவர்கட்கில்லை. அவர்களிடத்துக்கு எவரேனுஞ் செல்வரேல் எப்போதும் கெட்டநாற்றம் மேலெழுவதையறிவார். இப்படிப்பட்ட ஸ்திரீகளுக்கு சத்சகவாசமென்பது எப்போதுங் கிடையாது. பெரியோர் சிறியோர் என்கிற வேற்றுமையைக் கருதாது எந்நேரமும் சிறியர்களுடனே நேசஞ் செய்வார்கள். மோசத்தை மனதிற்கொண்டு பிறருக்கு நாசத்தையே தேடப்பார்ப்பார்கள். அன்றியும் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்பவை சிறிதுமின்றி, வீண்டம்பம் செய்து வெறும் பேச்சுப்பேசி காலத்தைக் கழிப்பதே அவர்களது இயல்பு. தெய்வபக்தி தவம் விரதம் என்பவற்றைக் கனவிலுங் கூட நினையார்கள். கார்மேகம்போற் பெருங்குரலிட்டுப் பேசுதலும், வீட்டுசங்கதிகளைத்தும் நாட்டாரறியத் தூற்றுதலும், வீடுவீடாய் நுழைந்து பரபுருஷர்கள் பேரில் இச்சைவைத்தலும், நாவிற்கினிய ருசிதேடுதலும் ஆகிய இத்தியாதி துற்குணங்களையுடைய பெண்டீர் இராக்கத குலஸ்திரீகளென்று சொல்லப்படுவார்கள்.

மேற்கூறியவாறு மூவகைத் துற்குணங்களையுடைய ஸ்திரீகளுக்கும், அவர்களைக்கொண்ட கணவர்களுக்கும் இறப்பு பிறப்பு என்று சொல்லப்பட்டவைகளிரண்டும் எந்நாளும் நீங்காவென பூர்வீக ஆரிய நூற்கள் முறையிடுகின்றன. இனி தெய்வகுல ஸ்திரீகளென்போர் எத்தன்மையுடையவர்களென்பதைப் பற்றிச் சற்று விசாரிப்போம். நல்லறிவு சுசி புனிதம் நன்னடக்கை அன்பு தயை தருமம் தெய்வபக்தி என்று சொல்லப்படுங் குணங்களையுடையவர்கள் தெய்வகுலமாதர்களிற் சேர்ந்தவர்களென்று மதிக்கப்படுவார்கள். மேலும் தெய்வகுல ஸ்திரீகளெனப்படு

வோர் தாங்கள் கொண்ட கணவர்களே காதலர்களென்று கருதி அவர்களிடத்து எந்நேரமும் அன்புபாராட்டலும், அவர்கள் ஏவிய பணிவிடைகளைச் செய்தலும், அவர்கட்கு அறுசுவையுண்டி அமைத்து அருந்தச்செய்தலும், அவர்கள் நித்திரை செய்த பின்னர் தாங்கள் நித்திரைசெய்தலும், அவர்களெழுந்திருக்கு முன்னர் தாங்களெழுந்திருத்தலும், அவர்களது பாதங்களை வருடலும், புஷ்பம் மஞ்சள் சந்தனம் நல்லவஸ்திரம் ஆபரணங்கள் ஆகிய இவைகளையணிந்துகொண்டு தட்டத்தில் தாம்பூலமெடுத்துப் புருஷர்கட்கெதிரில் நின்றுகொண்டு அவர்களை யுபசரித்து இவைகளே இந்திரபாக்கிய மென்றுமகிழ்தலும், புருஷர்களுடைய சுகம் துக்கம் லாபம் நஷ்டம் ஆகிய இவைகட்குத் தாங்களும் பாத்தியப்பட்டிருத்தலும், புருஷர்கள் சினங்கொள்ளும்போது நற்குணங்காட்டி அவர்களது கோபத்தையாற்றலும், பரபுருஷர்கள் பேரில் இச்சை வைத்து அவர்கள் மனைகளிற் புகாதிருத்தலும், வயதிலும் அறிவிலும் மூத்தவர்களுடைய வார்த்தைகளை அமிழ்தினும் இனிதாகக்கொள்ளுதலும், மாமியார் மாமனார் மைத்துனன்மார் மைத்துனிமார் முதலினோர் மகிழ்ச்சிபெற வொழுகுதலும், தங்குடிப்பெயர் கொண்டார்பெயர் முதலியவற்றைத் தங்களே எடுத்துரைத்துக் களித்துக் கொண்டாடாதிருத்தலும், சுபகரம் பசுமஞ்சளிட்டுஸ்நாநம் நெற்றியிற்றிலதம் ஆகிய இம்மூன்றும் தினந்தோறும் மாறாதிருத்தலும், மாதவிடாயாங்காலத்து மூன்றுநாள் வரையில் வீட்டுக்கு விலக்கயுள்ள விடத்தில் மறைந்திருந்து வீட்டிலுள்ள பண்டங்களைத் தீண்டாமல் அம்மூன்று நாளும் ஒரே நேரம் பகற்பொழுதில் போஜனஞ்செய்தலும்; நாலாநாள் விடியற்பொழுதிலெழுந்து தந்தசுத்திசெய்து சூரியோதயத்துக்குமேல் ஆறுநழிகை சென்றபின் உடம்புமுழுதும் புற்றுமண்பூசிப் புடவைகளை உவர்மண் முதலியவற்றாற் சுத்திசெய்து நதிமுதலியவைகளிலே ஸ்நானஞ்செய்து பின்பு தங்கள் புருஷன்மார் முகத்திலே விழித்தலும்; அப்பொழுது நாயகர்களில்லையாயின் தூரஸ்திரீகள் குளித்து மூழ்கிய பின்னர் தங்கள் நாயகர்களை மனதில்



நினைத்துச் சூரியனைத் தரிசித்தலும், ஐந்தாநாள் தைலஸ்நானம் புரிந்து நல்ல ஆடையாபரண அலங்கிருதர்களாய்ப் பணிவிடைக்குரியவர்களாதலும்; வாசற்படி உரல் உலக்கை முறம் அம்மி ஆகிய இவைகளை அற்பமென்றிகழாமல் கமலமலரில் வீற்றிருக்கும் இலக்ஷுமிக் கொப்பாக வைத்துப் பூசித்தலும்; பிறந்த குடும்பத்தின் பேரில் அவ்வளவாக மனப்பற்றில்லாமையும், புகுந்த குடும்பத்தின்பேரில் அவ்வளவுக்கவ்வளவு மனப்பற்றுடைமையும் வைத்து வந்த சுற்றத்தார் விருந்தினர் முதலானவர்களை வரிசை தந்துபசரித்தலும்; அந்நிய புருஷர்களுடன் உறவாடாமல் அவரைப் புகழாமல் மகிழாமலிருந்து எப்போதும் தங்கள் சொந்தப் புருஷர் பேரிலே அன்புவைத்து அவர்களையே தெய்வமெனக் கொண்டாடுதலும் ஆகிய இக்குணங்களனைத்தும் நிரம்பப்பெற்றவர்களாக விருப்பார்கள். இவ்வாறு நற்குண நற்செய்கைகள் மிகுந்த ஸ்திரிகள் எவர்களோ அவர்களே,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

என்று தமிழ்மறை யுரைத்த வண்ணம் "பெண்" என்று சொல்லுவதற்குரியவர்களாவார்கள். ஆகையால் தெய்வகுல மாதர் போன்ற பெண்கள் எங்குமிருப்பார்களாயின், அவர்களைக் கொண்ட ஆண்மக்கட்குக் கண்கள் வேறு வேண்டுவதில்லை. பெண்களுக்குச் சகலபாக்கியமும் தங்களுடைய புருஷர்களேயன்றி வேறின்று. புருடன் அநேக போகமாதருடன் கூடிக்குலாவி வாழ்ந்தாலும், அவனுடைய மனையாளாகிய குலஸ்திரீ தனது குலத்துக்குத் தகுந்தாற்போல் நற்குண நற்செய்ல்களைப் பூண்டு, "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை" என்று ஔவையார் மொழிந்தபடி, தன்கணவனது கட்டளைகட்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்பது கடமை. குலஸ்திரீகள் மேற்கூறியவாறு கட்டாயம் நடக்கவேண்டுமென்பதாகவே இந்து நூற்றுணிபாதலின், தற்சுதந்திரமென்பது இந்துப்பெண்களுக்கு எல்லா "விஷயத்திலுமே" இல்லையென அந்நூற்களின் கருத்து.

ஆனால் இக்காலத்துப் படிப்பாளர்கள் அக்காலத்தவர்களது கொள்கைகட்கு மாறுபட்டு பெண்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று அங்கங்கே ஏற்படுத்தி இருக்கும் சங்கங்கள் மூலமாயும், வர்த்தமான பத்திரிகைகள் மூலமாயும் முறையிட்டு வருகின்றார்கள். சுதந்திரம் என்பதற்கு "தம் மனம் போனபடி நடத்தல்" என்று எவரேனும் தாற்பரியங்கொள்ளுவரேல், அவ்விதமான சுதந்திரம் ஆண்பாலர் பெண்பாலர் ஆகிய இருதிறத்தாருக்கும் "எல்லாவிஷயத்திலுமே" உரித்தன்று. ஆதலால் தற்சுதந்திரம் எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் ஆண்மக்கள் பெண்மக்கள் ஆகிய இருவகுப்பினர்களும் ஓர்வித வரம்பு ஏற்படுத்தி அவ்வரம்பிற்குள் தாங்கள் நடக்கவேண்டு மென்கிற மனவுறுதி செய்துகொண்டாலன்றி இருதிறத்தார்களும் ஒருவழிப்பட்டு நடத்தலரிது. இக்காரணம் பற்றியே பூர்வகாலத்து மனிதர்கள் பெண்களின் தன்மையை நன்குணர்ந்து அவர்களுடைய இயலுக்கும், மனோவலிமைக்கும், மாறுபாட்டிற்கும் தக்கவாறு விதிகள்கூறி அவ்விதிகளின்படியே நடக்க வேண்டிய தென்கிற வரம்பு ஏற்படுத்தி இருக்கிறார்கள். "ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் வேண்டும்" என்று ஆத்திரப்பட்டுக் கூறுங் காதலர்கள் தம்மனத்தினின்றும் தப்பெண்ணங்களை (Prejudice) விலக்கி ஸ்திரீகள் கைகொள்ளவேண்டிய ஒழுக்கங்கள் இத்தகைய தெனக்கூறப்படும் நூற்களை உள்ளது உள்ளவாறு பரிசோதித் துணர்வார்களாயின், அந்நூற்களிற் பெண்களுக்கென்றே பிரத்தியேகமாகக் கற்பிக்கப் பட்டிருக்கும் நீதிகளும், (Morals) தத்துவங்களும், (Philosophy) மற்ற இரகசியங்களும் (Other secret doctrines) இன்ன தென்றுணர்வார்கள். ஸ்திரீகளுக்குத் தற்சுதந்திரம் எடுத்துக்கொள்ளும் அதிகாரமில்லை என்று சொல்லுவதினாலே, அவர்கள் மிருகங்களை யொத்ததன்மைபோல் புருஷர்கட்கு எக்காலும் "எல்லாவிஷயத்திலும்" அடிமைப்பட்டு வாழ வேண்டுமென்று இந்து நூலாசிரியர் கொண்ட கருத்தல்ல. எந்தெந்த விஷயங்களில் சுதந்திரம் அவர்களுக்கு ஆவசியமோ அந்தந்த விஷயங்களில் அவர்கள் அச்சுந்திரதை யனுபவித்தே



வருகிறார்கள். இதற் கையமென்னை? மகாபாரதம், இராமாயணம், ஸ்காந்தம் முதலிய புராதனக் கிரந்தங்களும், மனுஸ்மிருதி, யாக்கிவல்கிய ஸ்மிருதி முதலிய பழமை நூற்களும் மற்றவைகளும் ஸ்திரீகளுக்கு நற்குண நற்செயற்களைக் கற்பித்து அவர்களை மேம்படுத்தவேண்டியதென வுரைப்பதுமன்றி அடிமைகள்போல் அவர்களை ஒருக்காலும் நடத்தக் கூடாதெனவுங் கூறுகின்றன.

ஆனால் இக்காலத்துக் கல்விச்செருக்கில் ஆழ்ந்த மாந்தர்களுட் சிலர் வேறுவிதமான சில ஆக்ஷேபஞ்செய்கிறார்கள். அவை எவை எனிற் கூறுவோம்:— "ஸ்திரீகளைக் கனப்படுத்த வேண்டுமென புராதன நூற்கள் கூறுவது வாஸ்தவமே. இப்பொழுது அவ்விதமாக இந்துக்கள் செய்துவருகிறார்களா? பெண்களைப்படிப்பிக்கிறார்களா? தெருக்களில் உல்லாசமாய் உலாவ விடுகிறார்களா? சங்கங்களுக்குப் போய்ப் பிரசங்கம் பண்ணச் சொல்லுகிறார்களா? அவர்களுக்கு இஷ்டமான புருஷர்களைத்தேடிக்கொள்ளச் சொல்லுகிறார்களா? ஐரோப்பியர்களைப்போல் உடை தரித்துக் கொள்ளச் சொல்லுகிறார்களா? மேலும் அவர்களைப் போல் பரபுருஷர்களுடன் கை கோர்த்துக் குலுக்கச் (Shaking hands) சொல்லுகிறார்களா? வேறென்ன செய்யும்படி விடுகிறார்கள்? விருத்தாவில் ஸ்திரீகள் சுதந்திரம் அனுபவிக்கிறார்களென்றால், எவ்விதமான சுதந்திரம் அனுபவிக்கிறார்கள்? எவ்விதமான கனம் பெற்றிருக்கிறார்கள்" என அவர்களது ஆக்ஷேபங்களாம். வாஸ்தவத்தில் சீர்திருத்தம் என்பது நமக்குள் வேண்டியது மெத்த ஆவசியமே. நம்மவர்களுக்குள் சீர்திருத்தமில்லாதிருக்குங்காரணங்கொண்டு புராதன நூற்களிற் கூறப்படுஞ்சங்கதிகளைப்பழித்தல் தகாது. நம்மவர்கள் தங்கள் பெண்மணிகட்குக் கல்வியை யூட்டி வருகிறார்களா இல்லையா வென்னுஞ்சங்கதியை மாத்திரம் நாம் இப்போது இங்கு கவனிப்போம். இந்து தேசத்தில் பூர்வகாலத்து ஸ்திரீகளிலநேகர் கல்வி கேள்விகளாற்றேர்ச்சியடைந்திருந்தார்களென்பதற்குச் சாக்ஷியங்க ளநேகமிருக்கின்றன. ஆயி

னும் இக்காலத்தைப் போல் அக்காலத்தில் கல்வி அவ்வளவு விசாலிக்கவில்லை என்று சொல்லுவதற்கும் இடமுண்டு. பூர்வகாலத்து ஸ்திரீகளுக்கு எழுத வாசிக்கக் கற்றுக்கொடுக்கும் வழக்கத்தை இந்துக்கள் இக்காலத்தைப்போல் அவ்வளவாக அனுசரித்து வந்தார்களோ இல்லையோவென்று அறிவதற்கேற்ற ஆதாரங்கள் அதிகமாக இல்லை. ஆயினும் ஆரியாவர்த்தத்தின் ஆதிமனிதர்கள் தங்கள் குலமாதர்கட்குக் கல்வியை வேறோர் விதமாகக் கற்பித்து வந்தார்களென்றே நாம் யூகித்தறிய வேண்டியது. ஆரியர்கள் காலையில் துயிலினின்றும் எழுந்திருந்தவுடனே முறைமைப்படி நித்திய கருமானுஷ்டானங்களைக் கழித்த பின்னர் இராமாயணம், மகாபாரதம், ஸ்காந்தம், பாகவதம், புராணம் முதலான கிரந்தங்களைப்படிக்கும் வழக்கமுண்டு. அப்பொழுது அவர்களது குலமாதர்களும் தாங்கள் கழிக்கவேண்டிய நித்தியகடன் முதலானதுகளைக் கழித்துவிட்டு இராமாயணம், பாரதம் முதலியன பாராயணஞ்செய்யுமிடத்துக்கு வந்து அங்கு எடுத்துரைக்கப்படும் சங்கதிகளைக் கேட்டுச் சந்தோஷித்தபின் தங்கள் இருப்பிடங்கட்குச் செல்வார்கள். ஸ்திரீகட்கு இவ்விதமான படிப்பைத்தவிற வேறு விதமான படிப்பு அக்காலத்தில் கற்பிக்கப்படவில்லை. ஆனதுபற்றிப் பூர்வந்தொட்டு இந்து குலஸ்திரீகளிற் பெரும்பாலர் எழுத வாசிக்கத் தெரியாத நிலைமையில் இருக்கிறார்கள். இதற்குத் திருஷ்டாந்தம் நம்மவர்கள் ஸ்திரீகட்குக் கல்வி கற்பிப்பதைப்பற்றி நினைக்கும்படியான தப்பெண்ணங்களும், நடத்தும் மற்ற நடவடிக்கைகளும் போதுமானதாக விருக்கின்றன. முற்காலத்தில் இந்து ஸ்திரீகள் எழுதப்படிக்கக்கூடாமலிருத்தற்கு வேண்டிய காரணங்கள் அநேகம் இருந்திருக்கக்கூடும். இக்காலத்தில் எளிதில் எழுதப்படிக்கக்கற்றுக்கொள்ளுவதற்கு வேண்டியவழிகள் அநேகமிருந்தும், நம்மவர்கள் ஸ்திரீகளை படிப்பியாமலிருப்பது ஆச்சரியம். இந்துப்பெண்களுக்கு எழுதவாசிக்கக் கற்றுக்கொடுத்தால் அப்பெண்கள் தங்களுக்கு இஷ்டமான அந்நிய புருஷர்கட்குக் கடிதம் எழுதி அவர்களைத் தங்கள் வசமாக்கிக்



கொண்டு பின்னர் தங்களை ஆத்தியம் பெண்டாகக் கொண்ட கணவர்களைத் திண்டாட விடுவார்களெனச் சிலர் சொல்லுகிறார்கள். இக்காரணத்தினால் பெண்களுக்கு எழுத வாசிக்கக்கற்றுக் கொடுத்தல் முற்றிலும் பிசகென்றே சிலரது அபிப்பிராயம். இவ்விதமான தப்பபிப்பிராயத்தை அறிவால் நிறைந்தவர்கள் ஒரு பொழுதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆதிகாலத்து மனிதர்கள் இவ்விதமான தப்பெண்ணத்தைத் தங்கள் மனத்துட்கொண்டிருந்தார்களென்பதற்கும் வகை இல்லை. முற்காலத்தில் ஸ்திரீகளுக்குக் கல்வி வேறுவிதமாகக் கற்பிக்கப்பட்டபோதிலும், அவர்கள் எல்லாருமே எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருக்கவில்லை. அக்காலத்தில் எழுதவும், வாசிக்கவும் பழகிய ஸ்திரீகள் இருந்தார்களென்பதற்கு வேண்டிய ஆதாரங்களுமிருக்கின்றன. ஆனால் பெரும்பான்மையாயுள்ள ஸ்திரீகள் அங்ஙனம் எழுத வாசிக்கக் கற்றுக் கொள்ளவில்லை என்பது வாஸ்தவமே. அது பற்றி ஸ்திரீகள் எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொள்ளுஞ் சுதந்திரத்தை பூர்வகாலத்து மனிதர்கள் அவர்களுக்கு அளிக்கவில்லை என்று கூறுதல பிசகேயாம். பூர்வத்தில் இந்து தேசத்தின்மீது கல்விப் பெருக்கம் மேலிடாதிருந்ததற்குக் காரணங்கள் பலவுள. அவைகள் நாம் எடுத்துத்தொடுத்துப்பேசும் விஷயத்திற்கு அடுக்காதிருக்கின்றமையால், தற்காலம் அச்சங்கதிகளை எடுத்துப்பேசுதல் நெறிதப்பென்றேற்படுகின்றது. ஆதலால் எழுதவாசிக்கக் கற்றுக்கொள்ளும் சுதந்திரம் ஸ்திரீகட்குக்கூடாதெனக் கூறுதல் அறியாமையே. பெண்களின் ஒழுக்கங்களைப்பற்றிக் கூறும் நூற்களை யாம் ஆராய்வோமாயின், அப்பெண்கள் தங்களது தாய் தந்தையர்களது கட்டளையின்கீழ் அமைந்து நடக்கவேண்டியது சில காலமெனவும், புருஷர்கட்குப் பணிவிடை செய்துகொண்டு அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியது சில கால மெனவும், தங்களுடைய பிள்ளைகள் சொற்களுக்கு மாறுபடாமல் ஒழுகவேண்டியது சில கால மெனவும் இப்படியாக விதிகள் கூறப்பட்டிருப்பதைக் காண்போம். மங்கைப் பருவமுள்ள வரையில் அப்பெண்

களை அவர்களது தாய் தந்தையர்கள் அண்ணன்மார் ஆகிய இவர்களே பரிபாலித்து வரவேண்டிய கடமைப் பூண்டிருக்கிறார்கள். ஆதலால் தாய் தந்தையர்கள் அண்ணன்மார் ஆகிய பரிபாலக கர்த்தர்கள் (Guardians) அம்மங்கையர்கள் தங்கள் சுவாதீனத்திலிருக்குமளவும் அவர்கட்கு எழுதல் வாசித்தல் முதலியவற்றையும், நற்குண நற்செய்கைகளையுங் கற்பித்து அறிவை யூட்டி வரவேண்டும். "இளமையிற்கல்" என்று நீதி நூற்கூறியபடி, ஆண்மக்களும் பெண்மக்களும் தக்க பருவத்திற் கல்வி பயின்றாலன்றி அகாலத்தில் அக்கல்வி ஒருவர்க்குப் பிடிவது சாத்தியமின்று. ஆதலால் பெண்கள் தங்கள் மங்கைப்பருவமுள்ளளவும், "தந்தை சொன் மிக்க மந்திரமில்லை; தாயிற்சிறந்ததொரு கோயிலுமில்லை" என்று சொல்லுவதற்கொப்ப, தாய் தந்தையர்களுடைய சொற்களுக்குக்கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதல்லாமல், அறிவைப்பெருக்கக்கூடிய கல்வியையுந் தேடிப்பெறவேண்டும். அறியாமை என்னுங் குணம் குடிகொண்டவர்கள் மாத்திரம் ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பித்தல் கூடாதென்பார்களே யல்லாது மற்றையோர் அங்ஙனம் உரையார். (இன்னும் வரும்.)

---

## அகால மரணமும், அதற்குரிய காரணமும்.

(வித்தியாபானுவின் 40-வது பக்கத்தொடர்ச்சி.)

விதிப்பயனைத் தடுக்கவல்லார் எவரும் இல்லையெனினும், யுக்தியனுபவங்களால் அபாயகரமுள்ள விஷயங்களை எவ்வளவுக் கெவ்வளவு விலக்கக்கூடுமோ அவ்வளவுக்கவ்வளவு விலக்கவேண்டியது நமது கடமை. எல்லாம்விதியின்படி முடியுமென்றெண்ணி உலகில் நாம் ஒன்றுஞ்செய்யாதிருக்கக் கூடுமோ? பசியுண்டானால் சாப்பிடவேண்டாமா? தாகமெடுத்தால் தண்ணீர் குடிக்க வேண்டாமா? விதிப்பயனைவிட வேறுபயன் இல்லையெனக் கருதி நாம் விஷத்தையுட்கொள்வது தகுதியோ? ஆதலால் அகாலமரணம் சம்பவிப்பதற்குரிய காரணங்களை நமது யுக்தியனுபவங்களைக்கொண்டு செவ்வையாக ஆராய்ந்துணர்ந்து அதை எவ்வளவுக்கெவ்வளவு நாம் தடுக்கக்கூடுமோ அவ்வளவுக்கவ்வளவு தடுத்து வரவேண்டும்.



முக்கியமாய் அகாலமரணத்துக்குக் காரணம் அஜாக்கிருதையும், வியாதிகளுமேயாம். எல்லா விஷயத்திலும் நாம் ஜாகிருதையாயிருக்கிற வரையில் நமக்கு க்ஷேமமுண்டு. நாம் உட்கொள்ளும் பதார்த்தங்களிற் சில சரீரசௌக்கியத்தையும், சில விஷச்சுரத்தையும் கொடுக்கக் கூடியதாகவிருக்கின்றமையால், அப்பதார்த்தங்களின் குணாகுணங்களை யுணர்ந்து எதை நாம் வைத்துக்கொள்ள வேண்டுமோ அதை வைத்துக்கொண்டு எதை நீக்கவேண்டுமோ அதை நீக்கிவிடவேண்டும். ஒவ்வொரு பதார்த்தங்களுக்கும் தனித்தனி குணங்களுண்டு. கரும்புக்குரிய குணம் இனிப்பு; சுண்டைக்காயிக்குரிய குணம் கசப்பு. பால் சரீரத்துக்குப் புஷ்டியைக் கொடுக்கத்தக்க பதார்த்தம்; பாஷாணம் உயிரை நாசஞ்செய்யும் வஸ்து. ஆதலால் சரீரசௌக்கியத்திற் கேற்ற பதார்த்தங்களை நாம் தெரிந்தெடுத்து அவைகளை எவ்விதத்திற் பக்குவப்படுத்தவேண்டுமோ அவ்விதத்திற் பக்குவப்படுத்தி பின்பு உட்கொள்ளுதலே நன்று. சரீரத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும் பதார்த்தங்களோடு விஷத்தன்மையுள்ள பதார்த்தங்களைச் சேர்த்தால் கேட்டைத்தருமென்பது உறுதியே. நாம் சாப்பிடும் பதார்த்தங்களுடன் விஷத்தன்மையுள்ள பதார்த்தங்கள் சிறிது சிறிதாகச் சேருவதினால், அவைகளின் சாராம்ஸங்கள் சரீரத்துட்பிரவேசித்து இரத்தோட்டத்திற் கலக்கின்றன. இரத்தம் கலப்பில்லாமற் சுத்தியாயிருக்கிறவரையிற் சரீரத்துக்கு யாதொரு கெடுதியுமில்லை. இரத்தம் கெடக்கெட வியாதியும் அதிகரிக்கும். ஆகையால் சரீரத்திற் கலப்பற்ற இரத்தம் விருத்தியாவதற்கு வேண்டிய பதார்த்தங்களைக் கூடியமட்டும் பரீக்ஷித்தறிந்து அவைகளை யுட்கொள்ளுதல் மிக்க நன்றாம். அப்படிக்கின்றி பதார்த்த குணங்களை யறியாமல் வாயிக்கு ருசியாயிருக்கிறதென்று எல்லாப் பதார்த்தங்களையும் உட்கொள்ளுவோமாயின், அவைகள் உட்கொள்ளுஞ் சமயத்தல்லாமற்போனபோதிலும் வேறு சமயத்திலாவது நிச்சயமாய் தீமையை விளைவிக்கும். வியாதிகளுக்குக் காரணமாயிருப்பது விஷத்தன்மை பொருந்திய பதார்த்தங்களை யுட்கொள்ளுவது மாத்திரமேயன்று. பானம் செய்யும் தண்ணீர் முதலானதுகளும், சுவாசிக்கும் காற்றும், சரீர சுத்தமும் இவை போன்ற மற்றும் அது அது இருக்கவேண்டிய விதத்திலிருந்தாலன்றி ஒருவர்க்கு சௌக்கியம் கிடைப்பதரிது. மேற்கூறிய சங்கதிகளை நுட்பாய்ப் பார்த்துணராது ஜனங்கள் தங்கள் மனம்போனபடி நடப்பதினால், உலகில் நாளுக்கு நாள் வியாதிகள் அதிகரிக்கின்றன. வியாதிகள் அதிகரிக்க அதிகரிக்க ஜனங்கள் அகாலமரணத்துக்குள்ளாகின்றார்கள். வருஷா வருஷம் அதிகாரிகளால் திட்டஞ்செ

ய்யப்படும் ஜனன மரணக்கணக்குகளை யாம் பரிசோதிப்போமானால், இந்துதேசத்தில் மடியும் ஜனத்தொகைகளில் முக்காற்பகுதிக்கு மேற்பட்டவர்கள் பருவத்திற்கு முந்தியே மரணமடைந்தவர்களெனக் காண்போம். 1885-௵ சென்னை இராஜதானியில் இவ்விதமாக மரணமடைந்தவர்களின் தொகை ஏறக்குறைய 5,377.600 என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. பின் வருடங்களின் விவரக்கணக்கு எமது கை கட்குக் கிட்டாமையால், மற்ற சங்கதிகளை இப்போது பேசுவதற்குக் கூடாமலிருக்கின்றது. இது விஷயத்தைத் தெரிவிக்கும்படி கவர்ன்மெண்டாருக்கு மனுச் செய்துகொண்டிருக்கிறோம். விவரக்கணக்கு நம் கைககுக் கிட்டியமேல் மற்ற சங்கதிகளை விரிவாய் எடுத்துப் பேசுகிறோம்.

## இல்லறவாழ்க்கை இயல்.

(வித்தியாபானுவின் 26-வது பக்கத்தொடர்ச்சி.)

இனி நம்மவருள்ளே பலர் கேவலம் காமசுகவேட்கை காரணமாக, இரண்டு மூன்று நான்கு ஐந்துக் கணக்கான மனைவியர்களை மணக்கின்றார்கள். குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்ட கதையாய் இவர்கள் சுகமனுபவிக்க விரும்பி இங்ஙனம் செய்து பிறகு பெருந்துன்பக்கடலில் மூழ்குகின்றார்கள். அதனை இங்கு விவரித்துக் கூறுவோம்.

"செருப்பினுள்ளே புகுந்தகல்லும், காதினுள்ளே விளைந்த குறும்பையும், உள்ளூரிலே பட்டகடனும், அயலூரிலே வைத்த பண்ணையமும், இருமனைவியர்களைக் கொண்ட இல்லறவாழ்க்கையும் எப்போதும் மனதுக்கு வேதனையை விளைக்கும்" என்னுமுண்மையை இவர்கள் அறிகின்றதில்லை. அறியாமையால் இக்காரியஞ் செய்து பிறகு ஆப்பசைத்த குரங்குபோல் அகப்பட்டுக்கொண்டு என் செய்தோம்! என் செய்தோம்! என்று வருந்தி ஏங்குகின்றார்கள். எத்தனை இடம் பொருள் ஏவல் அமைந்திருப்பினும் பல மனைவியர்களைக் கொண்டவனுக்குச் சுகம்* என்பது அரசமரத்துக்கே குடிபோய்விடும்.

காமசுக வேட்கையின் மிகுதியாலன்றோ இவர்கள் இக்காரியஞ் செய்கின்றார்கள்? ஒருவனுக்குக் காமசுகம் பூர்த்தியாய்த் துய்க்கவேண்டுமாயின் வாலைப்பருவம் விருத்தாப்பியப்பருவம் முதலியவை நீங்கி நல்ல

* சுகம், இன்பம, களி.



யௌவனப்பருவமே அமைந்திருக்கவேண்டும். அந்த யௌவனப்பருவத்திலும் வறுமை, நோய், முதலிய துன்பங்கள் நேருங்கால் அப்போது காமவேட்கை கடுகினுஞ் சிறுத்தொழியும். பசிமுதலிய துன்பங்களின்றி மனோற்சாகத்துடனிருக்கும் காலத்திலேயே கனலில் நெய் சொரிந்தது போல் காமத்தீ வளர்ந்தோங்கும். அங்ஙனம் ஓங்கிய காமமும் ஒரு பெண்ணின்பத்தைத் துய்ப்பதற்கு மாத்திரமே முளைத்து நிற்கும்.

"மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்"

என்றாள் அன்னை. நமது சரீரமோ சோற்றாலெடுத்தசுவர். பலகோடி நோய்களுக்குத் தாய்வீடு. நிமிஷந்தோறும் கடலலைபோல் (நாம் எதிர்பாராதிருப்பினும்) இன்ப துன்பங்கள் மாறி மாறி வருகின்றன. வருகிற துன்பங்களை வாராது தடுக்க எவ்விதத்தும் நம்மால் இயலுவதில்லை. சரீரமோ நீர்மேற்குமிழி. அதிலும் இளமை நீர்மேலெழுத்து.

"வாழ்வாவது மாயம்; இது மண்ணாவது திண்ணம்" என்றார் பெரியோர். இங்ஙனமாக இச்சரீரத்தை வயிரமலைபோல் நினைந்து பாசக்கடலுள் மூழ்குவது புத்தியாகுமா? மனிதரது சரீரதத்துவங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதே இயல்பு. அதனால் ஒருவனுச்கு ஒருமனைவியின் கூட்டுறவே சுகந்தரும். இரண்டு மூன்று மனைவியர்களைக் கூடியனுபவிக்குங்கால் நாளடைவிலே சரீரசுகங்குறைந்து பற்பல நோய்களுண்டாகிப் பெருந்தீங்கு விளைக்கும். அதுமட்டோ! பெண்களுக்கு இயல்பாகவே பொறாமையாகிய தீக்குணம் குடிகொண்டிருக்கும். பல ஆண்மக்கள் ஒருங்கு கூடி வாழ்வதெளிது. பெண்களோ இருவர்கூடி வாழ்வதும் அரிது. அதனாலே,

"வண்டுகளி ருந்திடின் மதுவை யுண்டிடும்
தண்டமிழி ருந்திடிற் சங்கஞ் சேர்ந்திடும்
குண்டுணியி ருந்திடிற் கோள்கள் மிகுத்திடும்
பெண்டுகளி ருந்திடிற் பெரிய சண்டையாம்"

என்றார் பெரியோர்.

மனைவியர்கள் ஒருவருக்கொருவர் பூசல் விளைத்தால் அவ்வில்லறம் சிறப்படைவதெப்படி? எத்தனைச் செல்வமுடையவனாயிருந்தாலும் குடும்பக் கலகம் நேர்ந்தால் அவனுக்குச் சுகமேது? பலமனைவியர்களுக்கும் சரியான காமசுகத்தையளிக்க ஒருகணவனால் இயலுமென்பது வெறும்வார்த்தையே. அதனால் அம்மனைவிகளில் எவளுக்காவது காமத்தீ மூண்டு விய

பிசாரம் முதலிய தீத்தொழில்களில் சிந்தை செலுத்தவும் ஏதுவாகு மன்றே? இத்துணையும் நிற்க; ஓர் போது விதிமுடிந்து கணவன் விரைவில் இறப்பானாகில் அத்தனை மனைவிகளும் விதவைகளாக நேருகின்றன. அவர்களுக்குப் பல பிள்ளைகளுமிருந்தால் அவர்கள் தகப்பன் தேடிய சொத்துக்களைப் பங்கிடுவதில் பெரும் பூசலிட்டு, ஆஸ்திமுழுமையும் இடைக்கொள்ளைக்காரர்களுக்கு இரைத்துவிட்டு வறியராய்த்தவிக்க நேரிடுகின்றது. பல மனைவிகளை மணந்தவர்களுள் அநேகர் இடுக்கியிற் சிக்கிய எலிபோலும், போனிற்புகுந்த புலிபோலும் தவித்து மனோவியாதியால் விரைவிலே மெலிந்து அகாலமரணத்துக் காளானதை நாம் பார்த்திருக்கின்றோம். அதனால் நல்வாழ்வை விரும்புகிற விவேகிகள் தலைபோனாலும் பல மனைவிகளைக்கொள்ள நினையார்கள். அறிவில்லாவசடர் செய்கையேயதுவாம். முதல் மணந்த மனைவி அசாலத்தில் இறப்பினும், மலடியாயிருப்பினும், தீராநோய் கொள்ளினும், ஒழுக்கிறந்தொழியினும், தேசாந்தரம் போயினும், அப்போது இரண்டாவது விவாகம் செய்து கொள்ளுவது குற்றமாகாது.

இன்னுமிதனை விவரித்தால் மிகவிரியுமென்றஞ்சி இம்மட்டில் நிறுத்துகின்றோம். விவேகிக ளிதுகொண்டே எஞ்சியவைகளை யூகித்துக் கொள்ளுவாரென்று நம்புகிறோம். இதுகாறுங் கூறியவிதனால் ஒரு மனைவியைக் கூடிவாழ்வதே பலவிதத்தும் நன்மை பயக்கும் இல்லறமாகுமென்பது துணியப்பட்டது.

இல்லறத்தார் பேணுதற்குரிய அங்கங்கள் பற்பலவாம். அவற்றுள் முக்கியமானவை தெய்வம் வழிபடல், பெரியோரைப்பேணுதல், அதிதிகளை ஆதரித்தல், சுற்றந்தழுவுதல், தென்புலத்தாரைப் போற்றுதல், பசுக்காத்தல் முதலியவைகளாம். பசித்தோர் முகம் பார்த்தலாகிய ஜீவகாருணியம் மற்றவைகளிலெல்லாம் தலையாய்ச் சிறந்தது. இந்நற்குணம் சிறிதேனும் இல்லாவிடத்து அவ்வாழ்க்கையை இல்லறமென்று கூறாமல் முதலெழுத்தைப் பகரவுகரமாக்கிக் கூறுவதே பொருத்தமாம். இல்வாழ்வாருள்ளே அனேகர் எத்தனை இடம் பொருள் ஏவலுடையாராயினும் கண்ணோட்டம் சிறிதுமின்றித் தம் வயிறொன்றனையே மிகநோக்கி வாழ்கின்றனர். அவருக்கு வேறெதனையுவமையாகக் கூறுவோம்.

"பொருட்பாலைவிரும்புவர்கள்காமப்பாலிடைமூழ்கிப்புரள்வர்கீர்த்தி
யருட்பாலையறப்பாலைக்கனவிலுமேவிரும்பார்களறிவொன்றில்லார்
குருப்பாலக்கடவுளர்பால்வேதியர்பாற்பாலர்பாற்கொடுக்கக்கோரார்
செருப்பாலெயடிப்பவற்குவிருப்பாலெகோடிசெம்பொன்சேவித்தீவார்."



என்னுங் கவிக்கு இலக்கியமாவார் இவரே யென்றுணரத்தக்கது. இனி இப்பகுதியை இம்மட்டில் நிறுத்தி மற்றுள்ள நீதிகளிலொவ்வொன்றை எடுத்து இயன்றமட்டில் விவரித்துரைக்கத் தொடங்குகிறோம். நமது நண்பர்கள் இதிலுள்ள விஷயங்களைச் சாவதானமாயாராய்ந்து தந்தம் சினேகிதர்கட்குங் காண்பித்து நன்மைகடைப்பிடிப்பாரென நம்புகிறோம். இனி "மக்கட்பேறு" முதலியவைகளைப்பற்றி முறையே எழுதிவரப்படும்.

---

## கடல் யாத்திரை.

சரஸ்வதியே மெய்யவதாரமென்று சொல்லப்படும் ஔவையுங் கூட "திரைகடலோடியுந்திரவியந்தேடு" என்று மொழிந்தனளாதலின், **கடல் யாத்திரை** ஒருவருஞ் செய்யக்கூடாதென்று கூறுவது அசத்தான பேச்சு. இவ்விதமான பேச்சு பேசுதல் யுக்தியனுபவங்கட்குச் சிறிதும் பொருந்தாது. கடல் யாத்திரை செய்வதினால் எத்தனையோ பிரயோஜனமிருக்கின்றது. நம் தேயத்துள்ளவர்களி லநேகருக்குத் தாங்கள் குடியிருக்கும் வாசஸ்தலமாகிய இந்துதேசத்தின் நாடு நகரங்களைத்தவிர வேறு நாடு நகரங்கள் வேறெங்குமில்லை என்றே பூர்ண நம்பிக்கை. "தானாகவுந் தெரிந்துகொள்ளான்; பிறர் சொன்னாலுங் கேளான்" என்று சொல்லும் பழமொழிப்படி, நம் நாட்டிலுள்ள காட்டுத்தன்மையொத்த மனிதர்கள் பிறர் ஓர் நற்காரியத்தைக் குறித்துச் சொன்னால் அது மெய்யா அல்லது பொய்யா வென்று விசாரித்தறியாமல், தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சாதிக்கிறார்கள். இவர்கள் மனிதர்களாய்ப் பிறந்தும் பயன் என்னை? அங்கிலேயர், பிராஞ்சியர் முதலிய ஜனங்களிடத்து பகுத்தறிவு, ஊக்கம், விடாமுயற்சி என்கிற இக்குணங்கள் குடிகொண்டிருத்தல் பற்றி அவர்கள் அந்நிய தேசங்கட்குச் சென்று அங்குள்ளவர்களை அடக்கியாண்டுவருகிறார்கள். பலதேசவர்த்தமானங்கள் இன்னதென்றுணர்ந்து அங்குள்ளவர்களின் நடையுடை பாவனை முதலானவற்றிற்கிசைய சாமான் சரக்குகளைச் சேகரித்துப் பண்டகசாலைகளையும் ஸ்தாபித்துத் தங்களுக்குத் தெரியாத விஷயங்களேதேனுமிருந்தால் அங்கிருப்பவர்களிடமிருந்து கற்றுக்கொண்டும், தங்களுக்குத்தெரிந்த விஷயங்களை அங்குள்ளவர்கட்குக் கற்றுக்கொடுத்தும் இப்படிப் பலவிதமாகப் பொருளுங் கீர்த்தியும் சம்பாதித்து வருகிறார்கள். நம்மவர்களோ நாளுக்கு நாள் பொருள் நஷ்டமும், அபகீர்த்தியுந் தேடிவருகிறார்கள். இவ்வாறுவதற்கு

முரட்டுத்தனம், அசட்டுப்புத்தி, சோம்புத்தனம், ஊக்கமின்மை என்கிற துற்குணங்கள் அவர்கள் மனத்துட்குடிகொண்டிருத்தலே காரணங்களாம். ஆதலால் கடல் யாத்திரை செய்தலினால் எத்தனையோ பயன் பெறக்கூடியவர்களாகவிருக்கிறோம். முன்னமே காணாத தேசங்களைக் காணலாம்; அறியாத சங்கதிகளை யறியலாம்; கிடைத்தற்கரிய வஸ்துக்களைத் தேடிப்பெறலாம்; மிகுந்த திரவியம் சம்பாதிக்கலாம். சுருங்கச் சொல்லில், எல்லாவிதத்திலும் சுகிர்தத்தையும் லாபத்தையும் அடையலாம். இவ்வாறு நன்மைகளிருக்கக் கடல் யாத்திரை செய்தல் ஒருவருக்குக்கூடாதென்று சொல்லுவது மதியீனமே.

இஃதிங்ஙனமிருக்க, கடல்யாத்திரையின் பயனை நன்குணர்ந்த விவேகிகள் கூடச் சில சமயங்களில் அச்செய்கை கூடாதென வாதிக்கிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் நியாயமாவதென்னவெனில், கடல் யாத்திரை சாஸ்திர விரோதமென்றும், அது ஆரியமதஸ்தர்களுக்குக் கூடாதென்றும் சொல்லும் விஷயங்களேயாம். இவ்வண்ணங்கூறுதல் சரியான நியாயமா அல்லது நியாயமல்லவாவென்று நாம் ஆலோசித்துப்பார்த்துச் சரியான நியாயமாகவிருந்தால் அதை எடுத்துக்கொள்ளவேண்டும்; இல்லாவிடில் அதைத் தள்ளிவிடவேண்டும். "கடல் யாத்திரை செய்தல்" சாஸ்திர விரோதமா அல்லவாவென்பதே முதல் முதல் சந்தேகமாயிருக்கின்றது. எந்தச்சாஸ்திரங்களும் யுக்தியனுபவங்கட்கு விரோதமான விஷயங்களைப் பற்றிப் பேசமாட்டாவென்றே எமது துணிபு. இந்துக்கள் "சாஸ்திரம" என்கிற வார்த்தையைச் சாதாரணமாய் "தர்ம நூல்" அல்லது "நீதி நூல்" என்கிற அருத்தத்தில் வழங்கிவருகின்றார்கள். இந்துக்களுள் வழங்கும் பதினெண் ஸ்மிருதிகளையும் தக்க விதமாய்ப் பரிசோதித்தறிந்து அவைகளின் கருத்துகளை வெளிப்படுத்துவார் ஒருவருமில்லையே என்று மெத்த விசனப்படுகின்றோம். பராசரஸ்மிருதி மனுஸ்மிருதி ஆகிய இவ்விரண்டு நூற்கள் மாத்திரம் வேறு பாஷைகளிற் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன. இவ்விரண்டையும் ஆதியோடந்தமாய்ப் பார்த்ததில், "இந்துக்கள் கடல் யாத்திரை செய்தல் தகாது" என்கிற சங்கதியை நிரூபித்தற்கேற்ற ஆதாரங்களொன்றுங்காணோம். "சாஸ்திரிகள்" என்று பட்டப்பெயர் பூண்டிருப்பவர்களிடம் இவ்விஷயத்தைக் குறித்துப் பிரஸ்தாபித்தால், அவர்கள் ஒன்றுக்கொன்று சிறிதும் பொருந்தாத ஏதோ சங்கதிகளைப் பேசி மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுகிறார்கள். இவ்விதமாகப் பொருத்தமில்லாமற் பேசும் பேச்சுகளை (Inconsistencies) அச்சாஸ்திரிகட்கு எடுத்துக் காட்டி



நியாயஞ்சொல்லுங்களென்று அவர்களை வேண்டிக் கொண்டால், அவர்கள் அதற்கு "இந்த ஏட்டில் நியாயஞ்சொல்லியிருக்கிறது; அந்த ஏட்டில் நியாயஞ்சொல்லியிருக்கிறது" என்கிற உபயோகமற்ற பேச்சுகளைப் பேசுகிறார்களே தவிர ஒருவருக்காவது சரியான நியாயஞ்சொல்லத் தெரியவில்லை. சிலசமயங்களில் ஏதாகிலும் ஓர் விஷயத்தைப்பற்றி ஒருவன் "சாஸ்திரக் கியானர்" என்று பெயர் பெற்ற ஒருவருடன் பிரஸ்தாபித்தால், அவர் கேட்போருக்குச் சரியான உத்திரஞ் சொல்லவேண்டியது கடமை. அப்படி அநேகர் செய்கிறதே இல்லை. சிலர் சிலவேளைகளில் மாறுட்டமாகவும், முரணாகவும் பேசுகிறார்கள்; சிலர் சிலவேளைகளில் கோபமூண்டுவிடுகிறார்கள்; சிலர் சிலசமயங்களில் அடிக்கவும் வந்துவிடுகிறார்கள். இக்காலத்தவர்களில் அநேகர் தங்கள் சொந்த மதம் விட்டு அந்நிய மதம் புகுவதற்குக் காரணம் இதுவுமொன்று. "சாஸ்திரிகள்" என்றும், "உபாத்தியாயர்கள்" என்றும் இக்காலத்தில் தாங்களே பட்டப்பெயர் தரித்திருப்பவர்களிலநேகருக்கு வாஸ்தவத்தில் சரியான படிப்பே கிடையாது. விபூதியையும் ருத்திராக்ஷத்தையும் அணிந்து கொள்ளுவதினாலேயே எல்லாரும் "சாஸ்திரிகள்" என்று சொல்லுவதற்கு யோக்கியதை யுடையவர்களாவார்களோ? இல்லை. ஆகையால் இப்பேர்ப்பட்ட "சாஸ்திரிகளால்" உலகிற்குப்பயன் யாதுமில்லை. ஆனால் "சாஸ்திரிகள்" என்று பட்டம் தரித்துக்கொண்டிருப்பவர்கள் எல்லாரையும் ஒரே தன்மையாகப் பாவிப்பதற்கும் தகாது. வாஸ்தவமான கல்வியறிவையுடைய சாஸ்திரிகளும் உலகில் இருக்கிறார்கள். "கடல் யாத்திரை ஆரியமதஸ்தர்கட்குத் தகுமா அல்லது தகாதா" என்கிற சங்கதியை நாம் அவர்களுடன் பிரஸ்தாபித்தும் இருக்கிறோம். அவர்கள் அதற்குத்தகுந்த ஆதாரங்களைத் தேடி எடுத்துக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். ஆதாரம் கிடைத்ததன்பேரில் ஓர் சங்கதியைப் பேசி முடிவு செய்யவேண்டியதேயல்லாமல் அதற்குமுன்னால் அதை உறுதிப்படுத்துதல் யாவர்க்கும் தகாது. ஆனால் யுக்தியனுபவங்கட்கு எட்டிய மட்டும் ஓர் சங்கதியைக்குறித்துப் பேசுவதற்கு நமக்குச் சக்தியுண்டு. அவ்விதமான யுக்தியனுபவத்தின்பேரில் இச்சங்கதியை எடுத்துச் சிறிதுபேசுவோம்.

"கடல் யாத்திரை செய்தல்" நீதி சாஸ்திர விரோதமென்றே வைத்துக் கொள்ளுவோம். எந்த சாஸ்திரஞ் செய்தவர்களும் யுக்தி யனுபவங்கட்கு விரோதமான சங்கதிகளை ஒருக்காலும் சொல்லமாட்டார்கள்.

கடல் யாத்திரை செய்வதினால் நன்மைகள் அனந்தமுளவென்பதை நாம்
முன்னமே எடுத்துப் பேசியிருக்கிறோம். அப்படிக்கிருந்தும் அதை ஏன்
விரோதமென்று சொல்லவேண்டுமெனில், அதற்கேற்ற நியாயம் என்ன
வென்று ஆராய்வோம். நாம் பிரஸ்தாபித்து வரும் விஷயம் முக்கிய
மாய் ஆரியமதக் கோட்பாடுகளை உள்ளபடி அனுசரித்து நடக்கும் ஆரிய
மதாபிமானிகட்கு மாத்திரம் உரியதேயன்றி ஏனையோர்கட்கன்று. ஆரிய
நூல் ரகசியங்களை யுணர்ந்து அதன் விதிவழி தர்மங்களைப் பரிபாலித்துக்
கூடாவொழுக்கங்களைக் கூடியவரையிற் றவிர்த்து-சத்தியம் சாந்தம்
ஜீவகாருணியம் தெய்வபக்தி என்கிற நற்குணங்களைப் பூண்டு மனோவா
க்கு காயம் முதலானவைகளிற் பரிசுத்தத்தை நாடுகின்றவர்களுக்கு
கடல் யாத்திரை அவசியமில்லை: இப்படிக்கல்லாதவர்கள் எவர்களும்
கடல் யாத்திரை செய்யலாம். வேறு தங்களுக்கு இஷ்டமான காரியங்
கள் எவையுண்டோ அவைகளையுஞ் செய்யலாம். இவ்வுண்மையை அறி
யாமல் ஆக்ஷேபஞ்செய்கின்றவர்களனைவரும் மதியீனாகளென்றே சொல்
லவேண்டும். ஆதலால் இப்போது ஆரியாவர்த்தத்திலுள்ள அந்தணவா
சிகளை நாம் இருவகுப்பினர்களாகப் பிரிக்கவேண்டும். வைதிக கருமங்
களை விதப்படி நடாத்திப் பரிசுத்த குணம் பூண்டிருப்பவர்கள் ஒருவகுப்
பைச் சேர்ந்தவர்கள். இங்கிலீஷ்ப் படித்துவிட்டு அயல் தேயங்கட்குச்
சென்று வேற்றுமையின்றி அங்கிருப்பவர்களுடன் கலந்து வாழவேண்டு
மென்றெண்ணங்கொள்ளும் ஆரியர்கள் மற்றோர் வகுப்பைச் சேர்ந்த
வர்கள்; இப்படியாக இரண்டு வகுப்பினர்கள் இருக்கிறார்கள். இவ்வகு
ப்பினர்களில் "எவர் மேன்மையுடையவரோ எவர் தாழ்மையுடையவ
ரோ" என்கிற சங்கதியையாவது அல்லது "எவர் கூறுவது நியாயம்;
எவர் கூறுவது நியாயமல்ல" வென்கிற விஷயத்தையாவது நாம் இப்
போது கவனித்துப் பேசுவோமானால், எங்கு வீண்வழக்கும் சண்டையும்
வந்துவிடுமோ வென்றஞ்சுகிறோம். ஆகையால் இக்காலத்தில் அவரவர்
களினம் அவரவர்களுக்கே மேன்மையாக விருக்கட்டும்; அவரவர்கள்
பேசுவது அவரவர்களுக்கே நியாயமாக விருக்கட்டும். ஆனால் ஆதிகாலந்
தொடங்கி நல்லாசாரம், அனுஷ்டானம், ஜீவகாருண்யம், தெய்வபக்தி
முதலான பரிசுத்த குணத்தைப் பூண்டிருக்கும் ஆரியமதஸ்தர்கள் அந்நிய
தேசங்கட்கு யாத்திரைசெய்து அங்கு பரிசுத்தகுணம் சிறிதுமில்லாது
வாழுஞ்சனங்களுடன் கலக்கவேண்டுமென்றெண்ணுதல் மனதுக்கு அவ்
வளவாக ரம்யத்தைக் கொடுக்கவில்லை. இந்துதேசத்துக் கப்புற



முள்ள நாடுகளில் வாசஞ்செய்யும் ஜனங்கள் சாதாரணமாய் மிலேச்சத்
தன்மையுள்ளவர்களென்றே நம் ஆதிகிரந்தகர்த்தர்களது கொள்கை.
ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து வாஸ்தவத்தில் இந்துதேசத்தின்மீது ஆசார
வொழுக்கங்களைப் பூண்டு வாசஞ்செய்யும் பிரம்ம க்ஷத்திரிய வைசிய
என்கிற ஜாதியார்களுக்கும், அந்நிய தேசங்களிலிருப்பவர்களுக்கும் எத்த
னையோ வித்தியாசங்களிருக்கின்றன. ஒழுக்கங்களிற் சிறந்தவை ஜீவகா
ருணியம், மதுமாமிஸவிலக்கு, சரீரசுத்தி, தெய்வபக்தி ஆகிய இவைகளே
யாம். செவ்வையாக ஆலோசித்துப் பார்க்குமிடத்து இந்துககள் மேற்
கூறிய விஷயங்களில் மறற தேசத்து ஜனங்களைக்காட்டிலும் அநேக ஆயி
ரமடங்கு மேன்மையானவர்களென்பதிற் சந்தேகமே இல்லை. இவ்விஷ
யங்களில் இந்துக்கள் சிறந்தவர்களென்பதை அந்நிய தேசத்தவர்களே மெச்
சுகிறார்கள். பூர்வகாலத்து ஆரியமத சிரோன்மணிகள் இத்தியாதி விஷ
யங்களை நன்குணர்ந்தவர்களாகையால், வகைதப்பி இந்துக்கள் தமது
மதாசாரங்களை ஒருவேளை இழந்துவிட்டாலென்செய்கிற தென்றஞ்சி
"கடல்யாத்திரை இத்தேசத்தவர்களுக்குக் கூடா" தென எவ்விடத்திலா
வது விதி ஏற்படுத்தியிருந்தாலு மிருக்கலாம். இதனாற் குற்றமென்னை?
மேலும் "சிந்து நதிக்கப்புற மிருக்கும் அந்நிய தேசங்கட்கு இந்துக்கள்
போகக்கூடாது" என்று விதி ஏற்படுத்தப்பட்ட காலத்துக்கும், அவ்விதி
யைமாற்றவேண்டுமென்று கூறும் இக்காலத்துக்கும் அநேக வித்தியாசங்
களுண்டு. இந்தியாவில் இப்போதிருக்கும்படியான ஜனத்திரள் அப்போ
தில்லை. நாடு நகரங்களெங்குஞ் செழித்தோங்கி இருந்தமையால், அந்நிய
தேசங்கட்குச் செல்லவேண்டிய அவசியம் அவர்களுக்குச் சிறிதும் நேரி
டவில்லை. மேலும் உலகசரிதையை நாம் ஆராய்வோமானால், இந்து
தேசத்திற்கப்பாலுள்ள தேசத்தவர்கள் மிலேச்சத் தன்மையைப் மேற்
கொண்டிருந்தார்களென்று அறிவோம். இங்ஙனம் மிலேச்ச குணம் சூடி
கொண்டவர்கள் பிறருயிர்களிடத்துச் சிறிதுங்கிருபை வைக்காமல் கொ
லைசெய்வதே விளையாட்டாகக் கொண்டு ஏறக்குறைய காட்டுமிருகங்களை
யொத்தாற்போல் வாசஞ்செய்து வந்தமையால், பூர்வகாலத்து ஆரியா
வர்த்தத்தின் பிரஜைகள் அந்நிய தேசத்தவர்களைக் கண்டால் எப்போதும்
பயந்து நடுநடுங்கிக்கொண்டே இருந்தார்கள். அன்றியும் ஆரியாவர்த்தத்
திலுள்ள ஜனங்கள் எப்போதும் ஆசாரத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்
கள். உயிர்போனாலும் ஒழுக்கங்குன்றாது நடக்கும் உத்தமர்கள். யார்
எப்படிப்போனால் நமக்கென்னவென்று கருதி எத்தனை துன்பங்கள்
நேர்ந்தபோதிலும் அவைகளையடக்கிக்கொண்டு எக்காலமும் ஈசுவரத்தி

யானமே ஆருதலென்று கருதியிருப்பவர்கள். இவ்வாறு காரணங்கள்பற்றி பூர்வத்தில் ஆரியாவர்த்தத்தில் வசித்துவந்த காருணியசிரோன்மணிகள் சிந்துநதிக்கப்பாலுள்ள மிலேச்ச தேசங்களுக்குப் போகக்கூடாதென்கிற கட்டுப்பாடு செய்து கொண்டார்கள். இவ்விதமான கட்டுப்பாடு இதுகாறும் நடந்துவந்தது. இனிமேல் இவ்விதமான கட்டுப்பாடு நீடித்து நடந்துவருமென்கிற மனவுறுதி யாவர்க்குங் கிடையாது. ஏனெனில் அந்நியதேசத்தவர்கள் நாளுக்கு நாள் மிலேச்சத்தனத்திற் குறைந்து சீரடைந்துவருகிறார்களென்பதும் வாஸ்தவமே. ஆனால் மாட்டுக்கொலை, ஆட்டுக்கொலை, மதுபானம், மாம்ஸபக்ஷணம் என்கிற இச்செய்கைகள் மாத்திரம் அந்நிய தேசத்தவர்களிடத்து நீங்கவில்லை. ஆசாரமின்மையே அவர்களுக்கு உடைமையாகவிருக்கின்றது. இவ்வாறு இழியகுணங்களும், செய்கைகளும் நாளாவட்டத்தில் அந்நிய தேசத்தவர்களிடத்தினின்றும் நீங்கி எங்கும் **ஜீவகாருணியம்** மிகும் என்கிற நம்பிக்கை ஒவ்வொருவருடைய மனதிலும்தோன்றி இருக்கின்றமையால், இனி அந்நியதேசங்கட்குக் கடல் யாத்திரையாகவோ வேறெவ்விதமாகவோ செல்லக்கூடாதென்கிற கட்டுப்பாடு நில்லாது. ஆனால் அந்நிய தேசங்கட்கு யாத்திரை செய்ய வேண்டுமென்று விரும்புகிறவர்கள் ஒரு விஷயத்தில் மாத்திரம் கட்டுப்பாடு செய்து கொள்ளுதல் மிக்க நலமெனத் தோற்றுகின்றது. அதாவது தமது சிறந்த ஆசாரவொழுக்கங்களை கைவிடக்கூடாதென்பது. தகுந்த வைதிகப்பிராமணர்கள் தங்களுக்கு ஆசாரமே சிறந்ததென்றெண்ணி உயிர்போனாலும் தங்கள் ஜாதியாசாரங்களைக் கைவிடமாட்டார்கள். **இங்கிலீஷ் பிராமணர்களோ** அப்படிக்கன்று. எதுபோனபோதிலும் அந்நிய தேசங்கட்கு யாத்திரை செய்கிறதென்றே துணியக்கூடும். சிலவேளைகளில் மதுமாமிசவாசனைகளை அறிவதற்குக்கூட ஆசைகொள்ளக்கூடும். அயல் தேசங்கட்கு யாத்திரை சென்று புருஷார்த்தங்களை யனுபவிக்க வேண்டுமென விருப்பங்கொள்ளும் "இங்கிலீஷ் பிராமணர்கள்" தங்கள் ஜாதிசமயக்கொள்கைகளைக் கைவிடாதிருத்தல் மிக்க மேன்மையாம். ஒருவேளை ஜாதிசமயக்கொள்கைகளை இழக்கும்படியான அவசியம் நேர்ந்தபோதிலும், ஆட்டுக்கொலை மாட்டுக்கொலை மதுபானம் மாம்ஸபோஜனம் முதலான கெட்டசெய்கைகளை யாகிலும் செய்யாதிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். பறையர், சக்கிலியர், பள்ளர் முதலானவர்களுக்கெல்லாம் இப்போதே பார்ப்பான் பறையனிலும்கடையனாய்விட்டானென்கிற நம்பிக்கை பிறந்து இங்கிலீஷ்ப் படிக்கும் பிராமணர்களை நோக்கி "அடே! கெட்டப்பார்ப்பார்ப்பயலே! துஷ்டா! உனக்கென்னத்துக்



கடாவலகவேண்டும்" என்று அவர்கள் தெருக்களில் அப்பிராமணர்களை அவமதித்துச் செல்லுகிறார்கள். அந்நியதேசங்கட்கு யாத்திரை சென்று ஜாதியாசாரங்கெட்டுத் திரும்பிவரும் பிராமணர்களை நாம் வாஸ்தவமான பிராமணர்களென்று கொள்வோமானால், அது பறையனும் விரும்பத்தகாதசெய்கையன்றோ? ஆகையால் "பிராமணர்கள்" என்று சொல்லப்படுகின்றவர்கள் தங்களுக்கிருக்கும் மரியாதையையும், மேன்மையும் கொஞ்சம் காப்பாற்றிவாழவேண்டுமென்பதாகவே நாம் யுக்தி அனுபவங்களால் ஆராய்ந்தறிகிறோம். ஆனால் "காலத்திற் சேற்றகோலம்" என்று சொல்லுவதுபோல், சில விஷயங்களில் காலத்தையனுசரித்து நம்மை நாமே திருத்திக்கொள்ளவேண்டியதும் அவசியமே. அந்நிய தேசங்கட்குயாத்திரை செய்வதனாலாய பயன் அனந்தமுள வென்பதை நாம் மேலே குறிப்பிட்டிருக்கிறோம். ஜாதிசமயக்கொள்கைகளும், சிறந்த ஆசாரங்களும், சதா ஈஸ்வரதியானமும், சித்தபரிசுத்தமும் வேண்டுமென்கிறவர்களுக்கு அந்நியதேச யாத்திரை வேண்டுமென்கிற ஆவசியமில்லை. மற்றையோர்கட்கெல்லாம் அது ஆவசியமே. அப்படி ஆவசியமாயினும், இந்துக்கள் தங்கள் மேன்மையையும், மரியாதையையும் காப்பாற்றிக் கொள்ளத்தகுந்த விதத்தில் அக்காரியத்தை நடத்தவேண்டியது யுக்தமாம். அயல்தேசங்கட்குக் கடல் யாத்திரை செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்கள் தங்கள் சொந்த ஆவசியத்தின் பொருட்டு தனியாக கப்பல்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஐரோப்பியர்களுடைய கப்பல்களில் நாம் யாத்திரை செய்வோமானால், நமது மதாசாரங்களுக்கு எப்படியாகிலும் ஈனம் வந்து சம்பவிக்கும். மேலும் நம்மவர்கள் போய்த் தங்குமிடங்களில் இந்துக்களுக்கென்றே பிரத்தியேகம் சத்திரம் சாலை முதலானதுகள் ஏற்படுத்தலும் நலமாம். ஆகையால் ஆரியமதஸ்தர்களே! உங்களுக்கிருக்கும் மரியாதையையும், மேன்மையையும், மற்ற நற்குண நற்செய்கைகளையும் எப்போதும் காப்பாற்றிக்கொள்ளுங்கள். இங்கிலீஷ்ப்படிப்பினாலே ஆசாரவொழுக்கங்களை நாம் கைவிடவேண்டுமா?

## தென்னிந்தியாவின் வேளாண்மைத்தொழில்.

(வித்தியாபானுவின் 44-வது பக்கத்தொடர்ச்சி.)

கிருஷித்தொழில் அபிவிர்த்தியடைவதற்கு வேண்டிய வழிகள் இக்காலத்தில் அநேகமிருக்கின்றனவென்பது வாஸ்தவமே. ஆயினும் அவ்

வழிகளை அறியத்தகுந்தவர் இந்துதேசத்தில் சொற்பப்பெயர்கள்தான் இருப்பார்களென்று நமது நம்பிக்கை. எவ்வகைத் தொழிலுக்கும் முதற் காரணம் அறிவு. அறிவுடன் செய்யும் எத்தொழிலும் அபிவிர்த்தியடையும். அறிவு சிறிதுமில்லாமற் செய்யுந்தொழிலொன்றும் அபிவிர்த்தியடையாதென்பது திண்ணம். ஆகையால் கிருஷித்தொழில் இந்து தேசத்தில் வளர்ந்தோங்கவேண்டுமானால், அத்தொழிலுக்கேற்ற அறிவுடையவர்கள் அத்தேசத்திலிருக்கவேண்டியது அவசியம். இந்தியாவிலுள்ள கிருஷிகர்கட்குத்தொழிற் கல்வியும், அதில் கைதேர்ந்த பழக்கமுங் கிடையா. தக்க விதத்தில் தூண்டுதலும், ஒத்தாசையுமிருந்தாலன்றி ஐரோப்பியதேசங்களைப்போல் இந்துதேசம் முன்னுக்குவருவது மிகவும் பிரயாசம். வமிச பரம்பரையாய் இந்துதேசத்து வேளாண்மைத்தொழிலாளிகள் மிக்க தரித்திரர்களாகையால், அவாகள் தாங்களாகவே சுதாவில் பெருத்தவிஷயங்களை மேற்போட்டு நடத்துவதற்கு அசக்தர்களாயிருக்கிறார்கள். இந்து தேசத்தின் மீது வேளாண்மைத்தொழில் அபிவிர்த்தியடையாமலிருப்பதற்குக் காரணம் முக்கியமாய் தரித்திரம் ஒன்றே எனச்சொல்லத்துணிவோம். கிருஷிகர்கட்குக் கல்விப்பயிற்சியில்லையென்று சொல்லுவதுகூட தகுந்த ஓர் காரணமன்று. உழவுத்தொழிலுக்கு அதிகமான கல்விப்பயிற்சி வேண்டுமென்கிற அவசியமில்லை. இரும்புக்கலப்பைகளாலும், நீராவியந்திரக் கருவிகளாலும் உழவுத்தொழில் புரியும் விதத்தை எவர்களும் எளிதிற் கற்றுக்கொள்ளக்கூடும். இங்ஙனம் கற்றுக்கொள்ளுவதற்கு ஒருவன்கைத் தொழிற்சாலைகளிலே போய் ஒருவருஷம் இரண்டுவருஷம் தாமதிக்க வேண்டுமென்கிற கட்டாயமில்லை. அப்படித்தாமதித்தபோதிலும் கெடுதலொன்றுமில்லை. பூசாரத்தின் தன்மையையுணர்ந்து அதற்குத் தகுந்தாற்போல் கிருஷிதொழில் புரிவது மெத்த அனுகூலமாயினும், இந்து தேசத்துக்கிருஷிகாகள் இவ்விஷயத்தை அவ்வளவாகக் கவனிக்க வேண்டியதில்லை. வமிசபரம்பரையாகவே இந்துதேசத்துக் கிருஷிகர்கட்கு இவ்விஷயத்தில் ஓர்வித அனுபவமும், பழக்கமுமிருக்கின்றமையால், தற்சமயம் அவர்கட்கு அவ்விரண்டுமே போதுமானவை. இந்திந்த பூமியின் இயல் இன்னின்னமாதிரி என்கிற அனுபவமும், அவைகளில் இன்னகாலத்தில் இன்னவிதமாகப் பயிர் செய்யவேண்டுமென்கிற பழக்கமும், இன்னதானியங்கள் விதைத்தால் இவ்வளவு விளையுமென்கிற அறிவும் அவர்கட்கு எக்காலத்திலுமுண்டு. இவ்வித அரிவையொட்டி அங்கிலேயர், பிராஞ்சியர் என்கிற தேசத்தவர்களால் உழவுதொழிலுக்கு முக்கிய சாதனங்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கருவிகளையும் தங்கள் கிருஷித்தொழிலுக்கு



ஆதாரமாகக் கொண்டு அத்தொழில் நடத்துவார்களேயாகில், முன்னைவிட அதிகமான லாபாதாயங்களை அவர்கள் அடைவார்களென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் இவ்விதமாக லாபாதாயங்கள் உண்டென்னும் சங்கதி இந்துதேசத்திலுள்ளவர்களுக்குத் தெரியுமா அல்லது தெரியாதாவென்று கேட்டாலோ ஒருவருக்கும் தெரியாதென்று சொல்லுவதற்கு வகையில்லை. கிருஷித்தொழிலுக்குரிய கருவியின் பயனையும், மற்ற சங்கதிகளையும் செவ்வையாகக் கற்றுணர்ந்தவர்களு மிருக்கிறார்கள்; கேட்டிருப்பவர்களுமிருக்கிறார்கள்; பார்த்திருப்பவர்களுமிருக்கிறார்கள். இவ்விதமாக லாபாதாயங்கள் உண்டென்கிற சங்கதிகளை அறிந்திருப்பவாகளிருந்தும், கிருஷிசம்பந்தமான விஷயங்களில் இரும்புக்கலப்பைகளையும் மற்ற யந்திரக்கருவிகளையும் ஏன் அவாகள் உபயோகிக்கிறதில்லை என்றால் கூறுவோம்.

கிருஷிமுறைமைகளை யறிந்திருப்பவர்களுக்கு கையிற்பணமில்லை. பணமிருப்பவர்களுக்கு மனமில்லை. அகையால் எல்லாவிஷயங்களும் பொருந்தும்படிக்குள்ள கிருஷிகள் இந்துதேசத்தில் வெகுபெயர்களில்லை. வாஸ்தவத்தில் அநேகர் ஏழைகளே. ஆள் ஒன்றுக்கு ஒரு ஏகரா, இரண்டு ஏகரா, மூன்று ஏக்ரா என்று சொல்லும்படிக்கு சொற்பநிலங்களையுடைய கிருஷிகர்கள் அநேகரிருக்கிறார்கள். இருமபுக்கலப்பைகளும் நீராவியந்திரக்கருவிகளும் வாங்குவதற்கு அவர்களுக்கு வகை ஏது? ஏழைக் கிருஷிகர்கள் சர்க்காருக்கு வரிசெலுத்தி அரைக்கஞ்சி குடிப்பதே அரிதாயிருக்கின்றது. கடன் வாங்கியாகிலும் கிருஷியையபிவிர்த்தி செய்யலாமென்றால், கடன் கொடுப்பதற்கும் ஆள்களில்லை. மேலும் யந்திரங்கள் வேண்டுமானால் இங்கிலாந்திலிருந்து வரவழைக்க வேண்டியதாயிருக்கின்றது. அன்றியும் ஒவ்வொன்றுக்கும் விலையதிகம். இப்படி அதிக விலைகொடுத்தாகிலும் வாங்கலாமென்றால், எங்காவது தவறி யொடிந்து போய்விடுமோவென்கிற அச்சம் ஒவ்வொருவர் மனதிலும் குடிகொண்டிருக்கிறது. இருப்புக் கலப்பைகளாவது, நீராவியந்திரக் கருவிகளாவது, அல்லது கிருஷித்தொழிலுக்குரிய மற்ற ஏனங்களாவது சீர்குலைந்து போனால், அவைகளைச் சீர்ப்படுத்திக் கொடுப்பதற்கு வேண்டிய தொழிலாளிகள் இந்தியாவிலில்லை. இங்கிலாநது முதலான தேசங்களில் ஆயிரம் மணங்கு இரும்பை ஒரே காலத்தில உருக்குவதற்குரிய ஆள்கள் இருககிறார்கள். மேலும் அங்கிலேய தேசத்துத் தொழிலாளிகள் ஓர் யந்திரத்தை வெகு நேர்த்தியாகவும், மிகக அழகாகவும் தோன்றும் படிக்குச் செய்வார்கள். இந்துதேசத்திலுள்ள தொழிலாளிகள் செய்யும்வேலை அங்கிலேய

தேசத்தவர்களது வேலைகளைப்போல் அவ்வளவாக நேர்த்தியாகவும், அழகாகவும் இருக்கிறதில்லை. கலப்பைக்கு ஒரு கொழு செய்தால், அதில் எட்டுக்கோணல்கள் இருக்கின்றன. இவ்வளவு புத்திசாதுரியத்தையுடைய தொழிலாளிகள் பெரிய இரும்புக்கலப்பைகளையும் நீராவி யந்திரக்கருவிகளையும் சீர்ப்படுத்துவது எளிதோ? மேற்கூறிய காரணங்கள் பற்றியே இந்துதேசத்துக் கிருஷித்தொழிலாளிகள் இங்கிலாந்து, பிரான்சு முதலான விடங்களிற் செய்யப்படும் கலப்பைகளையும், நீராவி யந்திரக்கருவிகளையும் விலைக்குவாங்கி தங்கள் தொழிலுக்கு உபயோகிக்கிறதில்லை.

---

## பழமொழிகள்.

அகம் மலிஞ்சால், அஞ்சும் மலியும்.
அகல இருந்தால், நிகள உறவு; கிட்டிவந்தால், முட்டப்பகை
அகல இருந்து, செடியைக் காக்கிறது.
அகாரியத்தில், பகீரதப் பிரயத்தனம் பண்ணுகிறது.
அகோர தபசி, விபரீத நிபுணன்.
அக்கச்சி யுடைமை அரிசி, தங்கச்சி யுடைமை தவிடு.
அக்கமுங்காசும், சிக்கெனத்தேடு.
அக்கரைப்பாகலுக்கு. இக்கரைக்கொழுகொம்பு.
அக்கியானம் துலைந்தால், அவிழ்த[illegible]
அக்கிரகாரத்தில் பிறந்தாலும், நாய்[illegible]வேதமறியுமா?
அக்கிரகாரத்து நாய்க்கு, அகவிலை தெரியுமா?
அக்கிரகாரத்து நாய்பிரதிஷ்டைக்கு அழுததுபோல.
அக்கினிதேவனுக்கு, அபிஷேகஞ் செய்ததுபோலிருக்கிறது.
அக்கினிப்பந்தலிலே, வெண்ணெய்ப்பதுமை ஆடுமா?
அசல் வீட்டுக்காரனுக்கு பரிந்துகொண்டு ஆம்படையானை அடித்தாளாம்!
அக்கினி மலையிலே, கற்பூரபாணம் பிரயோகித்ததுபோல்.
அக்குத்தொக்கில்லாதவனுக்கு துக்கமென்ன?
அங்கங்குங் குறுணி, அளந்து கொட்டியிருக்குது.
அங்காங்க வைபோகமாயிருக்கிறான், அரைக்காசும் முதலில்லை.
அங்காடி விலையை அதிர அடிக்காதே.

---

# வித்தியாபானு.

புஸ். I.] 1894-ஹு ஜூன்-மீ. [நெ. 5.

## பெண்டிர் ஒழுக்கம்.

(வித்தியாபானுவின் 62-வது பக்கத் தொடர்ச்சி.)

பெண்களின் குணாதிசயங்களும், நடவடிக்கைகளும இப்படிப்படிப்பட்டதென விளக்கும் ஆரிய நூற்கருத்துகளைத் திரட்டி முன் சஞ்சிகையில் ஒருவாறு குறிப்பிட்டோம். மேலும் பெண்களுக்குக் கல்வி கற்பித்தல் குணமேயன்றி குற்றஞ் சிறிதுமில்லை என்றும் எடுத்துக் கூறினோம். இனிப்பெண்களுக்குரிய மற்ற விஷயங்களை நாம் சிறிது சிந்திப்போம்.

விவாகவிஷயத்தில் இந்துஸ்திரீகளில் உத்தமகுலத்திலுதித்தோர்க்கு தற்சுதந்திரம் அவ்வளவாகக் கிடையாது. பெண்களுக்கு வரன்தேடிக் கல்லியாணஞ் செய்யும் சுதந்திரத்தைப் பெற்றோர்களும், சகோதரர்களுமே வகித்திருக்கின்றமையால், சில சமயங்களில் கலியாணஞ் செய்துகொண்டபயன் வீணாய்ப் போய்விடுகின்றது. முப்பதுவயதுள்ள ஓர் புருடன் பனிரெண்டு வயதுள்ள ஓர் பெண்ணையும், இருபத்து நான்குவயதுள்ள ஒருவன் எட்டுவயதுள்ள ஒரு பெண்ணையும் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென மனுஸ்மிருதி கூறுகின்றது. ஓர் நிர்ணய வயதுள்ள பெண்ணை

அந்நிர்ணய வயதுக்கு முப்பங்கதிகரித்த ஆண்மகன் விவாகஞ் செய்துகொள்ளலாமென ஸ்ரீ விஷ்ணுபுராண முரைக்கின்றது. ஸ்திரீகளுக்குக் காமந் தோன்றுங்காலம் வந்தால் சோமதேவனும், ருதுபருவம் வந்தால் கந்தருவனும், ஸ்தனம் புறப்பட்டால் அக்னிதேவனும் அவர்களை யனுபவிக்கிறார்களாகையால், கன்னிகை ரஜஸ்வலையாவதற்கு முன்னமே பிதா அவளை யோக்கியனாகிய ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுக்கவேண்டுமென சம்வர்த்தனர் சொன்னார். புருஷர்களுக்கெதிரில் ஓர் பெண் லஜ்ஜை என்பது சிறிதும் பாராட்டாது தனது அவயவங்களை எவ்வளவுகாலம் வரையில் மறைத்துக் கொள்ளாமலிருக்கிறாளோ அவ்வளவு காலம் வரையில் அவள் கந்நிகை என்று சொல்லப்படுவாளெனப் புராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. எட்டுவயதுள்ள பெண் கௌரி என்று சொல்லப்படுவாளென்றும், அவளை சற்குலத்திற்பிறந்த ஒருவனுக்கு கந்நிகாதானமாக ஈந்தால், அக்கந்நிகாதானம் செய்கிறவர் சுவர்க்கலோகம் பெறுவாரென்றும்; ஒன்பதுவயதுடைய ஓர் பெண் ரோஹிணி என்று சொல்லப்படுவாளென்றும், அவளைக் கந்நிகாதானம் செய்கிறவர் வைகுண்டத்தை யடைவாரென்றும்; பத்துவயதுடைய பெண் கந்நி எனப்படுவாளென்றும், அவளைத் தானம் செய்கிறவர் பிரம்மலோகம் புகுவாரென்றும்; பத்துவயதுக்கு மேற்பட்ட வயதுடைய பெண் ரஜஸ்வலை எனப்படுவாள் என்றும், அவளைத் தானஞ்செய்கிறவர் ரௌரவம் என்னும் நரகத்திற்செலுத்தப்படுவார் என்றும் இப்படியாகப் பெண்களுடைய விவாகவயது நிர்ணயத்தைப்பற்றி இந்து நூற்கள் பலவிதமாகக் கூறுகின்றன. பெண்களது விவாகவயது நிர்ணயத்தைப் பற்றி பூர்வீக இந்துநூலாசிரியர்கள் கொண்ட கருத்து யாதோ அது இன்னதென்று நமக்கு விளங்கவில்லை. ஆயினும் எந்நூற் கூறியவர்களும் கருத்தில்லாமல் ஓர் சங்கதியைச் சொல்லமாட்டார்கள். நூற்களிற் கூறப்பட்டபிரகாரம் முற்றிலும் நடப்பதும் சாத்தியமின்று. நூற்களை யனுசரித்து நடப்பதோடுகூட, "காலத்திற்கேற்ற கோலம்" என்று சொல்லுகிறபடி, நமது யுக்தியனுப



வங்களையொட்டி காலத்திற்குத் தகுந்தாற்போல் ஒவ்வோர் விஷயங்களிலும் சிலவாறு மாறுதல்கள் செய்துகொள்ளவேண்டிய தவசியமென்றும் தோற்றுகிறது. ஆதலால் விவாகசம்பந்தமான விஷயங்களில் நாம் பூர்வீக ஆரியதருமங்களை யனுசரிப்பதோடுகூட நமது யுக்தியனுபவங்கட்கேற்ப சீர்திருத்தங்களும் சிலவாறு செய்து நடக்கவேண்டும். சாதாரணமாய் இந்துநூற்களிற் எட்டுவிதவிவாகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. முதலாவது பிராம்மம்; வஸ்திராபரணங்களாற் பெண்ணை அலங்கரித்துக் கல்வியறிவு, ஆசாரம், அனுஷ்டானம் ஆகிய இவைகளுடைய பிரம்மசாரிக்கு அவளைக் கொடுத்தல் பிராம்மவிவாகமென்று சொல்லப்படும். இரண்டாவது தெய்வம்; இஃது வேள்யால் வந்த கந்நிகையைத் தீமுன்னர்க்கொடுப்பாது. மூன்றாவது ஆர்ஷம்; இஃது ஓர்பசுவையும், ஓர் எருத்தையும், அல்லது இரண்டு பசுக்களையும், இரண்டு எருதுகளையும் தான் செய்கிற தர்மகாரியத்தின் பொருட்டாவது அல்லது தன் பெண்ணினது சுயப்பிரயோஜனத்திற்காவது பெற்றுக்கொண்டு பின்பு அப்பெண்ணைத் தீமுன்னர்க் கொடுப்பது. நான்காவது பிராஜாபத்தியம்; இஃது தலைமகளினத்தார் வேண்டத் தலைமகனினத்தாருட்பட்டவனைத் தீமுன்னர் "நீங்களிருவரும் தருமத்தையனுஷ்டிக்கக்கட்வீர்" களெனக் சொடுப்பது. ஐந்தாவது ஆசுரம்; இஃது பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தாருக்குப் பொன் வேண்டுவனகொடுத்து விதிநியமங்களைப் பாராட்டாமற் பெண்ணைக்கொள்வது. ஆறாவது காந்தர்வம்; இஃது கொடுப்பாருங் கொள்வாருமின்றி ஆணும் பெண்ணுமாகிய இருவருந் தனியிடத்தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது. ஏழாவது ராக்ஷஸம்; இஃது பெண்ணும் பெண்ணினத்தாருமுடன்படாமல் வலிதிற் கொள்வது. எட்டாவது பைசாசம்; இஃது துயின்றாளைச் சென்று கூடுவது. இவ்விதமாகக் கூறப்பட்ட எட்டுவிவாகங்களுள் இக்காலத்தவர்கள் விசேஷமாய் காந்தருவ சம்பந்தமான விவாகத்தையே விரும்புகிறார்கள். காந்தருவமென்றால் அஃது கந்தருவமுமன்று. ஏறக்குறைய அத்தன்மையையே ஒத்

து நிற்கும். கொடுப்பாருஞ் சொள்வாருமின்றி ஆண் பெண் ஆகிய இருவருந்தனியிடத்தே சந்தித்து அவ்விருவருந்தாமே கூடுதல் காந்தருவமணமென்று மேலே கூறியிருக்கிறோமல்லவா? இக்காலத்துக் கல்வி கேள்விகளிற் சிறந்த ஆண்மக்கள் பெண்மக்கள் ஆகிய இருவர்களுக்கும் ஏறக்குறைய இத்தன்மைபொத்த விவாகத்தின்பேரில் மனம் பற்றி இருக்குங் காரணங்கொண்டு, பெண்களுக்குச் சுதந்தரம் வேண்டுமென வாதிக்கிறார்கள். இந்து நூற்களில் பிராமணர்களுக்கு இவ்விதமான விவாகம் கூடுமென விதி ஏற்படவில்லை. பிதாவானவர் தமது பெண்ணுக்குத் தாமே விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்றும், அப்படி இல்லாமற்போனால் பிதாவினுடைய அனுமதியின்பேரில் பெண்ணுக்கு மூத்த சகோதரனாவது அல்லது ஞாதிகளிலெவராவது அவளுக்கு விவாகம் செய்து கொடுக்கலாமென்றும் விதி ஏற்பட்டிருக்கின்றது. விவாக சம்பந்தமான விதிகள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. இக்காலத்தில் அவைகளை எடுத்துக்கூறுவதிற் பயனில்லை. ஆழ்ந்து யோசிக்குங்கால் பெண்கள் தங்களுக்கு இஷ்டமான புருஷர்களைத் தேடிக்கொள்வதில் அனுகூலமிருக்கிறதென்றும் அறிவோம். நம்மவர்கள் தங்கள் பெணகள்பால்மணம் மறவாச் சிறுகுழந்தையாயிருக்கும்போதே அவர்களுக்கு விவாகம் செய்து விடுகிறார்கள். சிலர் எட்டுவயது பத்துவயது முடிந்தபின்பும் செய்கிறார்கள். பத்துவயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு விவாகம் நடப்பது மிகவும் அரிது. விவாகசம்பந்தத்தினாலாயபயனை மனதினால் ஆராய்ந்துணரச்சக்தியற்ற சிறு பெண்களுக்கு நாம் விவாகம் செய்வதினால் பின்னால் எத்தனையோ துன்பத்திற் கிடமாயிருக்கிறதென்பதை யாம் அனுபவத்தல் அறியக்கூடும். பத்துவயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்கள் விவாகத்தின் பெருமையை அறிவதற்குச்சக்தியுடையவர்களோ வென்பதை சந்தேகமாயிருக்கின்றது. பெண்களுடைய மனத்தைப் பரிசோதியாமல் பத்துவயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்களுக்கு அவர்களுடைய மாதா பிதாக்கள் விவாகம் செய்து விடுவார்களாகில், அப்பெண்கள் பின்பு கணவர் வீட்டுக்குச் செல்



லுங்காலத்தையடைந்து அக்கணவர்களோடு கூடி வாழும்பொழுது சில சந்தர்ப்பங்களில் அவ்விருவரும் எதிர்பார்க்காத மனோவருத்தத்தை யடைவார்கள். சில சமயங்களில் பெண்களது மனம் புருஷர்கட்கொவ்வாது. புருஷர்களதுமனம் பெண்களுக்கொவ்வாது. நம்மிந்துதேசத்தில் ஸ்திரி புருஷர்களிருவர்களுக்கும் மனம்வேறுபடுங்காரணத்தினால் எத்தனையோ பெண்கள் அந்நிய புருஷர்களுடன்சேர்ந்து வியபிசார தோஷத்துக் காளாகிவிட்டார்! எத்தனையோ பெண்களுக்கும், புருஷர்களுக்கும் சண்டை சச்சரவுகள் நேர்ந்து மண்டைகள் உடைகின்றன! எத்தனையோ ஸ்திரீகள் யமலோகஞ் சேர்ந்துவிட்டார்கள்! எத்தனையோபுருஷர்கள் நியாயாதிபதிகளாற் கண்டித்துத் தண்டிக்கப்பட்டுவருகிறார்கள்! எத்தனையோ குழந்தைகளும், குடும்பங்களும் இவ்வருத்தங்களை நோக்கி ஐயோ! வென்று ஓலமிட்டு அலறுகின்றன! இவ்விஷயத்தில் சாஸ்திரங்களை யனுசரித்தே நாம் ஏதாகிலும் சிறிது சீர்திருத்தஞ் செய்து கொள்ளாவிடில் இந்து குடும்பங்களில் என்றும் துன்பம் அதிகரித்துக் கொண்டேவரும். (தொடர்ச்சி வரும்.)

## சுயப் பயிற்சி.

“கட்டிக்கொடுத்த சோறும், கற்றுக்கொடுத்த வித்தையும் காலமுள்ளளவும் நில்லா” வென்று சொல்லும் பழமொழிப்படி, ஒருவர் மற்றொருவருக்குக் கற்றுக்கொடுக்கும் கல்வி நீடித்தகாலம் நில்லாதென்பது உண்மையே. பள்ளிக்கூடங்களிற் கற்கும் கல்வியனைத்தும் சிறு குழந்தைகளை நடை பழக்குந் தன்மையை ஒக்கும். உலகில் சாஸ்திர சம்பந்தமாயும், (Science)கைத்தொழில் சம்பந்தமாயும், மற்ற விஷயமாயும் கீர்த்தி பெற்றவர் எக்காலத்திலுமுளர். இவ்வாறு அவர்கள் கீர்த்தி பெற்றதற்குக் காரணம் அவர்களது சொந்த முயற்சியேயாம். ஒருவர் தேடிச்சம்பாதித்த பொருளைக் காட்டிலும் அறிவு என்னும் சம்பாத்தியம் மிகச்சிறந்ததாம். அணிகலம் என்பதும் அதுவே. பிறரால் ஒருவன் கற்றுணர்ந்த வித்தை ஓட்டைக்குடத்தில் தண்ணீர் ஊற்றினாற்போல் சில சமயங்களில் அவ்வித்தை அவனுக்குப் பயன்படாமற் போனாலும் போம். சுயமாகக்கற்ற கல்வியோ அப்படிக்கன்று. அது கற்கிறவனுடைய மனதில் ஆழ்ந்து

பதியும். உற்சாகத்தையும், ஊக்கத்தையும் விளைவிக்கும். மேன் மேலும் அறிவை வளர்க்கும். ஆகையால் பிறரால் ஒருவன் அடையும் அறிவைக் காட்டிலும் தானாகவே அவ்வறிவைத்தேடிப் பெறுவது மிகச் சிரேஷ்டமாம்.

மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய இப்புலன்கள் அறிவு என்னும் ஆஸ்தியை சம்பாதித்தற்பொருட்டே படைக்கப்பட்டிருக்கின்றன. ஐரோப்பா, அமெரிக்கா முதலான விடங்களில் சுயமாகவே அறிவை விர்த்தி செய்து தங்கீர்த்தியை ஸ்தாபித்தவர் வெகு பெயர் இருக்கின்றனர். நம் இந்துதேசத்திலிருக்கும் ஜனங்களுக்கு இவ்விதமான எண்ணம் விசேஷமாய்க் கிடையாது. பிறர் உதவியை நம்பியே ஓர் காரியத்தைச் செய்வது அவர்களது வழக்கம். இவ்விதமான காரணம் பற்றியே இந்துக்கள் வரவரத் தங்கள் சுவாதீனத்தையும், மேன்மையையும் இழந்து பராதீனத்துக்குட்பட்டு வருகிறார்கள். ஐரோப்பியர்களது சரிதையை நாம் ஆராய்வோமானால் எத்தனையோ மடங்கு தாழ்ந்த அந்தஸ்திலிருப்பவர்கள் தங்கள் சுயமுயற்சியில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றார்களென்றறிவோம். கலைக்கியான விஷயமாயும், கைத்தொழில் விஷயமாயும் உலகிற்கு நன்மையைச் செய்திருப்பவர்கள் எத்தனையோ பெயர்களிருக்கிறார்கள். அவர்களது ஆதி நிலைமையோ பிச்சை எடுப்பவர்களிலுங்கடை. சுயப்பயிற்சி, விடாமுயற்சி என்கிற இரண்டு பெருங்காரணங்களாற்றான் அவர்கள் மேன்மையைப் பெற்றார்கள். ஆகையால் கல்வி விஷயமாயும், மற்றவிஷயமாயும் ஒவ்வொருவரும் சுயமாகவே அறிவைத்தேடிப் பெறுவது மிகவும் நன்று. சரீரம் வருந்தி வேலைசெய்தால் சரீர சௌக்கியத்தைக்கொடுக்கும். அதுபோல் சுயமாகவே பயிலும் கல்வி மனோவளர்ச்சிக்கு ஏற்றதாகவிருக்கும். முக்கியமாய் எவ்விதமான அறிவிற்கும் சரீரப்பிரயாசமே காரணம். சரீரம் வணங்காவிடில் மனமும் வணங்கமாட்டாது. ஆகையால் மனம் தேர்ச்சியடைய வேண்டுமானால், ஒவ்வொருவரும் முதல் முதல் தன் தேகம் வருந்தி முயலவேண்டும். இவ்வாறு கருத்தை கொண்டே பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் சரீரபயிற்சி செய்வதற்கு வேண்டிய கருவிகள் (Gymnastic Instruments) ஏற்படுத்தி வருகிறார்கள். முக்கியமாய் மனிதர்களை அபிவிர்த்தியடையாமலிருக்கச் செய்வதுசோம்புத்தனம். இச்சோம்புத்தனம் எப்பொழுது நீங்குகின்றதோ அப்பொழுதுதான் அறிவிற்கேற்ற குணங்கள் ஒருவர்க்குப் பிடிபடும். ஆகையால் சோம்புத்தனம் என்கிறப் பேயைக்கிட்ட அணுகாமல் ஓட்டுவதற்



காக வேண்டியதே சரீரப்பிரயாசம் என்கிற ஆத்மரக்ஷை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மரத்திற்கு வேர் ஆதாரமாவதுபோலும், கத்திக்குப் பிடி ஆவசியமாயிருப்பதுபோலும், வீட்டிற்கு அஸ்திவாரம் உறுதியாயிருப்பதுபோலும், கல்விப்பயிற்சிக்கு முக்கிய ஆதாரமாகவிருப்பது சரீரம். ஆகையால் இச்சரீரத்தைத் தக்கபடி பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்று இதனால் தெள்ளென விளங்குகின்றது. சரீரத்தைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென்கிற விஷயத்தை நம்மவர்கள் விசேஷமாகக் கவனிக்கிறதே இல்லை. சரீரசௌக்கியத்தைச் சிறிதேனும் பாராட்டாமல் கல்வி பயிலும் மாணாக்கர்கள் இக்காலத்தில் எத்தனையோ பெயர்களிருக்கிறார்கள். தேகமுயற்சி என்பது அவர்கள் கவனிக்கிறதே இல்லை. இவ்விதமாக தேகமுயற்சியைக் கவனியாது புஸ்தகமொன்றையே பெரிதென்றெண்ணி மனோ ஆராய்ச்சி செய்தவர்களி லெத்தனையோபெயர்கள் பெருந்திமைக்கிரையாயிருக்கின்றார்கள். ஆதலால் கல்விப்பயிற்சி செய்வதோடுகூட சரீரப்பயிற்சியும் செய்துவரவேண்டியது மெத்த ஆவசியமென்று இதனால் ஏற்படுகின்றது.

சரீரமெடுத்ததற்குப் பயன் அதன் ஒவ்வொரு அவயவங்களும் வேலை செய்ய வேண்டுமென்னுங் கருத்தை உத்தேசித்தேயன்றி வேறன்று. உலகில் நடைபெற்றுவரும் ஒவ்வொரு காரியங்களும் சரீரப்பிரயாசத்தால் முடிவு பெற்றதேயன்றி வேறில்லை. ஆகையால் உயிருள்ளமட்டும் ஒவ்வொருவரும் தேகம் வருந்தி யுழைத்து உலகிற்கு நன்மை பயப்பன எவையோ அவைகளைக் கூடியமட்டும் செய்யவேண்டுமென்பதே கடவுளுடைய ஆக்ஞை. சம்பத்தில் குபேரனுக்கு ஒப்பானவர்கள்கூடத் தங்கள் வாணாளை வீணாகக்கழிக்கக்கூடாது. ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு வேலைசெய்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு சுருசுருப்புள்ளவனாயும், சௌக்கியவானாயுமிருப்பான். ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு சோம்பேறித்தனமாய்க் காலங்கழிக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு சுருசுருப்பற்றவனாயும், சரீர சௌக்கியமில்லாதவனாயுங் காண்பான். சரீர சௌக்கியத்திற் காதாரம் தேகமுயற்சி; மனோவலிமைக்காதாரம் சரீரசௌக்கியம். தேகம் மெலிந்திருப்பவர்களனைவரும் வியாதியஸ்தர்களென்றே சொல்லத்தகும். தேகமுயற்சி குறையக்குறைய அத்தேசம் இளைத்து நாளாவட்டத்தில் வியாதி யதிகரிப்பதை நாம் அனுபசாக்ஷியாக அறிகிறோமாகையால், கல்வியறிவையடைய விருப்பங்கொள்ளும் வித்தியார்த்திகள் சரீரசம்பந்தமான முயற்சிவிஷயங்களில் தங்கள் கவனத்தைச்செலுத்தவேண்டியது மெத்த

ஆவசியம். நமது இந்துதேசத்திலுள்ள வித்தியார்த்திகளிற் பெரும்பான்மையோர் இரவும் பகலும் தலைக்குவிந்துகொண்டு புஸ்தகத்தின் பேரில் கண்ணோக்கமாயிருக்கிறார்களேயல்லாமல் வேறொன்றையுங் கவனிக்கிறதில்லை. புஸ்தங்களை அவர்கள் கைகளிலெடுத்துவிட்டால் பசிதாகமென்பது அவர்களுக்குத்தோற்றுகிறதே இல்லை. சமீபத்தில் வந்துநிற்பவர் இன்னாரென்றும் தெரிகிறதில்லை. சிலசமயங்களில் அவர்கள் தலைகளின்மீது மழைபொழிந்தாலுங் கவனம்வேறெங்குஞ்செல்லுகிறதில்லை. இவ்விதமாக சரீரத்தின்பேரில் உணர்ச்சி சிறிது மில்லாது கல்விகற்கும் மாணாக்கர்களது நிலைமைமெத்தப்பரிதாப நிலைமை. அநேகர் படித்து ஒரு காரியத்திற்கும் உதவாமற் பித்துப்பிடித்தவர்களைப்போலாய் விடுகின்றார்கள்! எத்தனையோபெயர்கள் அஜீர்ணம், கைகால்கடுப்பு, பித்தக்ஷயமுதலிய வியாதிகளாற் பிடிப்பட்டு வருத்தப்படுகிறார்கள்! எத்தனையோபெயர்கள் இருபது, இருபத்தைந்து, முப்பது இப்படியாக நல்ல யௌவனபருவத்திலேயே காலனுக்கிரையாய்விடுகின்றார்கள். அந்தோ! கொடிது! கொடிது!!

(தொடர்ச்சி வரும்.)

## பழமொழிகள்.

அங்குமிருப்பா ளிங்குமிருப்பாள் ஆக்கினசோற்றிற்குப் பங்குமிருப்பாள்.
அசலாருடைமைக்குப் பேயாய்ப்பறக்கிறது.
அசலும் பிசலும் அறியாமல் அடுத்தாரைக் கெடுக்கப் பார்க்கிறான்.
அசல் வீட்டுக்குப்போகிற பாம்பைக் கையாலே பிடிக்கான்.
அசைப்புக்காயிரம் பொன் வாங்குகிறது.
அச்சமற்றவன் அம்பலமேறுவான்.
அச்சம் ஆண்மையைக் குலைக்கும்.
அச்சாணியில்லாத்தேர் முச்சாணுமோடாது.
அச்சையிலும் பிச்சைக்காரனுண்டு.
அஞ்சலி பந்தனம் ஆருக்கும் நன்மை.
அஞ்சனக்காரன் முதுகிலே வஞ்சனைக்காரன் ஏறினான்.
அஞ்சி ஆண்மை செய்யவேணும்.
அஞ்சிலறியாதவன் ஐம்பதிலறிவானா?
அஞ்சினாரைக் கெஞ்சுவிக்கும்) அடித்தாரை வாழ்விக்கும்.
அஞ்சிலே பிஞ்சிலே கொஞ்சாமல் அறுபதுக்கு மேலே கொஞ்சினாலும்!



## பொறாமையைப்பற்றிய விசாரம்.

இங்கு பொறாமை யென்னுங் குணத்தைப்பற்றிச் சிறிது கூறுவாம். பொறாமையென்பது பிறருக்குண்டாகின்ற கல்வி செல்வம் அழகு ஆரோக்கியம் முதலிய நற்பேறுகளைக் காணுந்தோறும் கேட்குந்தோறும் நினைக்குந்தோறும் உள்ளங் கொதித்துப் புழுங்கி அவ்வாக்கங்கட்குக் கேடுசூழ முயலுந் தீக்குணமேயாம். பொறாமை யெனினும் ஆற்றாமையெனினும் அழுக்காறு எனினும் ஔவியம் எனினும் அசூயை எனினும் ஒக்கும். இதனையே சிலர் "ஓமல்" என்பர். இக்குணம் ஜீவான்மாக்கள் பலரிடத்தும் இயல்பாய் அமைந்துள்ளது. உயர்திணையேயன்றி யஃறிணையுயிர்களிடத்தும் இக்குணத்தைக் காணலாம். ஒரு நாய் இரைதின்னும்போது மற்றொருநாய் அருகில் வந்தால் "உற்" என்று உறுமி மேல் வீழ்ந்து கடிக்கும். பூனையுமப்படியே. காக்கை முதலிய பக்ஷிகளுமவ்வாறே. இது நிற்க. மனிதர்களுக்கு இக்குணம் இயல்பேயாயினும் மனிதர் பகுத்தறிவுடையராயிருத்தலால் அவ்வறிவாகிய கருவியைக்கொண்டு இத்தீக்குணத்தை மாற்றிக்கொள்ளுதல் கூடும். அங்ஙனம் மாற்றாது இப்பெருந்தீயை உள்ளத்தில் குடிவைத்திருப்பவர்களோ வேறு நற்பயன் எதுவும் பெறாது விரைவிலேகெட்டழிவர். அவரைக்கெடுத்தற்கு வேறுபகைவர்வேண்டாம்.

"அழுக்காறுடையார்க்கதுசாலுமொன்னார்
வழுக்கியுங்கேடீன்பது."

என்றார் நாயனார். ஏனைய கொடுங்குணங்களை யெல்லாம் பரிவாரங்களாசக் கொண்டு அரசு வீற்றிருப்பது இப்பொறாமையென்னும் பெருந்தீ. இந்தத்தீயை அவிப்பதற்கு நிரம்பிய தண்ணீர் வேண்டும். தண்ணீராவது விவேகம் அல்லது ஞானம் அல்லது நல்லறிவு என்பதேயாம். அந்தத்தண்ணீராலன்றி வேறொன்றாலும் அத்தீ அவியாது. பொறாமையாகிய அரசன் செத்தால் ஏனைப்பரிவாரங்களாகிய துற்குணங்களெல்லாம் சொல்லாமலோடும். பிறரைக்கோபித்தற்குக் காரணம் பொறாமையே. துன்புறுத்தற்குக்காரணம் பொறாமையே. கொல்லுதற்குக் காரணம் பொறாமையே. நிந்தித்தற்குக் காரணம் பொறாமையே. பொறாமையுடையானுக்குக் காலநித்திரை கொள்ளாது உணவும் சரியாய்ச் செல்லாது. மனம் சிறிதும் இளைப்பாறிச் சுகிக்காது. அவன் பல்லோராலும் சீ! சீ! யென்று ஒறுக்கப்படுவான். இம்மையிலே அடையக்கூடிய பேறுகளொன்றையும் அடையவொட்டாது கெடுத்துப் பழிபாவங்களை நிறுத்தி மறுமையில் பெ

ரிய நரகத்திற்கு இரையாக்கிவிடும் கொடுமையுடையது பொறாமை.

"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்"

என்றார் பொய்யாமொழி என்னுந் திருவள்ளுவ நாயனார். பொறாமையுடையவன்சுகமடைதல் ஒருக்காலுமில்லை.அங்ஙனம்சுகமடைந்தாருளராயின் அதனுண்மைக் காரணத்தை நன்கு விசாரித்துத் தெளிய வேண்டும். அதனாலேயே "அழுக்கற்ற கன்றாருமில்லை யஃதின்றிப்பெருக்கத்திற்றீர்ந்தாருமில்" என்றருளியநாயனார்.இம்மட்டில்விடாது"அழுக்காறுடையான்கணாக்கமும் செவ்வியான் கேடுநினைக்கப்படும்" என்று கூறியருளினாரென்க. மற்று அஃறிணையுயிர்களிடத்து இக்குணமிருந்தால் குற்றமன்றோவெனின், பெருமை சிறுமைகளைப் பகுத்துணர்தலும் துன்பம் நீக்கி இன்பங்கொள்ள முயல்தலும் பழிபாவங்கட்கஞ்சுதலுமாகிய இன்னோரன்ன தொழில்கள் பகுத்தறிவுள்ள உயர்திணைக்கேயன்றி யஃதில்லாத வஃறிணைகளுக்கில்லாமையால் அத்தீக்குணத்தை மாற்றாது வைத்திருப்பவன் அவ்வஃறிணையோடொப்ப மதிக்கப்பட்டு அப்பயனையே பெறுவானன்றி உயர் பயனைப்பெறுவானல்லவென்றுணர்க. அதனாலன்றோ "விதிநிஷேதம் மனிதருக்கே" யென்று தரும நூல் கூறுகின்றது. இனி இப்பொறாமை யென்னுங் கொடுங்குணத்தை மாற்றுதற்குபாயம யாதெனிற் கூறுதும்.

பொறாமைக்குணம் உள்ளத்திற்றோன்றும் போதெல்லாம் அடியில் வருகிறபடி சிந்தித்தல்வேண்டும். அதாவது; "நாம் பிறராக்கங்கண்டு எதற்காக வயிறெரியவேண்டும்? ஒவ்வொரு மனிதருக்கும் சம்பவிக்கின்ற ஆக்கக்கேடுகள் அவரவர் இச்சையின்படி வருவதுமன்று. வராமற் போவதுமன்று. லாபம் விரும்ப நஷ்டம் நேருவதும் இன்பம் விரும்பத் துன்பம் நேருவதும் அனுபவத்திற் காணுகின்றோம். நம்முடைய முயற்சியின்படியே எல்லாம் முடிவதுமில்லை. முடியாமற் போவதுமில்லை. கண்ணும் விழிக்கச் சூரியனும் உதிக்க உலகம் காட்சியாவதுபோல் நமது முயற்சியோடொட்டி நடத்துகிற அந்தரங்கமான நியதியொன்றுளது. அதுவே விதியென்றும் சொல்லப்படுவது. அதனைக் கடவுளாணை யென்பார் மேலோர். நுணுகி யாராய்வாருக்கே இவ்வுண்மை தோன்றும். தூலப்பார்வைக்குத் தோன்றாது இஃதுணராது விதிபெரிதோ மதிபெரிதோவென்று வழக்காடுவாருஞ் சிலராவர். அந்த நியதியெனப்படும் கடவுளாணைதானும் காரணமின்றி ஏற்றத்தாழ்வாக நடத்தாது ஆகவே அதற்கோர் காரணம் வேண்டும்.



அதுதான் "ஊழ்" என்றும் "அதிர்ஷ்டம்" என்றும் "வினை" யென்றும் கூறப்படுவது. அங்ஙனங்கொள்ளாக்கால் "ஒன்றைநினைக்க அதுவொழிந்திட்டொன்றாவதற்கு" வேறு சமாதானம் புலப்படா. அதனால் ஊழும் முயற்சியுமாகிய இரண்டும் ஒன்றைவிட்டொன்று காரியப்படாவென்பது தேற்றமேயாம். இதனால் முன்செய்த வினைக்கீடாகப் பின்னர் இன்பத்துன்பமாகிய பயன்கள் நிகழுமென்பது சத்தியம். இதனால் ஜன்மாந்தரங்களுண்டென்பதும் துணியப்படும். அங்ஙனந்துணியக்கால் கடவுளென்னும் பொருள் ஒன்று இல்லையென முடியும். உண்டெனில் அக்கடவுள் பக்ஷபாதி யெனமுடியும். முடியின் அதைக்கடவுளென்பதும் இழுக்காம். உயிர் எப்போது வந்தது? வினை எப்போது வந்தது? எனின் அது வந்ததென்று வாய் திறக்கும்போதே தீராவழக்குங்கூட வருமாகையால் அதுவந்ததன்றாம். பிறவெனின், அனாதிப்பொருள்களே அவையென்க. அதன்மேலுள்ள விசாரம் அதிநுட்பமான தத்துவ விசாரமாதலின் இங்கு விவரிக்கேம். இது நிற்க; எல்லாம் முயற்சியால் நிகழ்வதே! அதற்கோர் நியதிவேண்டுதல் மிகையாகுமெனின், அது பிரத்தியக்ஷானுபவ விரோதமாதலின் அக்கூற்று அறிவுடையோர் கூற்றன்று. இங்ஙனமாக நாம் பொறாமை கொள்ளுதல் எற்றினுக்கோ? அயல் வீட்டுக்காரி ஆண்பிள்ளை பெற்றாளென்று அண்டை வீட்டுக்காரி அம்மிக்கல்லாலிடித்துக் கொண்டால் அடிவயிறு சீழ்க்கட்டுவதேயன்றி வேறு லாபம் யாது? அயல் வீட்டுக்காரி தன் பிள்ளையை இவளுக்குக் கொடுத்து விடுவாளா? அல்லது பிறந்தபிள்ளை மீண்டும் கருப்பத்திற்புகுந்து கொள்ளுமா? அல்லது தனக்காவது உடனே பிள்ளை பிறக்குமா? ஒன்றுமில்லையே!

"ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலி
னாழி முகவாது நானாழி—தோழீ
நிதியுங் கணவனும் நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்."

என்னும் ஒளவையார் கூறிய நீதிமொழியை மறந்து தவிப்பதேனோ? தான் சாகமருந்துண்பாருண்டோ? இப்பொறாமைக் குணத்தால் நாமே கெடுவதன்றி வேறு யாருக்கென்ன நஷ்டம்? எல்லாம் வல்ல இறைவன் செயலைச் சிந்தித்து உள்ளது போதுமென்று மனத்தைத் தேற்றி நன்னெறி யொழுகிவந்தால் உலகம் நம்மைப் புகழும். கடவுள் சித்தமுவப்பார். நமக்கதுவே சுகப்பேறாகும்.

"வருந்தியழைத்தாலும்வாராதவாரா
பொருந்துவனபோமினென்றாற்போகா—வருந்தி
நெஞ்சம்புண்ணாகநெடுந்தூரந்தானினைந்து
துஞ்சுவதேமாந்தர்தொழில்."

என்பதையும் இப்போது சிந்திப்போம் என்றிங்ஙனம் உண்மை நெறியைச் சிந்திப்போர்க்குப் பொறாமையாகிய தீக்குணம் சிறிதும் தங்காது சிந்திப்போமென்க. விவரித்தாற் பெருகும்.

நண்பர்களே! பொறாமையாகிய கொடுங்குணம் உலகில் இல்லாதபோது துர்வழக்குகளில்லையாம்; பொருட்சேதமில்லையாம்; சிறைச்சாலையில்லையாம்; அச்சமில்லையாம்; பழிபாவமில்லையாம்; சுகமோங்கும்; துயர் நீங்கும்; நல்லாரெல்லாம் நல்கூர்ந்திடினும் பொறாமை கொள்ளார். புல்லரென்போர் பொன்கோடி பெறினும் பொறாமையிற் புழுங்கியழிவர். ஆதலால் நாமெல்லோரும் மேலுண்மைகளைச் சிந்தித்துத் திருவருளைநாடி பொறாமைப் பேயைத்துரத்தி யடித்துச் சுகித்துவாழ்வோமாக.

## புதல்வரைப் பெறுதல்.

"பெறுமவற்றுள்யாமறிவதில்லையறிவறிந்த
மக்கட்பேறல்லபிற."

முன்னர் இல்லறவாழ்க்கையியலைப் பற்றிப்பொதுவகையாற் சிலகூறினோம். அவ்வில்லறத்திற்கு முதற்றுணை நன்மனைவியும், இரண்டாவது அங்கமாய்விளங்குவது நன்மக்கட்பேறுமாதலால் இங்கு அதுபற்றிச்சிலகூறுவோம்.

மக்களைப்பெற்ற தாய் தந்தையர் அம்மக்கள் தந்தம் சரீரசுக ஆன்மசுகங்களுக்கு வேண்டும் சாதனங்கள் இவையென்று தெரிந்து அவைகளைத் தேடியடையத்தக்க பருவகாலம்வருகிறவரையில் அம்மக்களது க்ஷேமலாபங்களைத் தம்முடையதாகக்கொண்டு அம்மக்களை ஆதரித்துவருகிறார்கள். அம்மக்கள் பருவமடைந்தபின்னர் அத்தாய்தந்தையர்க்குக் கைம்மாறாகத் தாமும் அவ்வாறேபுரிகின்றார்கள். அதாவது; தம்மை அவ்வாறுவளர்த்து ஆதரித்து வந்த தாய்தந்தையர் வயோதிகர்களாய் சரீரவலிமை குறைந்து அதனால் தங்களது சரீரசுக ஆன்மசுகங்களுக்குவேண்டும் சாதனங்களைத்தேடியடையும் சக்தியில்லாதவராகி தளர்ந்துநிற்கிற அக்காலத்திலே அத்தாய்தந்தையர்க்கு உற்றதுணையாய் உடனிருந்து அவர்களது



க்ஷேமலாபங்களைத் தம்முடையதாகக்கொண்டு அவர்களைப்பல்லாற்றானும் ஆதரித்துவருவதேயாம். இதுமானுடஜன்மம் பெற்றவர்க்குக்கடமையுமாம். அதனாலேயே பலதவஞ்செய்தும் மகப்பெறல் வேண்டுமென்றும் மகப்பேறில்லாதார்க்கு இம்மைமறுமையாகிய இருமைக்கும் சுகப்பேறில்லையென்றும் இங்ஙனம் மக்கட்பேற்றைச் சிறப்பித்துப்பலபெரியோர் நீதி நூல்களில் வரைந்து வைத்தாரென்க.

இதுநிற்க; இம்மக்கட்பேற்றின்பயன் இம்மட்டோ! மாந்தர்கட்கு அமைந்துள்ள மெய்வாய்முதலிய இந்திரியங்கள் தத்தம்விஷயங்களைப் பூரணமாய் அடைந்து அநுபவிக்கப்பெறுவதே சுகமென்பதன்றி வேறில்லை. ஆதலால் குழவிகளின் மென்மையான (மிருதுவான) இளஞ்சரீரத்தைத் தீண்டுவதினால் தாய்தந்தைகளின் உடலும் அவர்களதுமழலைமொழிகளைக்கேட்பதினால் செவியும் அவர்களது மழவுருவத்தையும் சிற்றிலிழைத்துச்சிறுபறை கொட்டியாட்டயரும் தொழிலையும் பிறவற்றையும் நோக்குவதனால் கண்களும் இன்பமடைகின்றன. இதனாலன்றோ

"குழலினிதுயாழினிதென்பர்தம்மக்கள்
மழலைச்சொற்கேளாதவர்." எனவும்,

"அமிழ்தினுமாற்றவினிதேதம்மக்கள்
சிறுகையளாவியகூழ்." எனவும்,

"மக்கண்மெய்தீண்டலுடற்கின்பமற்றவர்
சொற்கேட்டலின்பஞ்செவிக்கு. எனவும்,

பலவாறு விதந்தருளினார் நாயனாரென்க. இயற்கையாய் அமைந்து விளங்குகின்ற இவ்வின்பங்களோடு தம்மக்கள் பல்லோராலும் புகழத்தக்க கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்து விளங்குவாரெனின் அதனால் தாய்தந்தையர் அடையும் இன்பத்துக்கு ஓரெல்லையுமுளதோ? அவ்வின்பம் முன்னையமழலையின்பத்தினும் பலமடங்கு அதிகமானதென்க. அதனாலன்றே,

"ஈன்றபொழுதிற்பெரிதுவக்குந்தன்மகனைச்
சான்றோனெனக்கேட்டதாய்."

என்றார் நாயனார்; இத்தகைய புகழின்பங்களைத் தம்மக்கள் வாயிலாய்த் தாங்கள் அடைய விரும்புகிற தாய்தந்தையர் தம்மக்களை எவ்வாறு வளர்க்கவேண்டும் எனிற்கூறுவாம். தம்மக்களுக்கு உண்டியுடைமுதலியவை மட்டுங்கொடுத்து வளர்த்துவரும் தாய்தந்தைகள் இத்தகையபெரிய இன்பங்களை ஒருபோதும் அடையமாட்டார்கள். உலகத்திலே ஒருவன் பெரியபுகழைச் சம்பாதிக்க வேண்டுமாயின் அவன் தனக்கும் பிறருக்கும்

பயன்படத்தக்க பெரியநற்காரியங்களைச் செய்தே சம்பாதிக்கவேண்டும் வேறுவழியில் புகழ்ச்சி கிடைக்காது. ஆகவே அத்தகைய நற்காரியங்களை அறிந்து செய்வதற்குத்தக்க அறிவும் ஆற்றலும் வேண்டும். அவ்வறிவாற்றல் அங்ஙனம் விளங்கிநிற்பதற்கு வேறோர் துணைக்காரணம் வேண்டும். அத்தகைய துணைக்காரணம் ஒன்றில்லாதபோது சாமானியமான அறிவாற்றல் மாத்திரமே விளங்குமன்றி பெரும்புகழடையத்தக்க பெருங்காரியங்களைச் சாதித்தற்குரிய பேரறிவும் பேராற்றலும் ஒருபோழ்தும் அமையமாட்டாவாம். ஒருவனுக்கு துணைக்கருவியாகிய சாதனமொன்றின்றிப் பேரறிவும் பேராற்றலும் விளங்குவதுண்மையாயின் அவ்வாறு உலகத்திலுள்ள மாந்தர் எல்லாருக்கும் விளங்கக்கூடுமாகையால் யாவரும் சமமாய்ப் போதலின் ஒருவனுக்கு அல்லது சிலருக்கு மட்டும் அங்ஙனம் புகழின்பமுண்டாக ஏதுவில்லை. அதனால் யாவருக்கும் இயற்கையாய் விளங்குவது ஒருசமமான சிற்றறிவேயென்றும் அவ்வறிவு மற்றொருதுணைக் கருவியாகிய சாதனத்தால் விளக்கமுற்றோங்குவதே பேரறிவென்றும் கூறுவார்மேலோர். இதுநிற்க; அங்ஙனம் பேரறிவு பேராற்றல் விளங்குதற்குத் துணைக்கருவியாவது யாதோவெனில் கல்வியொன்றேயென்றறிக. கல்வியென்னும் பொதுச்சொல் பலவழியிற் பொருள்தருமாதலால் இங்கே கல்வியென்றது போலிக்கல்வியொழித்த மெய்க்கல்வியையென்க. அதன்றிறம் மற்றோரிடத்தில் விரித்துரைப்பாம். இதுநிற்க; கல்வி பேரறிவு விளககத்திற்குத் துணைக்கருவியென்பது.

"தொட்டனைத்தூறுமணற்கேணிமாந்தர்க்குக்
கற்றனைத்தூறுமறிவு" என்பதினாலறிக.

இதுநிற்க; இத்தகையவுண்மைகளை ஓர்சிறிதும் கற்றுக்கேட்டுச் சிந்தித்துணராத மானுடர்பலர் அந்தோ! தம்மககளைச் சிறந்த கல்வியென்னும் புணையைக்கொண்டு துன்பக்கடல்கடத்தி இன்பக்கரையேற்றித் தாங்களும் இன்பமடையாது வாளாவளர்த்து வசைக்காளாக விட்டுத்தாங்களும் இன்பமிழந்து தவித்தழிகின்றார்கள். இது மிக்கப்பரிதாபமென்க. தம்மக்கட்குக்கல்வி பயில்விக்காத தாய்தந்தையர் அம்மக்களுக்குச் சத்துருக்களே யாவரன்றித் தாய்தந்தையராகார். அறிவுள்ள தாய்தந்தைகள் தம்மக்கட்குச் செய்யும் நன்மையாவது கல்விபயில்விப்ப தொன்றேயாம். நிறைந்த மெய்க்கல்வியுடைய ஒருவன் அதனால் விரிந்த அறிவாற்றல் பெற்று தனது சொல்லையும் தொழிலையும் யாவருமதித்துப் புகழப்பலபெருங்காரியங்கள் முடித்து உலகத்தார்க்கு இன்புறுத்தித் தானுமின்புற்றுத்



தன்னையீன்றார்க்கும் பேரின்பம் புரிந்து முன்னின்று விளங்குவரென்க; அதனால்,

"தந்தைமகற்காற்றுநன்றியவையத்து
முந்தியிருப்பச்செயல்." என்றது தமிழ்வேதம்.

இதுநிற்க; இக்காலத்து மாந்தருள்ளே பலர் அறிவில்லாராய்த் தம்மக்கட்குச் செல்வப்பொருள் தேடிவைப்பதொன்றே தாம் அவர்க்குச்செய்யும் நன்மையென நினைத்து அவ்வாறு செய்கின்றனர். இங்ஙனம் கல்வியறிவை அலட்சியஞ்செய்து செம்பொன் தேடிவைத்தாரது மக்களுள்ளே பலர் பருவம்வந்தவுடனே செய்வினை தவிர்வினை இன்னதெனத்தெரியாது அச்செல்வப்பொருளை கட்குடி, வியபசாரம், சூதாட்டம், துர்வழக்கு, வீண்டம்பம் முதலியவைகளிலே துர்வினியோகஞ்செய்து வறியாராய்ப்பிறகு தொழில்செய்து ஜீவிக்கும் வகையும் அறியாராய் பழிபாவம்நோய் முதலிய துன்பக்கடலிலாழ்ந்து தம்மை யீன்றாரையும் பெருந்துன்பக்கடலில் வீட்டி விரைவிலே காலனுலகுக்கோட்டித் திண்டாடித் தியங்குவதை நாம் பலவிடத்துங்கண்டோம். இதுபற்றியே,

"நல்லார்கட்பட்டவறுமையினின்னாதே
கல்லார்கட்பட்டதிரு." என்றது தமிழ்வேதம்.

இதனால் நற்புத்திரரைப்பெறாத மானுடர் எத்துணை இடம் பொருள் ஏவலாக்கமுடையாராயினும் அவா காயாமரமும் வறளாக்குளமும் கல்லாவுமாவர்.. அவர்வாழ்வு தாழ்வேயாம். இவ்வுண்மைகளை நம் பத்திரிகா நண்பர்கள் தம்நேயர் பலருக்கும் படித்துக் காட்டக்கடவர்.

## நீதிநெறிகள்.

### தருமம்.

**அறுசமயத்தார்க் குணவு.** பசிதாகங்கள் எல்லாச் சாதியாருக்குமே உள்ளனவேயாம். அப்படியிருக்கப் பிராமணர்களுக்குமாத்திரம் அன்னமளிப்பது தர்மமென்றும், மற்றையோர்க்கு அஃது தர்மமல்லவென்றும் சிலர் நினைத்து அப்பிராமணர்களுக்குக் அன்னசத்திரம் முதலானதுகள் கட்டிவைக்கிறார்கள். இது மூடத்தனமென்றே நாம் சொல்லுவோம். எச்சாதி சமயத்தவர்களானபோதிலும் வழிநடந்து பசிதாயங்கொண்டு

வருவரேல், அவர்களுடைய பசிதாகங்களை யாற்றவேண்டியது தர்மவான்களது கடமை. மேலும் கொடிய வறுமையால் வருந்துகின்றவர்களுள் தொழில் செய்து ஜீவனஞ்செய்யச் சக்தியில்லாவர்களும், நல்லொழுக்கம் ஈசுவரபக்தி என்கிற இவைகளையுடையவர்களும் எல்லாச் சாதி சமயத்தவர்களிலுமே இருக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் தருமசத்திரங்களுக்கு வருவார்களேயாகில், அத்தருமசாலைகட்கு அகாரிகளாயிருப்பவர் முகமலர்ச்சியோடு அவரவர் தகுதிக்கேற்ற உபசாரவார்த்தைகள் சொல்லி அவர்களுக்கு அன்னமீதல்வேண்டும். ஈசுவரத்துரோசம, அனுஷ்டானமின்மை, கொலை, களவு, மதுபானம், மாமிசபக்ஷணம், வியபிசாரம், பொய்பேசுதல், பொய்வழக்கிற் பிரவேசித்தல், சூதாடல், ஆகிய இக்குணங்களையுடையவர் பிராமணசாதியிற் பிறந்தோரானாலும், அவர்களுக்கு எத்தருமமுஞ் செய்யக்கூடாது. சத்திரந் தோறும் போஜனஞ்செய்துகொண்டு வியபிசாரம் புரிந்து சோம்பேறிகளாய்த்திரியும் பிராமணர்கள் மலையாளப்பிரதேசத்தில் அநேகருண்டு. இவர்களுக்கு அன்னங்கொடுப்பது ஒருக்சாலும் புண்ணியமென்று சொல்லத்தகாது. இவர்களுக்குக் கொடுத்தால் ஒருபுத்தி; கொடாவிட்டால் ஓர்புத்தி. அன்பு, தயை, நன்றியறிதல், பெருந்தன்மை, நல்லொழுக்கம் என்பவை அநேகரிடத்துக்கிடையா. ஆதலால் மலையாளத்தில் தர்மசத்திரமேற்படுத்தி இருக்கிறவர்கள் பாத்திராபாத்திரமறிந்து தருமஞ்செய்தல் வேண்டும். சோம்பேறிப் பிராமணர்களுக்கும், கையிற்பணம் வைத்துக்கொண்டு பிறருக்கு யாதொரு உபகாரமுஞ் செய்யாமல் உண்டு காலங்கழிப்பவருக்கும் சத்திரங்களிற் சோறுபோடுதல் ஒருக்காலும் புண்ணியமன்று. "பாத்திரமறிந்துபிச்சையிடு" என்று சொல்லும் பழமொழிப்படி, எச்சாதி சமயத்தவர்களாயிருந்தபோதிலும் தகுந்த யோக்கியதையுடையவர்களுக்கே தருமஞ்செய்யவேண்டுமேயல்லாமல், நித்திய கருமத்தை விடுத்தோன், ஈசுவரநிந்தைசெய்வோன், குருநிந்தை செய்வோன், தேவத்திரவியங் கவர்வோன், கொலைசெய்வோன், கள் மாம்ஸம் முதலியன உண்போன், பிறர்பொருளைக் களவுசெய்வோன், பொய்யுரைப்போன், சூதாடுவோன், பிறர்மனையாளைப் புணருவோன், வேசிரை நாடித்திரிவோன், அடாவழக்கிற் பிரவேசிப்போன், மாதாபிதாக்களைப் பேணாதோன், மித்திரத்துரோகம் சகோதரத் துரோகம் ஆகிய இவற்றைச் செய்வோன், கோள்மூட்டுவோன், புறங்கூறுவோன், செய்நன்றி மறப்போன், சாஸ்திரத்தின் உண்மைப்பொருளை யுணராது வீண்வாதஞ் செய்வோன், தேவபூஜையை விற்றுப் பொருள்சேகரிப்போன், நல்லவன்போல் வேடம்பூண்டு ஜனங்களை வஞ்சிப்போன், தரித்திரன்போற் பாசாங்குசெய்து யாசகஞ்செய்வோன், தொழிற்செய்து ஜீவனம் பண்ணச் சக்தியுடையோன், தீச்சிந்தை மிகுந்து பொய்யுபசாரஞ் செய்து பொய்மரியாதை காட்டித்திரிவோன் ஆகிய இப்பேர்ப்பட்டவர்களுக்கு தருமதானஞ் செய்தல் பாவமாம். முக்கியமாய் அன்னதானத்துக்குக் கீடான தருமம் வேறெதுவுங்கிடையா. மனிதர்களுக்கு எதிலும் விசேஷமாய்த் திருப்திவரமாட்டாது. அன்னதானஞ் செய்தால் எவர்களும் திருப்தியடைவார்கள். ஆகையால் இந்த அன்னதானத்தை எவர்களும் கைசொண்டு நடப்பார்களேயாகில், அவர்களுக்குப் பெரும்புண்ணியம் வாய்க்கும். ஆதியில் இந்துதேசமானது தருமத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கியது. வரவர ஜனங்கள் தருமத்திற் சிரத்தை குறைந்து அதர்மத்தைக் கைக்கொண்டு வருகிறார்கள். பூர்வீக ஆரியநூற் கொள்கைகளின் தருமவியலை விரித்துக்கூறுவோமாயின் பாரதம்போன்ற பெருஞ் சரித்திரமாய் முடியும். அங்ஙனம் செய்வதற்கு நமக்குச் சமயம் அமையாதிருக்கின்றமையால், தருமத்தின் பெருமையைச்சுருக்கி முடித்துவிடுகிறோம். தரும விஷயங்களைப்பற்றிக்கூறும் நீதிமொழிகள் அடியில் வருமாறு:—

## நல்வழி.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொரு—ளெண்ணுங்கா
லீதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்.

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டு—மேற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராலுமு
மில்லையென மாட்டா ரிசைந்து.

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
யிரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதங்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரே
லுற்றா ருலகத் தவர்.

## நாலடி.

கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்
அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

என்னானு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற்
பின்னாவ தென்று பிடித்திரா - முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடிறீக் கூற்றந்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணும் - ஆற்ற
அறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்.

செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம் - எல்லில்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

## குறள்.

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

இன்னும் தருமத்தைப்பற்றியநீதிகள் எத்தனையோ விருக்கின்றன. ஆகையால் எச்சாதிசமயத்தோர்களாகிலும் நீதிநூற்களைச் செவ்வையாக வாராய்ந்து தருமத்தைக் கடைப்பிடியாகப்பிடித்துக்கொண்டு அதன் வழி நடப்பார்களேயானால் அவர்கள் புண்ணியமும் புகழும் பெறுவார்களென்பதிற் சந்தேகமில்லை.

# வித்தியாபானு.

புஸ். I.] 1894-ஞு ஜூலை-மீ. [நெ. 6.

## இராஜரீகத்தின் உற்பவம்.

ஒவ்வோர் தேச விருத்தாந்தங்களையும் நாம் ஆராய்வோமானால் ஆதிகாலத்தில் அத்தேசத்தின்மீது வசித்தவர்களனைவரும் ஏறக்குறையக் காட்டு மிருகங்களைப் போலவே வசித்து வந்தார்களென ஊகித்துணர்வோம். காரணமின்றியே ஒருவரையொருவர் குத்துகிறதும், ஒருவரையொருவர் வெட்டுகிறதும், ஒருவர் பண்டங்களை ஒருவர் கொள்ளைகொண்டு விடுகிறதும், அக்காலத்தவர்களது செய்கைகளாகவிருந்தன. இவன் பெரியவன் இவன் சிறியவன்; இவன் யோக்கியன் இவன் அயோக்கியன்; இவன் புத்தியுடையவன் இவன் புத்தியில்லாதவன்; இவன் சொல்லுவது மெய் இவன் சொல்லுவது பொய்; இதைச் செய்தால் நன்மையுண்டு இதைச் செய்தால் நன்மை இல்லை என்கிற வித்தியாசங்கள் அவர்கட்குத் தோன்றாதிருந்தமையால், வெகுகாலம் வரையில் காட்டிற் சஞ்சரிக்கும் துஷ்டமிருகங்களைப்போல் அவர்கள் வாசஞ்செய்து வந்தார்கள். இவ்வாறிருக்குங்காலையில் ஒரு வகுப்பினர்களுக்குள்ளாகவே சிறுகச் சிறுகக் கக்ஷிகள் ஏற்பட்டு, "பலத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு" என்கிற பழமொழிப்படி, அவர்கள் தங்கள் கக்ஷி பலத்தினால் வீராவேசங்கொண்டு ஓரினத்தாரை மற்றோரினத்தார் வெற்றிபெறுதலும், ஒருவரையொருவர் அடிமை கொள்ளுதலும் ஆகிய செய்கைகளைச் செய்து வந்தார்களென்பதாகத்

தெரியவருகின்றது. இப்படியாகக் கக்ஷிகள் பலப்பட்டு அடிக்கடிக் கலகம் விளைந்துகொண்டிருந்தபொழுது இருகக்ஷிக்காரர்களுள்ளும் எப்போதும், எக்காலத்தில் என்னதீமை வந்துவிடுமோவென்கிற அச்சம் குடிகொண்டே இருந்தது. இக்காரணம் பற்றி இருகக்ஷிக்காரர்களும் தங்கள் தங்கள் கக்ஷிகளைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டுமென்கிற ஆவசியமும், ஒரு கக்ஷிக்காரர்களுக்குள்ளாகவே உட்கலகம் புரிந்து உயிர்வதை செய்துகொள்ளுவது பெருங்கேட்டைத் தருமென்கிற உணர்வும் அவர்கள் மனங்களில் உதயமாயின. இங்ஙனம் அவர்களுக்கு அறிவுண்டானதன்பேரில், ஒவ்வொருவரும் தாங்கள் செய்யவேண்டிய காரியங்கள் இவை இவை என்று தங்களுக்குள்ளாகவே கட்டுப்பாடு செய்துகொண்டார்கள். நாளாவட்டத்தில் ஓரினத்தார்களுக்குள்ளாகவே கூர்மையான புத்தியும், ஓர் விஷயத்தை எடுத்துப்பேசி உறுதிப்படுத்துந் திறமையும் உண்டாயின. நன்மை செய்தவர்களைப் புகழவும், தீமை செய்தவர்களை இகழவும் நேர்ந்தது. புத்தி நுட்பம் மிகுந்தவர்களைத் தங்களுக்குத் தலைவர்களாகக் கொண்டு அவர்களது சொற்களுக்கமைந்து நடக்கவேண்டுமென்கிற மனவுறுதியுஞ் செய்துகொண்டார்கள். மேற்கூறிய காரணங்கள்பற்றியே ஒவ்வோரினத்தாரையும் அடக்கியாள ஒருவன் வேண்டுமென்கிற அறிவு நாளாவட்டத்தில் ஜனங்களுடைய மனங்களிற்றோன்றினவென்றும் இராஜரீகம் என்பதாகிய ஒன்று உலகில் ஏற்பட்டதற்கு ஆதிகாரணங்கள் மேற்கூறியவைகள் தாமென்றும் இக்காலத்துச் சரிதாசிரியர்களிற் சிலர் கொண்ட அபிப்பிராயம்.

இந்துதேச விருத்தாந்தங்களை யாம் ஆராய்வோமாயின், ஆதியில் இராஜரீகம் எப்படி ஏற்பட்டதென்பதை அறிவதற்கேற்ற முகாந்திரங்கள் செவ்வையாக விளங்கவில்லை. உலகவிருத்தாந்தங்களைக் கூடியவரையில் ஆராய்ந்துணர்ந்து இக்காலத்தில் சரிதங்கள் ஏற்படுத்தி இருப்பவர்கள் பூர்வகாலத்து மனிதர்களை ஆரியர்கள் என்றும், அனாரியர்கள் என்றும் இருவகுப்பினர்களாகப் பிரித்திருக்கிறார்கள். இந்துதேசத்தின் பூர்வகுடிகள் அனாரியர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆரியர்கள் அவ்வகுப்பைச் சேராதவர்களென்றும் சொல்லுகிறார்கள். இந்தியாவின் பூர்வகுடிகளாகிய அனாரியர்கள் எழுதவாசிக்க வறியாத நிலைமையிலிருந்தவர்களாகையால், அவர்களது பூர்வீக விருத்தாந்தங்களை அறிவதற்கேற்ற ஆதாரங்கள் அதிகமாக இல்லை. அவர்கள் காட்டுமிருகங்களைப்போலவே வனாந்திரங்களிற் சஞ்சரித்துக்கொண்டிருந்தவர்களாகையால், துரைத்தனமுறைமை என்பது இப்படிப்பட்டதென்றே அவர்களுக்குத் தெரியாது. இவர்கள் வம்சத்தவர்களில் அநேகர் இன்னும் மலை காடுகளடர்ந்த விடங்களிலேயே வாசஞ்செய்து வருகிறார்கள். இவ்வகுப்பினர்கள் சென்ற மூவாயிரம் வருடங்களுக்குமுன் என்ன நிலைமையிலிருந்தார்களோ அதே நிலைமையில் இன்னுமிருக்கிறார்கள். ஆனால் அங்கிலேய இராஜாங்கம் எங்கும் வியாபித்தபின்னர் இந்துதேசத்தில் தலைமுறை தலைமுறையாக வாழும் பூர்வகுடிகளுள் (Aboriginies) சிறிது மாறுதல்களுமுண்டு.



இராஜரீகத்தன்மை இப்படிப்பட்டதென்று இந்தியாவின் பூர்வகுடிகளிலொருவர்க்காகிலுந் தெரியாதெனக் கூறுதல் முற்றிலும் பிசகு. இந்தியாவின் பூர்வகுடிகளிற் சிலவகுப்பினர்கள் நாகரீகத்தன்மை பூண்டிருந்தார்களென்பதும், இராஜரீகம் என்னும் விஷயத்தை அவர்கள் ஒருவாறு உணர்ந்திருந்தார்களென்பதும் வாஸ்தவமே. வங்காளத்திற் கங்கைநதி பாயுங் கரையோரங்கட்கடுத்த மலைத்தொடர்களில் வாசஞ்செய்யும் சேந்தால் என்கிற ஜாதியாரும், இதற்குத் தென்முகமாகவே 130-மைலுக்கப்பாலிருந்து 350-மைல் தூரம்வரையிற் காடுகளடர்ந்து எங்கும்மேடுகளாகக் காணப்படும் இடங்களிற் சஞ்சரிக்கும் காண்ட்ஸ் அல்லது காண்டவர் என்கிற வகுப்பினரும் இந்துதேசத்தின் பூர்வ குடிகளின் வம்சத்தைச் சேர்ந்தவர் என்பதாகச் சரிதங்கள் கூறுகின்றன. பின்சொல்லப்பட்ட காண்ட்ஸ் அல்லது காண்டவர் என்கிற வகுப்பினர்கள் காட்டுத்தன்மையொத்த கொடிய மிருகங்களைப் போல் வாழ்ந்து வந்தமையால், இந்து நூலாசிரியர் அக்கொடிவர்.

களை இராக்ஷதர் என்கிற வகுப்பினர்களிற்சேர்த்து அவர்கள் வசித்தவிடத்திற்குக் காண்டவனம் என்று பெயரிட்டிருக்கின்றனர். ஆதியில் இம்மனிதர்கள் குரூரத்தன்மை பொருந்தி வாழ்ந்தபோதிலும், அவர்களுள் இராஜரீகத்தன்மை என்பது ஒருவாறு சிறந்து விளங்கிற்றெனவே புராதன இந்து நூலாசிரியர்களும், இக்காலத்துச் சரிதாசிரியர்களுங் கொண்டகருத்து. மேலும் இந்தியாவின் தென்பாகத்திற் குடியேறியிருந்த திராவிடர்கள் என்கிற வகுப்பினர்களுக்குள்ளும், தென்மேற்கு பாகத்திலிருக்கும் மலையாளம் என்னுமிடத்தில் வசிப்பவரான நாயன்மார் என்கிற ஜாதியார்களுக்குள்ளும் இராஜமுறைமை ஏற்பட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது. மேற்கூறிய அனாரியர் வகுப்பினர்களுள் இராஜமுறைமை ஏற்பட்ட வரலாற்றை நிஷ்களங்கமாயுணர்ந்து ஸ்திரப்படுத்துவது எளிதன்று. ஆயினும் இவ்வகுப்பினர்களுள் இராஜமுறைமையினுற்பவத்துக்கு மூலகாரணம் இவ்விதமாகத் தானிருக்கவேண்டுமென நாம் யுக்தியனுபவங்களைக்கொண்டு ஆராய்ந்து ஒருவிதமாக ஊகித்தறியக்கூடும். ஆதியில் அனாரியர் வகுப்பைச்சார்ந்தவர்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று அங்கங்கே குடியேறி சிறு கிராமங்களை ஸ்தாபித்தார்கள். அப்படி ஸ்தாபித்தவர்களில் முதன்மையானவன் எவனோ அவன் மற்றவர்களுக்கு அதிகாரியாய் ஏற்பட்டிருக்கக்கூடும். சில வகுப்பினர்களுள், அவரவர் குடும்பத்துக்கு வயதில்மூத்த பெரியதனக்காரர்களெவர்களோ அவர்களே அதிகாரிகளாய் ஏற்பட்டிருந்தார்கள். இவ்வேற்பாடு சில ஜாதியார்களுக்குள் நாளதுவரையில் வழங்கி வருவதையும் நாம் காணலாம். இந்தியாவின் பூர்வகுடிகளாகிய சில வகுப்பினர்களுள் துரைத்தன முறைமை ஏற்பட்டதற்குக் காரணங்கள் மேற்சொல்லியவைகளே.

நிற்க, ஆரியர் என்கிற வகுப்பினர்களுள் அரசுமுறைமை ஏற்பட்டவரலாற்றைப் பற்றிய அபிப்பிராயம் ஒன்றல்ல. பிராமணர் என்கிற ஜாதியாரும், ராஜபுத்திரர் என்கிற வமிசத்தாரும் ஆரியர் வகுப்பைச் சேர்ந்தவர்களென்றும், பிறகு அவர்கள் இந்துதேசத்



தில் வந்து குடியேறினார்களென்றும் இக்காலத்திற் சரிதமேற்படுத்தியவர்களது கொள்கை. மேலும் இங்கிலீஷ்க்காரர்கள்கூட இவ்வாரிய வகுப்பைச் சேர்ந்தவர்களென்று அநேகரது கருத்து. ஆரியர்கள் இந்துதேசத்திற்கு வந்தபிறகுதான் வேத சாஸ்திர புராணங்கள் யாவும் ஏற்படக் காரணம் நேர்ந்ததென்றும், நான்கு வேதங்களுக்கும் கர்த்தா மனிதனைத் தவிர வேறொருவருமில்லையென்றும் இக்காலத்தவர்களிலனைவர் ஸ்தாபித்து வருகிறார்கள். ஆரியர்கள் இந்தியாவில் ஒவ்வோர் காலத்தில் ஒவ்வோர் விதமான தொழிலைச் செய்துகொண்டு அங்குமிங்கும் கூட்டங் கூட்டமாகத் தங்கள் காணியாக்ஷிகளை ஸ்தாபித்து வாழ்ந்துவந்த காலையில் போர்த்தொழிலில் வல்லவசாலிகளான ஓர் வகுப்பார் தனியாகப் பிரிந்தாரெனவும், அவர்தான் க்ஷத்திரியர் எனவும் சிலர் சித்தாந்தப்படுத்துகிறார்கள். இராஜமுறைமையி னுற்பவத்தைப்பற்றி நம் மதச்சார்பினர் மேற்சொல்லியவற்றிற்கு முற்றும் மாறபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். அவ்வபிப்பிராயம் இது:—"ஆதியில் பிரம்மதேவர் இவ்வுலகத்தையும், மற்ற அண்டங்களையும் பங்காசப் படைத்து ஆத்மகோடிகளை யுண்டாக்கி தேவர்களையுமளித்தனர். அத்தேவர்கள் மூவுலகத்திலுஞ் சஞ்சரித்துவரும்பொழுது பாபம் இப்பேர்ப்பட்டதென்றும், புண்ணியம் இத்தன்மையதென்றும் அறியச் சக்தியற்றவர்களாய் விசாரத்துள் மூழ்கி பிரம்மதேவரிடத்தில்வந்து நமஸ்காரம்பண்ணி, "சுவாமி! பாபபுண்ணியம் இப்பேர்ப்பட்டதென்று எங்களுக்குத் தெரியவில்லை; அதை அடியார்களுக்கு விளங்கச்செயய வேண்டு"மென்று வேண்ட, அப்போது பிர்ம்மதேவர் லக்ஷம் அத்தியாயமாய் ஓர் தருமசாஸ்திரஞ் செய்து அதற்கு "பிரம்மதருமம்" எனப்பெயரிட்டு அதை அத்தேவர்களிடத்திற் கொடுத்தார். "பிரம்மதருமம்" என்கிற தருமசாஸ்திரத்தைத் தேவர்கள் பிரம்மதேவனிடமிருந்து வாங்கிக் கொண்டபிறகு அதைப் பரிசோதிக்கத் தொடங்கினார்கள். இப்படியாக அவர்கள் பரிசோதித்து வரும்பொழுது அந்தத் தருமசாஸ்திரத்தின் வெளிப்படையான பொருளும், அப்பொருளின்

உள்ளுறையான கருத்தும் அவர்கள் அறியசக்தியின்றி மயங்கினார்கள். அச்சமயத்தில் பிரம்மதேவனுடைய நெற்றியிலிருந்து பதினொரு ருத்திரர் பிறந்தார்கள். அப்பதினொரு பெயரும் இத்தருமசாஸ்திரத்தின் கருத்தை யுணர்ந்து விரிவாயிருந்தவற்றைச் சுருக்கி உலகிற்குபயோகமாதற் பொருட்டு பதினாயிரம் அத்தியாயமாகச்செய்து அதற்கு "உத்திரதருமம்" எனப்பெயர் கொடுத்துப் பிரபலப்படுத்தினார்கள். தேவர்கள் அதையும் அறியக்கூடாதவர்களாய் மயங்கித் தியங்கும்போது, அத்தேவர்கிறைவனாகிய இந்திரதேவனறிந்து பதினாயிரம் அத்தியாயங்களடங்கிய "உத்திரதருமம்" என்னும் சாஸ்திரத்தை மறுபடியுஞ் சுருக்கி யாவரும் அதன் கருத்தை வெளிப்படையாய் அறியுமாறு ஐயாயிரம் அத்தியாயமாக வேற்படுத்தி பின் அதை அவர்கள் கையிற் கொடுத்தருளினார். அநிலையேயுந் தேவர்கள் தருமவியலை எளிதிலறிந்து கொள்ளச் சக்தியற்றவர்களாய் மயங்கும்போது, "பிரகஸ்பதி" என்னும் நாமந்தரித்த தேவகுருவானவர் அதை மூவாயிரம் அத்தியாயமாகச்செய்தருளினார். அதைப் பார்த்துந் தேவர்கள் சந்தேக நிவாரணமாகாதவர்களாய்த் தேறுதற்கு யாதொருவகையுங் காணுமற் கலங்கித் துயரடைந்து வருந்தும்போது "சுக்கிராசாரியர்" என்பவர் அதனைப் பின்னுஞ் சுருக்கி ஆயிரம் அத்தியாயமாக வேற்படுத்தி வைத்தார். பின்னும் தேவர்களுக்கு இதிற் சந்தேகம் நீங்கவில்லை. இவ்விதமாக அவர்கள் எவ்விதத்திலும் மனவிருளடைந்து விசனமுற்று யாவரும் ஒருங்குகூடி யாலோசித்து தருமத்துக்கு ஆதிகர்த்தராகியும், சர்வஜீவ தயாபரமூர்த்தியாகியும், சர்வ ஆன்மகோடிகளிடத்திருப்பவராயும் விளங்கும் திருமாலிடத்திற்குச் சென்று தங்கள் குறைகளைச் சொல்லி முறையிட்டார்கள். தேறுதலின்றித் திரிவோர் துயரை யாற்றவல்லமையுடையவரும், குளிரோ இது தளிரோவென்று ஐயுறும்படிக்குள்ள கருணையைத் தம்மிடத்து வகித்தவருமான அத்திருமால் தேவர்களின் குறையை யுணர்ந்து தம் நினைப்பினாலே ஓர் மகா புருடனையுண்டாக்கி அவனுக்கு "விரசு" எனப்பெயரிட்டு, அப்பா! நீ இவ்வுலகிற் கரசா



162520

யிருந்து தருமபரிபாலனம் பண்ணக்கடவை என்றுரைத்துச் சில நீதிகளையுங் கற்பித்தருளினார்." இராஜமுறைமையினுற்பவத்திற்கு இதுவும் ஓர் காரணமென்று இந்நூற் கூறுகின்றது. இதனை இக்காலத்திற் கட்டுக்கதையெனக் கூறுவார் அநேகருளர். ஆகையால் இதை உறுதிப்படுத்தும் வழி யாது? இராஜமுறைமையினுற்பவத்தைப் பற்றிய காரணங்கள் சில நூற்களில் வேறு விதமாகவுங் கூறப்பட்டிருக்கின்றன. பிரம்மதேவனுடைய முகத்திலிருந்து பிராமணர் பிறந்தாரென்றும், புஜத்திலிருந்து க்ஷத்திரியர் பிறந்தாரென்றும், நாபியிலிருந்து வைசியர் உதித்தாரென்றும், பாதத்திலிருந்து சூத்திரர் தோன்றினாரென்றும் சிலநூலினது கொள்கை. தற்காலம் இவ்விஷயங்களை அநேகர் உண்மையென ஒப்புக்கொண்டபோதிலும், அவைகளைப் பற்றி அபிப்பிராயங்களும், கருத்துகளும் வேறாக இருக்கின்றன. இயலுக்கு மாறுபாடாயுள்ள ஸ்தலங்களில் மனிதர் பிறந்தாரென்று சொல்லுவது மதியீனமெனச் சிலர் உரைக்கின்றார்கள். சகல புவனங்களையும் படைத்துக்காத்து அளிப்பவர் எதை எப்படி எப்படிச் செய்யவேண்டுமென்றெண்ணுகின்றனரோ அது அவ்வவ்விதமாக ஏன் நிகழக் கூடாதெனச் சிலர் வாதிக்கின்றார்கள். சிருஷ்டிகர்த்தர் முகத்திலும், தோளிலும், நாபியிலும், காலிலும் மனிதர் பிறந்தாரென்பதற்குத் தாற்பரியமே வேறு எனச் சிலர் உறுதி கூறுகின்றார்கள். பிர்ம்மாவின் முகத்திற் பிறந்தோர் என்பதற்கு, "முகம்போல முன்னுரைப்பதில்" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க, எவன் முகத்தில் பிரம்மக்கியானமும் ஒளியும் விளங்குகின்றதோ அவனைப் பிராமணன் என்றும், பிரம்மாவின் புஜத்திற் பிறந்தோர் என்பதற்கு, எவன் புஜபல பராக்கிரமங்களையுடையவனெவனோ அவனே க்ஷத்திரியன் என்றும், இப்படியாக அந்தந்த விடத்திற்குரிய செயல்வகையாலும் ஒளிவகையாலும் வருணபேதங்களேற்பட்டதென சிலரது நம்பிக்கை. அரசுமுறைமையினுற்பவமும் இக்கருத்துகளுள் ஒன்றாக விளங்குகின்றன. மேற்கூறிய அபிப்பிராயங்களில், "எது உண்மை? எது உண்மையன்று" என்று

3rm 2-11.M94 M541

விசாரித்தறிந்து தேறுவதற்கு வகையில்லை. ஆயினும் கடைசியிற் சொன்ன சங்கதியானது எல்லா மதஸ்தர்களுக்கும் ஒருவாறு ஒத்துநிற்கும். ஆதியில் "வருணபேதம்" என்பது கிடையாதெனவே தற்காலம் விஷயா விஷயங்களைக் கூடியமட்டும் சந்தேகமற்ற கற்றுணர்ந்தவர்களது கொள்கை. "வருணபேதம்" என்னும் விஷயத்தைப்பற்றித் தனியே பேசும்போது அதன்விகற்பங்களை விரித்துரைப்போம். இப்போது நாம் எடுத்துப்பேசும் விஷயத்திற்கு அது அடுக்காதாதலின் அதை இங்கு விவகரித்தல் நெறிதப்பென்று (Deviation) ஏற்படும். ஆதலால் நான்கு வருணத்துள் ஒன்றாகிய க்ஷத்திரிய தர்ம வரலாற்றைமாத்திரம் இப்போது நாம் எடுத்துப்பேசி முடிவு செய்யவேண்டும். புஜபல பராக்கிரமங்களையுடையவர்கள் எவர்களோ அவர்களே எக்காலத்தும் நன்கு மதிக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்களைக்கண்ணுற்றால் "வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை" என்று சொல்லுவதற்கொப்ப, யாவரும் எக்காலத்தும் அச்சத்தை மனதிற் கொள்ளுவார்கள். அரசன் கொடுரகுணங்குடிகொண்டவனானபோதிலும், நற்குணமுடையவனானபோதிலும, அவனை நன்குமதித்து மரியாதை செய்யவேண்டியது மற்றவர்களது கடமை. இக்காரணம்பற்றியே பராக்கிரமமுடையவர்களுக்கு ஓர் காலத்தில் மேன்மை ஏற்பட்டு அவர்களே அரசர்களெனவும் பாவிக்கப்பட்டார்கள். ஒவ்வோர் நாடுகளிலும் அரசு முறைமை ஏற்பட்டதற்குக் காரணம் பற்பலவிதமாக விருக்கின்றதென்றும், முடிவில் எக்கருத்துக்களும் ஏறக்குறையப் பொருந்துகிறதெனறும் சிலர் கூறுகிறார்கள். சகல ஜாதிமதஸ்தர்களுக்கும் இக்கருத்து ஏறக்குறையப் பொருந்தியதே. இந்துநூற் கருத்துகளே மேன்மையெனக் கொள்ளுவோமாகில், அவை மற்றைய வகுப்பினர்கள் ஏற்கத்தக்கதன்று. ஓர் சங்கதியைக்குறித்து யுக்தியனுபவங்களுக்கு எட்டியவரையில் மாத்திரம் நாம் பேசுவது தகுதியேயல்லாமல் அவைகட்கேற்காத சங்கதிகளைப்பற்றிப் பேசுவதிற் பயனென்னை? ஆதலால் இராஜமுறைமையினுற்பவத்தைப்பற்றி ஒருவாறு பேசி முடித்தோம். பின்னர் தெய்வசங்கற்பம் எவ்வாறிருக்குமோ அதை நாம் அறியோம்.

---



## இந்தியாவின் வர்த்தகம்.

பூர்வந்தொட்டு இந்துதேசமானது வியாபாரத்திற்குப்பெயர்போனவிடம் என்பதாகச் சொல்லப்படுகின்றது. இயற்கையாகவே இந்துதேசமானது நிலவளம், நீர்வளம் முதலியவற்றாற் செழித்து ஆசியாகண்டத்திலிருக்கும் மற்றதேசங்களைக் காட்டிலும் செல்வந் தலையெடுத்தோங்கப்பெற்ற நாடென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. கடற்றுறைகளையுடைய நாடு வியாபாரத்துக்கு எப்போதும் சிறந்தது. இந்துதேசமானது முப்புறமும் கடலாற் சூழப்பட்டிருக்கின்ற காரணம்பற்றி, அது வியாபாரத்திற்கு என்றுங் குறைவில்லாத நிலைமையிலிருக்கின்றது. இந்துதேசத்தை முப்புறமும் சூழ்ந்து நிற்கும் கடலோரங்களில் வர்த்தகத்திற்குப் பெயர்போன நகரங்களும், பட்டணங்களும், கிராமங்களும் எக்காலத்துமுண்டு. அந்நகரங்களிலும், பட்டணங்களிலும், கிராமங்களிலும் வசிப்பவர்களுக்கு கப்பல்கள், படகுகள், வஞ்சிகள் முதலியன செய்வதிற் கைதேர்ந்த பழக்கமுண்டு. ஆனால் இக்காலத்திலுள்ள புகைக்கப்பல் மாதிரியாகவும், புகைப்படகுகள் மாதிரியாகவும் நாசரீக வேலைசெய்து நீராவியந்திரக்கருவிகளாற் கப்பல்களைக் கடலிற்செலுத்தும் வழி அவர்களுக்குத் தெரியாது. ஆயினும் அநேக நூற்றாண்டுகளுக்குமுன் இந்துதேசவியாபாரிகள் அயல் தேசங்கட்குக் கடல்யாத்திரை சென்று தங்கள் தேசத்துச் சரக்குகளை அத்தேசங்களில் இறக்குமதிசெய்து வர்த்தகஞ்செய்து வந்தார்களென்பதற்கு வேண்டிய ஆதாரங்களும், அறிகுறிகளுமிருக்கின்றன. மத்தியகாலத்தில் ஐரோப்பா கண்டத்திலுள்ள சில குடியரசு நாடுகளுக்கு இந்துதேசத்து விலையுயர்ந்த சாமான்கள் இறக்குமதி செய்யப்பட்டன வென்பதாகச் சில சரிதங்கள் முறையிடுகின்றன.

இந்தியாவானது வியாபாரத்திற்குச் சிறந்தவிடமென்று வெகு காலத்துக்கு முன்னரே எங்கும் பிரசித்தி பெற்றதாயினும், அக்காலத்து வர்த்தகர்கள் அயல்நாடுகளில் வியாபாரஞ்செய்து

வந்தவிஷயத்தில் மிகுந்த கஷ்டங்களை யனுபவித்தார்களென்பதா
கத் தெரியவருகின்றது. அக்காலத்தில் எங்கும் திருடர், வழிப்
பறிக்கள்ளர் முதலானவர்களுடைய தீச்செயல்கள் அதிகரித்தி
ருந்தமையாலும், கப்பலோட்டிகளுக்குத் திசையறியுங் கருவிமுத
லிய சாதனங்களில்லாமையாலும், இயற்கையாகவே இந்துக்கள்
துணிகரமற்றவர்களாகையாலும் ஆகிய இத்தியாதி காரணங்கள்
நம்மிந்துதேச வர்த்தகர்களை விசேஷமாயத் தங்கள் சுதேசத்திற்
றானே வியாபாரஞ்செய்து கொண்டிருக்கச்செய்தன. மேலும்
இந்து தேசமானது சுபாவமாகவே செல்வங் தழைத்தோங்கப்
பெற்ற நாடாதலின், அயல் தேசங்கட்குப்போய் வர்த்தகஞ்செய்
து மிகுந்ததிரவியம் சம்பாதிக்க வேண்டுமென்கிற ஆவசியம் அவர்
களுக்கு அதிகமாக நேரிடவில்லை.

ஐரோப்பா கண்டத்திலுள்ள இங்கிலாந்து, பிராஞ்சு, போர்ச்சுகீஸ்
முதலிய தேசத்தவர் நம் நாட்டிலுள்ளவர்களைப் போன்ற தன்மை
யுடையவர்களல்லர். இயல்பாகவே அவர்கள் எக்காரியத்திலும்
மிகுந்த ஊக்கம், விடாமுயற்சி, துணிகரம் ஆகிய இக்குணங்களை
யுடையவர்கள். அவர்கள் வசிக்குந் தேசம் அவ்வளவு பெரியது
மன்று. அவைகள் நம் நாட்டைப்போல் அவ்வளவாகச் செழிப்
புற்றவைகளுமல்ல. அவர்களது தேசங்களில் இரும்பு, ஈயம்,
துத்தநாகம் முதலிய உலோகங்கள் ஏராளமாக விளையும். விசே
ஷதானியவகைகளாவது, கனிவர்க்கங்களாவது அல்லது வேறு
கந்தமூல பதார்த்தங்களாவது அவர்களுடைய நாட்டில் விளைய
மாட்டா. இவ்விதமான பலகாரணங்கள் தான் அயல் நாடுகளுக்
குச் சென்று வாழவேண்டுமென்னும் ஆவசியத்தை அவர்களுக்கு
ண்டாக்கிற்று. ஆவசியம் என்பது எப்பொழுது ஒருவனுக்குண்டா
கின்றதோ அப்பொழுது துணிகரம் என்பதும் அவன் கூடவே செல்
லும். ஆகையால் அங்கிலேயர் முதலிய தேசத்தவர்களுக்கு
ஆவசியம் என்றும், துணிகரம் என்றும் வல்லமையுடைய இரண்டு
நேசர்கள் கிடைத்தமையால், இடைக்கிடையே சம்பவித்த எவ்
வகைத் துன்பங்களும் சூரியனைக்கண்ட பனிபோல் மாறிப்போ



யின. மகமதியர்கள் இந்தியாவில் கொள்ளைகளும், கலகங்களும்
புரிந்துவந்தகாலத்தில், அங்கிலேயர், பிராஞ்சியர், போர்ச்சுகீஸர்
முதலியவர்கள் இந்துதேசத்திற்குவந்து முதல் முதல் அங்
கங்கே வர்த்தகசாலைகளை ஸ்தாபித்து வியாபாரஞ் செய்துவந்தார்
கள். இந்துதேசத்தில் பற்பல ஜாதியார்கள்வந்து குடியேறிய
தன்பேரில், நாளாவட்டத்தில் சுதேச இராஜாங்கத்தின் மகிமை
யும், சுதேச வர்த்தகத்தின் பெருமையும் குறைந்து போயின.
கடைசியில் அங்கிலேயர்களே வர்த்தகத்தில் பலத்துக் கொண்
டார்கள். இப்போது இந்தியாவில் உற்பத்தியாகும் பருத்தி,
பட்டு, பலவகைத்தானியங்கள், நானாவிதகந்தமூலபதார்த்தங்கள்,
வாசனைத் திரவியங்கள், பலவித வர்ணமிடுவதற்குரிய வஸ்துக்கள்,
சணல் நாறுகள், காப்பிக்கொட்டை, தேயிலை, வெடியுப்பு, அபி
னி, பதமிட்டதோல், கத்தி முதலிய ஆயுதங்களுக்குபயோகமா
கக்கூடிய கலைமான் யானை முதலிய மிருகங்களின் கொம்புகள்,
விலையுயர்ந்த ஆபரணங்கள், வைரக்கற்கள் முதலிய விதம் வித
மான வஸ்துக்களில் கோடிக்கணக்கான விலைபெற்ற சாமான்கள்
இங்கிலாந்து முதலிய தேசங்கட்கு வருஷா வருஷம் ஏற்றுமதி
யாகின்றன. இந்துக்கள் வரவர வறுமையடைந்து வருவதற்கு
ரிய பலகாரணங்களுள் மேற்படி ஏற்றுமதி விஷயமும் ஒன்று.

இங்கிலாந்து முதலிய தேசத்தவர்கள் வர்த்தக விஷயத்தைச்
செவ்வையாக ஆராய்ந்தவர்களாதலால், எவ்வித வர்த்தகமும்
அவர்களுக்குக் கைகூடிவருகின்றது. நம்மவர்களுக்கு வியாபா
ரத்தின் தந்திரமே தெரியாது. வியாபார தந்திரத்தை நம்மவர்
கள் அறிந்திருப்பார்களேயாகில், நம்தேசத்தில் உற்பத்தியாகும்
விலைபெற்ற சாமான்கள் அயல் தேசங்கட்குப் போமா? அன்றுடம்
உடுத்திக்கொள்ளும் வஸ்திரம் நமக்குச் சீமையிலிருந்துதானே
வரவேண்டியதாயிருக்கிறது. அநேக ஆயிரவருடங்களுக்கு முன்
னமே இந்துக்கள் உன்னதமான வஸ்திரங்கள் நெய்வதில் கைதேர்ந்
தபழக்கமுடையவர்கள் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷ
யமே. சிறந்த ஆடையாபரணங்களும், மற்ற கைத்தொழில்

வேலைக்ளும் இந்தியாவின்மீது முதல் முதல் வழங்கப்பெற்ற காலத்தில் மற்ற தேசத்தவர்க்ள் அநாகரீகர்களாயும், தொழிற்செய்யுந் திறமையற்றவர்களாயு மிருந்தார்கள். அப்படி இருந்தவர்கள்தான் இப்போது நாகரீகத்திற் சிறந்தவர்களென்றும், தொழிலில் மிக்க வல்லவர்களென்றும் பெயர் படைத்து வர்த்தகத்தில் முதன்மையாக நிற்கின்றார்கள். நம்மவர்கள் வரவரத் தங்கள் புத்தி கூர்மையை இழந்து வருகிறார்களே என்று மெத்த விசனப்படுகின்றோம். வஸ்திரம் நெய்கிறவர்கள் நம் தேசத்திலிருந்த போதிலும் அவர்கள் நெய்யும் வஸ்திரங்களை அவர்களே தரித்துக்கொள்ளுகிற வழக்கமில்லை. சீமையிலிருந்து வரும் வஸ்திரங்களையே விலைக்கு வாங்கி அவர்கள் உடுத்திக்கொள்ளுகிறார்கள். இதற்குக்காரணம் என்னவென்று அவர்கள் ஆலோசித்துப்பார்க்கிறார்களா? இல்லை. நமது தேசத்துத் தொழிலாளிகள் தங்கள் வேலைகளைக் கைகளினாலேயே செய்கிறார்கள். அங்கிலேய தேசத்துத்தொழிலாளிகள் தங்கள் வேலைமுழுவதும் ஏறக்குறைய இயந்திரங்களாலேயே செய்கிறார்கள். இயந்திரங்களால் ஒரு வேலையைச் செய்வது மிகவும் எளிது. கைகளால் ஒரு வேலையைச் செய்வது மிக்வும் வருத்தம். இயந்திரங்களால் நாம் ஒரு வேலையை எவ்வளவு சீக்கிரத்திற் செய்கிறோமோ அவ்வளவு சீக்கிறத்தில் அதைக் கைகளாற் செய்வது கூடாது. இம்முகாந்திரங்கள் பற்றியே நாம் சீமை முதலிய விடங்களிலிருந்து வரும் சாமான்களைச் சிலாக்கியமாகக் கொள்ளுகிறோம். சீர்மை என்பது சீமை என வழக்கச் சொல்லாகத் திரிந்தது. அங்கிலேயர்கள் ஒவ்வோர் விஷயங்களிலும் ஏறக்குறையச் சீர்மைசெய்து கொண்டவர்களாகையால், அவர்கள் தேசத்திற்குச் சீர்மை என்றும் சீமை என்றும் பெயர் கொடுத்து வழங்கி வருகிறோம். (வரும்.)

## காலத்தின் மேன்மை.

மனிதர்களுக்கு ஆயுள்நிர்ணயம் நூறு என்பதாகச் சாதாரணமாய் எவர்களும் சொல்லுகிறார்கள். நூறுவயதுவரையில் வாழ்ந்தவர்களைத்



தான் பூர்ணஆயுள் பொருந்தியவர்கள் என்று உலகில் சொல்லும் வழக்கமுண்டு. நூறுவயதுக்கு மேல் வாழ்ந்தவர்கள் எங்கோ அபூர்வமாகவிருந்தார்கள். மனிதர்களது ஆயுள் நிர்ணயம் எவ்வாறிருப்பினும் இருக்கட்டும். மனிதன் படைக்கப்பட்டது எக்கருத்தைக்கொண்டெனில் அவனுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலமுழுவதும் அவன் வீணாகக் கழிக்காமல் தானும் பிறனும் பயனடையக்கூடிய நல்வழிகளைத் தெரிந்து நற்கருமத்தைச் செய்து புண்ணியத்தையும் புகழையும் பெறவேண்டுமென்பதே யொழிய வேறில்லை. இத்தாலியா (Italy) தேசத்திற் கீர்த்திபெற்ற ஒருவர் தனக்கு வேலை செய்வதற்காக ஏற்பட்டகாலத்தைத் தனது சொந்த ஆஸ்தி எனக் கருதியதாக ஓர் கிரந்தகர்த்தர் உரைக்கின்றார். ஆலோசித்துப் பார்க்கும்பொழுது ஒருவனுடைய ஆயுள் அவன் சுயமாகத் தேடிச் சம்பாதித்த ஆஸ்தியினுஞ் சிறந்ததென்றே நாம் சொல்லவேண்டும். ஏனெனில் மனிதர்களுக்கு எவ்வகைப் பொருள்களும் கிடைத்தற் குரியனவாதலாலும், ஆயுள் கிடைத்தற்கரிய சிறந்த பொருளாதலாலும், எல்லாவற்றிலும் ஆயுள் சிறந்ததென்பதற்கு ஐயஞ் சிறிதுமில்லை. ஆகையால் காலத்தின் மேன்மையைச் சிந்திப்போர் சொற்பப் பெயர்தானுளர். ஒவ்வோர் நாடு நகரங்களையும் நாம் செவ்வையாகப் பரிசோதித்துணர்வோமானால், சோம்புத்தனத்திலும், மற்ற உபயோகமற்ற வழிகளிலுமே பெரும்பான்மையான ஜனங்கள் தங்கள் காலமுழுதும் போக்கிவருவதைக் காண்போம். சிலவிடங்களிற் கையிற்பணம் வைத்திருப்பவர்களின் வாழ்க்கை மிகுந்த துயரத்திற் கேதுவாகவிருக்கின்றது. பொழுதுவிடிந்தால் வயிறு நிறையச் சாப்பிடுவதும், தெருத்திண்ணைகளில் உட்கார்ந்து வீண்வார்த்தை பேசுவதும், அண்டை வீட்டுக்காரருடன் சண்டையிடுவதும், பகற்பொழுது கழியின் மறுபடி உண்பதும், கடைசியில் நெடுந்துயில் புரிவதுமே அவர்களது செய்கை. மேலும் அநேகர் இடைக்கிடையே போகமாதர்களுடன் உறவாடியும், சீட்டுக்கச்சேரி பாட்டுக்கச்சேரி கூத்துக்கச்சேரி முதலியன வைத்தும் இப்படியாகத் தங்கள் காலத்தைப் பலவிதமாகவும் போக்குகிறார்கள். இவ்வாறு ஜனங்கள் தங்கள் வாணாளை உபயோகமற்ற வழிகளிற் செலுத்துவதினால், சோம்புத்தன்மை என்கிற பேய் அவர்களை அடிமைக்கொண்டு அவர்களிடத்துள்ள ஐசுவரியமெல்லாவற்றையுங் கொஞ்சங் கொஞ்சமாக் நாளாவட்டத்திற் கவர்ந்து கடைசியில் மனக்கவலை என்கிற பெருந்தீய்க்கு இறையாக்கி விடுகின்றது. நன்மையைத் தரும்படியான வாலிப்பருவத்தையும், யௌவனபருவத்தையும் யாதொரு உபயோகமுள்ள முயற்சியுஞ் செய்யாமல் வீணே கழித்துவிட்டு விருதாப்பிய பருவத்தில்,

"சொன்னால் வெட்கம்; அழுதால் துக்கம்" என்று சொல்லும் பழமொழிப்படி, யாதொன்றும் பேச நாவெழாமல் பித்துப்பிடித்தவர்களைப்போல் பெருந்துயரக்கடலுள் ஆழ்ந்து பரிதபிக்கின்றவர்களில் அநேகரை நாம் தினந்தோறும் காணலாம். முக்கியமாய் நம் தேசத்துச் சனங்களிற் பெரும்பாலர் தம் வாணாளை மேற்கூறியவாறு வீணே போக்கிப் பிறகு வருந்துகிறார்கள். ஜமீன்தாரர்களென்றும், பணக்காரர்களென்றும், பிரபுக்களென்றும் பெயர் பெற்றிருப்பவர்கள் தங்கள் காலத்தையும், ஐசுவரியத்தையும் பயன் சிறிதுமில்லா ஆடம்பரங்களிலும், மற்ற விஷயங்களிலுஞ் செலவிட்டு வருங்காரணத்தால், தேசம் வரவரப் பெருமைகுன்றி வறுமையடைந்து வருகின்றது. கல்வி விஷயமாயும், கைத்தொழில் விஷயமாயும், ஏனைய விஷயமாயும் காலத்தைக் கழித்தல் எத்தனை மேன்மை! வேலைசெய்தல் கௌரவக்குறைவென்று சிலர் எண்ணுகிறார்கள். முக்கியமாய் நம் தேசத்திலிருக்கும் பிராமணர்களும் அவர்களது ஸ்திரீகளுந்தான் இங்ஙனம் நினைக்கிறார்கள். அநேகர் முழுச் சோம்பேறிகள். எவர்களுக்காவது திருப்தியாகச் சாப்பாடு போட்டால் அவர்கள் சாப்பிட்டு ஏப்பமிடுவார்கள். யாதொரு வேலையுஞ் செய்யாமல் எங்காவது சம்பாத்தியங்கிடைத்தால் அவர்களுக்கு மெத்த சந்தோஷம். தெருத்திண்ணைகளிற் சீட்டாடுவதென்றால் அநேகருக்கு மெத்தப் பிரியம். பிராமண ஸ்திரீகளைப்பற்றியோ நாம் சொல்லுவதே அனாவசியம். ஏனெனில் நம் ஸ்திரீகளிற் பெரும்பாலர் கல்விகேள்வி சிறிதுமின்றி காலவியலுணராப் பேதைகளாயிருக்கின்றமையால், அவர்களது பேச்சுகளுக்கு ஓர்வித மதிப்பில்லை. "பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்னும் நீதிவாக்கியத்தின் கருத்து எல்லாவிதத்திலுமே நம் நாட்டுப்பெண்களுக்குவமையாக விருக்கின்றதாதலின், அவர்களது வார்த்தைகளைப் பெரிதென்றெண்ணி ஆண்பாலர் அவர்கள் மனஞ்சென்றவாறு நடாத்தல் தகுதியன்று. அங்ஙனமிருக்க, தொழிற் செய்வதில் தங் கவனத்தைச் செலுத்தாது அநேகர் முழுச்சோம்பேறிகளாய்த் திரிவதிற் பயன்யாது? அநேகர் தம் வைதீக கருமங்களையும் செவ்வையாக அனுஷ்டிக்கிறதில்லை; லௌகிக காரியங்களின்மீதும் கவனம் வைக்கிறதில்லை. "தொழில்" என்பதற்கு அநேகர் விபரீதமான தாற்பரியஞ் செய்துகொண்டிருக்கிறார்கள். அநேகர் அதைச் சாஸ்திர விரோதமென்கிறார்கள். ஆனால் பார்ப்பார்களில் அநேகர் சர்க்கார் உத்தியோகஞ்செய்வதும், லஞ்சம்வாங்கிப் பிழைப்பதும், வெள்ளைக்காரர்களுக்குச் சலாம் போடுவதும், அவர்களைப்போல் உடைதரித்துக்கொள்ளுவதும், அவர்களுடன் கை கோர்த்துத்திரிவதும் சாஸ்திரவிரோதமல்லவென்று நினைக்கிறார்கள். இப்படி நினைப்பவர்களின் புத்திசாலித்தனத்தை யாம் எவ்வாறு மெச்சக்கூடும்? நம் தேசம் பரிதாபநிலைமைக்கு வந்ததற்குக்காரணம் விசேஷமாய்ப் பிராமணர்களது விபரீதபுத்தி என்றே சொல்லத்தகும். இங்ஙனம் கூறுவதனால் பிராமணர்களது சிறந்த ஆசாரவொழுக்கங்களையும், பக்திமார்க்கங்களையும், மற்ற சற்கருமங்களையும் நாம் இகழுவதாக எவர்களுங் கருத்துக்கொள்ளுதல் தகாது. கடவுள் கொடுத்த ஆயுளை ஏற்றபடி அவர்கள் உபயோகிக்கிறதில்லை என்று தான் எமது முக்கிய கருத்தேயன்றி வேறில்லை. தேசக்ஷேமாபிவிர்த்திக்கேற்ற தொழிற்களிற் காலத்தைச் சிறிதுபோக்கி தங்கவனத்தைச் சிறிது செலுத்துகிறதினாலேயே சாஸ்திர விரோதமென்று கூறுகிறவர் மற்றவைகளையும் ஏன் தமக்கு விரோதமாகப் பாவிக்கக்கூடாது? இங்கிலீஷ் படிக்கவேண்டுமென்றும், சர்க்கார் உத்தியோகஞ் செய்யவேண்டுமென்றும், லஞ்சம் வாங்கிப் பிழைக்கவேண்டுமென்றும் எந்நூல் கூறுகின்றது? ஆகையால் நம்மவர் தமக்கிருக்கும் வாணாளைத் தக்க கல்வி, கைத்தொழில், வியவசாயம், வர்த்தகம் முதலான விஷயங்களிற் செலுத்தி தேசத்திற்கு நன்மையைத் தேடுவார்களென்று நம்புகிறோம். தமது ஆசாரவொழுக்கங்களிலும், தெய்வபக்தி விஷயத்திலும், உடுத்தல் உண்ணல் உறங்கல் முதலானவற்றிலுஞ் செல்லுங்காலந்தவிர மற்றைய காலமனைத்தும் தக்கதொழிலபிவிர்த்தி விஷயங்களில் ஒருவர் தமது வாணாளைச் செலுத்திவருவரேல் அவரடையும்படியான நஷ்டம் யாது? இஃது முன்னைய காலங்களைப் போல் உண்டு உடுத்தி உல்லாசமாய்த் திரியுங் காலமாக விருக்குமாயின், நம்மவர் வைப்பதே சட்டமாய்முடியும். அவ்விதம் செய்வதற்கு இக்காலத்து இராஜாங்கம் சிறிதுமிடங்கொடாதென்பது நிச்சயம். அங்ஙனமிருக்கும்பொழுது நம்மவர் வீண் மனோராஜ்ஜியஞ்செய்து பொழுது போக்குவதிற் பயன் யாது? காலவேற்றுமைகளை நன்குணர்ந்து காலத்திற் கேற்றாற்போல் மாறுதல்களும், சீர்திருத்தங்களுஞ் சிலவாறு செய்துகொண்டு ஒவ்வொருவிஷயங்களிலும் தான் செய்யவேண்டியகடமை இவ்வளவென்று திட்டஞ்செய்து பிறர் பழித்தற்கிடமில்லாமற் கூடியமட்டும் நல்விஷயங்களில் தங்காலத்தைச் செலுத்துதல் மிக்க மேன்மையாம். பித்துப்பிடித்தவர்களைப்போல எக்காலும் ஏங்கிக்கொண்டிருந்தால் யாதொருகாரியமும் முடிவுபெறாமல் தாம்பெற்ற வாணாட் பயன் வீணாய்ப்போய்விடும். வாஸ்தவத்தில் தமக்குக்கிடைத்தற் கரியகாலத்தை நல்விஷயங்களிற் போக்காமல் அசட்டுத்தனத்தால் துரபிமானத்தையும், துர்விர்த்திகளையும்

நம்மவர் மேற்கொண்டு நடக்குங் காரணத்தால், நம்தேசம் வரவர மிக்கப் பரிதாபநிலைமைக்கு வந்துகொண்டிருக்கிறது.

காலத்தைப்போக்கும் விஷயத்தில் வேலைசெய்கிறவர்கள்கூடச் சரியாகவேலைசெய்கிறதில்லை. கல்விகற்கின்றவர்களும், கைத்தொழிற் பயிற்சி செய்கின்றவர்களும் காலத்திற் செய்யவேண்டிய வேலை இன்னதென்று கவனியாது சிலசந்தர்ப்பங்களில் ஒரே தொழிலையே செய்துகொண்டிருக்கிறார்கள். இது முற்றிலும் பிசகு. ஒவ்வோர் காலத்தில் ஒவ்வோர் வேலையைச் செய்யவேண்டுமென்றும், தாம் அந்தக்காலத்திற் செய்யவேண்டியவேலை இவ்வளவென்றும், அவ்வேலையை இன்ன விதமாய்ச்செய்யவேண்டுமென்றும் ஒவ்வொருவரும் தமக்குள் திட்டஞ்செய்து கொள்ள வேண்டும். பள்ளிக்கூடங்களிற் கல்விகற்கும் மாணாக்கர்களிலனேவர் விசேஷமாக இவ்விஷயங்களைக் கவனியாது காலை முதல் மாலை வரையில் புஸ்தகங்களைக் கரங்களி லேந்திக்கொண்டு வாசிப்பதேவேலையெனக் கருதியிருக்கிறார்கள். அநேகர் தாங்கள் சீக்கிரம் விற்பன்னர் என்கிற பெயரை எடுக்கவேண்டுமென்னும் பேரவாவோடு இரவும் பகலும் வருந்தி யுழைக்கிறார்களேயல்லாமல் கல்வியின் வாஸ்தவமான பயனை யடையவேண்டுமென்கிற கருத்தோடுகூடி உழைக்கிறதில்லை. வேலை செய்வதென்றாலும், காலத்தைப் போக்குவதென்றாலும் இதுவன்று. இருபத்து நான்கு மணி நேரத்தில் இத்தனைகாலம் படிக்கிறதென்றும், இத்தனைகாலம் மற்ற வேலைகளைச் செய்கிறதென்றும், இத்தனைகாலம் நித்திரை செய்கிறதென்றும் ஒவ்வொரு வித்தியார்த்தியும் திட்டஞ் செய்துகொள்ளவேண்டும். இவ்விதமாகவே உலகிலுள்ள மற்ற தொழிலாளிகளும் தங்கள் தங்கள் தொழில்களுக்குரிய காலம் இவ்வளவென் றேற்படுத்திக் கொண்டு பின்னர் அத்தொழிற்களைச் செய்யவேண்டும். ஆகையால் காலத்தின் பெறுமதியை ஒவ்வொருவரும் கவனித்து அதை நல்வழிகளில் உபயோகிக்கவேண்டியது கடமை. உலகில் ஒருவனுக்கு எவ்விஷயத்தில் நஷ்டம் நேர்ந்தபோதிலும் அந்நஷ்டத்தை அவன் நிவர்த்தி செய்துகொள்ளக்கூடும். ஓர் கிருஷிகனுக்குத் தன் தோட்டத்தில் பயிர் விளையாமற்போனால் அதனால் நேரிடும் நஷ்டத்தை மற்றோர் தருணத்தில் நிவர்த்தி செய்துகொள்ளக்கூடும்; ஓர் கருமான் ஓர் இரும்புக்கருவியை உலையில் வைத்துக் காய்ச்சிய பின்னர் அதை சுத்தியாலடிக்கும்பொழுது அக்கருவி திடீரென ஒடிந்துபோனால், அதை அவன் மறுபடி செய்துகொள்ளக்கூடும்; ஒருவன் கல்வி கற்றுக்கொண்டு வரும்பொழுது ஓர் விஷயம் அவனுக்கு மறந்துபோனால், மறுபடி அவன் அதைக்கற்று ஞாபகத்தில் வைத்துக்



கொள்ளக்கூடும்; ஒருவன் தேடிச்சம்பாதித்தபொருள் அழிந்துபோனால், மறுபடி அவன் அப்பொருளைச் சம்பாதித்துக் கொள்ளக்கூடும்; ஒருவனுக்கு வியாதிபிடித்து சரீரசௌக்கியம் கெட்டுப்போனால் அவன் அவ்வியாதியை வைத்தியமுறைமையால் போக்கி மறுபடி சரீரசௌக்கியம் பெறக்கூடும். காலத்தின் தன்மை இவ்வாறன்று. காலம்போனால் மறுபடி திரும்பிவராது. ஆகையால் எல்லாவற்றிலும் சிறந்த காலத்தை எவர்களும் வீணே கழிக்கக்கூடாதென்று மேற்கூறிய விஷயங்கள் நமக்குப் புத்தி கற்பிக்கின்றன.

எக்கருமமாகிலும் முடிக்கும் வழியறிந்து தகுந்த ஏற்பாட்டின்படி அதைச்செய்வோமேயானால், அதற்குவேண்டியகாலம் நமக்கிருக்கின்றது. சிலர் தாங்கள் செய்கிறகாரியம் இத்தன்மையதென்றாராயாமலும், அதை முடிக்கும் வழி இன்னதென்றுணராமலும் முறட்டாட்டமாய்த் தாங்களே ஏதோ ஓர் வழியை அனுசரிக்கிறார்கள். இப்படிச் செய்வதனால் சில சமயங்களில் அவர்கள் காரியம் கை கூடாமற்போவதுமன்றி காலமும் வீணே சென்றுவிடுகின்றது. வேறுசிலர் தங்களுக்குக் காலமே சரியாக வாய்க்கிறதில்லை என்று சாக்குச் சொல்லுகிறார்கள். இஃது கொஞ்சமேனும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. தக்கமுறைமைப்படி நடப்போமேயாகில், எக்கருமத்தையும் செய்து முடிப்பதற்குப் போதுமானகாலமிருக்கின்றது. அவகாசமே இல்லையென ஒருவர் கூறுவது வீண்சாக்குப் போக்கேயன்றி வேறில்லை. இவ்வகைப் பேச்சுகளை புத்திமான்கள் ஓர்பொழுதும் ஒப்பார்கள். சில சோம்பேறிகள் வேலைசெய்ய மனமில்லாமலோ அல்லது வேறு யாதுகாரணத்தாலோ பிற்பாடு அவ்வேலையைச் செய்துகொள்ளலாமென்றிருந்து விடுகிறார்கள். காலதாமதம் என்று சொல்லப்படுவது காலமென்னும் பொருளைக் களவு செய்வதற்கு ஓர் திருடனென இங்கிலீஷ்ப் பழமொழியொன்று கூறுகின்றது. இதன் உண்மையைச் சிந்திப்போர் எவ்வேலையைச் செய்வதிலும் காலதாமதஞ்சிறிதும் செய்யார் என்பது உறுதியே. "நாளைக்குச்செய்வோம்; மற்ற நாளைக்குச்செய்வோம்" என்று எவ்வேலையையும் செய்யாது விடுவோமானால், நாளைக்கும் மற்ற நாளைக்கும் சம்பவிக்கும் இடையூறுகளை அறியவல்லார் யாவர்? ஆதலால் சோம்புத்தனம், காலதாமதஞ்செய்தல் வீண்சாக்குப் போக்குரைத்தல் ஆகிய இக்குணங்களை ஒவ்வொருவரும் தவிர்த்துக் கூடியமட்டும் சற்கருமங்களில் தம்வாணாளைப் போக்கக் கடவர்.

---

## சில ஐயவினாக்களுக்கு விடை.

தானே வருகின்ற ஒரு சிநேகிதனை வரவேண்டுமென்று வருந்தியழைத்ததுபோல "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்னும் வாக்கியத்தைப் பற்றிச் சிறிது விரித்தெழுத விரும்பி எம்மை அவ்வாறு விரித்துரைக்கும்படி எமது நேசராகிய காரைக்கால் பத்திராதிபரொருவர் தூண்டியது மிகமகிழ்ச்சியைத் தந்தது. அவர் எழுதிய கடிதம் இது:—

*Karikal, 3rd July 1894.*

*Dear Sir,*

தங்களுடைய Journal பார்வையிட்டுவருவதில், மிகவானந்திக்கிறேன். இன்றுகாலையில் எங்கள் குருவொருவரிடத்திற் பேசிக்கொண்டிருக்கையில், ஓர் நல்ல பத்திரிகையைத் தாம் வாசிக்கவேணடுமென்றார். தங்களுடைய பத்திரிகை மதத்தைச்சாராது சந்திபிரித்து வெள்ளைத்தமிழில் யாவருமெளிதிலுணரத்தக்க பல நல்விஷயங்கள் மாதுரியவசன நடையில் எழுதப்பட்டிருக்கிறதென்றேன். இவர் காலஞ்சென்ற வீரமாமுனிவருக்கொருவகை ஈடாயிருப்பாரென்று எனது உத்தேசம். தாங்கள் எனக்கனுப்பிவந்த காபிகளை அவருக்குக் காட்டியதன்பேரில், இதுவரையில் பதிப்பித்துவந்த ஒன்றுமுதல் ஐந்து வரையிலுள்ள காபிகளையவருக்கு அனுப்பும் பொருட்டுக் கடிதமெழுதி உங்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்பதாகவும், ஒருவருஷத்துக்குரிய சந்தாவைத் தாம் உடனே அனுப்புவதாகவும் எனக்குத் தெரிவித்தார். ஒன்று முதல் ஐந்து வரையிலுள்ள பத்திரிகைகளைத்தாங்கள் V. P. P. மூலமாய் அனுப்பவேண்டியதுந்தவிற மற்ற பத்திரிகைகளையும் அந்தந்தக் காலத்தில் அனுப்பக்கோருகிறேன்.

*Address as follows:—*

THE REVEREND FATHER J. P. VEAUX,
*Superior, College Seminary,*
Karikal.



"பாத்திரமறிந்து பிச்சையிடு" என்று தங்கள் பத்திரிகையொன்றிற் கூறியிருக்கிறீர்கள். பத்திரமாவது யாது? பாத்திரம் சற்பாத்திரந்தானோ? அதை அறிவதெப்படி? இக்கேள்விகட்குத் தாங்கள் மறுபத்திரிகையில் விடைதரவேண்டுமெனக் கோருகிறேன்.

இங்ஙனம்,
M. S. YAGA PILLAY,
*Editor, "Meignana Bhanu,"*
Karikal.

---

### "பாத்திரமறிந்து பிச்சையிடு."

"பாத்திரமாவது யாது" என்பதுதான் முதற்கேள்வி. பொன் வெள்ளி செம்பு இரும்பு பித்தளை ஈயம் துத்தநாகம் முதலிய பலவகை லோகங்களினாலாவது அல்லது மண் கல் மரம் மெழுகு முதலிய வேறு வஸ்துக்களாலாவது கண்களுக்குத்தோற்றியும் தோற்றாமலும் யாதேனும் ஓர் பொருளை வைத்துப் பாதுகாத்தற் பொருட்டு பற்பல உருக்களாக வமைக்கப்படுவதற்குப் பொதுவாகப் பாத்திரமென்று சொல்லப்படுகின்றது. பத்திரமென்றாலும், கொள்கலனென்றாலும் ஒன்றே. முக்கியமாய் ஓர்பொருளை வைத்துக் காப்பாற்றுவதற்காகவே பாத்திரம் ஏற்பட்டிருக்கின்றது. பாத்திரமின்றிப் பொருளைக்காப்பாற்றுதல் மிக்க வருத்தமாய் முடியுமாதலின், எப்பொருளுக்கும் பாத்திரம் அவசியம் வேண்டுமென்று அறிகிறோம். லோகங்களாலும், மற்றவஸ்துக்களாலும் செய்யப்படும் பலவகைப் பாத்திரங்களும் பற்பல காரியங்களுக்கு உபயோகப்படுகின்றதாகையால், இப்பாத்திரம் நல்லது; அப்பாத்திரம் செட்டது என்று ஒன்றையொன்று வேறுபடுத்தி வைப்பதற்கு வகையில்லை. எப்பாத்திரங்களும் பாத்திரங்களே. ஆயினும் எந்தப்பாத்திரத்தில் எந்தப்பொருளைவைக்கவேண்டுமோ அந்தப்பொருளை அந்தப்பாத்திரத்தில் மாத்திரம் வைக்கவேண்டிய முறைமையேயல்லாமல், பாத்திரத்தில் வைக்கத்தகாத பொருளை அப்பாத்திரத்தில் வைத்தல் முறைமையன்று. எல்லாபாத்திரங்களிலும் எல்லாப்பொருள்களையுமே வைத்தல் தகாது. ஆனால் எல்லாப் பாத்திரங்களிலும் வைக்கத்தகும் பொருள்களுமுண்டு. அப்பொ

ருள்கள் நீங்கலாக மற்ற பொருள்களனைத்தும் அதன் அதன் தன்மைக்கும் அந்தந்த பாத்திரங்களின் இயலுக்கும் தக்கதுபோல் மாறுபடுமாகையால், தகுந்தபொருளைத் தகுந்தவிடத்திலே வைத்துக்காப்பாற்ற வேண்டும். உதாரணமாக, தண்ணீர் எல்லாப்பாத்திரத்திலுமே வைக்கத்தக்கது. சுத்தமான எப்பாத்திரத்திலும் தண்ணீர் ஊற்றி வைத்தால் அத்தண்ணீர், பாத்திரம் அசுத்தமாயிருந்தாலொழிய ஒருக்காலும் வேற்றுமையடையாது. செம்பு பித்தளை ஆகிய இந்த லோகங்களால் செய்யப்பட்ட பாத்திரங்கள் எவ்வளவு சுத்தமாயிருந்தபோதிலும் சில பதார்த்தங்கள் வைத்தற்குத்தகா. இப்பாத்திரங்களில் தயிர் முதலிய பதார்த்தங்கள் வைப்போமாகில், அப்பதார்த்தங்கள் முழுமையும் கெட்டுப்போமென்பதிற் சந்தேகமில்லை. பொருளுக்கேற்ற கொள்கலனைத் தெரிந்தெடுப்பது எப்படி ஆவசியமோ அப்படியே தருமம் என்கிற பொருளுக்குத் தகுந்த கொள்கலனையும் நாம் தேடவேண்டியதவசியம். ஆனால் பொருள் என்கிற பதம் உலகிலுள்ள பொருள்களனைவற்றிற்கும் பொதுப் பெயராய் நிற்கின்ற மாதிரியைப் போல் தருமம் என்கிற வார்த்தையானது எல்லாவறங்களுக்கும் பொதுவாய் நிற்கின்றது. தயிர் முதலிய பதார்த்தங்கள் செம்புமுதலிய பாத்திரங்களில் வைத்துக் காப்பாற்றுவதற்கு முற்றிலுந்தகாதவைகளாக விருந்தாலும், அப்பாத்திரங்கள் வேறு பதார்த்தங்கள் வைப்பதற்கு உபயோகமாகின்றதல்லவா? அதுபோல் ஒரு தருமத்திற்கு "அபாத்திரன்" என்று சொல்லப்படுபவனும் வேறு தருமத்திற்குப் பாத்திரன் என்று சொல்லப்படுவதிற் சிறிதேனும் ஐயமில்லை. நுட்பராய்ப் பார்த்துணருங்கால், பொன் வெள்ளி செம்பு இரும்பு முதலிய லோகங்களாலும், மற்ற வஸ்துக்களாலும் செய்யப்படும் பாத்திரங்கள் நல்லதென்றும் கெட்டதென்றும் எப்படி வேறுபடுத்தக் கூடாமலிருக்கின்றனவோ அப்படியே தருமம் என்று பொதுப்படக் கூறியவற்றிற்குப் பாத்திரா பாத்திரம் என்கிற வேற்றுமையில்லை. அங்ஙனமிருக்க, "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்று தருமத்தைத் தனியேபிரித்து வேறுபடுத்திக் கூறியதென்னையெனில் அதன் நியாயத்தைச் சற்று விசாரித்தறிவோம்.

தருமம் என்கிற பெயர் சிறப்பித்துக் கூறப்படும் பலவகையறங்களுக்கும் பொதுப்பெயராக நிற்கிறதென முன்னமே கூறினோம். ஒவ்வோர் தருமத்திற்கும் ஒவ்வோர் வரம்பு ஏற்பட்டிருக்கின்றது. இவ்வரம்பைத்தான், சிறப்பித்துக் கூறப்படும் தருமத்தின் குணமென்று கொள்ளவேண்டும். "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்பதில் பிச்சை என்று சொல்லப்



படுவது ஓர்வகை தருமம். முப்பத்திரண்டுவகைத் தருமங்களாகிய ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டநல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப்பிணஞ்சுடல் என்று கூறப்பட்டவைகளுள் ஐயம் என்று சொல்லப்படுவதைத் தான் பிச்சை என்று நாம் பிரஸ்தாபித்துவரும் விஷயத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஐயமென்றாலும், பிச்சையென்றாலும் ஒரே பொருளைத்தரக் கூடிய வேறு வேறு பதங்களாம். ஆதலால் தருமத்தின் ஓர் சிறப்புப் பகுதியாகிய பிச்சை என்னும் பதார்த்தத்தை அதற்குரிய பாத்திரத்திற் போடவேண்டுமென்பதுதான் "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்பதன் கருத்து. நாம் இப்போது, "பிச்சையாவது யாது? அதன் குணமென்ன? அது ஒரே வகையுடையதோ? அல்லது பலவகையுடையதோ? அதற்குப் பாத்திரமெவை? அப்பாத்திரத்தை அறிவதெங்ஙனம்" என்கிற கேள்விகளை ஆராயவேண்டும். "வறியார்க் கொன்றீவதே ஈகை" என்கிற குறள் வாக்கியத்தில் "பிச்சை" என்பதன் பொருள் அடங்கி இருக்கின்றது. அன்றாடம் குடிக்கக்கஞ்சியின்றியும், உடுக்க நல்லவஸ்திரமின்றியும், படுக்கத்தகுந்தவிடமின்றியும் வருந்துகிறவர்கள் "வறியார்" என்று சொல்லப்படுவர். ஈகையாவது வறியார்வேண்டுவன ஒன்றை இலவசமாகக் கொடுப்பது. பிச்சை என்பது வறியார் வேண்டுவதேதுவோ அது. வறியார் விரும்பும் பொருள்களாவன:—உண்ணச்சோறும், உடுக்க நல்லவஸ்திரமும் படுக்கத்தகுந்த இடமும் ஆகிய இவை போன்ற காலக்ஷேபார்த்தப்பொருள்கள்தவிர வேறில்லை. இவ்வாறு பொருள்களிலொன்றேனும், பலவேனும் விரும்பிக் கண்ணில்லா குருடர்களாயும், காதுகேளாச் செவிடர்களாயும், பேசவறிய ஊமைகளாயும், கைகால் முதலிய அங்கங்களில்லாத முடவர்களாயும், அன்றாடம் கஞ்சிக்கு வகையற்று வருந்துகின்றவர்களாயும், தாய் தந்தையர் சுற்றத்தார் முதலிய யாதொரு ஆதரவுமில்லாதவர்களாயும், இப்படிப் பலவிதத்தில் நித்திய தரித்திரர்களாக விருக்கின்றவர்கள் எவர்களோ அவர்களே பிச்சைக்குப் பாத்திரர். ஆதலால் பாத்திரராயுள்ள பேர்களுக்குப் பிச்சையிடுவது எப்போதும் மேன்மையே. இம்மேன்மை பற்றியே, "வறியார்க் கொன்றீவதே ஈகை"எனக் கூறியநாயனார்,

"அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."

என்றும் உள்ளன்பு கூர்ந்துரைத்தனர். இனிப் "பாத்திரவறிவதெப்படி" என்றவினாவுக்கும் விடை பகர்வோம்.

உலகில் பொற்பாத்திரம், வெள்ளிப்பாத்திரம், செம்புப்பாத்திரம், இரும்புப்பாத்திரம், ஈயப்பாத்திரம் முதலிய பாத்திரவகைகள் ஒவ்வோர் விதமான காரியங்களுக்கு எப்படி உபயோகப்படுகின்றனவோ அப்படியே மனிர்தகள் யாவரும் ஒவ்வோர் விதமான தர்மத்தைப்பெறுவதற்குப் பாத்திரரென்பதிற் சந்தேகமில்லை. மடம் தடம் சோலை தண்ணீர்ப்பந்தல் முதலிய தருமங்கள் எவ்வகை மனிதர்களுக்கும் உரியனவாதலின், அவ்விடங்களில் வந்து தங்குகிறவர்களிடத்துப் பாத்திராபாத்திரம் என்கிற வித்தியாசம் பாராட்டக்கூடாது. எவ்வளவு தீச்சிந்தை மிகுந்தவர்களாயும், எத்தனை தீயநடத்தையுள்ளவர்களாகவும் இருந்தபோதிலும், அவர்கள் பொதுஸ்தலத்தின் பயனை யனுபவிப்பதற்குப் பாத்திரர்களே. வழி நடப்பதனால் வரும் இளைப்பும், களைப்பும் எவர்களுக்குமே இயல்பாயுள்ளதாதலால், இளைப்பும் களைப்பும் மனிதர்களுக்குண்டோவென்று ஆலோசித்தறிவது அநாவசியமே. ஆதலால் மடம் தடம் சோலை தண்ணீர்ப்பந்தல் முதலிய தர்மங்களை நிலைநாட்ட மனமுடையவர்கள் "எவர் களைப்படைந்திருக்கிறார்? எவர் இளைத்துப்போயிருக்கிறார்" என்கிற பாத்திரமறியவேண்டியதில்லை. ஆனால் பொன்னைக்கொடுக்கிறவர்களும், பெண்ணைக்கொடுக்கிறவர்களும், மண்ணைக் கொடுக்கிறவர்களும் தங்களாலியன்றமட்டும் தகுந்த பாத்திரர்களாயுள்ள பெயர்களையே தெரிந்தபின்னர் அவர்களுக்கு தருமஞ்செய்தல்வேண்டும். இவ்விஷயத்திற் பாத்திரமறிவதெங்ஙனமெனிற் கூறுதும். அன்னம் நீரினின்று பாலைப்பிரிப்பதுபோலும், தட்டான் பொன் வெள்ளி முதலிய லோகங்களை வேறுபடுத்துவதுபோலும், தருமவான்களும் கூடியவரையில் தங்கள் தருமத்திற்குப் பாத்திரராயிருக்கின்றவர்கள் எவர்களோ அவர்களையே தெரிந்து பின் அவர்களுக்குத் தருமஞ்செய்தல்வேண்டும். ஒருவன் ஒரு ஊன்றுகோல் தானஞ்செய்ய விரும்புவானாகில், அவ்வூன்றுகோலுக்குப் பாத்திரனாயுள்ள குருடன், முடவன் ஆகிய இப்பேர்ப்பட்டவர்களைக் கண்டுபிடித்தே அதை ஈதல் மேன்மையாம். இந்தத் திருஷ்டாந்தப்படியே பசியுள்ளவனுக்கு ஆகாரத்தையும், குளிரெடுத்தவனுக்கு வஸ்திரத்தையும், நோய் கொண்டவனுக்கு மருந்தையும் கொடுத்துதவவேண்டும். இவ்வாறே தருமம் என்கிற பொதுப்பெயருள் அமைந்த ஒவ்வோர்வகைத் தருமங்களையும் தகுதியானவர்களுக்கே செய்யவேண்டும். "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்கிற நீதிவாக்கியத்தில் பிச்சை என்கிற ஓர் பொருளைமாத்திரம் சிறப்பித்துக் கூறியபோதிலும், அது எல்லாவகைத் தருமங்களுக்குமே பொருந்தும்படியாகவுங் கருதலாம்.



ஆனால் பாத்திரம் என்னுஞ் சங்கதியில் வைதீக கக்ஷியைச்சேர்ந்தவர்கள் மாத்திரம் சிறிது வேறுபடுவார்கள். வைதீக கக்ஷியார்கள் எல்லா மதத்திலுமே இருக்கிறார்கள். பாத்திரம் என்பதை சற்பாத்திரம் என்றும், அசற்பாத்திரம் என்றும் அவர்கள் வேறுபடுத்திக் கூறுவார்கள். தங்கள் தங்கள் இனத்தார்களில் மாத்திரம் சிறந்த ஆசாரவொழுக்கங்களையும், பகவத்பக்தியையும் உடைய எளியவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களையே சற்பாத்திரங்களெனக் கொள்வார்கள். மற்றவர்களை அசற்பாத்திரங்களாகவே பாவிப்பார்கள். பட்சபாதகமில்லாமற் பார்க்கும் பொழுது எச்சாதி சமயத்தவர்களிலுமே சற்பாத்திரர்கள் இருக்கிறார்கள். ஆயினும் பாத்திராபாத்திரங்களைப் பகுத்துணர்தல் அந்தந்த சாதிசமயத்தவர்களுக்கு மாத்திரம் எளிதாயிருக்குமேயல்லாமல், மற்றையோர்க்கு அங்ஙனம் எளிதாயிருக்கமாட்டாது. இதுபற்றியே ஒவ்வோர் வகுப்பினர்களுக்குள்ளும் வாஸ்தவத்தில் வைதிககக்ஷி ஏற்பட்டிருக்கின்றது. பிராமண வைதீகன் தன் இனத்தார்களுக்குள்ளாக மாத்திரம் இவன் யோக்கியன்; இவன் அயோக்கியன் என்கிற பாத்திராபாத்திரமறியச் சக்தியுடையவனே தவிர மற்ற வினத்தார்களுக்குள் அவ்விதப்பாத்திரமறிய அவன் சக்தியுடையவனல்லன். கிறிஸ்தவர்கள், மகமதியர்கள் ஆகிய மற்றையச் சாதிசமயத்தவர்களுக்குள்ளும் அவ்வாறே. இஃது ஜாதிசமயாபிமானக் கொள்கையைச் சேர்ந்த விஷயமாதலால், இதையொட்டிய மற்றைய விஷயங்களை நாம் எடுத்துக் கூறுவதற் கஞ்சுகிறோம். மேலே அன்னம் நீரினின்றும் பாலைப்பிரிப்பதுபோல் பாத்திராபாத்திரமறியவேண்டுமெனப் பொதுப்படக் கூறியதன் உட்கருத்து வைதீகர் லௌகீகர் ஆகிய இருகக்ஷியார்களுக்குமே உரியது. ஆதலால் அந்தந்த கக்ஷிக்குச் சேர்ந்தவர்கள் இதன் உண்மைப் பொருளைத் தெரிந்து கூடியவரையிற் சற்பாத்திரராயிருப்பவர்களுக்கே தருமஞ்செய்தல் வேண்டும். இதனால் மற்றவர்கள் அசற்பாத்திரர்கள் என்றும் நாம் எண்ணத்தகாது.

## பழமொழிகள்.

அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
அஞ்சினாரைக் கெஞ்சுவிக்கும் அடித்தாரை வாழ்விக்கும்.
அஞ்சுவோரை கெஞ்சடிக்கப் பார்க்கிறான்.
அடங்காப் பாம்புக்கு ராஜா மூங்கிற்றடி.

# ADVERTISEMENTS.

## *Established 1880.*

**HEALTH REGAINED & STRENGTH MAINTAINED.**

**Promptly, Effectually, Permanently**


**and Agreeably by wearing**

THE ORIGINAL, GENUINE AND WORLD-FAMED

**Electro-Galvanic Rings, Lockets, Belts, &c., &c.**

*The Blood is the Life, but Electricity is the Life of the Blood.*

Sold more than 100,000. And Daily Increased.



Testimonials too numerous to mention.

**WORLD-RENOWNED.**

**Beware of Worthless Imitations.**

*Try the wonderful divine gift and let the result speak for itself.*

E. G. RINGS, LOCKETS, &c., universally approved by the Leading Physicians as the Best, Safest and Most Effectual Remedy for :—*Kidney, Indigestion, Debility,* Nervousness, Catarrh, Gout, Sores, Toothache, Asthma, Colds, Pleurisy, Scrofula, Weakness, Liver, Headache, Heartburn, Pimples, Swollen joints, Sciatia, Aches, Dysmenorrhœa, Diarrœa, Menorrhœa, Epylepsy, Hysteria, Fever, Lumbago, Spinal, Paralysis, Rheumatism, Constipation, Quinsey, Skin disease, Bronchitis, Nearulgia, Female Complaints, &c., &c.

They also act as safe guards against Cholera and Small Pox.

E. BELT.—In cases of Rheumatism, Liver, Stomach, Kidney, Female Complaints, Paralysis, &c.



# வித்தியாபாநு.

புஸ். I.] 1894-௵ ஆகஸ்ட்டு-மீ. [நெ. 7.


## புருஷர் தம் மனைவியரை நடத்து முறைமை.

—:o:—

### I.

இம்மையில் மனிதர்கள் முக்கியமாய் தேடவேண்டியது புண்ணியம், புருஷார்த்தம் என்கிற இரண்டுமோம். ஒன்றில்லாமல் மற்றொன்று ஒருவர்க்குக் கைகூடுவதரிது. இதன் ரகசியப் பொருளை எளிதில் விளக்குவதற்கியலாதாதலால், நாம் இங்கு எடுத்துக்கொண்ட விஷயத்தின் முக்கியமான பாகத்தை மாத்திரம் எடுத்துரைப்போம். மானிடர்கள் இம்மையில் அடைய விரும்பும் புண்ணியம், புருஷார்த்தம் என்கிற இவ்விரண்டிற்குமாகவே நல்ல மனைவியர்களை அவர்கள் தேடிப்பெறவேண்டும். ஸ்திரீகள் மங்கைப்பருவமடைந்திருக்கும் பொழுதே அவர்களது தாய்மார், தகப்பன்மார், சகோதரர் ஆகிய இப்பேர்ப்பட்டவர்கள் பரிபாலககர்த்தர்களாகின்றார்கள். அம்மங்கையர் மணம்புரிந்து தம் தாய் வீடு விட்டு புருஷர் வீடு சென்றதன்பின் அப்புருஷர்கள் தாமே அவர்களைப் பரிபாலனஞ்செய்வதற்குரியவர்களாகின்றார்கள். ஓர் ஸ்திரீயானவள் ஓர் புருஷனையடைந்தபின்னர் அப்புருஷன் அவளை

சன்மார்க்கத்தில் நிறுத்தி சற்புத்திகளைப் புகட்டி வரவேண்டும். எக்காலும் புருஷன் தன் மனையாளுடைய நடத்தைகளைப் பாதுகாத்துக் கொண்டிருத்தலும் சாத்தியமின்று. ஓர் பெண் தனக்கிஷ்டமான காதல்நாயகனை யடையுமுன்னரே அவளுடைய மாதாபிதாக்கள் அவளுக்குத்தக்க கல்வியை யூட்டி அவள் எழுதவும், வாசிக்கவும் அறியுமாறு செய்யவேண்டியது கடமை. பெண்கள் புருஷர்களது வீடு அடையுமுன்பே தக்க கல்வி கேள்விகளில் மிக்க வல்லவர்களாக விருப்பார்களேயாகில், அவர்களைக்கொண்ட காதலர்கள் அவர்களது நடத்தைகளின்மீது அவ்வளவாக கவனஞ்செலுத்தவேண்டுமென்கிற ஆவசியமில்லை. கல்வி கேள்விகள் சிறிதுமில்லாப் பெண்களைக் கொண்ட கணவர்களுக்கு என்றும் மனக்கவலை யொழியாது. அவர்களின் நடத்தைகளைச் சீர்ப்படுத்துதல் காட்டு மிருகங்களை வீட்டு மிருகங்கள்போல் பழக்குந் தன்மையதாம். புருஷர்களை அவர்கள் கொஞ்சமேனும் மதியாது அவர்களுடன் எப்போதும் வீண் சண்டை சச்சரவுசெய்து கொண்டிருப்பார்கள். “துடியாப்பெண்டிற் மடியினெருப்பு; துற்றும் பெண்டிற் கூற்றெனத்தகும்” என்று நீதிநூற் பாவை மொழிந்தபடி, கல்வி கேள்விகள் சிறிதுமின்றி புருஷர்களுக்கடங்காமற்றிரியும் பெண்கள் அப்புருஷர்களுக்கு கொடிய எமன் என்று சொல்லப்படுவார்கள். இதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆதலால் நல்குலத்திற் பிறந்தவர்களாயும், கல்வி கேள்விகளையுடையவர்களாயுமிருக்கப்பட்ட உத்தம ஸ்திரீகளையே ஆண்பாலர் எப்போதும் தேடி மணஞ்செய்துகொள்ளவேண்டும். இப்பேர்ப்பட்ட ஸ்திரீகளுக்கு அவர்களது கணவர்கள் அரண்போல் பாதுகாக்கவேண்டுமென்கிற அவசியமில்லை. ஆயினும் “பேதைமையென்பது மாதர்க்கணிகலம்” என்று முதுநூல் கூறியபடி, ஸ்திரீகள் எவ்வளவு கல்வி கேள்விகளையுடையவர்களாகவிருந்தபோதிலும் பேதமை என்னுங் குணமானது அநேக சமயங்களில் அவர்களை அடிமை கொண்டாளுகின்றது. அவர்களுக்கு அப்போது சுய புத்தியே தவறிப்போகின்றது. இப்பேர்ப்பட்ட விஷயங்



களைப் புருஷர்களுணர்ந்து அவர்கள் கெட்ட வழிகளில் தப்பிப் போகா வண்ணம் அவர்களை நடத்தவேண்டியது கடமை. ஸ்திரீகள் எவ்வளவு உத்தமகுணமுள்ளவர்களாகவும், நன்னடக்கையுள்ளவர்களாகவும், கல்வி கேள்விகளையுடையவர்களாகவுமிருந்தபோதிலும் “கலைப்பார் கலைத்தால் கல்லுங்கரையும்” என்னும் பழமொழி போல், அப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் சில ஆண்மக்களுடைய மாதுரிய வாக்கிற்கிணங்கி அநேக விஷயங்களில் வஞ்சிக்கப்படத்தக்கவர்களாய் விடுவதற்கு வகையுண்டு. இப்பேர்ப்பட்ட விஷயங்களைப் புருஷர்கள் தங்கள் மனைவியர்கட்கெடுத்துரைத்து அவர்கள் ஏமாந்து போகாவண்ணம் அடிக்கடி எச்சரிக்கை செய்து வரவேண்டும். மனைவியர்கள் எவ்வளவு நல்லொழுக்கமுள்ளவர்களாகவிருப்பினும், சில ஆண்மக்கள் அவர்கள்மீது சிறிதும் அன்பு பாராட்டாது அவர்களை எப்போதும் வன்சொல் வழங்கி மிக்க மனவருத்தத்துக்குள்ளாக்கி விடுகின்றார்கள். இப்படிச் செய்தல் ஆண்மக்களுக்குக் கொஞ்சமேனும் தகாது. மனையாள் எவ்வளவுக்கெவ்வளவு தன் புருஷன்மீது அன்புபாராட்டுகின்றாளோ அவ்வளவுக்கவ்வளவு புருஷனும் அவள்மீது அன்புபாராட்டவேண்டும். சில ஸ்திரீகள் எவ்வளவு அழகுள்ளவர்களாகவும், நன்னடக்கையுள்ளவர்களாகவுமிருந்தபோதிலும், அவர்களது புருஷர்கள் அவர்களைக் கண்டபோதெல்லாம் முகம் கடுகடுத்து “ஏண்டீ! சண்டீ! நீ யேன் அதைச் செய்யவில்லை; இதை ஏன் இப்படிச்செய்தாய்? அதை ஏன் கொண்டுவரவில்லை? இதை யார் உன்னைக்கேட்டது?” என்று பலவாறு திட்டுகிறதும், ஏதேனும் காரியங்களில் அணுவளவு பிசகி நடப்பரேல், அவர்களை கயிற்றாலும், தடிகளாலும் தலைகால் என்கிற வேற்றுமை யறியாமல் கண்டவிடங்களில் அடிக்கிறதும், வீட்டினின்றும் வெளியே ஓட்டிவிடுகிறதும் ஆகிய கொடுமைகளைப் புரிகின்றார்கள். “வேண்டாப் பெண்டாட்டி கால் பட்டால் குற்றம்; கைபட்டால் குற்றம்” என்கிற பழமொழி போல், சில ஆண்மக்கள் பெண்மக்களைப் பலவாறு பழித்து அவர்களுக்குத் தீங்கிழைத்துவருகி

றார்கள். இவ்விதமான செய்கைகளைப் புருஷர்கள் செய்வதினால், எத்தனையோ பெண்பாலர்கள் மிக்க மனவருத்தத்துள்ளாழ்ந்து "மனக்கவலைப் பலக்குறைவு" என்னும் பழமொழிக் கொப்ப, "ஐயோ! இந்தப் புருஷன் என்பேரில் பக்ஷமாயிருப்பானென்று இவனைக் கலியாணஞ் செய்துகொண்டோமே! இவனால் எத்தனையோ சுக போகங்களை யனுபவிக்கலாமென்றிருந்தோமே! இவன் இப்போது நம்மை வீணே வருத்துகிறானே" என்று பலவாறு ஏக்கமுற்று நாளுக்கு நாள் சரீரம் வாடி இம்மண்ணுலகினின்றும் சீக்கிரம் விண்ணுலகுக் கேகிவிடுகிறார்கள். புருஷர்கள் இவ்வாறு பெண்பாலரை நடத்துவது முறைமையோ? பெண்பாலர்களது நடத்தைச் சற்று முரணாகவிருப்பினும், "பெண் கோணல் பொன்னால் நிமிரும்" என்று சொல்லுகிறபடி, உத்தம குணமுள்ள புருஷர்கள் அப்பெண்களது மனத்தைப் பல தந்திரங்களால் நல்வழிகளில் திருப்பி நன்னடக்கையுள்ளவர்களாகச் செய்வார்கள். அப்படி இருக்க நல்லொழுக்கமும், புருஷர்களிடத்து விசுவாசமும், புண்ணிய சிந்தையும், ஜீவகாருணியமும், ஈசுவரத்தியானமும் படைத்து பதிவிரதா தருமத்தில் அருந்ததியையும், அழகில் லக்ஷ்மியையும் நிகர்த்த உத்தம ஸ்திரீகளை மனையாளாகக் கொண்ட ஆண்பாலர்க்குக் குறை யாது? அவர்கள் பேரில் வீண் பழி சுமத்தி அவர்களது மனத்தைப் புண்ணாக்குவது எற்றுக்கு? ஆகலால்ஆண்மக்கள் தங்கள் மனையாட்டிகளை வன்சொல் வழங்கி வதைத்து வீண் மனவருத்தத்துக்குள்ளாக்குவது ஒருக்காலுங் கூடாது. ஒரு ஸ்திரீயானவள் மாறாக நடப்பினும், அவளது புருஷன் மிகுந்த புத்தி கூர்மையுடையவனாயும், சாமர்த்தியசாலியாயு மிருப்பானாகில் தனது மனையாளை வெகுசீக்கிரத்தில் நல்வழிக்குக் கொண்டுவரக்கூடும். ஒரு விதத்திலும் நல்வழிக்கு வரக்கூடாத ஸ்திரீகள் எவர்களேனு மிருப்பரேல், புருஷர்கள் அவர்களை விட்டு விலகுவதே நன்றாம்.



## ககோள சாஸ்திரமும், அதில் ஆரியர்கள் செய்த பயிற்சியும்.

ஆகாயத்திற் காணப்படும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் என்கிற பற்பல கிரகங்களின் தத்துவங்களை விவகரிக்கக்கூடிய நூலுக்குக் ககோள சாஸ்திரம் என்று பெயர். இதையே வான சாஸ்திரம் என்னும் பெயராலும் வழங்கிவருகின்றார்கள். பூர்வத்தில் ஆரியாவர்த்தத்தில் வசித்த ஆரிய சிரோன்மணிகளாகியப் பிராமணர்கள் இவ்விஷயத்தில் மிகுந்த பயிற்சியடைந்தவர்களென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. வானசாஸ்திரத்தில் விசேஷ ஆராய்ச்சி நம்மவர்களுக்குக் கிடையாதெனச் சிலர் சொல்லுகிறார்கள். இப்படிச்சொல்லுதல் முற்றிலும் அறியாமையாம். ஆதிகாலத்திலேயே சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், மற்ற கிரகங்கள் ஆகிய பற்பல அண்டங்களின் தன்மையை யுணர்ந்தவர்கள் எத்தனையோ பெயர்களிருந்தார்களென்பதற்கு வேண்டிய ஆதாரங்களிருக்கின்றன. இவ்விஷயத்தில் ஐரோப்பியர்களே இந்துக்களைப்புகழ்ந்திருக்கிறார்கள். சூரிய சாதிரக் கிரகணங்கள் இன்னின்னகாலத்தில் உண்டாகக்கூடுமென்றறியக்கூடிய சக்தியும், மற்ற சாமர்த்தியங்களும் பூர்வீக ஆரியர்களிடத்திருந்தன. இந்த அதிக ஆச்சரியகரமான வித்தை பூர்வீக ஆரியர்களுக்கு எப்படித் தெரிந்ததென்றும், எக்காலத்தில் உண்டாயிற்றென்றும் மயங்குகிறார்கள். ஆரியர்கள் செய்துவந்த வானசாஸ்திர ஆராய்ச்சியின் விஷயங்களின் காலவெல்லையை ஐரோப்பிய பண்டிதர்கள்ப் பலவிதமாகப் பகுத்துக்கூறியிருக்கிறார்கள். வேதம் ஏற்பட்டகாலத்திற்றான் ஆரியர்களாகியப் பிராமணர்கள் முதல்முதல் ஆகாயத்திற்காணப்படும் அண்டங்களின் தன்மையைப் பரிசோதிக்க வாரம்பித்தார்களென அப்பண்டிதர்கள் கொண்ட அபிப்பிராயம். அந்தக் காலத்தில்தான் பிராமணர்கள் தாங்களாகவே ஆகாயத்திற்காணப்படும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் ஆகிய இவைகளின் தத்துவங்களை அறிந்து பின்பு அவைகளிலிருந்து அநேக சங்கதிகளை அனுமானித்து முதல் முதல் புஸ்தக ரூபமாக வெளிப்படுத்தினார்களென்றும், கிரிஸ்து அவதரிக்குமுன் 500-வது வருடந்தான் அக்காலமாயிருக்கவேண்டுமென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இரண்டாவது காலம் கிரிஸ்து அவதரிக்குமுன் 327-வது வருஷம் தொடங்கி கிரிஸ்து அவதரித்து 1000 வருஷம் வரையில் என்பதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆரியர்கள் இக்காலத்தில் அந்நிய தேசத்தவர்

களாகிய கிரேக்கரிடமிருந்து ககோளசாஸ்திர சம்பந்தமாக அநேக விஷயங்கள் தெரிந்துகொண்டார்களென ஐரோப்பிய பண்டிதர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். **ரோமகசித்தாந்தம், பாலிஸசித்தாந்தம், ஹோரா சாஸ்திரம்** முதலான பல கிரந்தங்கள் இந்தக்காலத்திற்றான் உண்டாயிற்றென்றும், கிரேக்கர்களுடைய கிரந்தங்களிலிருந்து அநேக விஷயங்கள் அவைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறதென்றும் அவர்கள் கொண்ட கருத்து. நமது தேசத்திலிருக்கும் பண்டிதர்களில் சிலர் இவ்வபிப்பிராயங்கட்கு முற்றிலும் வேறுபடுகிறார்கள். கிரேக்கர்தான் அநேக சங்கதிகள் ஆரியர்களிடத்திலிருந்து அறிந்துகொண்டார்களென இவர்களது தாற்பரியம். எவ்வாறாயினும் ஆதியில் ஆரியர்கள் ககோளசாஸ்திர ஆராய்ச்சியில் மிகுந்த சமர்த்தர்களென்பதிற் சந்தேகமில்லை. அவைகளின் கருத்துகளைத் தக்கவாறு வெளிப்படுத்தும் புண்ணியவானில்லாதபடியால் சூரியனை மேகம் மறைத்தாற்போல் அநேக சங்கதிகள் ஜனங்களுக்குத் தெரியாது. சுதேச இராஜாங்கம் தலையெடுத்தோங்கப் பெற்ற காலத்தில் பிராமணர்களிடத்திலுள்ள அபாரசாமர்த்தியங்கள் சிறந்து விளங்கின. சுதேச இராஜாங்கம் அழிந்ததும் பிராமணர்களுடைய பெருமைகள் குறைந்தும் போயின. முற்காலத்தில் தழைத்த அநேக விஷயங்களைப்பற்றி அநேகர் இன்னும் மாறபிப்பிராயங்கொண்டு பிராமணர்களை இகழ்ந்து வருகிறார்கள். சங்கதிகளைப்பரிசோதித்துணராமல் ஒருவர்மீது வீண் குறை கூறுதல் எப்போதும் பிசகேயாம். ஆனால் பிராமணர்களிடத்தில் ஓர் குற்ற மாத்திரமிருக்கின்றது. அதாவது பொறாமை என்னும் கெட்ட குணம். பிராமணர்களிலனேகர்கள் வீண் பொறாமைப்பட்டே கெட்டுக் குட்டிச்சுவராய்ப் போகிறார்கள். ஒருவன் ஓர் சங்கதியின் உண்மைப்பொருளை விவகரிப்பதில், வேறொருவன் உண்மையை வெளிப்படுத்தித்தன் பெயரை நிலை நாட்ட விருப்பங்கொள்ளுபவன்மீது பொறாமைகொண்டு அவன் கூறும் சங்கதிகளுக்கு மாறாக வேறொன்றை வெளிப்படுத்துவது வழக்கம். இப்படிச்செய்வதினால் இருவர் கொண்ட கருத்துகளின்பேரிலும் அந்நியர்களுக்கு சந்தேகமுண்டாகிக் கடைசியாக ஆரியர்களது பெருமை கெட்டுப்போய்விடுகின்றது. இப்போது நமது தேசத்திலுள்ள பற்பல பாஷைகளில் ககோளசாஸ்திர சம்பந்தமாக அநேக கிரந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அக்கிரந்தங்கள் சிற்சில விஷயங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றன. நமது தேசத்து ககோளசாஸ்திரப் பண்டிதர்கள் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு விஷயங்களையும் பரீக்ஷித்தறிந்து அவைக



ளின் உண்மை பொருளைக் கடைசியாக வெளிப்படுத்தவேண்டியது கடமை. அப்படிக்கல்லாமல் தம் தம் மனம்போனபடி நம்மவர்கள் நூற்களை வெளிப்படுத்துவார்களானால், அந்நிய தேசத்தவர்கள் அந்நூல்களின் மீது அவநம்பிக்கைகொண்டு அந்நூல்களின் ஆசிரியர்களை பழிக்கவும் வகையுண்டாகின்றது. இப்போது ஆரியர்களுடைய கிரந்தங்களைப் பரிசோதித்துணர்ந்த கிறிஸ்தவர்கள் அக்கிரந்தங்களில் அநேக குற்றங்களைக் கண்டுபிடித்து எத்தனையோ புஸ்தகங்கள் அச்சிட்டு வெளிப்படுத்தி வருகிறார்கள். அவர்கள் கூறும் மொத்தக் கருத்தாவது யாதெனில், இந்துக்கள் ககோள சாஸ்திரத்தை யனுசரித்து ஜோதிடம் என்கிற ஓர் பொய் நூல் கற்பித்திருக்கிறார்களென்பதாம். இவ்விஷயத்தில் நமது சுதேசிகள் கூட இப்பொழுது கிறிஸ்தவர்களது கொள்கைகளைச் சார்ந்தே பேசுகிறார்கள். பெரிய சமஸ்தானங்களில் திவான் முதலிய அதிகாரஸ்தானங்களைப்பெற்று மகா பண்டிதராக விளங்கிய ம-றா-றா-ஸ்ரீ ராஜா சர். டி. மாதவராவ் அவர்கள் தாம் ஜீவ தசையடைந்ததற்கு முன்னதாக ஓர் சிறு புஸ்தகம் வெளிப்படுத்தினார். அதில் ஜோதிட சாஸ்திரம் பொய் என்று கண்டித்தெழுதப்பட்டிருக்கின்றது. இப்படிக் கண்டித்தெழுதியதை மறுத்து "ஜோதிடம் உண்மையான நூல்" என்பதாக ககோளம், ஜோதிடம் முதலிய சாஸ்திரங்களில் மிக்க வல்லவசாலியான ம-றா-றா-ஸ்ரீ டி. எஸ். நாராயணசாமி ஐயர் என்பவர் உறுதிப்படுத்தி ஓர் புஸ்தகம் அச்சிட்டு வெளிப்படுத்தி இருக்கிறார். உண்மைப் பொருள் இன்னதென்றறியாமல் நம்மவர்களே ஒருவருக்கொருவர் வாதஞ்செய்துகொண்டால், "ஊரிரண்டு பட்டால், கூத்தாடிக்குக கொண்டாட்டம்" என்று சொல்லும் பழமொழிப்படி, அந்நிய தேசத்தவர்களுக்கும், அந்நிய மதஸ்தவர்களுக்கும் நம்மவர்மீது பழிகூற இடமுண்டாய்விடுகின்றது. ஆகையால் நம்மவர்கள் வீண் க்ஷாத்திரம், பொறாமை முதலிய குணங்களையகற்றி ககோளம், ஜோதிடம் என்னும் இரண்டு சாஸ்திரங்களையும் பழுதறப்பரிசோதித்துணர்ந்து அவைகளின் உண்மைப்பொருளை வெளிப்படுத்தவேண்டும்.

## செய்நன்றியறிதல்.

செய்நன்றி என்னுங்கால் யாவர் செய்நன்றி? என்னும் வினா நிகழும் அதனை விடுக்குங்கால் தாய் செய்நன்றி, தந்தை செய்நன்றி, குரு செய்

நன்றி, அரசன் செய்நன்றி, கடவுள் செய்நன்றி, யென விடைவரும். இவ்வை வகுப்பாரன்றிப் பிறர் செய்நன்றி அத்துணைச் சிறந்ததன்று. நிற்க

தாய் செய்நன்றியைப்பற்றிச் சிறிது விசாரிப்போம். அடைதற்கரிய இம்மானுடயாக்கை நமக்கு எப்படிக் கிடைத்தது? யாரால் வளர்ந்து நிலைபெற்றது? நமது தாயுந் தந்தையுங் கூடி வாழுங்கால் தாய் கருவுற்றாள். அந்தக் கருவுள்ளே நாம் பத்துமாதம் வளர்ந்தோம். அப்பொழுது நம்மை அத்தாய் தனது வயிற்றினுள் சுமந்துகொண்டிருந்தாள். நம்மைப் பெற்றெடுத்து மகிழவேண்டுமென்னும் ஆசையால் கருவிலிருந்த நமக்கு அழிவு நேராவண்ணம் சாவதானமாய்ப் பாது காத்து வந்தாள். அவள் அப்போது நம்மை கருவில் வளரவொட்டாது அழிக்க நினைத்தால் அவ்வாறே செய்யவுங்கூடுமன்றோ? நமதருமைத்தாய் அப்படிச் செய்யாது நமக்கொரு சேதமும் வராமல் காக்கக் கடவுளை வழிபட்டு வந்தாள். அது மட்டோ! அப்போது அவளுக்கு (மசக்கை) ஒருவித வாந்தியும், கிறுகிறுப்பும் அன்னத்துவேஷமும் பற்பல துன்பங்களும் உண்டாயிருந்தன. புத்திரவாஞ்சையினால் அத்துன்பங்களை இன்பமாக அனுபவித்தர்ள். பிறகு பிரசவகாலத்தில் அவளுக்கு நேர்ந்த சங்கடங்களை ஒருவாயாற் சொல்லி முடிவதன்று. அதனைக் கடவுளே அறிவார். அங்ஙனம் நம்மை உயிர்த்து நாம் அழும் ஓசை அமுதம் சொரிந்தது போல் அவள் காதில் நுழைந்தவுடனே அவள் துன்பங்களை மறந்துவிட்டாள். பிறகு நமது சரீரம் நோயற்று நல்லுறுதி பெறுவதற்காகத்தான் பலமருந்துகளை உட்கொண்டாள். அந்தோ! காததூரம் ஓடினாலும் கசப்பு விடாத வேம்பின் நெய்யையும் அவள் நம்பொருட்டுக் குடித்தாளே! (இது இந்துக்களிற் சிலர் வழக்கம்) நாம் பசியினால் அழும்போது தனக்குள்ள அளக்கரிய ஆயாசத்தையும் பாராது உடனே யெடுத்தணைத்து முலைகொடுத்தாள். நாம் அடிக்கடி அழுதும் புரண்டும் தொந்திரவு செய்தலால் அவள் நித்திரையையும் மறந்தாள். நமது மூத்திரத்தால் நனைந்த பாயுஞ் சேலையும் தானே அவளுக்குப் பஞ்சணையாயிருந்தது. நமது மல மூத்திரங்கள் ஒரு நாளைக்கெத்தனை தரமோ அத்தனையும் அவள் அருவருப்பின்றி அனுபவித்தாள். அப்போது அவளுக்கு வேண்டியதைப் புசிக்கவாவது வேண்டியதை உடுக்கவாவது வேண்டிய இடஞ்செல்லவாவது வேண்டியது செய்யவாவது கூடாமல் பெரிய சிறைச்சாலையிலிருப்பதுபோலிருந்தது. நமக்கு வைசூரி முதலிய கொடு நோய்களாலும் பக்ஷி மிருகம் ஊர்வன முதலியவைகளாலும் பிறவாற்றாலும் என்ன அபாயம் நேருமோ வென்கிற அச்சம் அவள் நெ



ஞ்சிற்குடிகொண்டிருந்தன. நம்மைத் தொட்டிலிலிட்டாட்டியும் குளிப்பாட்டியும் பாலூட்டியும் கண்ணிமைபோற் காத்துவந்தாள். ஒவ்வொரு நோய் நமக்கு நேர்ந்த காலத்து அவள் பட்ட வருத்தம் எழுதி முடியுமோ? நாம் அவள் முகம் நோக்கிப் புன்னகை செய்வதை ஒருகால் அவள் கண்டவுடன் அத்தனை துன்பங்களையும் மறந்தாள். அவளது இளமையைக் கெடுத்து சுகத்தைச் [illegible]த்து ஓயாத தொந்திரவைச் செய்ய வந்த ஓர் பீடைபோலிருந்தும் அவள் நம்மைக்காணும்போதெல்லாம் அங்ஙனம் கருதாது தரித்திரனுக்குப் பொற்கிழி கிடைத்ததுபோல் மகிழ்ந்து ஆவலோடெடுத்து முகத்தினணைத்துக் கொண்ட அவளது அன்புக்கு யாது உவமை கூறுவோம்? நம்மை வளர்ப்பதற்கு வேண்டிய இடம் பொருள் முதலியன குறைவுபட்டபோது யாது செய்வேனென்று ஏங்கி தான் வயிற்றுக்குப் போடுகிற ஆகாரத்தையாவது குறைத்து அப்பொருள் கொண்டு நமக்கு வேண்டுவ சேகரித்து வைத்தாள். நமக்கு ஏதேனும் அபாயம் சம்பவிக்க நேர்ந்தபோது தன்னுயிரையும் லக்ஷியஞ்செய்யாது முன் வந்து அதை நீக்க முயன்றாள். நாம் தவழ்ந்து விளையாடுகையில் தவறி விழுந்து கதறுகிற ஓசை கேட்டவுடன் உண்ணுஞ்சோற்றை அப்படியே விட்டு ஓடி வந்து எடுத்தணைத்தாள். அவள் வருந்தித் தேடி வைத்திருந்த பண்டம் பாடிகளை நாம் தவழ்ந்து சென்று உருட்டிக்கவிழ்த்து உடைத்து விட்டபோது பொருட்சேதத்திற்காக வருந்தாமல் அதனால் நமக்கு அபாயம் வாராதிருந்தமைக்காக மகிழ்ந்தாள். நமது உடலிலே ஒரு சட்டி உண்டாகி அதைக் குணப்படுத்த (ஆஸ்பத்திரி)வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் வைத்தியர் சத்திரம் வைத்து அறுத்தபோது அந்தக்கட்டியில் வெளிப்பட்ட சீழ்நீர் எத்தனை யென்று கணக்குப்பார்க்கையில் அப்போது என் தாயின் கண்களினின்று பெருகிய கண்ணீரில் ஒன்பதில் ஒரு பங்கென்று தெரிய வந்ததாம். நமது பசிக்குப் புகட்டும்பொருட்டு வாங்கி வைத்திருந்த பாலை நாம் தவழ்ந்து போய் கவிழ்த்துவிட்டு வெறும் பாத்திரத்தைக் கையிலெடுத்து நிலத்திற்கொட்டுகிற சத்தங்கேட்டு ஓடிவந்து அவள் அடா! வென்று அதட்ட, நாம் வெறுக்கென்று பயந்து கண்களில் திவலையரும்புவதைக் கண்டு சகியாது தனது கண்களில் நீர் சொரிந்து வாரி யெடுத்து மார்புடனணைத்துக் கொண்ட அவள் கருணைக்குக் கைமாறென்னே? அண்டை வீட்டில் அக்கினி பற்றியதென்று கேட்டவுடனே பரபரத்து வந்து போனதெல்லாம் போகட்டும் குழந்தை பிழைத்தாற்போதுமென்று நம்மை எடுத்துக்கொண்டு ஓடிய அவள் அன்புக்கு உவமை

யென்னே? இங்ஙனம் தன்னுயிரினுஞ் சிறந்த ஜீவரத்தினம் போல் நம்மை ஆதரித்து நாம் தவழ்ந்து எழுந்து நடந்து விளையாட்டயர்வதைக் காணுந்தோறும், நமது மழலை மொழிகளைக் கேட்குந்தோறும் இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டாலன்ன வுள்ளமுவந்து மெய்ப்பருவமெய்துங்காறும் ஆதரித்த நமது தாயின் கருணைத்திறத்தை எவ்வாறு கணித்தறிவேம். இதனாலன்றோ "தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை" யென்று அன்னையாருங் கட்டளையிட்டனர். "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்று கூறியது மிவ்வருமை நோக்கியே யன்றோ? எல்லாம் வல்ல கடவுள் திருவடிகளை நினைத்து துதிக்குங்கால் என் தாயே! தந்தையே! என்று துதிப்போம். நமது தாய் தந்தையரைத் துதிக்குங்கால் வேறெவரையுவமை கூறித்துதிப்பது? இதனால் அவருக்கு அவரே நிகரன்றி வேறு நிகரில்லையென்பதும் வெளிப்படவில்லையா? அதனால் இத்தகையதாயின் நன்றிகளை எந்நாளும் மறவாது பாராட்டி வருவதே மானுட ஜன்மம் பெற்ற நன்மக்கட்குக்கடப்பாடாகும். அங்ஙனமின்றி நன்றி மறந்து அன்னோரை எவ்வாற்றாலாவது புறக்கணிக்க ஒருவன் துணிவானானால் அவனை மானிட வகுப்பில் வைத்தெண்ணாது எழுவகைத்தோற்றத்தினுஞ் சேராத ஒரு பெரும் பூதமென்றே விவேகிகள் கருதுவாரென்க. இது நிற்க; இனி இவ்விஷயத்தில் இக்கால மாந்தர் சிலர் சில பல ஆக்ஷேபங்களை யெழுப்புவதுண்டாகையால் அவைகளை யெடுத்துக்காட்டித் தக்க சமாதானங் கூறுவாம்.

## ஆக்ஷேபங்கள்.

௧. தாய் அல்லது தந்தை நம்மை கோபித்து அடித்தால் அல்லது வைதால் நாம் எதிர்த்து அவர்களை மறுக்கக்கூடாதா?

௨. அவர்கள் கெட்ட குணத்தாலாவது வேறு காரணங்களாலாவது நமது பெரியோர் தேடிவைத்த அல்லது அவர்களே தேடிய செல்வப் பொருள்களை அழித்துவிட அல்லது பராதீனஞ்செய்ய முயன்றால் நாம் அவர்களைத்தள்ளிவிடுதல் குற்றமாகுமோ?

௩. நமது கல்விப் பெருக்கத்துக்கும் நல்லொழுக்கத்திற்கும் விரோதம் அல்லது கேடுண்டாகுமாறு அவர்கள் தடுத்தால் அப்போது யாது செய்வது?

௪. பாவம் அல்லது பழியை விளைக்கக்கூடிய துர்மார்க்கத்தில் அவர்கள் செல்ல முயன்றால் அப்போது புத்திரர்களாகிய நாம் யாது செய்ய வேண்டும்?



௫. சுருதி யுக்தி அனுபவம் என்னும் மூன்றுக்கும் விரோதமாய் உலகத்தார் வெறுக்கக்கூடிய தீய நெறியிற் சென்று அவர்கள் கெடுவார்களானால் அப்போது அவர்களைத்தண்டித்து நல்வழிப்படுத்துவது நமக்குக் கடமையன்றோ? என்பது முதலியன.

## சமாதானம்.

௧.—நமதிடத்து எக்காலத்தும் நீங்காத கரைகடந்த அபிமானங்கொண்டு நமது க்ஷேமத்தையே கோரி வருகிற தாய்தந்தையர்கள் நம்மை அடித்தாலும் வைதாலும் அந்தத் தண்டனையெல்லாம் உற்று நோக்குங்கால் வைத்தியன் சத்திரமிட்டறுப்பதும் கோலாற்சுடுவதும் நோய் தீரும் பொருட்டாகவேயிருப்பதுபோல, நமது நன்மையின் பொருட்டாகவேயிருக்குமாகையால் அவர்களை அதற்காக எதிர்க்கத் துணியாமல் அந்தத் தண்டனையை யேற்றுக்கொண்டு பிறகு எதற்காகத் தண்டித்தார்களென்று ஆராய்ந்து அப்படிப்பட்ட குற்றம் பின்னும் நேராவண்ணம் அவர்கள் கற்பிக்கிற நன்னெறியிலேயே ஒழுகவேண்டும். இப்படிச் செய்யும் புத்திரர்களை மற்றொருபோதும் தாய்தந்தையர் தண்டிக்கத் துணியார்கள். அது மட்டோ! முன்னர்த் தாங்கள் தண்டித்ததனால் புத்திரன் வருத்தமுற்றானேயென்று இரங்குவார்கள். அது மட்டோ! முன்னினும் பதின்மடங்கு புத்திரராகிய நம்மிடத்து அன்பும் அபிமானமுங்கொள்ளுவார்கள். அதனால் அவர்களை எதிர்க்க நினைப்பது நற்புத்திரர்க்கு அழகன்று.

௨.—தாய் தந்தையர் தம் புத்திரரிடத்து இயற்கையாய் நிறைந்த அபிமானமுடையராதலால் அவர்கள் புத்திரருக்குக் கல்வி செல்வ முதலியன பெருகி அவர்கள் சுகமுற்று நிலைக்கவேண்டுமென்றே நினைப்பார்கள். எந்தக்காரணத்தாலாவது அவ்வியல்பு மாறி நமது வாழ்க்கைக்குத் துணைக்காரணமாயுள்ள செல்வப்பொருள் முதலியவற்றை அழிக்கத் துணிவார்களாயின் நமது சரீரமே அவர்கள் சொந்த உடைமையாயிருப்பதாலும் இது பருவ காலம் வருகிற வரையில் ஆதரித்து வளர்த்தவர்கள் அவர்களேயாதலாலும் அவர்களெவ்வாறு செய்யினுஞ் செய்க என்று அமைந்திருப்பதே நன்மக்கட்குக் கடமையாகும். ஏனெனில், அவர் முன் செய்த நன்றிகளை நோக்க இப்போது செய்யும் தீங்குகள் எத்துணையும் இணையாகாதலாலென்க. மேல் அவர்களைச் சிறிதும் துன்பஞ்செய்யாது எந்த உபாயத்தாலாவது அவர்கள் அழிக்கத்துணிகிற பொருள் முதலியவற்றை அழியாமல் நிறுத்த முயலுதல் அறிவுள்ள புத்திரர்க்குக்கடப்பாகும். அங்ஙனமன்றி அவர்களை ஒறுக்கத்துணிதல் எவ்வாற்றானுங் கூடாதென்க.

௩.—நிறைந்த கல்வியறிவு முதலியன இல்லாத கொடுமையாலாவது வேறுகாரணங்களாலாவது தாய்தந்தையர்கள் நமது கல்வி நல்லொழுக்கம் முதலிய ஆக்கங்கட்குக் கேடு சூழ நினைப்பார்களாயின் அதற்காக அவர்களைத் துன்புறுத்த முயலாமல் அவர்களை விட்டு விலகித் தனது சுகப்பேற்றுக்குரிய சாதனங்களைத் தேடிக்கொள்வது முறைமையாம்.

௪.—அறக்கொடிய பாவ வழிகளிலேயிழிந்து தாய் தந்தையர்கள் கெடுவார்களானால் அப்போதும் அவர்களை இகழாமல் மனம் நொந்து கைவிட்டு விலகி நின்று நமது வாணாளை நல்வழிற் செலுத்தல் வேண்டும். நமது கரத்தில் அழகாயும் துணையாயும் இருந்த ஒரு நல்ல ஊன்றுகோல் முதலியன வழுவி மலக்குழியில் வீழ்ந்துவிட்டால் அவைகளை இகழாமல் மன நொந்து கைவிட்டு வேறு சம்பாதித்துக் கொள்வது போலென்க.

௫.—எத்துணைக் கொடுமைகளை அவர்கள் நமக்கு இழைத்தாலும் அல்லது இழிந்த நெறியிலிறங்கிக் கெட்டாலும் அவர்களை அம்மட்டில் விட்டு விலகிக் கொள்வதே சற்புத்திரர்கட்குக் கடப்பாடவதன்றி அவர்களைத் தண்டிக்கவாவது தண்டிப்பிக்கவாவது அப்புத்திரர்கள் துணியமாட்டார்கள். துணிவது நீதியன்று. அங்ஙனந்துணியும் புத்திரர்களைப் பெரியோர் புகழார்.

(இன்னும் வரும்.)

## கொலைமறுத்தல்.

ஐயா! கொலைமறுத்தல் என்னும் விஷயத்தைப்பற்றிக் கூறாத நூல்களில்லை. அதனைப்பாராட்டாத பெரியோரில்லை. உள்ள நெகிழ்வுடைய நல்ல மாந்தரெல்லாராலும் கொல்லா விரதம் மிகப் பாராட்டப்படத் தக்கதாம். "கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாணாள்மேற், செல்லாதுயிருண்ணுங்கூற்று;" கொலையென்பது, உயிர்கள் பொருந்தி வாழ்தற்கு நிலைக்களமாகிய உடம்பினின்று அவ்வுயிர்களைப் பிரியச்செய்தலாம். புண்ணியம், என்பது யாது? பாவம் என்பது யாது? என்று விசாரிக்கையில் உயிர்களுக்கு இதஞ்செய்தலே புண்ணியமும், அகிதஞ்செய்தலே பாவமுமா மன்றி வேறில்லாமையால், நூல்களாலும் பெரியோர்களாலும் விலக்கப்பட்டிருக்கிற தீய கருமங்களை ஒருவன் செய்தபோதிலும் அக்கருமங்களால் எவ்வுயிர்க்கும் துன்பமின்றி இன்பமே விளைவதாயிருக்கும் பக்ஷத்தில் அக்கருமம் புண்ணியகருமமென்றே கொள்ளவேண்டும். அப்படியே நற்காரியங்களைச் செய்தபோதிலும் அதனால்



உயிர்கட்கு எவ்விதத்திலாவது துன்பம் நேருவதாயிருக்கும் பக்ஷத்தில் அது பாவமேயாம். ஒவ்வொருவர் செய்யுங்காரியங்களும் அஃதஃது பயக்கும் இதம் அகிதங்களை நோக்கிப் புண்ணியமென்றும் பாவமென்றும் கொள்ளப்படுவதேயன்றி தொழில் மாத்திரத்தாலேயே அங்ஙனங் கொள்ளப்படுவதன்று. (இதம், இன்பம், சுகம் முதலியன ஒரு பொருட்கிளவி; அகிதம், துன்பம், துயர், முதலியன ஒரு பொருட்கிளவி; கருமம், காரியம், தொழில், வினை, வேலை முதலியன ஒரு பொருட்கிளவி.) கொலையைப் பார்க்கினும் அகிதம் வேறில்லாமையால் கொலையே பாவங்களெல்லாவற்றினும் தலையாயுள்ளது. கொல்லாமையைப் பார்க்கினும் இதம் வேறில்லாமையால் கொல்லாமையே புண்ணியங்களெல்லாவற்றினும் தலையாயுள்ளது. அதனாலே தான் "ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று" என்று, நாயனாரும் அருளிச் செய்தார். இது நிற்க; உயிர்கள், அண்டஜம், ஸ்வேதஜம், உற்பிஜம், ஜராயுஜம், எனும் நால்வகை யோனியில், தேவர், மக்கள், புள், விலங்கு, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரங்கள் என்னும் எழுவகைத் தோற்றத்தில் எண்பத்து நான்கு நூறாயிர பேதமாய்ப் பிறந்து இருந்து இறப்பனவென்று நூல்களும் நுண்ணறிவாளரும் நுவல்கின்றனர். ஆதலால் மனிதரை மாத்திரமன்று; மற்றெவ்வுயிரைக் கொல்லுதலும் கொலைப்பாவமேயாம். ஆனால் எல்லாக்கொலையும் ஒரு சமமானவல்ல. அதைச்சிறிது விரித்துக் கூறுவோம். புட்பம் என்னும் பொருளுககு வாசனை என்பது குணமாயிருத்தல் போல, உயிர் என்னும் பொருளுக்கு அறிவு என்பது குணமாம். உயிருக்கு ஜீவன் என்பது முதலிய அநேகம் பெயர்களுண்டு. ஆனமாவென்பதும் ஜீவனுக்குப் பெயராகப்பலர் வழங்குவர். ஆன்மா வென்பது கடவுளுக்கும் பெயர். அறிவு, ஞானம், உணர்வு முதலிய சொற்கள் ஒரு பொருளுள்ளன. ஆன்மாவுக்கு (ஜீவனுச்கு) உள்ள அறிவானது இந்திரியங்களின் வழியாயும் கரணங்களின் வழியாயும் நிகழ்கின்றது. முடக்குத்தூக்கமாகிய சுழுத்தி, துரியம், துரியாதிதம், முதலிய அவஸ்தைகளில் அறிவு நிகழாமைக்குக் காரணம் அப்போது இந்திரியங்களின் தொழிற்பாடு இல்லாமையேயாம். மரண மூர்ச்சை முதலிய சந்தர்ப்பங்களிலும் அப்படியே. இதற்குத திருஷ்டாந்தம் ஆஸ்பத்திரிகளில் (குளோரோபாரம்) என்கிற ஒருவித மருந்தை ஆக்கிராணிக்கச் செய்வதால் இந்திரியங்களின் தொழிற்பாடு குறைந்து அறுத்தல் முதலிய சிகிச்சைகளில் வலிதோன்றாமலிருப்பதேயாம். ஞானேந்திரியம் சுரோத்திரம், தொக்கு, சக்ஷு, சிங்குவை, ஆக்கிராணம் என ஐந்தாம். மெய், வாய், கண், மூக்கு,

செவி என்பதன் மாத்திரை சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என ஐந்தாம். தாவரங்களாகிய மரம், செடி, கொடி முதலியவை தொக்கு என்னும் ஒரே இந்திரியத்தை யுடையதாய் பரிசம் ஒன்றைமட்டும் உணருமாதலால் அவை ஓரறிவுயிர் எனப்படும். சங்கு, சிப்பி முதலியவை பரிசத்தோடு ரசத்தையும் உணருமாகையால் அவை ஈரறிவுயிர் எனப்படும். மேல் சில வகையெறும்பு கரையான் முதலிய பல்வுயிர்கள் அவ்விரண்டனோடு கந்தத்தையுமறிவதாதலின் அவை மூவறிவுயிர் எனப்படும். மேல் வண்டு, தும்பி, முதலியன அம்மூன்றனோடு உருவத்தையுமறியுமாதலின் அவை நாலறிவுயிர் எனப்படும். மேல் பசு பக்ஷியாதிகளும் பிறவுயிரும் அந்நான்கனோடு ஓசையையுமறிவதாதலால் அவை ஐயறிவுயிரெனப்படும். மனிதர் அவ்வையறிவோடு விசேடப் பகுத்தறிவுடையராதலால் ஆற்றிவுடையோரெனப்படுவார். இவ்வேறுபாட்டால் அவ்வவ்வுயிர்கட்குப் புரியும் இதாகிதம் பற்றி வருகிற புண்ணியபாவங்களும் பல வேறுபாடுடையன. உயர்திணையாகிய மனிதருக்குச் செய்யும் இதாகிதங்களிலும் பல வேறுபாடுள. அதனாலே பாபத்தின் மிகுதி நோக்கி, பிரமகத்தி, ஸ்ரீகத்தி, சிசுகத்தி என்று சில கொலைப்பாவங்களை வேறுபடுத்திக் கூறுவர். இது நிற்க; சில மனிதர்கள் மனிதரைக் கொல்லுதல்மட்டுமே கொலையென்றும் மற்றைய உயிரைக் கொல்லுதல் கொலையன்றென்றும் நினைக்கிறார்கள். இது அறியாமையாம். எல்லாவுயிர்கட்கும் இன்ப துன்ப நுகர்ச்சியுள்ளன. நாம் நமது சரீரம் முதலியவற்றில் மிக அபிமானமுடையராய் நிற்பது போலவே ஒவ்வொரு ஜீவனுமிருக்கின்றன. திருஷ்டாந்தமாக ஒரு கட்டில் மேஜை முதலியவைகளை வெளியே கொண்டுவந்து உதறினால் அதனுள் வசிக்கும் சிறு மூட்டுப்பூச்சிகள் கீழ் வீழ்ந்து தங்களுடலுக்குச் சேதம் வாராமல் காத்துக் கொள்ளும் பொருட்டு விரைந்தோடிச் சந்துகளில் புகுந்து கொள்ளுவதைக்காண்போம். பசி தாகம் முதலிய இயற்கைத்துன்ப வின்பங்கள எல்லா ஜீவராசிகளுக்குமுள்ளன. எந்தப்பக்ஷி மிருகங்களுக்கும் சீத உஷ்ண முதலிய உணர்ச்சியுளளன. அவைகளைக் கொல்லும்போது மனிதரைப்போலவே துடிதுடித்தல் பதைத்தல் கதறல் முதலிய மரணவேதனைகளை அடைகின்றன. இவைகளை யூன்றி யாராயும் விவேகிகள் இரக்கமின்றி எந்த வுயிரையும் கொல்லத்துணியார். சில ஜந்துக்களால் சிலபோது சில துன்பங்கள் நேருகின்றமையால் அதை நீக்கும்பொருட்டுக் கொல்லுதல் கூடுமெனின் அது சாமானியர்கள் கொள்ளும் துணிபேயாம். கடவுள் ஒருவருண்டென்றும் அவர் எல்லாமறியும் இயல்பினரென்றும், அறியும் பேரறிவாளர்



தம்முயிர்க் கிறுதி நேரினும் பிறிதோருயிரைக் கொல்ல நினையாரென்க. இதனாலன்றோ "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிதின்னுயிர் நீக்கும் வினை" என்றார் நாயனாருமென்க. இங்ஙனமாக தன்னூன் பெருக்கவேண்டி ஆடுமாடுகளைத் துடிக்கக்கொன்று தின்னுவோர் எங்ஙனம் இரக்கமுடையராவரோ அறியோம். முள்ளித்தேன் விரும்பி வெள்ளத்தேனை யிழப்பார் போன்று சிலநாள் பல் பிணிச்சிக்குண்டு மண்ணாயழியும் பீற்றற்றுருத்தியாகிய இவ்வுடம்பைக் கொழுக்கவைக்கவேண்டி மற்றையுயிர்களைக் கொல்லுதல் விவேகிகள் தொழிலன்றாம். இங்கு விரிவஞ்சி நிறுத்துகின்றாம். இங்ஙனமாக யாதொரு பயனுமின்றி விநோதத்திற்காக ஜீவராசிகளைப் பதை பதைக்கக் கொல்லுதல் மனிதத்தன்மையன்றாம். இனிச்சில மூர்க்கர் மனிதர்களையே கொலை புரிகின்றனர். சகிக்கமுடியாத கோபமுண்டானபோதிலும் பிறிதொருவனைக் கொல்லுவதற்கு நினைப்பது பகுத்தறிவுள்ள மனிதருக்குப் புத்தியன்று. மாம்சபக்ஷணிகளாயுள்ள தீபாந்தரவாசிகளிற்கூட அநேகர் கொலைப்பாவத்தை வெறுத்து மாமிசவுணவை யொழித்தாரென்றால், மாமிச வுணவை யெப்போதும் வேண்டாத கூட்டத்தாரில் பிறந்தோர் பலர் மனிதரையே கொலை செய்வது எவ்வளவு அறிவுகேடு. கோபங்காரணமாக ஒருவனைக் கொலை செய்திடின், உடனே அக்கோபம் நீங்கிப்பிறகு அச்சமும் பச்சாதாபமும் மனதை வருத்தி வாட்டப் பல்லோர் பழிப்பையும் அரசர் தண்டனையையும் பிறகு நரகயாதனையும் அடைவாரது தீவினையிருந்தவாறென்னை? இது நிற்க; வேறு சிலர் கடவுள் பிரார்த்தனையென்று ஆடு கோழிகளைக் கொல்லத் தலைப்படுகின்றார்கள். இது முழு மூடர் கூற்றாம். எல்லா வுயிர்கட்கும் தாயாயிருந்து காத்து வரும் கடவுள் மற்றொரு உயிரைத் தமக்காகக் கொல்லும்படி விதிப்பாரா? அக்கொலையினால் கடவுளுக்கு வரும் பயன் என்னை? சற்று விவேகிகளாகிய மனிதருக்கே இது அருவருப்பைத் தருமாயின் கடவுளுக்கு எவ்வாறு சம்மதமாகும்? வேறு சிலரோ சிறிய வுயிர்களைக் கொன்றால் அதனாற்கொலைப்பாவம் வராதென்பர். இதுவும் அறியாமையாம். உயிருள்ளே சிறிய வுயிர் பெரிய வுயிரென்னும் வேற்றுமை கிடையா. சரீரங்களிலேயே பெரிது சிறிது என்னும் வேறுபாடுளன. எந்த உயிரும் கருப்பத்தில் உற்பத்தியாகும்போது மிகச்சிறிதாகவிருந்தே பிறகு பெரிதாய் வளரும். அதுபற்றியன்றே சிறிய குழந்தையைக் கொன்றாலும் பெரிய கிழவனைக் கொன்றாலும் ஒரே குற்றமாகக் கொண்டு ஒரே விதமாய் அரசாங்கத்தார் தண்டிக்கின்றனர். கொலை புரியும் பாவிகட்கு நற்புத்தி கற்பிக்கவேண்டியும் அவரால் பின்னும் கொ

லை நிகழாது தடுக்கவேண்டியும் உலகோபகாரமாக அரசர் அக்கொலைபாதகரைத் தண்டித்தடக்குவது கடமையாம். தண்டிக்காதபோது உலகில் கொலைத்தொழில் மலிய இடமுண்டாமாதலாலென்க. (இன்னும்வரும்.)

## நீதி நெறிகள்.

### கோபத்தையடக்கல்.

"ஆறுவது சினம்"

முன்னமே ஒளவையார் அருளிச்செய்த நீதிவசனங்களில் ஒன்றாகியும், முதன்மையாகியுமிருக்கும் "அறஞ்செய விரும்பு" என்னும் வாக்கியத்தின் கருத்துகளைத் திரட்டி ஒருவாறு கூறினோம். இனிமேல் "ஆறுவது சினம்" என்னும் நீதிவாக்கியத்தில் அடங்கி இருக்குங் கருத்துகளைச் சற்று விவகரிப்போம்.

"ஆறுவது சினம்" என்றால் "உனக்குள்ளே தணியவேண்டியது கோபம்" என்று பொருள் கூறப்படுகின்றது. அதாவது கோபத்தை எல்லா விஷயங்களிலும் எவர்களுமே அடக்கவேண்டுமென்பது கருத்து. கோபமானது நெருப்புக்குச் சமானமாகும். கோபகுணமாவது என்னவெனில், தனக்கு அல்லது பிறருக்கு வாஸ்தவமாகவேனும் அல்லது உத்தேசமாகவேனும் தீங்குசெய்யவேண்டுமென்றாவது அல்லது தண்டிக்கவேண்டுமென்றாவது அல்லது பழிவாங்கவேண்டுமென்றாவது சரீரத்தில் தீப்பட்டால் எப்படியோ அப்படி மனதில் உண்டாகிற கொடுமையான ஓர்வித சலனமாம். இங்ஙனம் கோபம் என்று சொல்லப்பட்ட மனோசலனம் முக்கியமாய் தமோ குணத்தின் ஒரு பகுதியாம். அக்குணத்தின் அங்கங்களாவன :—பேருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை ஆகிய இவைகளேயாம். கோபம் என்று சொல்லப்படுவது தமோ குணத்தின் ஓர்பகுதி யேனும், அது பொதுவாய் மற்ற அங்கங்களுக்கும் பொருந்தியது. பூர்வகாலமுதல் நடைபெற்றுவரும் சரிதங்களை நாம் பரிசோதித்துணருவோமானால், கோபம் என்பது சத்துவம், இராஜஸ் என்கிற இரண்டு மேலான குணங்களினுடையவும் அங்கங்களுக்குரிய மகான்களிடத்துக்கூடக் குடிகொண்டிருந்ததென்று நிச்சயமாய் அறிவோம். ஆதலால் கோபமில்லாமல் வாழ்ந்தவர்களும், வாழ்பவர்களும எவர்களோ அவர்களை இப்பேர்ப்பட்டவர்களென்று நிச்சயித்தறிவது மிகவும் பிரயாசமாம்.



கோபம் என்று சொல்லப்படுவதெதுவோ அதிலும் அநேக விரிவினைகளுண்டு. அது முக்கியமாய் அவரவர்களுடைய குணத்தை யனுசரித்தே நிற்கின்றது. சத்துவம், இராஜஸ் என்னுங் குணங்களையுடையவர்கள் விசேஷமாய் கோபமில்லாதவர்களாகவே இருப்பார்கள். ஒருவேளை அவர்களுக்கு எப்போதாவது கோபம் வரினும், அக்கோபம் குற்றமற்றதாகவே இருக்கும. தமோகுணமுள்ளவர்களிடத்துக் காணப்படும் கோபந்தான் குற்றமுள்ளதாகவிருக்கும். பேருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம், மறதி, பொய், காமம், கொலை ஆகிய இக்கெட்ட குணங்கள் பிடிபட்டவர்களெவர்களோ அவர்களிடத்துத்தான் கோபத்தின் எழுச்சி மிகுந்து பிறருக்குக் கேடு விளைவிக்கக் கூடியதாகவிருக்கும். கடுங்கோபம், குரோதத்தினால் உண்டாகிற கோபம், மனஸ்தாபத்தினால் உண்டாகிற கோபம், பிறர் செய்யுங்காரியங்களினால் மனதுக்குக் கசப்புண்டாகி வரும் கோபம், திடீரென்று பொங்கி எழுவதினால் உண்டாகுங்கோபம், பெருங்கோபம், தீராக்கோபம் ஆகிய இப்பேர்ப்பட்ட கோபகுணங்கள் முக்கியமாய் தமோகுணமுள்ளவர்களிடத்துத்தான் அதிகரித்து நிற்கும். பேருண்டி நெடுந்துயில் ஆகிய இப்பேர்ப்பட்டவர்களையுடையவர்களுக்கு இயல்பாகவே கோபம் அதிகரிக்குங்காரணங்கொண்டு நம் பெரியோர் நாளுக்கு நாள் ஆகாரத்தையும், நித்திரையையும்எவர்களும் குறைத்து வரவேண்டுமெனக் கூறியிருக்கிறார்கள். நம்பெரியோராகிய ஆரியர்கள் விதித்த கட்டளையின்படி நாம் நடப்போமாகில், கோபகுணம் நம்மிடத்துச் சிறிதும் அணுகாது. கோபத்தினால் விளையுங் கேடுகள் அனந்தமுளவாதலின், அது எவர்களுக்கும் தகாது. இதைப்பற்றி அடுத்தமுறை கூறுகிறோம்.

## பழமொழிகள்.

அடங்காப் பெண்ஜாதியால் அத்தைக்கும் நமக்கும் பொல்லாப்பு.
அடங்கினபிடி பிடிக்கவேணுமேயல்லாமல் அடங்காப்பிடி பிடிக்கலாகாது.
அடாது செய்தவர் படாதுபடுவர்.
அடி அதிரசம் குத்து கொழுக்கட்டை.
அடிக்கடிக்கப் பந்து அதிக விசை கொள்ளும்.
அடிக்காயிரம் பொன் கொடுக்கவேணும்.
அடிக்கிற காற்று வெயிலுக்குப் பயப்படுமா?

# ADVERTISEMENTS.

*Established 1880.*

HEALTH REGAINED & STRENGTH MAINTAINED.


**Promptly, Effectually, Permanently and Agreeably by wearing**

THE ORIGINAL, GENUINE AND WORLD-FAMED

**Electro-Galvanic Rings, Lockets, Belts, &c., &c.**

*The Blood is the Life, but Electricity is the Life of the Blood.*

Sold more than 100,000. And Daily Increased.




Testimonials too numerous to mention.

**WORLD-RENOWNED.**

**Beware of Worthless Imitations.**

*Try the wonderful divine gift and let the result speak for itself.*

E. G. RINGS, LOCKETS, &c., universally approved by the Leading Physicians as the Best, Safest and Most Effectual Remedy for :—Kidney, Indigestion, Debility, Nervousness, Catarrh, Gout, Sores, Toothache, Asthma, Colds, Pleurisy, Scrofula, Weakness, Liver, Headache, Heartburn, Pimples, Swollen joints, Sciatia, Aches, Dysmenorrhœa, Diarrœa, Menorrhœa, Epylepsy, Hysteria, Fever, Lumbago, Spinal. Paralysis, Rheumatism, Constipation, Quinsey, Skin disease, Bronchitis, Nearulgia, Female Complaints, &c., &c.

They also act as safe guards against Cholera and Small Pox.

E. BELT.—In cases of Rheumatism, Liver, Stomach, Kidney, Female Complaints, Paralysis, &c.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. 9-OCT. 94

# வித்தியாபானு.

புஸ். I.]  1894-௵ செப்டம்பர்-௴.  [நெ. 8.

## புருஷர் தம் மனைவியரை நடத்து முறைமை.

——:o:——

II.

இயல்பாகவே நம் நாட்டு உயர்குல ஸ்திரீகள் தங்கள் புருஷர்களிடத்து பக்தி விசுவாசமிருந்தவர்களென்பதிற் சந்தேகமில்லை. இவ்விதமாக அவர்கள் தங்கள் புருஷர்களிடத்து பக்தி விசுவாசம் வைப்பதற்குக் காரணங்கள் பலவாறுள. புருஷர்களைத் தவிர தெய்வம் வேறு ஸ்திரீகளுக்குக் கிடையாதெனவே இந்து நூற்கொள்கை. இதற்கு,

"தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

என்கிற குறள்வாக்கியமே போதுமான சாட்சியாம். அன்றியும் பெண்களைப் பெற்ற தாய்தந்தையர்கள் அப்பெண்கள் சிறு வயதுடையவர்களாக விருக்குங் காலமுதற்கொண்டே அவர்களை நன்னெறிகளிற் பழக்கி வருகிறார்கள். தாய்மார்கள் தங்கள் தங்கள் வீடுகளில் ஒழுகும் ஒழுக்கங்களும், அனுசரிக்கும் விரதங்களும், மற்ற நடவடிக்கைகளும் சிறு பெண்களுக்குப் புத்திமதிகளைக் கற்பிக்கின்றன. ஆதலால் சிறுபெண்கள் தங்கள் புருஷர்களது வீடுகளுக்குச் செல்லுங்காலம் வரையில், தங்களுடைய தாய்தந்

தையர்களின் நடவடிக்கைகளைப் பார்த்துத் தாங்களும் அவ்வாறாகவே நடக்கவேண்டுமென்கிற மன்வுறுதியானது அச்சிறு பெண்களுக்கு உண்டாகின்றது. முக்கியமாய் மனிதர்களுடையவும், ஸ்திரீகளுடையவும் நடவடிக்கைகளின் குணதோஷங்களுக்கு மூலகாரணம் சகவாசம் (Company) என்பதுதான். நல்ல சகவாச முள்ளவர்களிடத்து எப்போதும் நற்குணநற்செய்கைகளே மிகும். கெட்ட சகவாசமுள்ளவர்களிடத்து எப்போதும் தீக்குணங்களும், தீச்செயல்களுமே அதிகரித்து நிற்கும். உயர்குலமுதல் இழிகுலம் வரையிலுமுள்ள ஸ்திரீகளையும், அவர்களது நடத்தைகளையும் நாம் நேர்நேரே பார்த்துணருங்கால், உயர்குலமொன்று தவிர மற்றையவினத்தார்களிலிருக்கும் ஸ்திரீகளிற் பெரும்பாலர் தங்கள் தங்கள் கணவர்களிடத்தும், சுற்றத்தார்களிடத்தும் பயபக்தி விசுவாசமென்பதைச் சிறுதும் பாராட்டாமல் காமக்குரோத முதலானவைகளிற் மூழ்கி எப்போதும் வன்சொற்களையே வழங்கி வீண்வழக்குரைத்துத் திரிகிறார்களென்கிற உண்மை வெளிப்படும். இப்பேர்ப்பட்ட இழியகுலத்தவர்கள் இருப்பிடங்களில் உயர்குலத்தவர்கள் வசிப்பார்களேயாகில், அவ்விழிய குலத்தவர்களின் குணம் உயர்குலத்தவர்களுக்கும் பிடிபடும். இவ்விதமாக சகவாசதோஷத்தினாலே கெட்டுப்போன உயர்குலஸ்திரீகளுமிருக்கிறார்கள். ஒரு ஸ்திரீயானவள் தன் புருஷனை ஐந்து அல்லது ஆறு மணிகாலம் சரமாரி பொழிந்தாற்போல் வன்சொல் வழங்கி விடாமல் வைதுகொண்டிருந்ததைப் பார்த்ததாக ஓர் ஐரோப்பியர் கூறுகிறார். இழியகுலத்தார்களுக்கு இச்செய்கை இயல்பாயினும், உயர்குலத்தார் இவர்களிடத்து சகவாசஞ் செய்வதில் மிகுந்த ஜாக்கிருதையாயிருக்கவேண்டும். கல்வி, அறிவு, ஒழுக்கங்களால் மிகுந்த மாந்தர்கள் தங்கள் கண்மணிகளுக் கொப்பான பெண்மணிகளை இழியகுலத்துப் பெண்களிடத்து சகவாசஞ் செய்யாமலிருக்கும்படி அடிக்கடி எச்சரிக்கை செய்துவரவேண்டும். ஸ்திரீகள் வன்சொல் வழங்குதல் கசப்புள்ள பதார்த்தங்களை யுட்கொள்ளுந்தன்மை



போல் அறிவால் நிறைந்தவர்களுக்கு மிகுந்த வெறுப்பைக்கொடுக்கத்தக்க விஷயமாம். பெண்கள் இளம் பருவமுதற்கொண்டே வன்சொல் வழங்காவண்ணம் பாதுகாக்கவேண்டிய முறைமை முதலில் பெற்றோர்களையும், பின்னர் அப்பெண்களை மணஞ்செய்துகொண்ட கணவர்களையும் சார்ந்ததாகவிருக்கின்றது. எவ்வழி நோக்கினும் ஆண்மக்களே பெண்மக்களை நன்னெறிகளிற் செலுத்தவேண்டியது கடமை. முக்கியமாய் ஒரு குடும்பத்திற்கு மூலமாயிருப்பவர்கள் மனையாளன், மனைவி ஆகிய இருவர்களேயாம். இவ்விருவர்களும் முதல் முதல் சீராக நடந்தால் மாத்திரம் அவ்விருவர்களிடமாகப் பிறக்கும் மக்களும் சீர்திருத்த மடைவார்கள். ஆகையால் ஓர் மனைக்கு நாயகனாகிய ஆண்மகன் எப்போதும் தனது நடவடிக்கைகளை முதலில் சீர்திருத்திக்கொள்ள முயலவேண்டும். விசுவாசம் என்பது ஆண்பாலர் பெண்பாலர் என்கிற இருவகையாருக்குமே உரியதாதலால், மனைக்கு நாயகியாகிய ஸ்திரீகளிடத்து மாத்திரம் அக்குணம் விளங்கவேண்டுமென்று சொல்லுதல் சிறந்த நியாயமென்று கொள்ளற்பாற்றன்று. விசுவாசமென்னுங் குணத்தை ஆத்தியம் மனைக்கு நாயகனாய் விளங்குகிறவன் எவனோ அவனே கைக்கொள்ளவேண்டும். மனையாளன் தன் நாயகியின்மீது எவ்வளவுக் கெவ்வளவு விசுவாசம் பாராட்டுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு அந்நாயகியும் தன் நாயகன்மீது விசுவாசம் பாராட்டுவாள். அப்படிக்கன்றி நாயகன் தன் நாயகியின்மீது சிறிதும் அன்புபாராட்டாதவனாய் பரத்தையர்களது வலைகளிற் சிக்கி அவர்களது ஆடல்பாடல்களைக் கண்டு களிப்புற்று தன் இஷ்டம்போல் அவர்களுடன் உல்லாசமாய்த் திரிந்து காலங்கழிக்கவேண்டுமென்கிற எண்ணத்தை உட்கொள்ளுவானாகில், அவன் மனையாள் தன் இனத்திற்குரிய சுபலக்ஷணங்களையும், மற்றைய நற்குண நற்செய்கைகளையும் கைக்கொண்டு வாழ்தலரிது.

# கெட்ட தண்ணீரை அருந்துவதினால் விளையும் தீமைகள்.

## I.

நாம் தினந்தோறும் உட்கொள்ளும் அன்னபானாதி வஸ்துக்களில் அதிக விசேஷமாகக் கவனிக்கவேண்டியபொருள் தண்ணீர். பார்வைக்கு சுத்தஜலம்போல் காணப்படுகிற எவ்வகைத் தண்ணீரையும் சாதாரணமாய் ஜனங்கள் நல்லஜலம் என்றேமதித்து அதை உட்கொள்ளுகிறார்கள். எந்த ஜலத்தையும் கூடியவரையில் நாம் பரீக்ஷித்தறிந்த பின்னரே அதை உட்கொள்ளவேண்டும். பரீக்ஷித்தறியாமல் எந்த ஜலத்தையும் சுத்தஜலமென்று கருதி நாம் உட்கொள்ளுவோமேயானால், அது எத்தனையோ கெடுதிகளை பின்னால் விளைவிக்கும். நாம் தினந்தோறும் பானஞ்செய்கிற தண்ணீரானது ஜனசௌக்கியத்திற்கு எப்படி ஆதாரமென்கிற விஷயத்தை அநேகர் கவனித்துப் பார்க்கிறதேயில்லை. இவ்வுலகில் மனிதர்கள் ஜீவித்திருப்பதற்கு முக்கிய ஆதாரமாயிருக்கும் பதார்த்தகுண நிச்சயத்தையறிந்த பேர்களே சொற்ப பெயர்தானுள்ளர். அன்ன பானாதி விஷயங்களிற்கூட இன்னும் அநேக ஜனங்களுக்குள் மூடத்தனமும், முரட்டாட்டமும், அவநம்பிக்கையும், துர் அபிமானமும் குடிகொண்டிருக்கின்றன. "தலையில் எழுதினவன் கெட்டியாய் எழுதியிருப்பானேயானால், எதைச் சாப்பிட்டால் என்ன? எதைக் குடித்தால் என்ன"? என்று சொல்லுவது சில முழுமூடர் வழக்கமாக விருக்கின்றது. இவ்விதமாக அன்னபானாதி விஷயங்களிற் தப்பபிப்பிராயங்களும், மூடத்தனமும் ஜனங்களிடத்திற் குடிகொண்டிருத்தலால், உலகில் விளையும் அனந்தம் கெடுதிகளுக்கெல்லாம் அவ்விதமான அபிப்பிராயங்களும், மூடத்தனமுமே காரணங்களாக விருக்கின்றன. நமது தேசத்தின் நாற்புறங்களிலும் அநேக வருஷகாலமாக விஷபேதி, விஷச்சுரம், சின்னம்மை, பெரியம்மை, சொறிசிரங்கு முதலிய சில அபாயகரமான கொடிய தொத்துவியாதிகள் உண்டாவதற்குக் காரணம் என்னவென்று அநேகர் ஆலோசித்துப் பார்க்கிறதேயில்லை. சர்க்கார் குடிமதிப்புக் கணக்கிலிருந்து வருஷாவருஷம் யமலோகஞ் சேருகிறவர்களின் சங்கையைத் தனியேப் பிரித்துப் பார்ப்போமானால், அவர்கள் இறந்துபோனதற்குக் காரணம் அநேகமாய் மேற்கூறிய வியாதிகளென்றே அறிவோம். சென்ற 1877-வருஷத்தில் சென்னை



இராஜதானியில் மாத்திரம் வாந்திபேதியால் இறந்துபோனவர்களின்கணக்கு 1000-க்கு 12·2 என்றும், வசூரியால் 3·02 என்றும், விஷக்காய்ச்சலினால் 16·06 என்றும்; 1885-வருஷத்தில் மேற்படி இராஜதானியில் வாந்திபேதியால் இறந்துபோனவர்களின் தொகை 3,85,928 என்றும், வசூரியால் 2,80,630 என்றும், விஷக்காய்ச்சலால் 33,96,239 என்றும் கண்டறியப்பட்டிருக்கின்றது. மேற்கூறிய கொடிய வியாதிகளில் மரணத்தைப்பெரும்பாலும் விளைவிப்பது விஷக்காய்ச்சல் ஒன்றுதான். சென்ற 1879-வருஷத்தில் இந்துதேச முழுமையும் இறந்துபோனவர்களின் ஜனத்தொகை ஏறக்குறைய ஐம்பது லக்ஷம் எனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. மேற்படி தொகையில் முப்பத்தைந்து லக்ஷம் ஜனங்கள் விஷச்சுரத்தாலும்; 2,65,000 பெயர்கள் வாந்திபேதியிலும் மாண்டுபோனார்கள். சில வருஷங்களில் மேற்சொன்ன தொகையைக் காட்டிலும் அதிகமான ஜனநஷ்டமும் உண்டாகின்றது. நமது சென்னை இராஜதானியைச் சார்ந்த நாடுநகரங்களில் மட்டும் சென்ற 1879-வருஷத்தில் இறந்துபோனவர்களின் கணக்கு ஏறக்குறைய ஐந்து லக்ஷம் என்பதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்வைந்து லக்ஷம் பேர்களில் 2,85,477 பெயர்கள் ஜுவரத்தாலும், 13296 பெயர்கள் வாந்திபேதியாலும் மாண்டுபோனார்களென்பதாகத் தெரியவருகின்றது. இவ்வாறு வருஷாவருஷம் உண்டாகும் ஜனச் சேதத்திற்கு முக்கியமாய் வியாதிகளே காரணமாகவிருக்க, நம் இந்துதேசத்திலிருப்பவர்களிற் பெரும்பான்மையோர் இவ்விஷயத்தில் இன்னும் தப்பபிப்பிராயங் கொண்டிருப்பது ஆச்சரியம்! வருஷாவருஷம் உண்டாகும் ஜனச் சேதத்தை நமது யுக்தி யனுபவங்களால் கூடியமட்டும் தடுக்கக்கூடுமா அல்லது தடுக்கக்கூடாதா என்கிற விஷயத்தை நாம் ஆலோசித்தறியவேண்டிய தவசியம். வியாதிகளுண்டாவதற்குப் பலகாரணங்களிருந்தபோதிலும், நாம் உட்கொள்ளும் பதார்த்தங்களே அவ்வியாதிகளுக்கு ஹேதுகரமாயிருக்கின்றன. எல்லாம் விதியின்படியே முடிகிறதென்று வைத்துக் கொள்ளுவோமானால், உலகில் வைத்திய முறைமை என்பது யாது பயனைக் கருதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது? ஆயுள்வேதம் என்பதாகிய ஒன்று நமக்குள் உண்டன்றோ? முன்னாளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பற்பல நூற்கொள்கைகளை நாம் அனுசரித்துவரும்பொழுது, வைத்திய சாஸ்திர முறைமையொன்றில் மாத்திரம் நாம் நம்பிக்கையற்றிருக்கக் கூடுமோ? கூடாது. உண்மையாகவே நாம் அனுபவத்தில் எல்லா நூல்களைக் காட்டிலும், வைத்திய

நூல் ஒன்றில் மாத்திரம் விசேஷ நம்பிக்கை வைத்திருக்கிறோம். அப்படியிருக்க, நம்மவர்களிற் பெரும்பாலர் விதிப்படி எல்லாம் நடக்கும் என்கிற அயுக்தமான பேச்சுகள் பேசுவது நடவடிக்கைகளுக்கு முற்றும் விரோதமன்றோ? ஆதலால் வருஷாவருஷம் சிறுவயதிலும், நடுப்பிராயத்திலும் மணலிற் பிடுங்கிய கிழங்கின் தன்மையைப் போலுள்ள ஆள்கள் மரணமடைவதற்குக் காரணம் துர்வியாதிகளே. துர்வியாதிகளுக்குரிய முக்கிய காரணங்களுள் நாம் உட்கொள்ளும் அசுத்தமான பதார்த்தமுமொன்றாம். இதனால் அசுத்தமான ஜலத்தை நாம் உட்கொள்ளுவதினால் எத்தனையோ கொடிய வியாதிகள் நம்மைப் பிடித்து வருத்தத்துக்குள்ளாக்குகின்றனவென்னு முண்மை நிதர்சனமாக விளங்குகின்றது.

## செய்நன்றியறிதல்.

(வித்தியாபானுவின் 130-வது பக்கத்தொடர்ச்சி.)

சென்றபத்திரிகையில் தாய் செய்த நன்றிகளைப்பற்றி விரித்துக் கூறினோம். அதனுள்ளேயே தந்தை செய்நன்றி பெரும்பாலும் ஒத்துவியாபித்து நிற்பதாலும், இல்லறத்திலிருந்து நம்மை யீன்றெடுத்து அன்புடன் வளர்த்து ஆதரித்த நமது தாய்க்கும் நமக்கும் வேண்டிய உண்டி உடை முதலிய எல்லாப் பொருள்களையும் நெற்றி வியர்வை நிலத்திற்சொட்ட வெளியேபோய் எந்தத் தொழிலேனும் ஏற்றதொன்றைச் செய்து சம்பாதித்துக்கொடுத்து நமக்கு யாதொரு தீங்கும் நேராதுகாவல்புரிந்து வளர்த்த கைம்மாறில்லாத கருணைத்திறம்படைத்த நமது தந்தையார் செய்த நன்றிக்கு நாமென்ன கைம்மாறு செய்யப்போகிறோம்? ஒருவன் இருபிராயக்குழந்தையா யிருக்கையில் ஒரு நாளிரவிலே வைசூரிரோகவேகம் சகிக்கலாற்றாது கதறுகையில் அவனது தாய் தனது நித்திரையையும், நல்லுணவையும், சுகத்தையும் இழந்து அவனையெடுத்து மார்புடனணைத்துக்குந்தியிருந்து குயில்போலுங் குரல்காட்டி நீட்டும்பாட்டுகளாலே அவன் அழாதபடி செய்துகொண்டிருக்க, அவன் தந்தையும் அந்த அர்த்தராத்திரியிலே தனது தூக்கத்தை நீக்கி ஏக்கங்கொண்டு அவ்வைசூரிக் கேற்றதோர் மருந்திருக்கும் இடத்தை நாடி நடந்து கல்லும் முள்ளும் கால்களிலுருத்த மேட்டிலேறிப் பள்ளத்தில் வீழ்ந்து, சேற்றில் வழுக்கி வழியிலெதிர்ப்படும் துஷ்ட விலங்குகள் முதலிய எதனையும் சட்டை செய்யா



து அரைமணிநேரத்திலே ஐந்து மைல் தூரம்பஞ்சாய்ப் பறந்து கெஞ்சாதவரை யெல்லாம் கெஞ்சி அஞ்சனம்போன்ற மஞ்சன மருந்து கொஞ்சம் சம்பாதித்து, அதனாலே உள்ளத்திலெழுந்த சந்தோஷவெள்ளம் வந்தவழியில் நொந்தலைந்த ஆயாசங்களை அரைநொடியில் மாற்ற புதையல் கண்டெடுத்தவர் திரும்புவதுபோல் விரைந்து திரும்பி அவன் தாயிடம் வந்து அடீ! நமது குழந்தையின் நோய்க்கு மருந்து தேடிவந்தேன் என்று கொடுக்க அவள் அதை வாங்கி அவனுக்குக் கொடுத்து உட்கொள்ளச்செய்து இனி நமது குழந்தை சுகமடையும் என்று மனமகிழ்ந்திருந்த அத்தந்தைதாயார் பெருங்கருணைக்கு அவன் புரியும் கைம்மாறு யாது? நமக்கு நல்ல கல்வி வருத்தல்வேண்டுமென்னும் அவாவால் திரிசிரபுரத்திலேயுள்ள ஹைஸ்கூலிலோ சென்னையிலுள்ள செந்தமிழ்ச் சங்கத்திலோ கோயமுத்தூரிலுள்ள கோவிந்தாச்சார் ஸ்கூலிலோ வைக்கக் கருதித் தான் உண்பதையும், உடுப்பதையுங்கூடச் சிறிது குறைத்து பத்தெட்டுப் பணஞ் சேர்த்துப் பள்ளியில்வைத்துப் படிப்பித்த தந்தையின் நன்றிக்கு நாம் தரும் கைம்மாறு யாது? இவ்விருவரும் ஒவ்வொரு நிமிஷத்திலும் நமக்குச் செய்திருக்கிற எண்ணிறந்த நன்றிகளை எதனையென்று நாம் எண்ணிச் சொல்லுவோம்? எதற்கென்று கைம்மாறு புரிவோம்? மழைபொழியும் மேகத்திற்கு உலகத்தார் யாது கைம்மாறு புரிவர்? அம்மேகத்தை நோக்கி மெய்த்தெய்வம் நீயேயென்று கைகூப்பி வாழ்த்துவதன்றி வேறு யாது செய்வோம்? அம்மேகத்தினும் சிறந்த இத்தாய்தந்தையர் செய்நன்றிகட்கும் அவ்வாறே நாம் வந்தனங் கூறுவதன்றி வேறு யாது செய்வோம்? இதனாலன்றோ,

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்”

என்றார் அன்னையாரும். ஆனால் அத்தகைய தாய்தந்தையர்கட்குப் புத்திரராகிய நாம் செயற்பாலதாகிய உதவியும் ஒன்றுண்டு. அதாவது;

“மகன்றந்தைக் காற்று முதவியிவன் றந்தை
யென்னோற் றான்கொல் லென்னுஞ் சொல்.”

“ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.”

என்பது முதலிய அருள்வாக்கியங்களைச் சிந்தித்தலினால் அது விளங்கும். நாம் கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்தவராகி நல்வாழ்வுபெறல்வேண்டுமென்னும் கவலையே பெரிதுங்கொண்டு படாதபாடுபட்டு நம்மைக் காத்து வந்தவர் தந்தைதாயரே யாதலினால் அவர்கள் பேரவா இருந்த

வாறே நாம் நம்மைக்கண்ட பலரும் "இவனைப் பெற்ற தந்தைதாயார் என்னதவஞ் செய்திருந்தார்களோ கல்வி யறிவு ஒழுக்கங்களிற் சிறந்த இந்நற்புத்திரனைப் பெறுதற்கு" என்று கூறும்படிச் செய்யவேண்டும். (நல்லன சிந்தித்து, நல்லன புரிந்து, நலலனபேசி யாவர்க்கும் நன்மையேநாடி ஆயுளை நன்னெறியிற் கழித்தல்வேண்டும் என்பது கருத்து.) அப்படிச் செய்வதே தந்தைதாயர்க்கு நாம் செய்யும் கைம்மாறும். இப்படிப்பட்ட புத்திரரையே சற்புத்திரர் என்பார் உலகத்தோர். இத்தகையோரே "செய்நன்றியறித லென்னும் விலையற்ற ஆபரணத்தைப் பூண்டு விளங்குபவராம். ஆதலினால் அன்பர்காள்! நாமெல்லாரும் நமது தாய் தந்தையர்களை ஒளவையார் கூறியபடி தெய்வங்களென்றே துணிந்து மனமொழி மெய்களாலும் இடையறு வழிபாடு புரிந்து வாழ்த்துவோமாக. அவர்கள் இறந்த பின்னரும் அவர்கள் பொருட்டுச் செய்யத்தக்க காரியங்கள் எவையெவை யென்று ஒவ்வொரு மதஸ்தர்களிலும், ஒவ்வொரு ஜாதியார்களிலும் அவரவர் பெரியோர்களால் விதிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தந்தக் காரியங்களை அவ்வவ்வாறே சிறிதும் வழுவாது இயற்றி வருதலிலே பெருஞ்சிரத்தையும் ஊக்கமுங்கொண்டு முன்னிற்போமாக. விரித்தாற் பெருகுமாதலால் தந்தைதாயார் செய்நன்றியறிதலை இம்மட்டில் பூர்த்திசெய்து இனி குரு அரசன் கடவுள் என்னும் முத்திறத்தார் செய்நன்றிகளைப்பற்றிச் சிறிது விசாரிக்க முற்படுவோம்.

## கொலைமறுத்தல்.

(வித்தியாபானுவின் 134-வது பக்கத்தொடர்ச்சி.)

இது நிற்க; உயர்திணைகளைக் கொலைசெய்வதுபோல அஃறிணையுயிர்களைக் கொல்லுதல் அத்துணைப்பெருங்குற்றமாகாதென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்த உண்மையேயாயினும் அஃறிணையுயிர்களில் ஒன்றாகிய பசுக்களைக கொல்லுதல்மட்டும் உயர்திணைக்கொலையைப் போலவே கொள்ளத்தக்க பெரிய பாவமாமென்று சில வகுப்பார் கூறுவர். அவர் அங்ஙனங்கொள்வது உசிதமோ அநுசிதமோ வென்று ஆழ்ந்து யோசிக்குங்கால் உசிதமென்றே (லௌகிக யுக்தியாலும்) விளங்குகின்றது. எங்ஙனமெனின் அப்பசுக்களால் உலகத்தார்க்குண்டாகும் அளக்கரிய உபயோகத்தைப்பற்றிச் சிந்தித்தால் அவ்வுண்மை விளங்குமென்க. அதன் உபயோ



கத்தைச் சுருக்கிச் சொல்லுவோம். இப்பசுக்கள் மனிதராகிய நமக்குத் தன் சரீரத்திலிருந்து விளைகின்ற அமுதமாகிய பால், நெய், மோர் முதலியவைகளைக் கொடுக்கின்றன. உயர்ந்த சரக்குகளிலொன்றாகிய கோரோசனையை உதவுகின்றன. அதன் சாண மூத்திரங்கள் எத்தனையோ வகையாக நமக்கு உபயோகப்படுகின்றன. அதன் சரீரத்திலுள்ள தோல், நரம்பு, எலும்பு, இறைச்சி, கொம்பு முதலிய எல்லாவுருப்புகளும் பற்பல வகையிலே உலகத்தார்க்கு உபயோகப்படுகின்றன. இப்பசுக்கள் உயிருடனிருக்கும்போதும் இறந்தபின்னும் எண்ணிறந்த வழிகளிலே உலகத்திற்குப் பெரும்பயன்படுமாறு உய்த்துணர்வார்க்கு அப்பசுக்களிடத்திலே கரை கடந்த இரக்கமுண்டாகத்தடையில்லை. பசுக்களில்லாவிடின் ஆண்பசுவெனப்படும் எருதுகளுமில்லையாமன்றோ? அதனால் பசுக்களின் அபிவிருத்தி உலகத்தில் எப்போது குறையுமோ அப்போது மனிதர்க்கு நல்லுணவு குறைதல் மாத்திரமோ? உணவுக்கு முக்கியாதாரமாகிய உழவுத்தொழிலும் நிலைதளரும். அதுமட்டோ! வியாபார உத்தியோகங்களும் மற்றெவ்வகைக் கைத்தொழில்களும் ஊறுபடும். பசுக்கள் அறவே உலகத்தில் இல்லாதொழியுமாயின் அரைக்கணமேனும் பிறகு உலகம் ஜீவித்து நிற்க வல்லதோ? நில்லாதென்றுணர்க. ஆதலினாலே இப்பசுக்களைக் கொலை புரிபவர் பெரும்பயனைக் கெடுத்துப் பெருநஷ்டத்தை உலகத்துக்கு உண்டாக்குபவராக முடிதலினாலே அக்கொலையைப் பெரிய பாவமென்று சில வகுப்பார் கூறுவது ஞாயமென்றே உணர்க. வட்டியை விரும்பி முதலிழந்த கதைபோலச் சிறிது மனம் இரங்காது இறைச்சியின் பொருட்டு இப்டசுக்களைக் கொல்லுகிறவர்கள் அறிவில்லாத சிறுவரென்றே விவேகிகளால் மதிக்கப்படுவர். கைநிரம்பக் கிடைத்த பொன்னின் உபயோகத்தை உணரமாட்டாது அதைக்கொடுத்து அதற்குச் சரியிடையுள்ள கழற்காயை வாங்கிக்கொண்ட அறிவில்லாப்பிள்ளையோடு தானே அவர் சேர்க்கப்படுவாரென்க. அதனாலே உலகத்தை யாளும் அரசர்கள் இப்பசுக்களின் பெரிய உபயோகத்தையும் அது குறைவதாலே உலகத்தார்க்குப் பெரு நஷ்டம் உண்டாகுமென்கிற உண்மையையும் நீள நினைந்து அப்பசுக்களின் அபிவிர்த்திக்குக்குறைவு நேராவண்ணம் பாதுகாத்து அது மேய்தற்கு வேண்டிய புலன்கள் விடுத்து நோய் முதலிய அணுகாமற் காத்துவரவேண்டுவதோடு அப்பசுக்களைக் கொல்லத்துணியும் வன்கண்ணர்களைக் கண்டித்துத் தடுத்து உலக நன்மையைப் பரிபாலித்தல் வேண்டுமென்க. இது நிற்க; சிலர் தேவதாப்பிரீதியாகுமென்று

மௌடிகத்தால் ஆடு கோழிகளைக் கொல்லுகின்றார்கள். அவர்கள் சிறிது ஞாயங்களைச் சிந்தித்தால் ஒருபோதும் உயிர்க்கொலை செய்யத்துணியார். என்னை? நல்ல பால், பழம், சருக்கரை, சருக்கரைப் பொங்கல், நாளிகேரம், பச்சையரிசி, பாசிப்பயிறு, நெய், தேன், பலகார பாயாசாதிகளாகிய இப்பொருள்களை விரும்பியேற்றுவேண்டிய வரங்களையருளாத தெய்வந்தானோ ஆட்டுக்குடல், கோழிக்குடல், பன்றியிரத்தம் முதலிய அருவருக்கத் தக்க காதவழி துர்க்கந்தம் வீசுகின்ற புழுத்த புலாலை மகிழ்ந்தேற்று வேண்டிய வரங்கொடுக்கப்போகின்றது.

உயிர்க்கொலையைச்சற்று விவேகிகளாகிய மானுடர்களே வெறுப்பாரெனில் தெய்வம் அதனை விரும்புமா? உயிர்க்கொலையை விரும்பி நிற்பது பூதப்பிரேத பைசாச கணங்களாதலால் அவைகளை மெய்க்கடவுள் அனுக்கிரகங்கொண்டு விரட்டியோட்டி ஜீவகாருணியம் பரிபாலிப்பதே மேலோர் கடைமையென்க.

இதனாலே எவ்வகையினும் எவ்வுயிரையும் எக்காலத்தினும் எதன் பொருட்டும் மறந்தும் கொலைசெய்யாமலிருப்பதே மானுட யோனியிற் பிறந்த நம்மவர்க்குக் கடப்பாடாகும். இக்கொல்லாமையாகிய விரதமொன்றே எல்லா நற்பயன்களையும் விரைந்தளிப்பது. இந்நன்னெறியை விடாது தழுவி நின்று சாதிக்கும் வைராக்கிய சீலர்கள் இம்மையிலேயே ஆயுராரோக்கிய ஐசுவரியாதியான எல்லாப் பேறுகளையும் தயாபரக் கடவுள் கிருபையால் ஒருங்கெய்தி நல்வாழ்வு பெறுவர். இஃது உண்மை! உண்மை!!

"கொல்லாவிரதம்குவலயமெல்லாமோங்க
வெல்லார்க்குஞ்சொல்லுவதென்னிச்சைபராபரமே."
"கொல்லாமையெத்தனைகுணக்கேட்டைநீக்கும்."
"கொல்லாமற்கொன்றதைத்தின்னாமல்."

எனவரும் பெரியார் வாக்கியங்கள் அளவில. இனிப்புலால் மறுத்தலைப் பற்றி அடுத்தமுறை கூறுவாம்.

## கோபத்தைக் கொல்லுவதே குணம்.

மனிதர் முதலிய எவ்வகை யான்மாக்களிடத்திலும் இயல்பாயமைந்துள்ள தீக்குணங்கள் பலவற்றுள்ளும் "கோபம்" என்னும் குணம் மிகப்பொல்லாதது. கோபம், சினம், சீற்றம், வெகுளி, முனிவு முதலிய பல சொற்கள் (ஒரே பொருளை) ஒரே குணத்தைக் குறிப்பனவாம். இக்கோபம் என்னுங்குணம் மற்றைக்காமம் முதலிய குணங்களைப்போலவே எவ்வகையான்மாக்களிடத்தும் இயல்பாய் அமைந்துள்ளதாயினும், ஒரே அளவிலமையாது சில ஆன்மாக்களிடத்துக் குறைந்தும் சில ஆன்மாக்களிடத்து நிறைந்தும் காணப்படும். இதற்குக் காரணம் யாதென்று ஆராயப்புகுந்தால் இடங்கொள்ளாது வளரும். ஏனெனில், அதன் காரணத்தை விசாரிக்கப்புகின் இக்கோபகுணம் (இதுபோன்ற மற்றைக் குணங்களும்) ஆன்மாவினிடத்தில் எப்போது வந்து பொருந்தியது? பொருந்தக் காரணமென்ன? தானே பொருந்தியதா? வேறொருவரால் பொருத்தப்பட்டதா? ஏன் பொருத்தவேண்டும்? ஆன்மா எப்போதுண்டாயிற்று? அதன் இலக்கணமென்ன? என்பனவாதியான தத்துவ விசாரம் அளவிலடங்காது விரியுமாதலாலென்க. அவ்விரிவு பழமையாயுள்ள ஒரு மதத்தைச் சார்ந்தே வெளிப்படுமாகையால் அதற்கு இப்பத்திரிகை யிடங்கொடாதென்றெண்ணி அதை அம்மட்டில் விட்டு மேற்செல்வோம். கோபம் எல்லாமனிதர்கட்கும் எக்காலத்திலும் உளதாயினும், அது மிகுப்பதற்குரியகாரணம் (ஹேது) நேர்பட்டபோது வெளிநோக்கி யெழுந்தும் அக்காரணம் நேராதபோது தோன்றாமலுள்ளடங்கியும் நிற்கும். மனிதர் அடையும் எவ்வகைப் பெருந்துன்பங்களுக்கும் இக்கோபமே காரணமாகும். பகுத்தறிவாகிய துணைக்கருவியொன்று மனிதர்க்குக் கிடைத்திருப்பதால் எக்காலமும் வாய்மழுங்காத அக்கருவியைக் கொண்டு அக்கோபமென்னுங் காழ்ப்பேறிய கருமரத்தை வெட்டிச் சாய்த்தல் கூடும். அப்படிச் சாய்ப்பது மிக அரிய செயலாகையால் பெரியோர் என்று மதிக்கப்படுகிற தக்கார் சிலருக்கே அது சாத்தியமாம். அது பற்றியே "செயற்கரிய செய்வார் பெரியோர்" என்றார் பெரியோரும். இது அரிய செயலாயினதென்னெனில் மற்றைக்குணங்களைக்காட்டினும் இக்கோபம் மிகக் கொடுமையுள்ளதாதலாலும் அது மற்றனேக தீக்குணங்கட்கு மாதுருஸ்தானம் பெற்றதாதலாலும் இக்குணம் மேலெழும்போது எல்லாத்தத்துவங்களையும் இயக்கி நடத்துகின்ற பேராற்றலுள்ள "பகுத்தறிவு" என்னும் சக்கரவர்த்தியைக் கூடத் தலையெடுக்கவொட்டாது ஏமாற்றிவிட்டு முற்படும் மூர்க்கமுள்ளதாதலாலும், அதையடக்குதல் அரிய செயலென்று கூறப்பட்டதென்க. இதுபற்றியே,

"உள்ளங்கவர்ந் தெழுந்து ஓங்கு சினம்."

என்றார்ப் பெரியோர். இங்கு உள்ளமென்பது அறிவு. இக்கோபமெண்

னுங் கொடுங்குணத்தின் இயல்பையும் அது வெளிப்பட்டுவிரிய இடங்கொடுத்திடின் அதனாற் றமக்கும் பிறர்க்கும் விளையும் பெருங்கேடுகளையும் பிறவற்றையும் பகுத்தறிவுகொண்டு சாவதானமாய்ச் சிந்தித்தறிந்து அதனையடக்கும் வகையில் அடக்க முயல்வாரெவரோ அவரே பெரியவரெனப்பட்டு எல்லாத் துன்பங்களும் நீங்கி எல்லா இன்பங்களும் ஓங்க இனிது வாழ்வரென்க. அங்ஙனஞ்செய்ய முயலாது அக்கோபத்திற்கு உள்ளத்தை ஒப்பிட்டிருப்பவர் எல்லாச் சுகங்களையும் இழந்து எல்லாத் துன்பங்களையும் ஒருங்கெய்துவார். அவர் ஒருபோதும் துன்பத்தினின்று நீங்குவதில்லை. அதுபற்றியே,

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று."

என்றார் நாயனார். அதனால் நற்பயன் கருதுவார்க்கு மிகமுயன்றும் அடக்கியாளப்படவேண்டியது இக்கோபம். அதனால் "ஆறுவது சினம்" என்றார் அன்னையாரும். கோபம் மேலெழுந்தபோது அறிவு கீழ்ப்பட்டு மறைந்துபோதலால், அச்சமயம் தான் செய்யுங்காரியத்தால் பின்னர் நேர்கின்ற பயன் இன்னதென்று சிறிதும் தோன்றாது. அதனால் பெருந்துன்பம் தரக்கூடிய தீச்செயல்களை அப்போது இயற்றிவிட்டுப் பிறகு அக்கோபம் நீங்கியவுடன் அறிவு தலைப்பட ஆராய்ந்து ஐயோ! இப்பாழுங் கோபத்திற்கு இடங்கொடுத்து யாது செய்தோம்! அறைநொடியிலே அளவிறந்த நஷ்டகஷ்டங்களைத் தேடிக்கொண்டோமே! மறந்து செத்தேன்! பிராணனே! வாவென்றால் வருமா? "ஆக்குவதற்கைம்பது வருஷம் வேண்டும் அழிப்பதற்கரைநொடி போதும்" என்றபழமொழி யுண்மையாயிற்றே என்று பலவாறு சிந்தித்து ஏங்கியேங்கி அழுதகண்ணீரும் சிந்தியமூக்குமாயிருப்பவர் அநேகரை நாம் காணலாம். ஒரு குழந்தையானது அடிக்கடி சிற்றுண்டி கொடுக்குமாறு அரற்றிக்கொண்டிருப்பதற்காகக் கோபங்கொண்டதாயானவள் மிளகை உரைத்து அக்குழந்தையின் கண்ணிற்போட்டுப் பயமுறுத்தி வந்தாளாம். ஒரு நாள் கோபத்தோடு மிளகுரைத்துப் போடுகையில் பொல்லாத வேளையாக அம்மிளகில் வேறேதேனும் கெட்ட பொருள் சம்பந்தப்பட்டோ மற்றெக்காரணத்தாலோ குழந்தையின் கண்களிரண்டும் ஒளிமழுங்கிக் குருடாய்விட்டனவாம். பிறகு குழந்தையானது "அடி அம்மா! எனக்கு பக்ஷணம் வேண்டாம் என் கண்ணைக்கொடடி" என்றுபுலம்பத் தலைப்பட்டதாம். அந்தோ! இதைக்கண்டோர் கேட்டோரது உள்ளமே "நெருப்பில் வீழ்ந்த புழுப்போல்" வருந்துமெனின்,



அத்தாயின்செய்தி அப்போது எவ்வாறிருந்திருக்குமென்பதை இங்கெழுதுவானேன்? பாழுங்கோபத்துக்கு இடங்கொடுத்ததினாலன்றோ இவ்விபரீதம் நேர்ந்தது. உலகத்திலே பற்பல கொலைகள் நடத்தற்குக் காரணம் கோபமேயாம். களவு நடத்தற்குக் காரணம் கோபமேயாம். அளவிறந்த பொருள்கள் சேதப்படுதற்குக் காரணம் கோபமேயாம். அரசாங்கத்தாருக்கு ஓயாத வேலையும் ஒழியாத தொல்லையும் அதிகப்படக் காரணம் கோபமேயாம். சுருக்கிச் சொல்லில் எல்லாக் கேடுகளுக்கும் மூலகாரணமாயிருப்பது கோபமேயாம். ஆதலினால் கோபத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவனிடத்து உண்டாயினும் அதனைச் செய்யலாகாது. கோபந்தோன்றுமாயின் மனக்கலக்கம் உண்டாகும். ஒருவனுக்கு அருளினால் உண்டாகும் முகமலர்ச்சியையும் மனமகிழ்ச்சியையும கொன்று கொண்டெழுகின்ற கோபத்தின் மேற்பட்ட பகை வேறில்லை. ஆதலினாலே தன்னைத்தான் துன்பமடையாமற் காக்க நினைத்தானாயின் தன் மனத்திலே கோபம் வராமல் காக்கக்கடவன். காவானாயின் அக்கோபம் அவனையே இருமையினும் கடுந்துன்பங்களையடைவிக்கும். வலியார் மேற்செய்யுங் கோபம் அவ்வலியாருக்குத் தீங்கு செய்யமாட்டாமையால் அதனைத் தடுத்த விடத்தும் தருமமில்லை. மெலியார் மேர்செய்யுங்கோபம் அவருக்குத் தீங்கு செய்தால் அதனைத் தடுப்பதே தருமம். வலியார் மேற்செய்யுங் கோபம் இம்மையில் அவராலே துன்பமொன்றையே அடைவித்தலாலும் மெலியார் மேற்செய்யுங்கோபம் இம்மையிலே பழியையும் மறுமையிலே பாவத்தையும் அடைவித்தலாலும் இதுவே மிகக்கொடியதாகும். ஆகவே கோபம் ஓரிடத்துமாகாதென்பதே துணிவு. ஒருவன் பால மன்மதன் போல அழகுள்ளவனாயிருப்பினும் கோபம் மேலிட்டபோது அவன் முகத்தைப்பார்த்தால் மூதேவிக்கு மூத்தமகனாகத்தோன்றுவான். ஒருத்தி இலக்குமியைப்போல் சுந்தரமுள்ளவளாயினும் கோபந்தழைந்தபோது அவள் முகம் அவ்விலக்குமியின் அக்காள் முகம்போலவேயிருக்கும். கோபக்கனல் உள்ளத்தில் மண்டியெழும்போது, நீறுபூத்த அக்கினிக் குண்டத்திலே திடுக்கென்று நீரைக் கொட்டினால் அவ்வக்கினியின் சூடு பக்கென்றெழுந்து அதிக உயரஞ்சாடித் தாக்குவதுபோல இக்கோபக்கனல் மூளையில் தாக்கி புத்தியைக் கலக்கி மூக்குக் காதுகளின் வழியே உதிரமும் காட்டுமென்பது உண்மையேயாம்.

### நமது நேசரொருவர் பிரசுரிக்கும்படி அனுப்பிய விஷயம்.

## அருவி.

பாடியே ஏகிற்றுல் புல்லருவி பாங்கொரு
கோடிப்பூ நாறுங் கொழும்புன் னிலமதனில்
ஊடித்து ரத்தில் கிளரேரி உள்ளதை
ஓடிக்காண் மேன்போபோய் எனு.

சிற்றுறு ஓடும் சிரிப்புடனே ஒன்றும்
மற்று மறிக்க வகையிலதாம் கல்லே
பரலே இவையூடு சுற்றிப் பரப்பாய்
விரையு மினுமினுப் போடு.

பசும்புதர் பார்த்தது புல்லாறு தானுமே
ஏனிது என்றே பதறி யினிதாக
வேனிலில் வீவாழு மென்னுணல் மேலா
விசும்புயர் காடு மிழையும்.

சிற்றுறு ஓடும் சிரிப்புடனே ஈதல்லால்
மற்று மறிக்க மடங்காமல் ஆடும்
நிறம்பல மின்னு நிரைபுள்ளி மீன்கள்
உறவோடு ஓசையிலாங்கு.

நில்லாயே சிற்றுறு என்று கூய் நின்னோடே
செல்லாதே வாரியெம் தேகக்கத்—தில்லார்
நிழலுன் டாரின்கீழ் நீதானும் மெல்ல
இழைகு வயே விழை வோடு.

என்னனும் சிற்றுறு இன்னன்பு சேர்ந்து
மடுவிடைப் பாய்ந்தது பைய்ய மற்றதுவே
தன்னரு கண்பின் களிமீன்க டங்கவாம்
ஆழ்ந்து குளிர்ந்த மனை.

மழையே மனியே வெயிலே மதியா
விரைவே விழைவே இவைதனை மீக்கொள
தத்திக் குதிக்துப் பளபளப் பாயது
எத்தி முனமுனே ஏக.



விரைவாமே யென்றும் விரைவாமே யென்றும்
இளையா இலங்கு தனையில் இளவாறே
பாரை கிளரேரி பாங்குள தாகுமே
சேரை நிறைந்த செருக்கு.

கிளரேரி கண்டதும் சிற்றுறு சால
வீழவேறி துள்ளிற்றுல் மீமிசை வீழ்ந்து
வெளியின்கீழ் வெம்பும் சினைச்சிக்கும் சேர்துரை
தெளித்தது தெண்ணீரி னுங்கு.

இத்தனை தூரஞ்சென்ற ஏரிக்கிளர் மார்பில்
நித்த நிறைந்தி ருக்கவா சனுமே
சித்தம் இனிக்கும் சலசலப்புச் செவ்வோசை
சத்தம் சட்டங்கிற் றது.

ஆடும்போ ஆடல் அமையும்போ ஆவினை
ஆகும்காண் உற்சாக ஆறு.

செய்க திறம்படச் செய்வ தரைகுணச்
செய்கை யவம்படல் தின்னம்.

அன்றுவினையதுவே ஆய்திருந்தின் அஃதேசா
னன்று அறைவா னவர்.

அமையும்போ ஆவினை ஆடும்போ ஆடல்
இமையும்போ இல்லையே சின்.

☞ இப்பேர்ப்பட்ட விஷயங்கள் இலக்கணத்திற்கு ஒருவாறு இணங்கி ?ற்குமாகில், பெரும்பான்மையோர் விரும்பத்தக்கதாக விருக்கும்.

பத்.

## பழமொழிகள்.

அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கிலே அமுதுமா?
அடிமேலடி விழுந்தால், அம்மியும் நகரும்.
அடிமை படைத்தால், ஆள்வது கடன்.
அடியற்ற பனைபோல், விழுந்தான்.
அடியற்ற மரம்போலே, அலரி விழுகிறது.

# ADVERTISEMENTS.

## *Established 1880.*

### HEALTH REGAINED & STRENGTH MAINTAINED.


**Promptly, Effectually, Permanently and Agreeably by wearing**

THE ORIGINAL, GENUINE AND WORLD-FAMED

**Electro-Galvanic Rings, Lockets, Belts, &c., &c.**

*The Blood is the Life, but Electricity is the Life of the Blood.*

**Sold more than 100,000. And Daily Increased.**



**Testimonials too numerous to mention.**

**WORLD-RENOWNED.**

**Beware of Worthless Imitations.**

*Try the wonderful divine gift and let the result speak for itself.*

**E. G. RINGS, LOCKETS, &c., universally approved by the Leading Physicians as the Best, Safest and Most Effectual Remedy for :—Kidney, Indigestion, Debility, Nervousness, Catarrh, Gout, Sores, Toothache, Asthma, Colds, Pleurisy, Scrofula, Weakness, Liver, Headache, Heartburn, Pimples, Swollen joints, Sciatis, Aches, Dysmenorrhœa, Diarrœa, Menorrhœa, Epylepsy, Hysteria, Fever, Lumbago, Spinal. Paralysis, Rheumatism, Constipation, Quinsey, Skin disease, Bronchitis, Nearulgia, Female Complaints, &c., &c.**

**They also act as safe guards against Cholera and Small Pox.**

**E. BELT.—In cases of Rheumatism, Liver, Stomach, Kidney, Female Complaints, Paralysis, &c.**


## நமது பத்திரிகாபிமானிகள் கவனிக்க வேண்டிய விஷயம்.

—:o:—

சென்ற மாதம் நாம் ஊரிலில்லாதிருந்தமையால், நமது மாசாந்தப்பத்திரிகையையும், பக்ஷாந்தப்பத்திரிகையையும் குறித்த காலத்தில் வெளியிடக்கூடாமற்போயின. மேலும் நவம்பர் மாசம் 1–15 தேதி என்று வெளி வந்த பக்ஷாந்தப்பத்திரிகைகளில் அநேக எழுத்துப்பிழைகள் காணுகின்றன. நாம் ஊரிலில்லாதிருந்தபோது நமது ஆபீஸில் தகுந்த புரூப்-கரெக்டர் (Proof-Corrector) இல்லாதிருந்தபடியால், அவ்விரண்டு பத்திரிகைகளிலும் எழுத்துப்பிழைகள் உண்டாக்கக் காரணம் நேர்ந்தன. இனிமேல் பிரசுரமாகும் பத்திரிகைகளைக் கூடியமட்டும் செவ்வையாகப் பிழையில்லாமற் பரிசோதித்து வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம்.

20—11—94. பத்திராதிபன்.

OF THE REGIST
28 NOV. 94
MADRAS.

# வித்தியாபானு.

புஸ். I.] 1894-ஹு அக்டோபர்-மீ. [நெ. 9.

## யௌவன ஸ்திரீகளும், அவர்கள் தாய்க்குரிய பருவமடைதலும்.

—:o:—

புருஷர்களைக்காட்டிலும் பெண்களுக்குத்தான் விசேஷமாகத் துன்பங்கள் அதிகரிக்கின்றன. ஸ்திரீகள் தங்களுடைய புருஷர்களோடு சேர்ந்து வாழும் பச்குவகாலத்தை அடைவதற்குச் சற்று முன்னதாக அவர்களுக்கு மனதில் ஓர் விதமான எண்ணம் தோன்றுவது இயல்பு. அதாவது தாங்கள் புருஷர்களோடு சேர்ந்து வாழும் யௌவன பருவத்தில் அனுபவியாத இன்பங்களை யனுபவிக்கலாமென்கிற எண்ணம். ஸ்திரீகள் தங்களுடைய முக்கால நிலைமையையும் சற்று சிந்தித்துணராது புருஷர்களோடு கூடி வாழுமின்பமே பேரின்பமென்று நினைத்து மதிமயங்கி இருப்பார்களேயானால், பின்னால் அவர்களுடைய வாழ்க்கை துன்பமாகவேமுடியும். ஆழ்ந்து யோசிப்பவர்களுக்கு ஸ்திரீகள் தங்கள் புருஷர்களோடு சேர்ந்து வாழும்படியான யௌவன பருவத்திற்றான் பலவித கஷ்டங்களும், மனோ விசாரங்களும் நேரிடக்கூடியதாக விருக்கின்றன. புருஷர்களோடு கூடி வாழும்படியான பக்குவ காலம் வந்தவுடனே இன்பங்களை யனுபவிக்கலாமென்றிருந்த பெண்பாலர்களிற் பெரும்பாலர் பின்னால் ஏமாந்து எத்தனையோ துன்பங்களுக்கும், மனோ விசாரங்களுக்கும் இரையாயிருக்

கிறார்களென்ற உண்மை காலதேச வர்த்தமானங்களால் வெளிப்படும். தக்க விதத்தில் அறிவும், விவேகமும் நிறைந்த உத்தம ஸ்திரீகள் தாங்கள் பின்னால் அனுபவிக்கக்கூடிய இன்ப துன்பங்கள் இவை என்று முன்னதாகவே ஆலோசித்து தங்களுக்குத் துன்பம் நேரிடாதபடி கூடியவரையில் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளுவார்கள். அறிவினர்களாயும், சோம்பர்களாயுமிருக்கப்பட்ட ஸ்திரீகள் யாவரும் தாங்கள் கிடைக்கப்பெற்ற யௌவன பருவத்தில் ஏறக்குறைய கஷ்டசாகரத்துள்ளேயே மூழ்கி இருப்பார்கள். ஆதலால் கடவுள் கொடுத்திருக்கும்படியான அறிவை ஒவ்வொரு ஸ்திரீயும் தக்க விதத்தில் விசாரித்து; பின்னால் துன்பத்திற்குக்காரணமாயிருக்கின்ற பல விஷயங்களையும் முன்னதாகவே ஆலோசித்துக் கூடியமட்டும் அத்துன்பங்களைத் தன்கிட்ட வரவொட்டாமல் ஓட்டவேண்டுமென்பது நம் முடிவான கருத்து.

ஸ்திரீகள் தங்கள் புருஷர்களோடு சேர்ந்துவாழும் பக்குவ பருவமானது அதிக விசேஷமாகக் கவனிக்கத்தக்கது. பெண்கள் புஷ்பவதியாகுங்காலமானது அப்பெண்கள் வாசஞ்செய்யும் ஸ்தல சுபாவத்திற்கும், மற்ற சந்தர்ப்பங்களுக்கும் தக்கது போல் வித்தியாசப்படக் கூடியதாகவிருக்கும். சீதோஷ்ண மிகுதி அதிகமின்றி அவ்விரண்டும் மத்திபமாயிருக்கும்படியான தேசங்களில் வசிக்கும் ஸ்திரீகள் புஷ்பவதியாகும் பருவமானது பதினான்குமுதல் பதினாறுவயதுவரையில் என்று ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். சீதோஷ்ணம் அதிகரித்த தேசங்களில் சாதாரணமாய்ப் பெண்கள் பத்துவயதுமுதல் பதின்மூன்று வயதுக்குள்ளாக புஷ்பவதியாகின்றார்கள். சில விஷயங்களில் பத்தாவது வயதுக்கு முன்னதாகவே பெண்கள் புஷ்பவதி யென்கிற பக்குவ பருவத்தையடைந்திருக்கின்றார்களென்பதாகவும் சிலர் கூறியிருக்கிறார்கள். ஆனால் பெண்கள் பத்தாவது வயதுக்கு முன்னதாகவும், பதினாறு வயதுக்கு பின்னரும் பக்குவபருவமடைதல் வெகு அபூர்வம். இவ்விதமாக ஸ்திரீகள் தக்கபக்குவ பருவத்தில் தங்கள் கணவர்களோ



டுகூடி வாழும்பொழுது அவர்கள் கவனிக்கத்தகுந்த விஷயங்கள் அநேகமுள. ஸ்திரீகள் தங்கள் கணவர்களோடு சேர்ந்து வாழுங்காலத்தில் மாதவிடாய் என்கிற சூதகத்தை அடைவதுமுண்டு; அடையாமற் போவதுமுண்டு. ஓர் ஸ்திரீ மாதவிடாய் யாகாமற் போனால், அவள் தன் வயிற்றில் கருத்தரித்திருக்கிறாளென்று நிச்சயிக்கவேண்டும். ஸ்திரீகள் கர்ப்பவதிகளானார்களென் றறிவதற்கு இது தான் முக்கிய அறிகுறி. ஆனால் சில ஸ்திரீகள் திடீரென்று மாதவிடாயாகாமல் கருத் தறியாமற் போவதுமுண்டு. இப்பேர்ப்பட்ட விஷயங்களில் ஸ்திரீகள் கர்ப்பவதியாயிருக்கிறார்களென்கிற துணிகரத்தையே சாதாரணமாய் ஜனங்கள் தங்கள் மனங்களுட் கொள்ளுவார்கள். இப்படித்துணிதல் பிசகு. குளிர் அல்லது க்ஷயசம்பந்தமான வியாதியால் ஓர் ஸ்திரீ சற்று வருந்துவளாயின், அவள் சிலசமயங்களில் மாதவிடாயாகமாட்டாள்.

இஃது இங்ஙனமிருக்க, ஸ்திரீகள் கருத்தருத்தரித்தநாள் முதல் கவனிக்கவேண்டிய சங்கதிகள் அநேகமுள. கருத்தரித்த ஸ்திரீகளுக்கு முகம், கை, கால், வயிறு முதலிய அங்கங்கள் சிறிதுகாலஞ் சென்றமேல் நிறம் வேறுபடுதலுண்டு. மேலும் கர்ப்பந்தரித்த ஸ்திரீகள் சிலவேளைகளில் வியாதியஸ்தர்கள்போலவே காணப்படுவார்கள். காலையில் துயிலினின்றும் நீங்கி எழுந்தவுடனே அவர்களுக்கு பித்தவியாதியஸ்தர்களைப் போல் ஓர்வித கொமட்டுதலும், வாந்தி செயதலுமுண்டு. இஃது இயல்பு. ஆனால் அவர்கள் வியாதியஸ்தர்கள்போல் காணப்பட்டாலும், வாஸ்தவமாகவே பித்தம் முதலிய வியாதிகள் பிடிபட்டவர்கள்போல் கர்ப்பந்தரித்த ஸ்திரீகளைப் பாவித்து அவர்களுக்கு வைத்தியம் முதலியன செய்தல் தகாது. கர்ப்பவதியான ஸ்திரீகள் எப்போதுமே வியாதியஸ்தர்களாகக் காணப்படுகிறதில்லை. காலையில் மாத்திரம் சிறிது நேரம் கொமட்டு, வாந்தி முதலிய ரோகங்கள் பிடிபட்டவர்கள்போல் காணப்படுவார்கள். மற்றவேளைகளில் என்றுமிருப்பவர்கள் போலிருப்பார்கள். காலை தவிர மற்ற நேரங்களில் கர்ப்பந்தரித்த யௌவனஸ்திரீகள் [illegible]

ள்ளவர்களாகவும், அழகுள்ளவர்களாவுங் காணப்படுவாளென ஓர் அங்கிலேய பண்டிதர் கூறுகின்றனர். மேலும் இப்பண்டிதர் கூறுவதாவது:—‘ வியாதிஸ்தர்கள்போல் காணப்படும் ஸ்திரீகளனைவரும் சுகப்பிரசவத்தையடைவார்கள் ; இப்பிரசவத்தில் ஏதேனும் அபாயம் நேரிடுமோவென்கிற அச்சத்தை எவருங்கொள்ளவேண்டியதில்லை’ என்கிற விஷயம். ஆனால் கொமட்டு, வாந்தி முதலிய அரோசிப்பு வியாதிகள் சில ஸ்திரீகளுக்கு எப்போதுமிருக்கவேண்டிய மாதிரியைப் போலல்லாமல் நாளுக்கு நாள் அதிகரித்தலுமுண்டு. இவ்விதமாக நாளுக்கு நாள் அதிசரிக்கும் வியாதியானது சில கர்ப்பவதிகளின் உயிருக்கு சிலவேளைகளில் அபாயம் விளைவிக்கக்கூடியதென்றும், இவ்வியாதியை அதிகரிக்காமலிருக்கச் செய்வதற்கேற்ற ஜாக்கிருதை அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டியதாவசியமென்றும் வேறோர் பண்டிதர் கூறுகிறார். இதனால் நமக்கு என்ன தோற்றுகிறதென்றால், ஸ்திரீகள் யாவருமே கர்ப்பாசய முதலிய விஷயங்களையும், அவைகள் மூலமாய் அபாயகரமான வியாதிகள் சம்பவிப்பதற்குரிய காரணங்களையும், மற்ற வைத்திய முறைமைகளையும் நன்குணரவேண்டியதென்று உறுதி கூறவேண்டியதாயிருக்கின்றது.

## யந்திரங்களின் உபயோகம்.

———:0:———

நாம் தினந்தோறும் தரித்துக்கொள்ளும் வஸ்திரமானது எவ்வாறு செய்யப்படுகிறதென்று எவரேனும் சிந்தித்திருப்பாராயின், அவருக்கு யந்திரங்களின் உபயோகம் இன்னதென்று தெரிந்திருக்கும். வஸ்திரத்திற்கு முதல் ஆதாரம் பருத்தி. பருத்தியினால் நூல் நூற்கவேண்டும். முற்காலத்தில் நூல் நூற்பதற்கு மரத்தினால் செய்யப்பட்ட வெகு சுலுவான ஓர் கருவியை உபயோகித்து வந்தார்கள். இது நாட்டுப்புறங்களில் இன்னுங்கூட உபயோகப்பட்டு வருகின்றது. இக்கருவிக்கு இத்தே[illegible] இராட்டினம் என்று பெயர் வழங்கி வருகின்றது.



இரண்டு ரூபாயிருந்தால் இக்கருவியைச் செய்துவிடலாம். பட்டணங்களில் இக்கருவியினால் நூல் நூற்கின்றவர் வெகு அபூர்வம். மர இராட்டினத்தால் இக்காலத்தில் நூற்கும் நூல் அவ்வளவு சிரேஷ்டமானதும் அல்ல. ஆனால் இந்தியாவின் வடக்கிலுள்ள டாக்கா முதலிய பட்டணங்களில் ஓர் காலத்தில் உந்நதமான வஸ்திரங்கள் செய்யப்பட்டதென்றும், அவ்வஸ்திரங்கள் ஐரோப்பா முதலான தேசங்களில் மிகவும் சிலாக்கியப்பட்டுவந்ததென்றும் இக்காலத்துச் சரிதாசிரியர்களான ஐரோப்பிய பண்டிதர்களே கூறியிருக்கின்றனர்கள். வாஸ்தவத்தில் மரத்தினால் செய்யப்பட்ட இராட்டினத்தால் சிலவேளைகளில் உந்நதமான நூல் நூற்கலாமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இது விஷயத்தில் மிகவும் பிரயாசமும், ஜாக்கிருதையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

நாட்டுப்புறங்களுக்குச் சென்று அங்கு பருத்தி நூல் நூற்கின்றவர்களது வருத்தத்தையும், ஜாக்கிருதையும் நாம் நுட்பமாய்ப் பார்த்துணர்வோமானால், மிகவும் ஆச்சரியகரமாயிருக்கும். நம் சுதேசத்தொழிலாளிகளிடத்தில் பருத்தியினின்றும் கொட்டையை வேறுபடுத்துவதற்கு ஓர் கருவியிருக்கின்றது. ஒவ்வோர் கருவிக்கும் ஒவ்வோர் ஆள் வேலைசெய்யவேண்டும். எவ்வளவு பிரயாசப்பட்டபோதிலும், ஒரு ஆள் ஓர் கருவியினின்றும் நாளொன்றுக்கு மூன்று மணுவு பருத்தியினின்றும் கொட்டை எடுக்கக்கூடுமோ அல்லது கூடாதோ என்பதே சந்தேகமாயிருக்கின்றது. இவ்விதமாக நாள் ஒன்றுக்கு நூறு கருவிகளும், நூறு ஆள்களும் வேலைசெய்தால் சுமார் இருநூற்றன்பது மணுவு பருத்தியினின்றும் கொட்டை எடுக்கலாம். பருத்தியினின்றும் கொட்டை எடுக்கிற விஷயம் இப்படி இருககிறது. இனி நாள் ஒன்றுக்கு மர இராட்டினத்தால் எவ்வளவு நூல் நூற்கலாமென்கிற விஷயத்தையும் சற்று ஆலோசிப்போம். இதற்கும் நூறு பெயர்கள் வேலை செய்கிறார்களென்றே வைத்துக்கொள்ளுவோம். நூறு பெயர்களுக்கும் நூறு இராட்டினங்கள் வேண்டி இருக்கின்றனவல்லவா? ஒருவன் ஒரு இராட்டினத்தால் வேலை [illegible]

மணியொன்றுக்கு மூன்று ரூபாய் எடையுள்ள நூல் நூற்கக்கூடும். இவ்விதமாக நூறு பெயர்கள் வேலைசெய்தால் நாளொன்றுக்குச் சுமார் முப்பது மணுவு நூல் நூற்கலாம்.

இப்படியாக நூல் மாத்திரம் நூற்றால் போதாது. நூல் நூற்ற பின்னர் அந்நூலினால் வஸ்திரம் நெய்தல்வேண்டும். ஜேடர்கள் நம் தேசத்தில் ஆதிகாலந்தொட்டு கையினால் வேலைசெய்யத்தக்க தறிகளையே உபயோகித்து வருகிறார்கள். ஓர் தறியில் ஒரு ஆளுக்கு மேல் வேலைசெய்ய முடியாது. ஒருவன் காலை முதல மாலை வரையில் ஓர் தறியால் வேலை செய்வானானால், சாதாரணமாய் இரண்டு கஜம் துணிதான் நெய்யக்கூடும். இவ்விதமாக நூறு பெயர்கள் வேலைசெய்வார்களானால், நாளொன்றுக்கு இருநூறு கஜந்தான் நெய்யலாம்.

நீராவியந்திரக்கருவியினுடைய விஷயமோ இப்படிக்கல்ல. நூறு பெயர்கள் வேலைசெய்கிற நீராவியந்திரக்கருவியால் கைகளினால் நாளொன்றுக்கு எவ்வளவு வேலை செய்யக்கூடுமோ அதைக்காட்டிலும் அநேக மடங்குவேலை ஒரு மணிகாலத்தில் செய்யக்கூடும். யந்திரங்களால் ஓர் காரியம் எவ்வளவு சுளுவாயும், மேம்பாடுள்ளதாயும் முடியுமோ அவ்வளவுசுளுவாயும், மேம்பாடுள்ளதாயும் கைகளினால் செய்யமுடியாது.

(இன்னும் வரும்.)

## செய்நன்றியறிதல்.

(வித்தியாபானுவின் 144-வது பக்கத்தொடர்ச்சி.)

இனிக்குரு செய்நன்றியைப்பற்றி விசாரிப்போம். குரு-லகு என்னும் பதங்கள் பெருமை சிறுமைகளைக்குறிக்கும். குறிக்கவே, அறிவால் (ஞானத்தால்) பெரியவனானவன் ஒருவனுக்கு குரு என்னும்சொல் காரணக்குறியீடாய் நிலைக்கும். ஆண்பாலைக்குறிக்கும் அன் விகுதி சேர்த்துரைக்குங்கால் குரவன் என்றாகும். ஈண்டு, அறிவு (ஞானம்) என்பது [illegible] போல ஆன்மாவினிடத்தில் யாண்டும் விட்டு நீங்கா



த குணமாய் அமைந்த ஒரு சத்தியேயாம். அக்கினிக்குரிய உஷ்ணகுணம் அவ்வக்கினி எந்தெந்தப் பொருள்களை ஆதாரமாகப் பற்றி நிற்குமோ அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கேற்றபடி ஏறியுங்குறைந்தும் விளங்கும். திருஷ்டாந்தமாக வெண்டு, பஞ்சு முதலிய பளுவில்லாத வஸ்துக்களைப்பற்றி நிற்கும்போது அவ்வக்கினியின் உஷ்ணம் குறைந்திருக்கும். பளுவுள்ள புளியமரம் முதலியவைகளைச்சார்ந்தபோது அதிக உஷ்ணமாய் விளங்கும் இரும்பு முதலிய பளுவுள்ள பொருள்களை ஒழுகக்காய்ச்சும்போது அதில் தங்கிய அக்கினியின் சூடு மிக அதிகமாகும். இவ்வாறு உஷ்ணம் ஏறிக்குறைந்து விளங்கினாலும் அது அவ்வக்கினியின் குணமே தவிர மற்றைப் பொருள்களின் குணமன்று. இதுபோலவே ஆன்மாக்களுக்கு இயல்பாயமைந்துள்ள அறிவாகிய குணம் அவ்வவ்வான்மாக்களுக்கு மூளை முதலிய சரீர தத்துவங்களின் சுத்தாசுத்தம் வன்மை மென்மை முதலிய வேறுபாடுகளுக்குத் தக்கபடி ஏற்றக்குறைவாய் விளங்குமென்க. சரீரம் முதலிய உருவ தத்துவங்களும் மனம் முதலிய அருவ தத்துவங்களும் சுத்தமாய் அமையப்பெற்ற ஆன்மாக்களிடத்திலே அவ்வறிவாகிய ஞானசத்தி மிக வோங்கிப் பிரகாசிக்கும். அங்ஙனம் பிரகாசிக்கின்ற ஞானத்தாலே அவ்வான்மாக்கள் அறிவிற்குறைந்த ஆன்மாக்களைக்காட்டிலும் பெரிய காரியங்களைச் சாதித்துப் பெரும்பயன்களை அடைவர். இது நிற்க; இயல்பாய் மனிதர் பிறக்கும்போதே அமைந்துள்ள அறிவாகிய ஞானம் நன்னிலை பெற்று விரிந்து விளங்குதற்கு சாதனங்களாயமைந்த உபகரணங்கள் பலவுள. அவைகளுள்ளே கல்வி என்பது மிகச் சிறந்த ஒரு சாதனமாம். இனி கல்வி யென்பது பயிற்சியால் வரக்கூடியதேயன்றி பிறக்கும்போதே உடன்பிறக்கின்ற ஒரு பொருளன்று. அங்ஙனமாயின் வருந்தி வருந்திக் கற்பினும் சிலருக்கு கல்வி வராமலே போகின்றது. அதன் காரணம் யாதோ வெனச்சிலர் ஆட்சேபிப்பர். அதற்குள்ள தடைகளையும் விடைகளையும் விரித்தால் இங்கு இடங்கொள்ளாதாதலின் அதை வேறோரிடத்தில் விரிப்போம். நிற்க; இவ்வாறு கல்வி முதலிய சாதனங்களைக் கொண்டு அறிவை வளர்த்து மகிழ்கின்ற பெரியோரே ஏனையோர்க்கு "குரு" என்னப்படுவர்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

என்றமையால் அப்பெரியோர் தமது பேரறிவுகொண்டு தாமடையும் பெரும் பேறுகளை ஏனையோரும் அடைதல் வேண்டுமென்னுமாசையால் (கருணையால்) ஏனையோர்க்கும் நன்னிலையறிந்து நற்பயன் பெறுதற்கேற்ற

(இம்மை மறுமைச்சுகங்களைப் பெறுதற்கேற்ற) மார்க்கங்களைப் போதிப்பர். அதனால் அவர் குருவெனப்படுவர். இது நிற்க; பூனைக்குட்டியானது தனது சிற்றறிவால் தனது வால் அசைவதைத்தானே பார்த்து அதை ஒரு பூச்சியென்று நினைந்து தனது முன்னங்கால்களால் அவ்வாலை அடித்துப்பிடித்து விளையாடுவது போல நாம் நமது சிற்றறிவால் நம்பொருளிது வேறு பொருளிதுவென்று உணரமாட்டாது ஒன்றையொன்றாகத் திரிபுணர்ச்சிகொண்டு ஓடியாடி யுழல்வதைக்கண்டு புன்முறுவல்கொண்டு அடா பேதாய்! இங்கே வா! யென்றழைத்து அப்பொருளியல் புணர்த்தி நம்மை மகிழ்வித்த நமது குரு செய்நன்றிக்கு நாம் புரியும் கைம்மாறு யாது? விளக்கின் ஒளியைக் கனியென்று நினைந்து அதில் வந்து வீழ்ந்து சாகும் விட்டிற்பூச்சிபோல மின்னலிடையும், அன்ன நடையும், பின்னுசடையும், துன்னு முடையும், கன்னல் மொழியும் இன்னோரன்ன பிறவுங்காட்டி யூனிருக்க வுயிர்குடிக்கும் ஒண்கண்ணாராகிய வன்கணணரது மாயவலையிற் சிக்கி நாம் மயங்குங்காலத்து அடா! பித்தா! இங்கே வா வென்றழைத்து மயக்க மறுத்து மெய் நிலையுணர்த்தி நம்மை யாட்கொண்ட நமது குருவின் நன்றிக்கு நாம் புரியுங் கைம்மாறு யாது? வேடன் கரந்திருந்து ஊதுகிற குழலின் தீங்குரல் கேட்டு மயங்கி அக்குரல் வரும்வழியே சென்று அவ்வேடன் கட்டிய வலையில் அகப்படுகின்ற மான்களைப் போல காமக்காட்டில் குழலாகிய வலைபரப்பிக்கடைக்கண் அம்பை நுதல் வில்லிற்றொடுத்து விடுத்து உயிர கவரக்காத்திருக்கும் வேடச்சிகளின் குயில்மொழியால் மயங்கி அவர் பாலணுகிய நம்மை அடா! மூடா! வென்றழைத்து அம்மாய வலையில் வீழாது தடுத்தாட்கொண்ட நம் குருவின் கருணைக்குக் கைமாறுயாது? நாட்டிலே பழகிக்காட்டுக்குள் வந்து தங்களைக் கொண்டுபோகும் பழய யானையின் சூழ்ச்சியை உணராது அதன் பரிசலாலனைகளால் மயங்கி அதைத்தொடர்ந்து கொப்பத்தில் வீழ்ந்த புதிய யானைகளைப்போல வஞ்சநெஞ்சராகிய கிஞ்சுகச்செவ்வாயர்தம் கொஞ்சுதலால் நெஞ்சழிந்து தடுமாறுகிற நமது அறிவீனத்தை நோக்கி அடா! சேடா! வாடா! வென்றழைத்து ஆபத்தை நீக்கி லாபத்தை தந்த நம் குருவின் கருணைக்குச் கைமாறென்னே?

தூண்டின் முள்ளினிடத்தே துடித்துக்கொண்டிருக்கிற சிறிய இரையை விரும்பி விரைந்து வந்து அத்தூண்டிலை விழுங்கிப் பொட்டென்றுயிரிழந்து, வலைஞன் பெட்டிக்குள்ளடங்கிய மீன்போல, சிசின உதரதிர்ப்திகளைச் செய்வதே இம்மானிட ஜன்மமெடுத்ததின் பயனென்ன நினைந்து, பசையில்லா வெள்ளெலும்பைக் கடித்துப் பல்லைசைந்த நாய்போல தன



யில்லாதெதனையும் நய்த்து வசியனைய நெஞ்சர் வசப்பட்டு நாம் மாயமுயல்வதை நோக்கி அடா! தீயா! நில்லடாவென்று தடுத்து நன்னெறி காட்டியாட்கொண்ட நம் குருவின் கருணைக்குக் கைமாறென்னே! கமகமவென்று நறுமணங்கமழ்கின்ற அப்பத்தைக் கண்டு பரபரத்தோடி அது தன்னுயிரைக் கவவுகிற இடுக்கியென்றுணராது அப்பத்தைக் கவ்வி லபக்கென்ற இடாவில் மாட்டிக்கொள்கிற எலியைப்போல, வண்டு விழியும், கண்டு மொழியும், கண்டு கண்டு கிண்டர்டிய நம் புல்லறிவை நோக்கி அடா தீயா! சேயா! நீயேனிப்படியலைகின்றாய் என்று வைது உய்யுநெறிகாட்டிய மெய்க்குருவின் கருணைக்குக் கைமாறென்னே! இங்ஙனம் ஐம்புல வேடர்க்குறைவிடமாகிய என்புக்காட்டினுள்ளே அலைந்து திரிந்த எமக்கு அவ்வேடரது கள்ளவழிகளை அறிவித்து நல்வழியிலே செலுத்தி யாட்கொண்ட குரவன் பெருமை கூறற்பாலதோ! "கடவுளடியைக் கனவிலும் மறவாதே" என்னும் கற்கண்டு போன்ற மொழியை எமக்கு உபதேசிக்க நாம் அவரை நோக்கி 'சுவாமி! கடவுள் யார்? அவர் எப்படியிருப்பார்? எங்கிருப்பார்? எப்படியறிவது' என்று வினவும்போது குறுமுறுவல்கொண்டு 'அப்பா! கடவுள் என்பது கடந்துள்ளவர்' என்று பொருள்படும். அதாவது; நமது கருவிகரணங்களால் எட்டியறிய முடியாத இயல்புடையவர் என்பதாம். அவர் அத்தகையாராயினும், தம்மை நினைந்து உள்ளமுருகும் அடியார்கள் எப்படியெப்படிப் பாவித்து வணங்குவாரகளோ அப்படியப்படியே விளங்கி அருள்செய்யும் கருணைத்துணையுடையவர். அவர் எல்லாமறிபவரும், எல்லாம் வல்லவரும், எங்கும் நிறைந்தவருமாயிருப்பார். ஜடமாகிய நமது சரீரம் சித்தாகிய ஆன்மாவாலே காரியப்படுதல்போல ஜடமாகிய இந்த (நிலமுதல் வெளியீறான) பிரபஞ்சமும் பெருஞ்சித்தாகிய கடவுளாலே காரியப்படும். சித்து என்பது அறிவாயுள்ளது; ஜடம் என்பது அறியும் தன்மையில்லாதது என்று இங்ஙனம் பகுத்து உபதேசித்த நமது குருவின் கருணைக்குக் கைமாறென்னே! மீனானது கருப்பீச்சி அக்கருவைத்திரும்பிப்பார்க்கின்ற பார்வை மாத்திரத்தாலே பக்குவப்படுவதுபோல நம்மைத் தமது குளிர்ந்த பார்வையாலே (கிருபாநோக்கத்தாலே) பாவக்குழியினின்றும் கரையேறச் செய்த மெய்க்குருவின் கருணைக்குக் கைமாறென்னே! ஆமையானது கரையிலே முட்டையிட்டுத்தான் நீரினுள்ளேயிருந்து நினைப்பு மாத்திரத்தாலே பக்குவமாக்குதல் போல தமது அன்பு மாத்திரையால் நம்மைப் புனிதமாக்கிய குருவுக்கு யாது கைமாறு புரிவோம்! பக்ஷியானது தனது முட்டைகளை தனது இரக்கைகளால் அணைத்துப் பரிபக்குவமாக்குவது

போலத்தமது திருக்கரங்களால் நம்மைத் தழுவிப் புனிதமாக்கிய ஆசிரியன் செய்நன்றியளக்கற்பாலதோ? இங்ஙனம் அறிவிழந்து கிடந்த நமக்கு அறிவு விளங்கச்செய்து இம்மை மறுமைகட்கு உறுதிபயக்கும் நெறிகளை உபதேசித்த நமது குருவின் நன்றிகளை நாம் மறவாது பாராட்டி அவரை வழிபட்டு வருவோமாக. (இன்னும் வரும்.)

## புலால் மறுத்தல்.

☞இவ்விஷயம் ஆரிய சமயிகளின் பொருட்டு எழுதப்படுகின்றது. உலகில் ஜனித்த மனிதர்களுள் எவனெவன் எந்தெந்தச் சமயத்தை மெய்ச் சமயமென நம்பிக்கை கொள்ளுகின்றானோ அவனவன் அந்தந்தச் சமயக்கொள்கைப்படி (அதில் விதித்தபடி) ஒழுகாதபோது அந்தந்தச் சமயத்தால் அடையத்தக்க பயனை அடையமாட்டான். ஆரிய சமயிகட்கு இப்புலால் மறுத்தல் அத்தியாவசியம் வேண்டப்படுவதாகையால் அதுபற்றிச் சில வரையத்துணிந்தோம்.

"உண்ணாமை வேண்டும் புலால் பிறிதொன்றன்
புண்ணது ணர்வார்ப் பெறின்."

ஆரியர்காள்! நாமெல்லோரும் கடவுளொருவர் உண்டென்று ஒப்புக்கொள்கிற ஆஸ்திகர்களாயிருக்கிறோம். கடவுளும், அவர் கட்டளையாகிய வேதாகமங்களும், அவற்றின் விதிவிலக்காகிய புண்ணிய பாவமெனப்படும் கன்மங்களும், அக்கன்ம பலனாகிய போகங்களும், அவைகளையனுபவிக்கும் ஆன்மாவாகிய நாமும் நாம் அடையக்கிடப்பதொரு முத்தியும், உண்டென்பதை மறக்கலாகாது. மறந்தால் நாம் ஆஸ்திகராகோம். அதனால் மேற்கூறிய ஒவ்வொன்றின் இலக்கணங்களையும் ஐயம் திரிபறத்தெரிந்து அதன்படி நடக்கவேண்டியது நம்முடைய கடமையாயிருக்கிறது. அங்ஙனந்தெரிவதற்கு முதலில் சத்தப்பிரமாணமெனப்படும் நமது வேதாகமங்களை யோதி யுணரவேண்டும். அங்ஙனம் ஓதியுணர்ந்தபின் அதில் விதித்தவைகளைச் செய்து விலக்கியவைகளை யொழித்துக் கடவுளை வழிபட்டு அவரருள் பெற்று ஆகாமிய சஞ்சிதப்பிராரத்துவங்களைப் போக்கி முத்தியிற் சேர்ந்து நித்தியானந்தம் பெறுதற்கேற்ற முயற்சிகளைச் செய்து வருவதே நமது கடமை. முதலில் வேதாகமங்களில் விலக்கிய பாவத்தை விட்டன்றோ விதித்த புண்ணியத்தைச் செய்யவேண்டும்? விலக்கியவை யாவை என்று விசாரிக்கிறபொழுது கொலைபுரிதல், புலாலுண்ணல்,



பொய் சொல்லல், கள்ளுண்ணல், கள்ளுதல், வியபசாரஞ்செய்தல் முதலியவைகளேயாம். விதித்தது யாது என்று பார்க்கும்பொழுது அது புண்ணியங்களாம். அதாவது விலக்கிய பாவங்களை விட்டொழிப்பதே புண்ணியமென்று வெளிப்படுகிறது. முதலிற்குறித்த கொலையானது மற்றெல்லாப் பாவங்கட்கும் தலைமையானதென்றும் அதைச்செய்யாது விடுவதே தலையாய புண்ணியமென்றும் வியக்தமாய்த் தெரிகின்றது. கொலையென்பது யாது எனின், ஒவ்வொருயிர் இருந்து வாழ்தற்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட உடல்களாகிய மரம் செடி முதலியவைகளை வெட்டி அழித்து அதில் தங்கியிருக்கிற உயிரை அப்புறப்படுத்துவதுதான். ஆனால் மரஞ் செடி முதலியவைகளைக் கொல்லுதல் அசரக்கொலை யென்றும், மனிதர் ஆடு கோழி முதலியவைகளைக் கொல்லுதல் சரக்கொலையென்றும், அசரக்கொலையைவிட சரக்கொலையால் வரும்பாவம் பெரியதெனறும், அசரக்கொலையால் வரும் பாவத்தை அக்கினிகோத்திரம், ஔபாசனம், யாகம், ஜபம், தியானம், அதிதி பூஜை, ஆலயவழிபாடு முதலிய புண்ணிய கருமங்களால் நீக்கிக்கொள்ளலாமென்றும்; சரக்கொலையால் வரும்பாவத்தை அங்ஙனம் சுலபப் பிராயச்சித்தங்களால் நீக்கிக்கொள்ள இயலாதென்றும் அதனால் நற்பயனையடையவிரும்பும் மேன்மக்கள் மறந்தும் கொலைசெய்யமாட்டார்களென்றும் வேதாகமங்கள் முறையிடுகின்றன. இது நிற்க; இக்கொலையாகிய பாவத்தை நாமேன் செய்யப்போகிறோம்? செய்யக்காரணமென்ன? என்று ஆலோசித்தால், புலாலுண்பதின்மேல் வைத்த ஆசையால் ஒருவேளை செய்ய நேரிடலாமேயன்றி வேறில்லை. அதனால் புலால் விருப்பம் கொலைப்பாவமேயாகுமென்பதிற் சந்தேகமில்லை. அநாதி கேவல நிலையிற்கிடந்த ஆன்மாக்கள்மீது வைத்த கைம்மாறு வேண்டாத கருணையினாலே கடவுள் ஆன்மாக்கட்கு தனுகரணபுவன போகங்களைக் கொடுத்தார். அப்படிக்கொடுத்ததில் பகுத்தறிவுள்ள மானிடராய்ப் பிறந்தவர்கட்கு ஆகாரத்தின்பொருட்டு நெல் முதலிய தானிய வகைகளை அளவிறந்தனவாகச் சிருட்டித்து வைத்தார். அவைகளையுண்டு வாழுமிடையில் வந்தேறுகிற அசரக்கொலையின் பாவங்களை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ள எத்தனையோ புண்ணிய கருமங்கள் விதிக்கப்பட்டன. அங்ஙனமிருக்க, மாமிச வுணவின்மீது மனம் வைத்துப் பெரிய பாவங்களைத் தேடிக்கொள்வது புத்தியாகுமோ? நாம் எத்தனையோ ஜன்மங்களிற்செய்த எண்ணிறந்த புண்ணிய பலத்தாலல்லவோ இவ்வரிய மானிட தேகம் கிடைத்தது? இது கிடைத்த அருமை சமுத்திரத்தைக் கையால் நீந்திக் கரைசேர்ந்தது போலன்றோ? "அரிதரிது மானுட ஜன்மமாய்ப்

பிறப்பதரிது" என்றார் ஔவையார். இவ்வரிய மானிட ஜன்மம் தப்பினால் பிறகெந்த ஜன்மங்கிடைக்குமோ யாது வருமோ அறியோம். இச்சரீரம் இன்னும் எத்தனை காலம் நிலைத்திருக்குமென்கிற ஒரு நம்பிக்கை யாவதுண்டா? இல்லையே?

"நெருநலுள னொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத் திவ்வுலகு."

என்றாரே நாயனார். மரணமென்பது யாரையும் விடாமல் தலைமேல் காத்திருக்கிறது. அது எந்த நிமிஷத்திலாவது வருமென்பது திண்ணம். வீடுவாசல், பூமிகாணி, தனதானியம், மனைமக்கள் முதலிய எப்பொருளையும் தானம், அடைமானம், கிரயம் முதலியவற்றிற் பராதீனஞ்செய்துவிடலாம். சாவொன்றைமட்டும் அங்ஙனஞ்செய்யமுடியாதே! அது நாமே அநுபவித்துத்தீரவேண்டிய சொந்தச் சரக்காய் முன்வந்து நிற்கின்றது. அந்தப்படி வந்திருக்கிற அந்தச் சொந்த முதலை நாம் நன்றாய் வைத்திருக்கவேண்டாமா? சாவாகிய சொந்தச்சரக்கை நன்றாய் வைத்திருப்பதாவது:—வேதாகமங்களில் விலக்கப்பட்ட கொலை புலாலுண்ணல் முதலிய பாவங்களைச்செய்து இம்மையில் குஷ்டம், கயம், நீரிழிவு முதலிய பெருநோய்களுக்கு இலக்காகி யாரும் சீ சீ யென்று வெறுக்க நாறி நடுங்கி இறந்தபின்பு எண்ணிறந்த காலம் கும்பீபாகம் முதலியவைகளில் வருந்துதலாகிய கெட்ட சாவையடையாமல், விதித்த புண்ணியங்களைச் செய்து இம்மையில் யாவரும் புகழச் சுகவாழ்வு பெற்று மறுமையில் ஆன்மலாபமாகிய நற்பதவியை அடைய முயலுதலாம். கொலைப்பாவத்துக்கு முதற்காரணமாகிய புலாலுணவை விட்டொழிப்பின் அதன் சார்பாகிய மற்றைப்பாவங்களெல்லாம் சேனாபதியிறந்த சேனைகளைப்போல் மூலைக்கு மூலை யோடிப்போகும். ஊன் விரும்புதலாகிய பாவத் தொழிலை வைத்துக்கொண்டு வேறெந்தப் புண்ணியஞ்செய்யினும் அவை சிறிதும் பயன் தரா. எல்லா ஆன்மாக்களையும் படைத்த கடவுளுக்கு உலகிலுள்ள எல்லாரும் பிள்ளைகளாயும் அப்பிள்ளைகள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாயுமிருக்கிறார்கள். இவ்வளவொற்றுமையோடு அவிபக்த குடும்பத்திலிருக்கிற சகோதரர்களில் ஒரு சகோதரனை மற்றொரு சகோதரன் கொன்று தின்றால் எல்லாப் பிள்ளைகள்பேரிலும் ஒரே பக்ஷமாயிருக்கிற பரமபிதாவாகிய கடவுளுக்குக் கோபமுண்டாகாதா? அக்குடும்பத்தலைவனான கடவுள் அதற்குத்தக்கத் தண்டனை செய்யாமல் விடுவாரா? இதைக்காட்டிலும் குடும்பத்தில் பெருந்தப்பிதம் வேறென்ன இருக்கிறது? அந்தோ! இப்படி மன்னிக்கப்படாத பெருந்தப்பிதத்தைச் செய்து எரி-



வாய் நிரயத்திற்காளாவது மானிட ஜன்மமெடுத்தோர்க் கழகாகுமா? இதை விட்டு அசாரப்பொருள்களாயிருக்கிற நெல் முதலியவைகளை உண்டு வாழ்ந்து தந்தையாகிய கடவுளது சந்தோஷத்திற்காளாகலாமே? இதில் வெட்கம், வருத்தம், பொருள் நஷ்டம் முதலிய துன்பங்களுமில்லையே? உயிரைக்கொன்று தின்பதிலன்றோ வெட்கமும், நஷ்டமும், கஷ்டமும் "அரைக்காசுக் குரங்கு முக்காற்காசுப்பழந்தின்றது" போல் வீண் பொருட்செலவும் உண்டாகின்றது. வந்தும் துக்கமேயன்றி சுகமொன்றுங்காணோமே? அறியாமையாலன்றோ நம்மவரிலனேகர் அநுசிதமாகிய புலாலுண்ணுந்தொழிலைக் கைப்பற்றியிருக்கிறார்கள்! இது நிற்க;

(இன்னும் வரும்.)

திருச்சிற்றம்பலம்.

## சரஸ்வதி ஸ்தோத்திரம்.

இஃது

கோயமுத்தூர் காலேஜ்த் தமிழ்ப் பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ ஆர். சபாபதிப்பிள்ளையவர்களால் சரஸ்வதி பூஜையன்று ஸ்டூடண்ட்ஸ் யூனியன் (Students' Union) சபையில் உடனே இயற்றி வாசிக்கப்பட்டது.

நேரிசைவெண்பா.

செய்ய பவளத்திருவாயும் வெண்ணிறமும்
ஐயவிடையு மணிமுகமும்—கைம்மலரிற்
புத்தகமுமாகவெங்கள் புந்திமலர்மீதுறையும்
வித்தகநாச்செல்வி விரைந்து. 1

வெண்டாமரைமலர் மேன் மேவுகலைமாது
தண்டாமரைத்தா டனைப்பணிவார்—தண்டாக்
கவிமாலை யாவுங்கருது முனமாற்றிப்
புவிமீது வாழ்வார்பொலிந்து. 2

வேதன்திருநாவின் மேவுகலைமடந்தை
பாதம்பரவினர்க்குப்பக்திவரும்—ஓது
கலைகளெல்லாம் வந்தெய்துங்காமருசீர்ச்செல்வம்
நிலைபெறுமாலென்று நிறைந்து. 2

### எண்சீரடியாசிரியவிருத்தம்.

சீர்பூத்த வெண்கமலாசனமும் வேதன்
திருநாவுஞ் சிந்திப்போருளமுநாளும்
கார்பூத்தபூங்குழலுஞ் செய்யவாயுங்
கருணைபொழி திருநோக்குங் காந்தட்கையிற்
பேர்பூத்த படிகமணி வடமுஞானம்
பேசுகலைப் புத்தகமும் பிறங்கமேவும்
ஏர்பூத்தாரமகடாயே நீயெங்கள்
இதயகமலாசனமு மிருந்தாள்வாயே. 4

பன்னகத்தினிடைத்துயிலு மாலுந்தூய
பனிப்பிறைதாழ் முடியோனும் பகர்வானோரும்
பொன்னகர் காதலுந்திசைகள் புரப்போர்யாரும்
புவியோருமற்றோரும் புகழுநாளும்
மண்ணுலக மெவற்றினையும் படைத்தவேதன்
மலர்வாயினுறைந்தன்னோன் மகிழ்ந்துகேட்ப
இன்னமுதமொழிபுகல் பைங்கிள்ளாயெங்கள்
இதயகமலாசனமு மிருந்தாள்வாயே. 5

மூலமாமறை நான்கினமுடிவேயோக
முனிவருளத் தொளிர்சுடரே முன்னுவார்தந்
தானுவகலாதுறையுந் தாயே வானிற்
றண்ணிலவு புரைமேனிச் சலசமின்னே
ஞாலமெலாம் விளக்கவரு மயிலேமானே
நறுங்கொடியே மனவிருட்கோர் ஞாயிறேபூம்
ஏலவார் கருங்குழல் வெள்ளனமே யெங்கள்
இதயகமலாசனமு மிருந்தாள்வாயே. 6



## பழமொழிகள்.

அடியாத மாடு படியாது.
அடியுதவுகிறாப்போலே அண்ணன் தம்பி யுதவாரு.
அடியோட்டியல்லோ மேற்கரணம் போடவேணும்.
அடிவயிற்றிலே இடிவிழுந்தாற்போலே.
அடுக்களைப்பூனைபோல் இடுக்கிலே ஒளிக்கிறது.
அடுத்தடுத்துச்சொன்னால் தொடுத்த காரியம் முடியும்.
அடுத்தது காட்டும் பளிங்கதுபோலே (நெஞ்சில்) கடுத்தது காட்டும் முகம்.
அடுத்தவரை அகலவிடலாகாது.
அடுத்தவனைக் கெடுக்கலாமா?
அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால் அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் லாபம்.
அடுத்தாரைக்கெடுத்து அன்னமிட்டாரைக் கன்னமிடுகிறது.
அடுத்துக் கெடுப்பான் கபடன்; தொடுத்துக்கெடுப்பாள் மடந்தை.
அடுத்து முயன்றாலும் ஆகுநாள் வரவேணும்.
அடுப்பு நெருப்பும்போய் வாய்த்தவிடும் போச்சுது.
அடுப்பெரிந்தால் பொரி பொரியும்.
அடைபட்டுக்கிடக்கிறான் செட்டி (அவனை) அழைத்து வா பணம் பார்க்க வென்கிறான் மட்டி.
அடையலரை அடுத்து வெல்லு.
அட்டமத்துச்சனி நட்டம் வரச்செய்யும்.
அட்டமத்துச்சனி பிடித்து பிட்டத்துத் துணியையும் உரிந்துகொண்டது.
அட்டமத்துச்சனியை வட்டிக்கு வாங்கினாற்போலே
அணி ஊணும் ஆமை நடையும்.
அணி கொம்பிலும் ஆமை கிணற்றிலும்.
அணிபூண்டநாய்போல.
அண்டத்திலில்லாதது பிண்டத்திலுண்டோ?
அணுவும் மலையாம்; மலையும் அணுவாம்.
அணை கடந்த வெள்ளம் அழுதாலும் திரும்புமா?
அண்டங்காக்காய் குளறுகிறாப்போலே.

# ADVERTISEMENTS.

*Established 1880.*

## HEALTH REGAINED & STRENGTH MAINTAINED.


**Promptly, Effectually, Permanently and Agreeably by wearing**

THE ORIGINAL, GENUINE AND WORLD-FAMED

**Electro-Galvanic Rings, Lockets, Belts, &c., &c.**

*The Blood is the Life, but Electricity is the Life of the Blood.*

**Sold more than 100,000. And Daily Increased.**



**Testimonials too numerous to mention.**

**WORLD-RENOWNED.**

**Beware of Worthless Imitations.**

*Try the wonderful divine gift and let the result speak for itself.*

E. G. RINGS, LOCKETS, &c., universally approved by the Leading Physicians as the Best, Safest and Most Effectual Remedy for:—Kidney, Indigestion, Debility, Nervousness, Catarrh, Gout, Sores, Toothache, Asthma, Colds, Pleurisy, Scrofula, Weakness, Liver, Headache, Heartburn, Pimples, Swollen joints, Sciatia, Aches, Dysmenorrhœa, Diarrœa, Menorrhœa, Epylepsy, Hysteria, Fever, Lumbago, Spinal Paralysis, Rheumatism, Constipation, Quinsey, Skin disease, Bronchitis, Nearulgia, Female Complaints, &c., &c.

They also act as safe guards against Cholera and Small Pox.

E. BELT.—In cases of Rheumatism, Liver, Stomach, Kidney, Female Complaints, Paralysis, &c.



OFFICE OF ... REGISTRAR OF ... MADRAS. 15 JAN. 95


# வித்தியாபானு.


புஸ். I.] 1894-ஹு நவம்பர்-மீ: [நெ. 10.


## யௌவன ஸ்திரீகளும், அவர்கள் தாய்க்குரிய பருவமடைதலும்.

——:0:——

[வித்தியாபானுவின் 156-வது பக்கத்தொடர்ச்சி.]

கருப்பம் தரித்த ஸ்திரீகளுக்கு நாம் எப்போது பிரசவிக்கப் போகிறோமென மனதில் ஓர்வித எண்ணந்தோன்றுவது இயல்பு. அநேகர் கருப்பாதாரண விஷயத்தைப்பற்றி தப்பபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். ஸ்திரீகள் கருப்பவதிகளாகிப் பிரசவிக்கும் காலம் சரியாய்ப் பத்து மாதமென நம்மிந்துக்களில் அநேகரது கொள்கை. கருப்பவதிகள் பிரசவிக்கும் சரியான காலத்தைக் கணக்கிட்டறிய சிலர் தவறிப்போய்விடுகிறார்கள். சாதாரணமாய் ஸ்திரீகள் கருத்தரித்திருக்குங்காலம் இத்தனை நாட்களெனச் சில பண்டிதர்கள் நிர்ணயஞ்செய்திருக்கிறார்கள். அங்கிலேய தேசத்து வைத்திய சாஸ்திரப் பண்டிதரொருவர் ஸ்திரீகள் கருந்தரித்திருக்குங்காலமானது சாதாரணமாய் 280 நாட்களெனக் கூறுகிறார். இந்த 280 நாட்களையும் மாதம் 30 நாட்கள் வீதம் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது ஒன்பது மாதமும், பத்து நாட்களுமென்பதாக ஏற்படுகின்றது. இவ்விதமாகக் கணக்கிட்டறியப்

பட்ட நாட்களை ஏறக்குறைய பத்து மாதம் என்று சொன்னாலும் ஒக்கும். ஆனால் சில ஸ்திரீகள் மேற்சொல்லியவாறு கணக்கிடப்பட்ட காலத்திற்குச் சரிவராமல் சற்று முந்தியும் பிந்தியும் பிரசவித்தலுமுண்டு. இவ்விதமாக ஸ்திரீகள் கருப்பவதிகளாகி குறித்த காலத்திற்கு முந்தியும் பிந்தியும் பிரசவித்தல் அபூர்வமாதலால், அவ்விதமான பிரசவத்தை அகாலப்பிரசவமென்றே கொள்ளவேண்டும். கருப்பதாரண காலநிர்ணயமானது சில தருணங்களில் கருப்பந்தரித்த ஸ்திரீகளுக்கே தெரியாமற்போவதுமுண்டு. ஓர் ஸ்திரீக்கு என்றைதினம் மாதவிடாயாகுமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றதோ அன்றைதினம் அவள் மாதவிடாயாகாமற்போவாளாகில், அப்பொழுது அவள் கருப்பந்தரித்திருக்கிறவளென்றே எண்ணவேண்டும். இவ்விதமான இயலுக்குத் தப்பிப்போதல் வெகு அபூர்வம்.

இவ்விதமாகக் கருப்பம் தரித்த ஸ்திரீகள் பிரசவகாலம் வரையில் தங்கள் சரீர சௌக்கிய விஷயத்தைப்பற்றி மிகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டும். கருப்பந்தரித்த ஸ்திரீகளுக்கு சில வியாதிகளுண்டாவது இயல்பு. அவ்வியாதிகளுக்குத் தகுந்தபடி நடவாமல் சில ஸ்திரீகள் தங்கள் மனம்போனபடி ருசியுள்ள போஜன பதார்த்தங்களையும், சிற்றுண்டிகளையும், கனிவர்க்கங்களையும் மிதமீறித்தின்று வயிற்றை நிறப்புவது வழக்கம். மிதமீறி போஜன பதார்த்தங்களைத்தின்பது எவர்களுக்குமே கூடாதாயினும், கர்ப்பமடைந்திருக்கும் ஸ்திரீகளுக்கு அது மிகுந்த கெடுதியை விளைவிக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆகாரம் எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் கர்ப்பவதிகளான சிறு பெண்கள் கவனிக்கவேண்டிய சங்கதிகள் சிலவாறுள. கர்ப்பதாரண ஆரம்பத்தில் ஸ்திரீகள் உட்கொள்ளும் ஆகாரமானது அதிக லெகுவாயும், புஷ்டிதரத்தக்கதாயும், ஜீரணசக்தியுள்ளதாயுமிருத்தல்வேண்டும். கருப்பமடைந்த ஸ்திரீகளது வயிற்றுக்குள் சில தருணங்களில் எரிச்சல்போல ஓர்வித உணர்ச்சியுண்டாவதுண்டு. அப்பொழுது அவர்கள் அதிக ருசிகரமான உணவுகளைப்புசித்தல் கூ-



டாது. மிகவும் லகுவாகவும், ஜீரண சக்தியுண்டாக்கத்தக்கதாகவுமுள்ள உணவுகளையே புசித்தல் வேண்டும். கருத்தரித்த நாள் முதல் சில காலம்வரையில் மாத்திரம் மேற்சொல்லிய விதமான உணர்ச்சி ஸ்திரீகளுக்குண்டாதல் இயல்பு. சில நாட்களுக்குப் பிறகு அவ்வுணர்ச்சி நீங்கிவிடும். அது தோன்றுங்காலத்தில் மாத்திரம் ஸ்திரீகள் போஜன பதார்த்தங்களை உட்கொள்ளும் விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

மேற்சொல்லிய உணர்ச்சியானது நீங்கியதன்மேல், கர்ப்பவதிகளுக்கு அதிகமான ஆகாரங்களை உட்கொள்ளுவதற்கு மனதில் ஓர்வித விருப்பமுண்டாகும். அக்காலத்தில் அவர்கள் தங்கள் குடும்ப காரியங்களில் மிகுந்த கவலை எடுத்துக்கொண்டு களைப்பும், இளைப்பும் உண்டாக்கத்தகுந்த கஷ்டசாத்தியமான வேலைகளைச் செய்யக்கூடாது. இத்தருணத்தில் அவர்கள் தங்கள் வீடுகளில் மிகவும் லகுவான வேலைகளையே செய்துவரவேண்டும். இவ்விதமாக சரீரப்பிரயாசம் எப்போது குறைகின்றதோ அப்போது ஆகாரமும் குறையவேண்டும். கருப்பந்தரித்த ஸ்திரீகளுக்கு இக்காலத்தில் அதிகமான ஆகாரத்தை உட்கொள்ளுவதற்கு விருப்பமுண்டானபோதிலும், ஒரே வேளையில் அதிகமான ஆகாரத்தையுட்கொள்ளுதலும் பிசகு. எப்போதும்போலவே அவர்கள் மிதமான ஆகாரத்தை புசித்துவருதலோடுகூட இடைக்கிடையே வியாதிகளுக்கு இடங்கொடுத்தற்கியலாத ஏதேனும் சிற்றுண்டிகளையாவது அல்லது ஏதாகிலும் கனிவர்க்கங்களையாவது உட்கொள்ளலாம்.

ஸ்திரீகள் கருத்தரித்த ஏழு அல்லது எட்டு மாசத்திற்குப் பிறகு சரீர சௌக்கியத்திற்கு ஏதுவான போஜன பதார்த்தங்களையே புசித்தல்வேண்டும். கருப்பம் தரித்த ஏழு அல்லது எட்டு மாசத்திற்குப் பின்னர் ஸ்திரீகள் சாதாரணமாய் தனித்தனி போஜன பதார்த்தங்களின்மீது விருப்பமுறுவார்கள். அப்பதார்த்தங்கள் சரீரத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கத்தக்கதாயிருந்தால் மாத்திரம் உட்கொள்ளவேண்டுமேயல்லது, ஆரோக்கியத்தைக்

கொடுக்கத்தகாத நிலைமையிலிருந்தால் அவைகளை உடகொள்ளக் கூடாது. கர்ப்பஸ்திரீகள் மேற்சொல்லியவாறு நடவாமல் வேறுவிதமாக நடப்பார்களேயானால், சரீரசௌக்கியமானது கெட்டு தங்களுக்கும், தங்கள் கர்ப்பாசயத்திலுள்ள குழந்தைகளுக்கும் தீமையை விளைவிக்கும். தேகவலிமை, மனோவலிமை, சரீரசௌக்கியம் முதலியன பொருந்திக் கண்குளிரக்கண்டு ஆனந்தங்கொள்ளும்படிக்குள்ள குழந்தைகளைப் பெறவேண்டுமென்று ஆசைகொள்ளும் ஸ்திரீகள் தாங்கள் கருப்பம் தரித்தவுடனே எங்கெந்த விஷயங்களில் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அந்தந்த விஷயங்களில் அவர்கள் மிகுந்த ஜாக்கிருதை எடுத்துக்கொள்ள வேண்டியது கடமை.

(இன்னும் வரும்.)

## கெட்ட தண்ணீரை அருந்துவதினால் விளையும் தீமைகள்.

பூர்வந்தொட்டு ஜனசௌக்கியத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்துவருவதில் இந்துதேசத்தவர்கள் பெயர்போனவர்களென டாக்டர் வில்சன் ஹண்டர் (Dr. Wilson Hunter) டாக்டர் வர்னல் (Dr. Vernal) முதலான ஐரோப்பிய பண்டித சிரோன்மணிகளே கூறியிருக்கிறார்கள். ஜல சௌக்கியங்களை ஏற்படுத்தும் விஷயத்தில் ஆதிகாலத்தில் இந்துக்களைத்தவிர வேறெந்த தேசத்தவர்களும் அவ்வளவாக கவனம் செலுத்தவில்லையென மேற்கூறிய பண்டிதர்களே சொல்லியிருக்கிறார்கள். ஜல சௌக்கியத்திற்கேற்ற நன்மைகளை இந்துக்கள் நாடிவந்த விஷயங்களைப்பற்றி டாக்டர் வர்னல் துரையவர்கள் ஓர் தருணத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார் :—

"1879-ஆம் வருஷத்தில் பி.ஏ. பரிக்ஷை முதலிய பரிக்ஷை கொடுத்தவருக்கு வெகுமதி கொடுக்கக்கூடிய கல்விச்சங்கத்தில் நான் செய்த பிரசங்கத்தில் இந்த தேசத்தாரே ஆதியில் முதல் வைத்தியர்களாக விருந்தார்களென்று வெளியிட்டிருக்கிறேன். இங்கிலாந்துதேசத்து ஜனங்கள் முற்றும் நாகரீகமின்றி மிருகப்பிராயமாய் சற்று ஏறக்குறைய நிர்வாணமாயே திரிந்து கொண்டிருந்தகாலத்தில் மகா பிராசீனராகிய இத்தேசத்தார் வைத்திய சாஸ்திரத்தை வெகுதூரம் பரிசோதித்தும், வைத்தியத்தொழிலை நடத்தியும் வந்திருந்ததுமன்றி, அக்காலத்திலேயே ஜலத்தை யுபயோகிக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் சில விதிகளை யேற்படுத்தியிருந்தார்கள். இதைப்பற்றி உங்களுடைய பூர்வீக தர்ம சாஸ்திர கர்த்தாக்கள் அளவற்ற ஒழுங்குகளையும், விதிகளையும் ஏற்பாடு செய்திருந்தார்களென்று எனக்குத் தெரியவருகிறது. அவைகளில் சிலவற்றை எடுத்துச்சொல்லுகிறேன்.



I. யஜுர் வேதத்தில் ஒரு பாகமான ஆருணத்தில் அடியிற்கண்ட சட்டங்களிருக்கின்றன :—

ஜலத்தில் ஓக்காளித்து துப்பாதே; மல மூத்திரங்களைத் தண்ணீரில் விடாதே; ஜலத்தில் இரத்தத்தை விடாதே; மயிர், நகம், எலும்பு, சாம்பல் இவைகளை தண்ணீரில் எறியாதே; அழுக்கு வஸ்திரங்களை ஜலத்தில் நனைக்காதே. ஏனென்றால் அப்படி செய்வது தேவதைகள் கொடுத்த மகா விலையுயர்ந்த பொருளை துர்விநியோகப்படுத்துவதும் அவர்களை யவமதிப்பதுமாகும்.

II. மேலும் ஜலத்தின் விநியோகத்தையும் துர்விநியோகத்தையும் பற்றி, தர்மசாஸ்திரக்கர்த்தர்களால் விதிக்கப்பட்ட விதிகளாகிய ஸ்மிருதிகளில் அடியிற்கண்டவை அடிக்கடி எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன. எட்டுவிதமான ஜலத்தை பானஞ்செய்யக்கூடாதென்று யாக்ஞியவல்கியர் விதித்திருக்கிறார்.

1. நமக்கு அறிமுகமில்லாத ஒருவன் காய்ச்சிய ஜலம்.
2. நுரைக்கிற ஜலம் (இதனால் நாங்கள் குடிக்கிற ஸோடாத் தண்ணீருக்கு அவர் ஆக்ஷேபிப்பாரென்று எண்ணவேண்டும்).
3. தடிப்பான அழுக்கு ஜலம்.
4. கெட்டநாற்றமுள்ள ஜலம்.
5. குமிழியிட்டு கிளம்புகிற ஜலம்.
6. மண்கலந்த ஜலம்.
7. சுடுகிற ஜலம்.
8. உப்பு ஜலம்.

அடியிற்கண்ட மனிதர்கள் குளித்தும் துணிகளைத்தோய்த்தும் அசுத்தப்படுத்திய ஏரியிலாவது, குளத்திலாவது, ஸ்நாநம் செய்யக்கூடாதென்று சாதாதபர் விதித்திருக்கிறார்.

அந்த மனிதர்கள் யாரென்றால்:—கண்ணோவுக்காரர், தலையிலாவது காதிலாவது சிரங்குள்ளவர்கள், காக்காய்வலியுள்ளவர்கள், தலையில் ரணமுண்டு மூக்குவழியாய் சிலேத்தண்ணி ஒழுகிக்கொண்டிருக்கும்பேர்கள், க்ஷயரோகிகள், குஷ்டரோகிகள், அம்மை, வயிறுகடுப்பு, வாந்திபேதி அல்லது இதர தொத்துவியாதிகளுள்ளபேர்கள்.

III. இந்துக்களுடைய முக்கிய கிரந்தமாகிய ஸ்ரீமத் இராமாயணத்தின் இரண்டாவது காண்டத்தில், பரதர் தன்பேரில் சொன்ன குற்றம் நிஜமாயிருந்தால் தனக்கு மகாகேடு சம்பவிக்கட்டுமென்று சபதம் செய்தார். அதைப்பற்றி அவர் சொன்னதாவது:—'ஓடும் ஜலத்தில் மரணத்தை விளைக்கத்தக்க விஷத்தை போட்டு அதை எவன் கெடுக்கிறானோ அந்த மகாபாபி செய்யும் கோரமான பாபம் ஸ்ரீராமனை காட்டுக்கோடும்படிக்கு சம்மதித்தவனை அடையட்டும்' என்றார்.

இதனால் பானத்துக்குரிய தண்ணீரை கெடுப்பது மிகவும் கொடிதான பாதகமென்றும், அதைச்செய்பவன் நரகத்துக்கே யோக்கியமானவனென்றும் பரதருடைய அபிப்பிராயமென்று விளங்குகிறது.

IV. பாகவதபுராணம் அல்லது கிருஷ்ணனுடைய சரித்திரத்தில் பதினோராவது ஸ்கந்தம் உத்தரகீதையில் பக்தரான உத்தவருக்கு ஒரு சுத்தமான வஸ்திரத்தால் வடிக்கட்டிய ஜலந்தவிர, வேறே எந்த ஜலத்தையும் பானம்செய்யவேண்டாமென்று கிருஷ்ணன் உபதேசித்திருக்கிறார். (இதனால் இக்காலத்தில் கரியைக்கொண்டு ஜலத்தை வடிகட்டுவதற்குண்டாயிருக்கிற யந்திரங்கள் அக்காலத்தில் கிருஷ்ணனுக்குத்தெரியாதென்பது நிதரிசனமாகிறதென டாக்டர் வானல் என்பவரது அபிப்பிராயம்.)

V. கைகால்களையும், மனிதன் சரீரத்தில் மறைந்த பாகங்களையும் கழுவி மிகுந்த ஜலம்; ஒருவன் பானம் பண்ணினபிறகு மிகுந்த ஜலம்; வண்ணான் வஸ்திரங்களை தோய்க்கும் துறைக்கருகாமையிலிருக்கும் ஜலம்; சண்டாளர்கள், இறைச்சிக்காரர்கள், சக்கிலிகள் முதலிய ஈன ஜாதியார் குளிக்கிற ஜலம்; அல்லது மாதத்தீட்டுள்ள ஸ்திரீகளும், பிரசவித்தவர்களும், சூதகமாயிருக்கிறவர்களும் குளிக்கிற ஜலம்; இவைகளை உபயோகித்துக் கொள்ளக்கூடாதென்று யாக்ஞியவல்கியரிஷி நிஷேதித்திருக்கிறார்.

"தர்மவிஷயங்களைப்பற்றியும் நல்லொழுக்கங்களைப்பற்றியும்."

மானவ தர்மசாஸ்திரம் 4-வது அத்தியாயத்தில் பெரிய தர்மசாஸ்திரகர்த்தாவாகிய மனு சொல்லியிருக்கிறதாவது—ஜலத்தில் மூத்திரத்தையாவது, எச்சிலையாவது, துணியையாவது, அழுக்குக்கூடிய மற்ற எவ்வஸ்துவையாவது அல்லது இரத்தத்தையாவது, வேறு எவ்விதமான விஷத்தையாவது ஒருவரும் எறியக்கூடாது.



இந்த உதாரணங்களெல்லாம் இந்நாட்டில் இந்துக்கள் மிகச் சிறந்ததாக கொண்டாடுகிற வைத்தியநாத தீக்ஷிதர் செய்த தர்மசாஸ்திரத்தில் ஆசார காண்டத்திலிருந்து கண்டெடுத்தது. இவ்விஷயங்களை எனக்கு நேசரான வ. கிருஷ்ணமாசாரியார் சகாயத்தால் தெரிந்துகொண்டேன்.

"இவ்விதிகளின் அனுஷ்டானத்தைப்பற்றி."

வழக்கப்படியே சாஸ்திரத்தை ஒப்புக்கொண்டாலும் அதின் கருத்துபடிக்கு நடவடிக்கையில்லை. இவ்விதிகளின் முக்கியமான கருத்து என்னவெனில் அவரவர்கள் வீட்டுக்கு உபயோகித்துக்கொள்ளும் ஜலம் சிறிதும் அழுக்கில்லாமல் மிகப்பரிசுத்தமாக இருக்கவேண்டுமென்பதேயாம். உயர்ந்த ஜாதியாருடைய ஜலத்தை தாழ்ந்த ஜாதியார் உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடாதென்று நிஷேதித்திருப்பது ஏனென்றால்;— தாழ்ந்த ஜாதியார்களுடைய நடத்தைகளும் வழக்கங்களும், அவ்வளவு பரிசுத்தத்தை அநுசரித்திருக்கமாட்டாதாகையால், உயர்ந்த ஜாதியார் தொடுகிற ஜலத்தை, மற்ற ஜாதியார் கெடுத்துப்போடுவார்களென்று நம்பிக்கைக் கொள்ளப்பட்டிருந்தது. இப்படியிருந்தபோதிலும் நான் உங்களை நியாயமாய்ச்சொல்லும்படி ஒன்று கேட்கிறேன். அதாவது யாதெனில் தென்இந்தியாவில் அநேக இடங்களிலும், அதன்றியில் இந்தியா முழுதிலுமே உங்கள் தேசத்தார்களில் உயர்ந்த ஜாதியார் குளங்களிலும், கிணறுகளிலும் நடத்தும் நடவடிக்கைகள் பரிசுத்தத்துக்கும் விவேகத்துக்கும் எவ்வளவு விரோதமாயிருக்கிறதோ அதைக்காட்டிலும் விரோதமான வழக்கங்களுமுண்டோ?"

(இன்னும் வரும்.)

## செய்நன்றியறிதல்.

[வித்தியாபாநுவின் 162-வது பக்கத்தொடர்ச்சி.]

சென்ற சஞ்சிகையில் குருசெய்நன்றியைப்பற்றிக் கூறினோம் இம்முறை அரசன் செய்நன்றியைப்பற்றிச் சிந்திப்பாம். "அரசன்" வேந்தன், மன்னன், இறைவன் முதலிய சொற்கள் உலகத்தையாளுகிற ஒரு எஜமானனைக் குறிக்கும். இவ்வரசனுடைய இலக்கணங்க[illegible]

குறள் முதலிய நீதிநூல்களில் விஸ்தாரஞ்சொல்லப்பட்டிருக்கின்றது. அறிவில்லாத சிறு பிள்ளைகள் தம்முள் ஒருவருக்கொருவர் தீங்கு செய்து கொள்ளாமலும் கெட்ட காரியங்களைச்செய்து தமக்கும் பிறருக்கும் தீங்கை விளைக்காமலும் மேல்பார்வையிட்டு அவர்கள் நெறிதவறிச்செல்லுங்கால் கண்டித்துத்தண்டித்துத் திருத்தவும் தாய்தந்தை முதலிய மூத்தோர் அத்தியாவசியம் வேண்டப்படுவாரன்றே! அங்ஙனம் பாதுகாக்கும் தாய்தந்தைகள் இல்லாதபோது அப்பிள்ளைகள் அங்ஙனம் தீநெறிகளிற் சென்று அழிவாரென்பது உண்மையாமன்றே! அது போலவே கல்வி அறிவு ஒழுக்கங்களிற் குறைந்த உலகத்துச்சனங்கள் ஒருவருக்கொருவர் தீங்கு செய்துகெடாவண்ணம் அவர்கட்கெல்லாம் பொதுவான, தாயும் தந்தையுமாயிருந்து அவர்களை நல்வழிச்செலுத்தி ஆளுதற்கு ஓர் அரசன் அவசியம் வேண்டப்படுவன். அதனாலே இவ்வுலகந்தோன்றிய நாள்முதல் ஒவ்வோரரசன் இருந்தே பரிபாலித்து வந்ததாக நாம் பற்பல ஆதாரங்களைக்கொண்டு நன்றாக அறிந்திருக்கிறோம். நமது ஜீவியகாலமாகிய இக்காலத்திலும் கருணைநிறைந்த ஆங்கிலேய மன்னர் நம்மை ஆண்டு வருகிறார்கள். மனிதன் சிற்றறிவும் சிறுதொழிலுமுடையவனாதலால் ஓரரசன் தனது வல்லமைக்கேற்றபடி சிறிதாகவோ பெரிதாகவோ இப்பூமண்டலத்தின் ஒவ்வோர் பகுதிகளைமட்டும் ஆளுகின்றான்.

தன் சுகமொன்றைமட்டுமே கருதாது உலகிலுள்ள மாந்தரெல்லாரும் நற்சுகவாழ்வைப்பெறவேண்டுமென்று எண்ணி அல்லும்பகலும் உலகத்தாரது வாழ்க்கையின்மீதே திருஷ்டிவைத்து ஆண்டுவருகிற அரசன் செய்நன்றிக்கு நாம்புரியுங்கைமாறென்னே! உலகத்தார் பொருள்களின் விஷயமாயும் உயிர்களின் விஷயமாயும் ஒருவருக்கொருவர் பூசலிட்டுத் தமது சமூகத்தில் பிரியாது கொண்டுவந்தபோது அவர்களது முகக்குறிப்பாலும் அகக்குறிப்பாலும் சாக்ஷிகளாலும் யுக்தியாலும் அனுபவத்தாலும் மற்றைச்சாதனங்களாலும் ஆர அமர யோசித்து நிகழ்ந்த உண்மையைக் கண்டுபிடித்து துஷ்டர்களுக்கு சிக்ஷையும் சிஷ்டர்களுக்கு ரக்ஷையும் செய்து தராசு முனைபோல் நீதிசெலுத்திவரும் மன்னவன் செய்நன்றிக்கு நாம் புரியும் கைமாறு யாது? அங்ஙனம் குறிப்பு முதலான சாதனங்களைக் கொண்டும் உண்மையுணர வகையில்லாதபோது உலகத்தாரிடத்திலே வைத்த பேரிரக்கத்தால் என்றும் நிறைந்த ஒரு பொருளாகிய கடவுளுடைய திருவருளைச் சிந்தித்து பல்லாற்றானும் சூழ்ந்து மெய்ம்மையுணர்ந்து நீதிசெலுத்தும் வேந்தன் நன்மைக்கு நாம்புரியும் கைம்மாறென்னே! இ[illegible] செய்திகளை உணரும்பொருட்டு



மாறுவேடங்கொண்டு அங்கங்கே உலாவிக்கேட்டும் அவ்வாறு கேட்பித்தும் உண்மை கண்டு நீதி செலுத்திய அரசன் நன்மைக்குக் கைம்மாறென்னே! உலகத்திலுள்ள மனிதர் அனந்த விதமான பரிபாகமுடையாராதலால் அவரவர் பரிபாகங்கட்கேற்ற தொழில்களும் குணங்களும் குறிகளும் சமயங்களும் ஆசாரங்களும் பிறவும் அனந்தமாக விரிந்திருக்கின்றமையால் அவ்வவ்வகுப்பார்தொன்றுதொட்டு அனுஷ்டித்துவரும் ஜாதியாசார சமயாசாரம் முதலிய அனுஷ்டானங்களை அவ்வாறே அனுஷ்டித்துப் பயன் கொள்ளும்படி விதித்து ஒன்றுக்குக்கேடும் ஒன்றுக்கு ஆக்கமும் செய்யாது பொதுவில் நின்று யாவரையும் ஆதரிக்கும் அரசன் செய்நன்றிக்குக் கைம்மாறென்னே! உலகத்திலுள்ள ஒவ்வோர் மனிதரும் தந்தம் அறிவாற்றல்களுக்கு ஏற்க, ஒவ்வோர் தொழில்களைச்செய்து இடம் பொருள் ஏவல்களை அடைந்து வாழ இடந்தந்து ஒருவர் பொருளை ஒருவர் கவராது அடங்கி வாழ விதித்து ஆதரிக்கும் வேந்தன் செய்திக்கு நாம் புரியும் கைமாறென்னே! உலகத்துக்குடிகளாகிய தம் பிரஜைகட்கு வேண்டும் தொழில்களை வேண்டியவாறே செய்து பிழைப்பதற்காகவேண்டிய உபகரணங்களைத் தாமே வருத்தித்தேடியளித்து ஆண்டுவரும் அரசன் செய்திக்குக்கைமாறென்னே!

சில மூர்க்கர்கள் உலகத்தார் பொருளை வலிந்து கவருதல் அடித்தல் கொல்லுதல் பழித்தல் முதலிய கொடுமைகளைச் செய்தகாலத்து அவர்களைப்பிடித்து விசாரித்து குற்றத்திற்குத்தக்க தண்டஞ்செய்து கால்விலங்கிட்டு காராக்கிரகத்தில் புகுத்தி மீண்டும் அவர்கள் அங்ஙனம் கேடு புரியாது நல்வழிப்பட்டு வாழும்பொருட்டு அவர்களைக்கொன்றும் விடாமல் அவர்கட்கு வேண்டிய உண்டி உடை முதலியவுங்கொடுத்து காலந்தீர்ந்தவாறே நற்புத்திகூறிவிடுத்து ஆதரிக்கும் அரசன் நன்றிக்கு நாம் புரியும் கைம்மாறு என்னே! தொழில் செய்து ஜீவனம் செய்ய சக்தியில்லாத குருடர், முடவர், செவிடர், வியாதியாளர் அனாதைகள் முதலினோர்க்கு ஆங்காங்கு வேண்டிய உண்டி உடை முதலிய கொடுத்து ஆதரிக்கும் வேந்தன் செய்திக்குக்கைம்மாறென்னே! நினைப்பு மறப்பு முதலிய ஜீவாவஸ்தைகள் யாவருக்கும் சமமாதலால் தான் புரியும் ஆளுகையில் தனது மனம்போல நடத்தினால் யாதாகுமோவென்று அஞ்சித்தம்மிலுயர்ந்தாரும் ஒத்தாருமாகிய அறிவாளர்களைத் தேடித் தமக்குத் துணையாக நிறுத்தி அம்மந்திராலோசனைக்காரரால் தேர்ந்துரைக்கப்படும் நெறிகளை உறுதிப்பொருளாகக்கொண்டு அவ்வாறு பரிபாலிக்கும் நமது மன்னர் செய்நன்றி

க்குக்கைமாறென்னே! தம்மாலாளப்படும் சர்வ ஜனங்களுடைய க்ஷேம வாழ்க்கைகளையும் தக்க சாதனங்களைக்கண்டு அப்போதப்போதே உணர்ந்து க்ஷாமம் முதலியவைகளாலும் கொடு நோய்களாலும் உலகத்தார் வருந்தக்காணில் பரிதபித்து அத்துன்பங்களை நீக்க அல்லும் பகலும் முயன்று ஆதரிக்கின்ற அரசன் நன்றிக்குக்கைம்மாறென்னே! எண்ணிறந்த வைத்திய சாலைகளும் வித்தியாசாலைகளையும் ஞாயவிசாரணைத்தலங்களும் ஆங்காங்கு அமைத்து அவ்வவர்க்கு வேண்டும் நலங்களை அங்கங்கே புரிந்து ஆதரிக்கும் நமது வேந்தர் நன்மைக்குக் கைமாறென்னே! கொடுங்கோல் மன்னர் துராசையால் நமது தேயத்தைக்கைப்பற்றக்கருதும் தருவாயில் நம்மெல்லோரையும் அஞ்சாதிர்களென்று அபயம் தந்து நமது உடல் பொருளாவிகளைச் சிறிதும் சட்டை செய்யாமல் அக்கொடுங்கோல் மன்னரை எதிர்த்து வாட்டியோட்டி ஜயத்தம்பம் நாட்டி நமக்கு உற்சாகத்தைக் கூட்டிய நமது மன்னர் செய்நன்றிக்கு நாம் புரியும் கைம்மாறென்னே! துஷ்டர் சிலர் நமது பெண்டாட்டியை நாமெப்படி வேண்டினும் செய்வோம் நமது பிள்ளைகளையும் நமது அடிமைகளையும் நாமெப்படி வேண்டுமாயினும் நடத்துவோமென்று சுதந்தரம் பாராட்டிக்கொண்டு தம் மனம்போல் அவர்களைச்சித்திரவதை செய்வதற்கு இடங்கொடாமல் உலகத்திலுள்ள யாவர்க்கும் பொதுவானதாயும் தந்தையும் நாமேயென்று அறிவித்து நமது பெண்சாதி பிள்ளை அடிமை முதலானவர்களைக் குரூரமாய் நடத்தக்கண்டால் அவர்களைப்பிடித்துத் தண்டித்து நீதிசெலுத்தும் நமது மன்னர் செய்நன்றிக்குக் கைமாறு என்னே! வயிற்றிலுள்ள சிசுவையும் தாயானவள் சேதப்படுத்தாவண்ணம் சாவதானமாக அரசு செலுத்தும் நமது வேந்தன் செய்திக்குக்கைமாறென்னே! இங்ஙனம் விரித்தால் அரசன் செய்நன்றி அளவிலடங்கற்பாலதோ? அரசனில்லையாயின் இவ்வுலகம் வேலியில்லாத பயிர்போல துஷ்டர், வஞ்சகர், கள்வர், பகைவர் என்கிற காட்டுப்பன்றி புலிகரடியானை முதலிய துஷ்டவிலங்குகட்கு இரையாய்விடுமன்றே? அங்ஙனமாகாது கண்ணைக்காக்கும் இமையைப்போல் நமது சுகதுக்கங்களைத் தமதாகப்பாராட்டி இரவும்பகலும் நம் வாழ்க்கையிலேயே நோக்கமுடையராய் நமக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்திப் பற்பல நன்மார்க்கங்களைக் கற்பித்து அந்நன்மார்க்கங்களிலே நாம் நடந்து தேறியபோது உள்ளமகிழ்ந்து நம்மையும் தமது செங்கோலரக்ஷிக்கு அங்கத்துணையாக இருக்க அமைத்து உரியபட்டமும் உத்தியோகமும் கொடுத்து ஏனையோர் நமது கைக்கீழ் அடங்கிவாழ விதித்து இங்ஙனம் ஆதரிக்கும் அரசன் செய்நன்றியை நாம் ஒருபோதும் மறவாது பாராட்டி அவ்வர



னுக்கு எல்லா நன்மைகளும் விளையுமாறு வாழ்த்தி அவ்வரசன் கட்டளைக்கு அமைந்து வாழ்வோமாக. இதுவே அரசன் செய்நன்றி அறிதலாம்.

☞ குறிப்பு—செய்நன்றி யறிதலென்னும் இத்தொடர்ச்சியிலே தாய் தந்தை குரு அரசன் என்னும் நாற்றிறத்தார் செய்நன்றிகளைப்பற்றி முறையே எழுதினோம். இனிவரும் சஞ்சிகையில் கடவுள் செய்நன்றிகளைப்பற்றி வரையப்படும் அது வெகு முக்கியமானதும் விரிவானதும் படிப்போருள்ளத்தை உருக்கக்கூடியதுமாகையால் நமது நண்பர்கள் தொடவிடாமல் படித்துப் பயன்கொள்ளப்பிரார்த்திக்கிறோம்.

(இன்னும் வரும்.)

## புலால்மறுத்தல்.

[வித்தியாபானுவின் 165-வது பக்கத்தொடர்ச்சி.]

இனி நம்மவருள்ளே வேறுசிலர் ஜீவகாருணியமில்லாது வேதாகம விரோதமான மாமிச பக்ஷணத்தை விடாமல் செய்துகொண்டு வீணே சரீரத்தை வருத்தி மஹாசிவராத்திரி, கோகுலாஷ்டமி, பிரதோஷம், ஏகாதசி, சோமவாரம், சனிவாரம் முதலிய் விரதங்களிழைத்தும், அன்னதானம், சொர்னதானம், பூதானம், கோதானம், ஆலயப்பிரதிஷ்டை, குருபூஜை, மகேசுவர பூஜை, மூர்த்தி தரிசினம், தீர்த்த யாத்திரை, ஸ்தலவாசம், சிரார்த்தம், ஜபம், தபம், அநுஷ்டானம், விபூதி ருத்திராக்ஷம், திருமண்தாரணம், இவைமுதலான அநேக நற்காரியங்களைச்செய்கின்றார்கள். அப்படிச்செய்யும் நற்காரியங்கள் குருட்டுக்கண்ணுக்கு மையிட்டதுபோலும், பாழில் கவிழ்த்த பால்போலும், சமுத்திரத்திற் கரைத்த பெருங்காயம்போலும், ஆற்றிற்கரைத்த புளிபோலும் அவலமேயாகின்றன. ஏனெனில் எல்லாப்பாவத்திற்கும் தாய் வீடாகிய புலாலுணவை வைத்துக்கொண்டு அவைகளைச்செய்வதாலென்க. எத்தனையோ பாடுபட்டுச் சம்பாதிக்கின்ற புண்ணியமாகிய பசும்பாலில் புலாலுணவென்கிற பச்சை நாபியைச் சிறிது கலந்துவிட்டால் அந்தப்பால் எதற்குபயோகமாகும்? பெரிய புண்ணியங்களாகிய பஞ்சமலைக்கு புலாலுண்ணலென்பது ஒரு தீப்பொறியன்றோ? நல்லபுல்போட்டு பச்சையரிசியும் தேங்காயும் பருத்திவிரையும் அரைத்துவைத்து நல்லவிடத்திற்கட்டி நன்றாய்த் தேய்த்துக் கழுவி மஞ்சல் குங்குமமிட்டு வாழ்த்தி வணங்கிக் கன்றூட்டி மிஞ்சியபாலைக் கறந்து கடவுளுக்குக்கொடுத்துப் புண்ணியம் சம்பாதி

க்க வளர்த்து வருகிற பசுவையும், அதன் கன்றையும் பிறகு வலிய புலியினிடத்தில் காட்டிக்கொடுப்பதுபோல ஆகார நித்திரைகளுமின்றி இரவும் பகலும் பாடுபட்டுச்சம்பாதித்த பதி புண்ணியமாகிய பசுவையும் அதன் அங்கமாகிய பத்தி யென்கிற கன்றையும் பாழும் மாமிசம் தின்றலென்னும் கொடிய புலிக்கிரையாகக் கொடுத்துவிட்டு எரிவாய் நரகுக்கும் ஆளாகி வருந்துவது புத்தியாகுமா? இதென்ன கொடுமை? குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா? கைப்புண்ணுக்குக்கண்ணாடியா? இந்த அருசிதமான பாழும் புலாலைத் தின்னுவதற்கு முந்தி ஸ்நானமென்ன! விபூதிருத்திராக்ஷமென்ன! திருநாமமென்ன! குட்டிக்கொள்வதென்ன? கும்பிடுவதென்ன! ஆகாயத்தைப் பார்ப்பதென்ன! வாயில் முணமுணப்பென்ன! இன்னும் என்னென்னவோ ஆஷாடபூதிவேஷமெல்லாங் காட்டிவிட்டு சடைசியில் அத்தனைக்கும் நேர்விரோதமான மாமிச பக்ஷணஞ்செய்வது எதுபோலெனில் ஒருவன் சரீரத்தில் அழுக்கில்லாமல் நெடுநேரம் தேய்த்துக்குளித்து நல்ல வெள்ளை வஸ்திரமுடுத்துக்கொண்டு பிறகு சேற்றுக்குழியில் அமிழ்ந்தெழுந்தது போலாம். பின்னும் ஒரு அழகுள்ள பெண்ணை நல்ல ஆடையாபரணாதிகளால் அலங்கிருதம் செய்து கடைசியில் மூக்கையறுத்துவிட்டது போலுமாம். இப்படியெல்லாம் ஆசார உபசார ஆஷாடபூதித்தவம் காட்டிவிட்டுக் கடைசியில் மாமிசம் தின்னுவதைக்காட்டிலும் புலிமுதலிய மிருகங்களைப்போல யாதொரு வீண் ஆசாரங்களைச் செய்யாமல் பசிவந்தபோது லபக்கென்று பிடித்துக் கடித்துத்தின்றுவிடுவது அதிக மேன்மையானதல்லவா? சோறு தின்னாவிட்டால் மனிதன் பசியால் இறந்துபோகக்கூடும். இந்தப்பாழும் புலால் தின்னாவிட்டாலென்ன! இறந்துபோவார்களா?

"நோன்பென்பது கொன்று தின்னாமை"

என்று அவ்வையாரும்,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று."

என்று நாயனாரும் அருளிய வாசகங்கள் பரிமளிக்கின்றதே! யாதொரு புண்ணியஞ்செய்யவேண்டுமானாலும் முதலில் கொலைபாவத்திற்கு ஏதுவாயிருக்கிற புலையுணவை விட்டுவிட்டே செய்தல்வேண்டும். தோன்றின நாள் முதல் எப்போதும் மாமிசம் புசியாத மாந்தர் இவ்வுலகில் அநேகரிருக்கிறார்கள். "சிலநாள் புசித்துப் பிறகு அது அருசிதமென்று தெரிந்து நீக்கிவிட்டதினால் புண்ணியம் வந்துவிடுமா? முன்னே புலாலுண்டு வளர்ந்த வுடல்தானே இது, அந்தப்பாவம்எப்படிப்போகும்" என்று ஆக்ஷேபி



ப்பாரும் சிலருண்டு. அறியாமையால் சிலகாலம் அதைத்தின்று வளர்ந்தபோதிலும் பிறகு விட்டொழிப்பவர்கள் புண்ணியவான்களேயாகி முன் மாமிசம் தின்ற பாவமும் நாளடைவிலே நீங்கிப்போக சுத்த தேகிகளாய் விளங்குவார்களென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இனிப்புலாலுண்ணவும் வேண்டும்; புண்ணியஞ்சம்பாதிக்கவும் வேண்டும்; என்கிற வீணாசை வைத்துக்கொண்டு மேற்காட்டியபடி ஸ்நானம் பூஜை முதலிய யாது செய்யப்புகினும் அது நல்ல சுத்தமான நிலத்தில் கோமயங்கொண்டு மெழுகிக் கோலமிட்டு வாழைக்கமுகுகள் நாட்டி வேதிகையிட்டுத்தெய்வப்பிரதிஷ்டை செய்யப்போகிற யாதொரு புண்ணியஸ்தலத்தில் நிரம்ப மலத்தை மிதித்து அசங்கிதமாயிருக்கிற காலைக்கழுவாதுவைத்தவன் தானுங்கெட்டு அவ்விடத்தையுங்கெடுத்ததுபோல, மாமிசமாகிய மலத்தால் நிறைந்த தேகத்தோடு எந்தப்புண்ணியஞ்செய்யப்புகினும் அந்தப்புண்ணியமுங்கெட்டு அவனும் கெடுவானென்பதில சந்தேகமில்லை. ஆகவே புண்ணியஞ்செய்து அதனால் வரும் இன்பத்தையனுபவிக்கவேண்டுமென்கிற ஆசையும் அன்புமுடைய எல்லோரும் அந்த மாமிச பக்ஷணத்தைக்கட்டோடு விட்டொழிக்கவேண்டும்.

ஒரு வீதியில் அல்லது அடுத்த வீட்டில் ஒரு பிணங்கிடந்தால் அதையெடுத்துச்சுடுகாட்டுக்குக்கொண்டுபோகிற வரையில் சாப்பிடப்படாதென்கிற நியதியுள்ளவர்களாகிய நம்மவர்கள் மிருகபக்ஷிகளின் உடலாகிய பிணத்தை இலையிலிட்டு வயிறு நிரம்பச் சாப்பிட்டு மீசையை முறுக்குவது ஆச்சரியத்திலும் ஆச்சரியமல்லவா? மனிதப்பிணத்தைச் சுடுகிற சுடுகாட்டிலே போனாலும் அவ்வெலும்பை மிதித்தாலும் தலைமுழுகவேண்டுமென்கிற நியதியுள்ள நம்மவர்கள் மிருகபக்ஷிகளுக்குத் தங்கள் வயிற்றையே சுடுகாடாக வைத்துக்கெண்டிருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமல்லவா? மனிதப்பிணத்தைக்காட்டிலும் ஆடுகோழி முதலிய பிணங்கள் உயர்ந்ததா? எப்படி? மனிதப்பிணத்திற்குப்போலவே எலும்பு, நரம்பு, தோல், உதிரம், மச்சை, மேதை, நிணம், ரோமம் முதலிய தாதுக்கள் அந்தப்பிணங்களிலில்லையா? மூக்குமயிர் கருகும்படியாய் வீசுகின்ற துர்க்கந்த நாற்றமில்லையா? எவ்விதத்தால் அந்தப்பிணம் உயர்ந்ததோ? ஒரு கோழி யெச்சத்தைக்காலில் மிதித்தால் அருவருப்படைந்து தண்ணீர் விட்டுக்கழுவுகிற நம்மவர்கள் அந்தக்கோழி யிறைச்சியைக்கலத்தில் படைத்து வயிறார உண்பது ஆச்சரியமல்லவா? பறையர் முதலிய தாழ்ந்த ஜாதியார் தீண்டிய பாண்டத்தைக்கூடக் கையால் தீண்டக்கூடாதென்கிற

நியதியுள்ள நம்மவர்கள் அந்தப்பறையருடைய மலம், எச்சில் சோறு
முதலியவைகளையும் தின்று வளருகிற கோழி முதலியவைகளை அறுத்துத்
தின்று ஏப்பமிட்டுவிட்டு நாங்கள் உயர்ந்த சாதியார்; பறையர் முதலான
வரைத்தொடமாட்டோம்; என்று பேசுவது வெட்கக்கேட்டிலும் வெட்கக்
கேடல்லவா? உண்ணுஞ்சோற்றிலே ஒரு சிறு எலும்பு, மயிர், ஈ, எறும்பு
முதலியவை கிடந்தால் அருவருத்து வாந்தி பண்ணுகிற நம்மவர் ஆடு
கோழி முதலியவற்றை முழுசு முழுசாய்க்கடித்து விழுங்கிவிடுவது மிக
வும் ஆச்சரியமல்லவா? ஒரு ஆடு தும்மும்போது அதன் மூக்கிலுள்ள
ஊளை உடலிலே தெறித்தால் நடுநடுங்கி ஓடுகிற நம்மவர்கள் அவ்வாட்டி
றைச்சியைச் சிறிதுங்கூசாது வாயாலுண்டு வயிற்றை நிரப்புவது அதிச
யமேயன்றோ? அய்யய்யோ! நடக்கும்போது தெரியாமல் சிறிது மலத்
தைக்காலிலே மிதித்தால் அருவருத்துக்காலைக்கழுவுகிற நம்மவர்கள் மல
த்தையே தின்று அதிலேயே வீழ்ந்து கிடக்கிற முழுமலதேகியாகிய பன்றி
யையும் கொன்று அதன் இறைச்சியை ஆவலோடு கலத்திலிட்டு ஊரெல்
லாம் துர்க்கந்தம் வீச வீச விலாப்புடைக்கத்தின்னுவது அம்மம்ம! என்ன
ஆச்சரியம்!

(இன்னும் வரும்.)

---

## மதுபானம்.

(நமது நேசரொருவர் எழுதியது.)

'மதுபானம்' என்பது 'மதுவைப் பானம் பண்ணல்' அதாவது 'மா
துரியமுள்ள திரவ பதார்த்தங்களைக் குடித்தல்' என்று பொருள்படும்.
மாதுரியமுள்ள திரவ பதார்த்தங்களுக்குத்தான் சாதாரணமாய் மது
வெனப் பெயர் வழங்கி வருகின்றது. அவையாவன தேன், ஆலைப்பால்,
கள் முதலியனவாம். ஆயினும் 'மதுபானம்' எனவே பொதுப்படையாய்
லகரி அதாவது மதிமயக்கம் செய்கிறதாகிய கள், சாராயம் இன்னும்
இவைபோன்ற பற்பல வாங்கிலேய திராவகங்களைப் பருகுதலென்று விய
க்தமாகவும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலும் பிராகிருதத்திற் பயின்று
வருகிறது திண்ணமே. என்றாலிதைப்பற்றி யெழுதக்கருத்த மைத்ததெ
ன்னை? மதுவைப் பருகுவதில் அற்புதம் யாது? அசாதாரணமல்லவே?
என்று வினவுங்கால், இதிலோரற்புத மிருக்கின்றது. "தேறலுங்கால்
வாயினெச்சிலாங் சோதுடையது."—மதுவண்டுகளுண்டு மீந்த உச்சிட்ட



மாகியதோர் குற்றஞ் சாற்றக் கிடனுகின்ற தென முன்னோர் மொழிந்த
துமன்றிப் பிரத்தியட்சத்தில் கள்ளில் ஈ, எறும்பு, வண்டு, கரப்பு, குளவி,
கிருமி, முதலிய அநேக ஜீவஜந்துக்கள் விழுந்திறந்திருப்பதைக் கண்ட
போதிலுமவற்றை எடுத்தெறிந்துவிட்டு எனக்குனக்கென்று சண்டையிட்
டுத் தொண்டைக்குட்டூர்க்கிறார்கள். ஆனால் மேற்குறித்த பிராணிகள்
நெய், தயிர், பால் முதலியவற்றில் விழுந்திருந்தால் மிகவு மருவெறுப்பு
ற்று வெளியிற் சரித்து விடுகின்றனர். ஒருவேளை கட்குடிக்கின்றவரவ்
விதஞ் செய்யாரெனச் சந்தேகமுற்றுப் பலரையும் விசாரித்துப் பார்த்
ததில் தாங்களும் பருகாரெனவே வாதுகூறுகிறார்கள். இதுவெரு விநோ
தமல்லவா. இஃதிப்படியிருக்க, மதுபானத்தினாலுண்டாகும் குணகுண
ங்களைச்சற்று விவரித்துரைக்கத் துணிவதுதான் இவ்வினைதச் சங்கதிக்
கேற்றகொள்கை. தற்காலத்தில் நமது தேசத்தை யாளுகிற ஆங்கிலேய
ரில் வைத்திய சாஸ்திரங் கற்றுணர்ந்த சிலர் மிதமாக மதுபானம் செய்யி
ற்சூழ்ந்த நிலைமையிலுள்ள சிலர்க்கு அதிக சுகத்தையும் சரீரபலத்தையு
முண்டுசெய்கின்றதென்னுங் கருத்தினராயிருக்கின்றனர். இதை ஒரு
வாறு அனுவதிப்போமாக. ஆனால் மதுபானம் செய்கிறவர்கள் வெள்
ளாடு அங்குமிங்கும் நடந்துலாவிப் பலவிதமான செடிகொடி முதலான
வற்றில் நின்று ஒரோரங்கங்களைக் கறித்துத் தின்றும் பட்டிக்குத் திரும்
புங்காலெப்படி வயிறு நிறைகிறதில்லையோ யவ்விதம் பற்பல இடங்களிற்
சென்று ஒரோர்பிரகாரமாயுள்ள லகிரி வஸ்துக்களைத் தின்றும் குடித்தும்
திருப்தி யடைகிறதில்லையென்பது பசுமரத்தறைந்த வைரவாணியென
விளங்கும். நான் பல தேசங்களிலும்போய் சஞ்சரிப்பதுண்டு. அவ்வி
தமாகவே 'கதலி நதி' கடந்து கடற்கரை யடுத்த நாட்டிற்குப் 'பஞ்சபூ
தங்கட்டி' லேறிப்போனேன். வழியில் வியப்புறும் வஸ்துக்களைக் கண்டு
மகிழ்ந்து கட்டை விட்டோட்டின பின்னர் கையிலிருந்த மூட்டையை
ஒருவன் வந்துபிடுங்க, ஏன் பிடுங்குகிறாய்? இதுவென்ன வநியாயமான
செய்தி? என்று கூவிப்பின்றொடர்ந்து போகையிலவன் திரும்பி நின்று
சமீபத்திலிருந்த அசுவரதத்திலேறச் சொன்னான். நானவ்விதமென் குறி
ப்பறிவித்தேறிக்கொண்டேன். கொஞ்ச தூரஞ்சென்றபின்னிறங்கச்சொ
ன்னான். அப்பொழுது நான் "ஏதப்பா இன்னுங் குறித்தவிடமாகவில்
லையே" யென்ன என்மொழிக்குச்செவிகொடாமலிறங்கச் சொல்லவப்படி
செய்தேன். இப்படியிருக்க, இரண்டு மனிதர்கள் கிங்கரர்கள் போலடு
த்து இரங்கவேண்டாமென்னைப் பயந்து வெளியில் வரவில்லை. உடனே
இவர்கள் தேருருளைத் திரிக்கிறதும் முன்னிருந்த வசுவங்களை முடுக்க,

“முன்னே கடிவாள மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னேயிருந் திரண்டுபேர் தள்ள—வென்னேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம் போங்காத வழி”

என வார்த்தைப் பறந்தன. அப்பா லவ்விருவருங் காதமகன்றோடிவா
விருளானதினால் வழிபரிச்காரரென் றையமடைந்து, நீவிரார்? ஏன் ஓடி
வருகிறீர்? என்றேன். “மிதவைக்கடல் கடக்கவேணு” மென்ன, விய
ப்புற்று விசனித்துச் சென்றேன். வருணனுமிந்திரனுங் கோபித்ததினா
லும் இருளானபடியாலும ஓர் வீட்டிற்குப்போய்த் திண்ணையில் பதுங்கி
யிருந்தேன். அப்பொழுது ஒருவன் ஓரிலையில் ஏதோ கட்டிக்கொண்டு
வரக்கண்டேன். வீட்டுக்காரனவனை வாருங்களென் றுபசரித் தாசனம
ளித்தான். அவனிருந்த பின்னர் வீட்டுக்காரனுள்ளேபோய் ஒரு செப்பு
டன் வரவே பாதப்பிரட்சாளனத்திற்கு சலமெடுத்து வருவதாக வெண்
ணினேன். உடனே மனைமேலிருந்த மகராசன் தன் கையிலிருந்த கட்ட
விழ்த்துக் கீழ்வைத்தபோழ்து காதநாறுங் கருவாட்டுக்கறி யெனக் கண்
ணுற்றேன். உடனே வீட்டுக்காரன் செப்பைக் கொடுக்க வாங்கிப் பக்க
த்தில் வைத்துக்கொண்டு அவ்விடத்தில் கவிழ்த்திருந்த ‘பின்ன நானி
கோப்புறத்’ த்திற் கொஞ்சஞ் சரித்துக் குவளைவிழிகளை குழியவடைத்து
தட்டிற்சடித்துக் குடிக்கலானான். இப்படி இரண்டுமுறை கறியோடு கட்
குடித்த பின்னம்மனையிலுள்ள மக்கட் சிறாரிவன் கண்ணடைத்திருக்குந்
தருணத்தில் இலைக்கறியை வழித்தெடுத்துப் போனார்கள். பின்பம்மனி
தன் இலைதொட்டு நக்கிக் குடிக்க வாரம்பித்தான். நான் அதிசயித்து
முடிவியாதென நோக்கினின்றேன். சற்றுநேரஞ் சென்றபின் வீட்டுக்கா
ரன் எவ்விடத்திலோபோய்ச் சுரைக்குடுக்கையுடன் வந்து மனைமேலிருந்
தவனைப் பார்த்துப் போ! போ! வென்று பிடரியைப்பிடித்துந்தாவ
ன்ன முந்தியும் போகாமலிலங்கள் கொஞ்சம் வேணுமென்ன அவன்
மனைவி இவன் பிடிவாதங்கண்டு கொடுக்கக் குடித்து வெளிச்சம் வேண்டு
மென்றான். அப்பொழுது அடிநனைந்ததும் முடியுலர்ந்ததுமான தென்
னோலைகளைத் திரட்டிக் கட்டிக்கொளுத்திக் கொடுக்கப்பெற்று வயலிலி
றங்கினான். நானும் இதுதான் சமயமென்று அவ்வீட்டிலிருக்க வெறுப்
புற்று கூடப்போனேன். பத்தடி நடந்தபின் குடியன் ஓலை நன்றாய் நெ
ருப்புப் பிடிக்காததைக் கண்டுவாயாலூத வணைந்துபோக வதையிகழ்ந்து
விட்டு “கானென்ன சோலையோ கடலென்ன வோடையோ மலையென்ன
மேடையோ” வெனும்படி கால் சென்றவிடமெல்லாம் வழியாகப் பகுதி



பிரண்டும், பகுதி யுருண்டுநடந்து தெய்வ சங்கற்பத்தால் வீட்டையடை
ந்தான். நானும் வழிதெரியாததினால் பின்றொடர்ந்து போனேன். வீட்
டுக் கதவைத்தட்டி “அடி மொட்டைச்சி! அடி மொட்டைச்சி!” என்று
கூவினவளவில் பசியினாலலைந்தவோர் பெண் கதவைத்திறந்து தானிரந்து
சமைத்த அன்னமளிக்கக் கொஞ்சமருந்தி மீதியவ்விடத்திலேயே வைத்து
நெடுநேரம் வாய்குளறிவிழுந்து கும்பகர்ணனை யாலிங்கனஞ் செய்தான்.
அதுகண்டு மீதியுணவை யவன் மனைவியும் குழந்தைகளும் தின்றனர்.
நான் இவனுடைய கடினத்தையும் குடும்பங்களது தரித்திராவஸ்தையும்
கண்டு விசனமடைந்து வேறோரிடத்திற்போய் நடந்த சவிஸ்தாரங்களை
எண்ணிக்கண்மூடாமல் முடங்கிக்கிடந்தேன். நண்பர்களே! இவ்விதம்
மானங்கெட்டு மதிகெட்டுத் தன் தானங்கெட்டு தனங்கெடுத்துக் குடும்ப
சம்ரட்சணையில் கடினசித்தராகிக் குலத்தைக் கெடுக்குங் கோடரிக்காம்
பெனத்திரியச்செய்யு மகத்துவமுடையதுமதுவானால் விரும்பத்தக்கதா?
களவு, கொலை முதலான வாக்கிரம நிலைகளுக்கும் ‘மதுபானம்’ முக்கிய
யேதுவாயிருக்கிற தென்பது தெளிவாக வர்த்தமான பத்திரிகைகளி லச்
சிட்டிருக்கும் பல சங்கதிகளாலும், திருட்டாந்தத்தினு மறிகிறோம். மே
லும் சிலர் கடினகிருத்தியங்களைச் செய்யவேண்டி மனோதைரியத்திற்காக
சங்கற்பித்துக் குடித்துக் கூக்குரலாக்க மறந்திடுகின்றனர். இம்மாத்திர
மா? வெறியேறினால் “பெண்ணென்றுந் தாயென்றுந் தெரியாமலே
விடு” வதன்றி என்னென்ன சேட்டைகளெல்லாஞ் செய்கிறார்கள். சரித்
திரங்களில் ஓர் தேசத்தில் ஒருவகைச் சாதியார் ‘அபின்’ என்னுமருந்தை
நிறையத்தின்று ஆயுதமெடுத்துத் தம்மைக்கொல்லும் வரையில் பிறரைக்
கண்டவிடங்களில் கொல்லுகிறார்களென்று வாசித்திருக்கிறோம். அபின்
என்பது மதுவென்பதிலுட்படாதபோதிலும் அபின் தின்றாலும் மதுபான
ஞ்செய்தாலும் பயனும் விளைவும் ஒன்றேயாகையாலிப்படி தன்னையும்
பிறரையும் மறக்கடித்தால் நிலையாது? சாராயமுதலான காரமுள்ள
வஸ்துக்களை மிதமின்றிப் பருகி நாவுள்ளிழுத்துக் கைகால்கள் சலனமி
ன்றி இறந்துபோன சிலரைக் கண்டும் கேட்டுமிருக்கிறோம். இத்தன்மை
யுள்ள வஸ்துவை மதுபானப் பிரியர் மகிழ்ந்துகொண்டாடுகிறதைப் பா
ர்க்க வாச்சரியமாகத்தோன்றுகிறது. ஆதிகாலத்தில் கள்ளானது தென்
னையினடிமரத்தில் நின்று தாராளமாய்ப் பெருகிக்கொண்டிருந்ததென்
றும் சிவபெருமானானவர் “வட்டப்பிறை” என்னு மூலிகையினிலையாலே
ந்திக்குடிப்பதை பார்வதி கண்டுதென்னையருகில் வந்து தனதிருகைகளா
ல் உருவித்தலைமரத்தில் போக்கி மேற்படி யிலைக்கு எப்பொழுதும் ஆகி

ரம் துவாரமுண்டாகக் கடவதென்று சபித்துவிட்டாள் எனப்படலவாருக வியந்தோதி மண்டிக்குடித்துத் தெண்டித்திரிகின்றனர். இக்காலத்தில் மாமிசந்தின்ன வாசைகொண்டோர் யாகஞ்செய்வதுபோலக் கள் குடிக்க விரும்பினோர் சாக்தேயமெனவோர் பூஜா விதியை யனுட்டிக்கிறார்கள். இவ்விஷயத்தை விவகரிக்கத் தொடங்கினால் பெருகுமாசலானுங்கட்சி விரோதங்களேற்படவேதுவாய்த் தீருமாகலானும் இதை இவ்விடத்தில் நிறுத்திவிட்டோம். மனிதனுடைய சரீர சௌக்கியத்திற்கும் அல்லது எல்லா சீவராசிகளின் சௌக்கியத்திற்கும் அன்னபானாதிகள் இன்றியமையாச்சிறப்புடையனவாம். ஆனாலிவைகளிதமாயு மிதமாயுமிருக்கவேண்டியதுந்தவிர வியன்றவளவில் வெகுஜன நயவிரோதத்திற்கேதுவாகிய வஸ்துக்களை நிஷேதிக்கவேண்டியதவசியமே. "யம், யம் சிலயதே நித்தியம், தம், தமேவாபிவர்த்ததே" என்பது சரீரத்தின் பிரகிருதியாயிருப்பது பற்றியும் "விரல் நுழையவிடங்கொடுப்பின்றலை நுழைப்பான்" என்பது மனப்பிரகிருதியாயிருப்பது பற்றியும் வெகுஜன நயவிரோதத்துக்கும், தன்னாசத்துக்கு முக்கிய காரணமாகிய மதுபானத்தை சேவிக்காமலிருப்பதும் வர்த்திப்பிக்காமலிருப்பதும் மேலான கடனென்றுழ்ந்தறிந்தடங்கினாலிகபர சௌக்கியங்களையடைந்து நீடூழிவாழ்வரென்பது எம்போலியருடையவும் ஆன்றோருடையவுந்துணிபாகலான் இப்பத்திரிகை யிலிவ்வளவோடு முடிக்கிறோம்.

## பழமொழிகள்.

அண்டத்திலில்லாதது, பிண்டத்திலுண்டோ?

அண்ட நிழலில்லாப்போனாலும், பேர் ஆலாவிருக்ஷம்.

அண்டத்தைக் கையில் வைத்தாட்டும் பிடாரிக்கு, சுண்டக்காய் எடுப்பது பாரமா?

அண்டாத பிடாரி, ஆருக்கடங்குவாள்?

அண்டை வீட்டுச் சண்டை, கண்ணுக்குக் குளிர்ச்சி.

அண்ணனிடத்தில் ஆறு மாதம் வாழ்ந்தாலும், அண்ணியிடத்தில் அரை நாழி வாழலாமா?

அன்றைக்கெழுதினதை, அழித்தெழுதப்போகிறானா?

அதிக ஆசை, அதிக நஷ்டம்.

அதிகாரியுந் தலையாரியுங் கூடினால், விடியுமட்டுந் திருடலாம்.

அதிகாரி வீட்டில் திருடி, தலையாரி வீட்டில் வைத்ததுபோல்.

# ADVERTISEMENTS.

## வித்தியாபாநு.

கல்வி, கைத்தொழில், வர்த்தகம், கிருஷித்தொழில், வைத்தியமுறைமை, நீதிமார்க்கம், முதலானவிஷயங்களைப்பற்றித் தமிழ்ப் பத்திரிகை இது இரண்டு மாதிரியாகப் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. ஒன்று மாதாந்த சஞ்சிகையாகவும்; மற்றொன்று அனுபந்தமாகவும் வெளியிடப்பட்டு வருக்கின்றது. அனுபந்தம் மாதமிருமுறை பிரசுரஞ் செய்யப்பட்ட வர்த்தமான பத்திரிகை. இதில் இங்கிலீஷிலும், தமிழிலும் விஷயங்கள் பிரசுரித்து வரப்படும்.

மாதாந்தப் பத்திரிகைக்குக் கையொப்பம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வருடம் ஒன்றுக்கு... ... ... | ரூ. | 2 | 0 | 0 |
| தனிப்பத்திரிகை ஒன்றுக்கு ... | ,, | 0 | 3 | 0 |
| தபாற் கூலி ... ... ... | ,, | 0 | 0 | 6 |

அனுபந்தத்திற்குக் கையொப்பம்.

வருடம் ஒன்றுக்கு ... ... ... அணா 12.

ஒருவருடத்துக்குக் குறையாத கையொப்பத்தொகை அனுப்பினால் மாத்திரம் கையொப்பஞ் செலுத்துகிறவர்களுக்கு அனுகூலமாயிருக்கும். இல்லாவிடில் குறைந்த தொகை வருஷாந்தக்கையொப்பமாக பாவிக்கப்படாமல், தனிப்பத்திரிகையின் கையொப்பமாகவே பாவிக்கப்படும்.

உ

சிவமயம்.

## திருப்பாண்டிக்கொடுமுடிப்புராணம்,

"வலியசலியுகஹரதத்தாசாரிய" ரென்னும்சிறப்பும் பெயர்பெற்ற, சாமக்குளம் வித்வான் வெங்கடரமண தாசரவர்களால் இயற்றி அச்சிடப்பட்டது. வேண்டுவோர் கோயமுத்தூர் வித்தியாபாநு அச்சுக்கூடத்திலும் மேற்படி கிரந்தகருத்தரிடத்திலும் என்னிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். பிரதிகள் சொற்பமாகையால் விரைவிற்றெரிவித்தல் வேண்டும். வால்யு போஸ்டிலனுப்பப்படும்.

பிரதியொன்றுக்கு 0—12—0. தபால் சார்ஜ் அணா 2.

சுப்பரமணிய ஓதுவார், கொடுமுடி.

## *Established 1880.*

**HEALTH REGAINED & STRENGTH MAINTAINED.**

**Promptly, Effectually, Permanently**


**and Agreeably by wearing**

THE ORIGINAL, GENUINE AND WORLD-FAMED

**Electro-Galvanic Rings, Lockets, Belts, &c., &c.**

*The Blood is the Life, but Electricity is the Life of the Blood.*

**Sold more than 100,000. And Daily Increased.**



**Testimonials too numerous to mention.**

**WORLD-RENOWNED.**

**Beware of Worthless Imitations.**

*Try the wonderful divine gift and let the result speak for itself.*

E. G. RINGS, LOCKETS, &c., universally approved by the Leading Physicians as the Best, Safest and Most Effectual Remedy for :—Kidney, Indigestion, Debility, Nervousness, Catarrh, Gout, Sores, Toothache, Asthma, Colds, Pleurisy, Scrofula, Weakness, Liver, Headache, Heartburn, Pimples, Swollen joints, Sciatia, Aches, Dysmenorrhœa, Diarrœa, Menorrhœa, Epylepsy, Hysteria, Fever, Lumbago, Spinal. Paralysis, Rheumatism, Constipation, Quinsey, Skin disease, Bronchitis, Nearulgia, Female Complaints, &c., &c.

They also act as safe guards against Cholera and Small Pox.

E. BELT.—In cases of Rheumatism, Liver, Stomach, Kidney, Female Complaints, Paralysis, &c.